விளையாட்டுத்
தோழி
வானதி பதிப்பகம்
பூவை. எஸ். ஆறுமுகம்

விளையாட்டுத் தோழ

பூவை எஸ். ஆறுமுகம்

வானதி பதிப்பகம்
தியாகராயநகர் :: சென்னை-17

முதற் பதிப்பு : பிப்ரவரி, 1962

முழு உரிமை வானதி பதிப்பகத்திற்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 3.50

ஜீவோதயம் பிரஸ்
சென்னை-5.

சிறுகதை இலக்கியத்தில் என் பணி

உலகப் பெரியார் தாகூர் தம்முடைய 'குழந்தை' என்னும் பாடலில், "குருட்டுத்தனமான காலம் குழப்பத்தை விளைத்துக் கொண்டே தன் வழியில் யாதொரு குறிப்புமின்றிச் செல்கிறது!" என்று குறிப்பிடுகின்றார். எடுத்துக் கொண்ட தத்துவக் கோட்பாடுகளை வேலி கட்டிக் காக்கவே அவர் இப்படிச் சொல்லியிருக்க வேண்டும்!

காலம் என்பது ஒரு பொற்கனவு.

ஆம்; இவ்வாறுதான் நான் அன்றும் உணர்ந்தேன்; இன்றும் உணர்கிறேன். என்னிடைப் பிறந்த இலக்கிய ஆர்வம், இடைப்பட்ட இந்தப் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளை விழுங்கி ஏப்பம் விட்ட நிலையிலே, பழைய ஆர்வத்தை இப்பொழுது நான் எடை போட்டுப் பார்க்கிறேன். என் உடல் எடை குறைந்தாலும், என் இலக்கியப் பணியின் வெற்றியின் எடையும் மதிப்பும் கூடுதலாகிக்கொண்டுதான் வருகின்றன.

என்னுடைய முதற் சிறுகதைத் தொகுப்பு: "கடல் முத்து." அடுத்தது: "அமிர்தம்." மூன்றாவது: "காதல் மர்மம்!"

இது நான்காவது!

என் கதைகளிலே தமக்கு அதிக நம்பிக்கை உண்டென்று அடிக்கடி இப்பதிப்பகத்தின் உரிமையாளர் சொல்லுவார்.

எண்ணிப்பார்க்கிறேன். எனக்கே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அறுநூறு கதைகளுக்கு மேல் எப்படி என்னால் எழுத முடிந்தது?—பொறுக்குமணிக் கதைகளை ஒன்றன்பின் ஒன்றாக இணைப்புப்படுத்தித் தரப்போகிறார்கள் பதிப்பகத்தார்கள்.

என்னுடைய சிறுகதைப் படைப்பின் பண்பினைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு இத்தொகுப்பு ஒரு தலைவாசல் போலவே அமையும். அப்பால், படிப்படியாக, என் எழுத்துக்களைப் படிக்கவும் ஆராயவும் வாய்ப்பு உண்டாகக்கூடும்.

சமுதாயமாகக் கூடி வாழ விரும்பும் உயிரினம் மனிதன். மனிதனின் செயல், அறிவு, நினைவு, உணர்ச்சி, உள்ளக் கிடக்கை போன்ற கூட்டுறவுச் சேர்க்கையில் பிறக்கவல்ல நியாயமான—நல்லதனமான—நாணயம் மிக்க பண்பாட்டில் நான் அதிக அக்கறை செலுத்தி வருபவன். எனவே, நான் ஆக்கும் சிருஷ்டிகளும் அந்தப் பண்பாட்டு வரையறைக் குள்ளேதான் நிலவும். எழுத்தில் வடிக்கத் தகாதவற்றை காதல் என்கிற போலிப் போர்வையிட்டு பச்சையாகச் சொல் வதால்மட்டும் 'மக்கள் இலக்கியம்' உருவாக முடியாது என்பது நான் கொண்டிருக்கும் முடிவு ஆகும்.

நாட்டுப்புறப் பகைப் புலனை வைத்துக் கொண்டு கதை கள் எழுதுபவர்கள் குறைவு; மிக மிகக் குறைவு.'பூவை'யைப் பற்றி அறிந்தவர்களுக்கு, மேற்படி கதைகளைப் படைப்பதன் கஷ்டங்கள் புலனுகும்.

நான் உலகம் சுற்றிய தமிழன். திரையுலகிலிருந்து பிச்சைக்கார உலகம்வரை, சேரியிலிருந்து சிருங்காரபவனம் வரை, உழைப்பாளிகள் பகுதியிலிருந்து குழந்தைகளின் பூதலம் வரை நீங்கள் என்னுடன் வழிப்பயணம் செய்யலாம். அப்பொழுது, நீங்கள் அழுவீர்கள், சிரிப்பீர்கள், சிந்திப் பீர்கள் !

வளர்ந்து வாழவல்ல தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் சரித்திரத்திலே என் பணியும் தக்க இடம் பெறுமென்ற நம்பிக்கை என்னுள் என்றும் வாழ்ந்து வருகிறது. அந்தத் தன்னம்பிக்கைக்கு இது ஓர் உரைகல்.

'விளையாட்டுத் தோழி'யில் இடம் பெற்றிருக்கும் கதைகள் 'உமா', 'கலைமகள்,' 'அமுதசுரபி', 'மனிதன்' 'கங்கை', 'கல்கி' முதலிய சஞ்சிகைகளில் தோன்றின.

'வானதி பதிப்பகத்'தினரை நான் நாளும் நினைவிற் கொள்வேன்.

உண்மைதான். எனக்கு ஓர் ஒலிபரப்பு இயந்திரம் கிடைத்துவிட்டதல்லவா ?

உமா அலுவலகம்
1-2-'62

பூவை. எஸ். ஆறுமுகம்.

மாஸோஹின்

ஊரடங்கும் வேளை. ஆனால், அந்த ஓர் உள்ளம் மட்டிலும் உறக்கம் பிடிக்காமல் படுக்கையில் சாய்ந்த படியே சூன்ய வெளியை வெறித்து நோக்கியவாறு கிடந்தது. புகைச்சல் இருமலின் உபாதை தாளாமல் உயிர்போய் உயிர் வந்துகொண்டிருந்தது. படுக்கை கொள்ளாமல் எழுந்து அமர்ந்தார். அவர் பிறகு மெது வாக எழுந்து, கல்யாண மண்டபத்தையும் உள்நடை யையும் கடந்து சென்று பெரிய அலமாரியை அடைந் தார். அதில் புகைப்படம் ஒன்று காட்சியளித்தது. இமை வலிக்க, விழிகள் நோக, அவர் அதையே வைத்த கண் வாங்காமல் நோக்கினார். தலையை உயர்த்திய போது விலையுயர்ந்த அழகிய பொருள்கள் சில வரிசையாகக் கொலு வீற்றிருந்ததைக் கண்டார் நாச்சியப்பன்.

அப்பொழுது நாள்காட்டியின் ஏடுகள் படபட வென்று காற்றில் பறந்தன.

'பொங்கல் கழிந்து ரொம்ப நாளாகிடுச்சே? இன்னமும் பரிசு எதுவுமே வரலையே?'

நாச்சியப்பன் முதலில் தம்முள் பேசிக்கொண்டார். பிறகு, வாய்விட்டுச் சத்தம் போட்டுச் சொன்னார்; அடுத்தபடியாக, சித்த பேதம் கொண்டவர் மாதிரி கத்தினார்.

பள்ளத்தூர்—காரைக்குடி பஸ் கத்திக் கொண்டே ஓடிக்கொண்டிருந்தது.

"முதலாளி!" என்று சொல்லிய வண்ணம் சமையற் காரன் காளி அங்கு தோன்றினான். நாச்சியப்பனின் இதயக் குரல் மாடிப்படி கடந்து அவனைக் கையுடன் அழைத்து வந்துவிட்டது போலும்!

"கோனபட்டு ஆச்சி வீட்டிலேருந்து பெரிய செட்டியார் வந்திருக்காக!" என்றான் அவன்.

"காலையிலே பார்த்துக்கிடலாம்னு சொல்லு. நான் தூங்கப் போறேன்" என்றவர், அவன் ஊற்றிக் கொடுத்த மருந்தை வயிற்றினுள் கொட்டினார்; கதவு களைத் தாழிட்டார்; பட்டு மெத்தையில் சாய்ந்தார்; கையிலிருந்த படத்தில் சிரித்த அந்தப் பெண் பாவையைப் பார்த்து முணுமுணுத்தார்: "மாஸோவின்!"

x x x

ஜப்பானியர்கள் தர்மத்தை அழிக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்த அந்த அவல வேளையிலே, அவர்களது அரசியல் சதுரங்க விளையாட்டுக்குப் பர்மியர் நாடு பகடை ஆகி விட்டது.

ஒருநாள் விளக்குகள் பொருத்தப்பட்ட வேளை. அபாயச் சங்கு எதுவும் ஒலிக்காததைக் கண்டு, சொந்த ஊர்க்காரரைக் கண்டு பேசிவரப் புறப்பட்டார் நாச்சியப்பன். இருட்டடிப்பானதால், அவரிடம் இருந்த கை விளக்கு கை கொடுத்தது. உதட்டுச் சுருட்டு உடம்புக்குச் சற்றே தென்பு அளித்தது. ஆனால் அடுத்திருந்த ‘ பூடாலான் ’-ஸ்டேஷன் ரோட்டில் அவர் மறுகி மடங்கிய தருணத்திலே திடுதிப்பென்று வானம் மின்னிப் பளிச்சிட்டது. அண்டம் அதிர்ந்த வண்ணம் வெடிகுண்டுகள் சிந்திச் சிதறின. மீஞ்சான் நகரமே நூலிழையில் உயிருக்கு மன்றாடும் போது, பாவம் அந்த மனிதர் நாச்சியப்பன் உயிர் ஒடுங்கி, உள்ளம் குலைந்து நின்றதில் வியப்பேதும் இல்லைதானே ! இமை மூடி இமை திறக்கும் போதுக்குக்கூட இடைவெளி அமையவில்லை ; குண்டு வீச்சு வலுத்தது. கை விளக்கைப் பயன்படுத்தினார் ; அவர் பார்வையில் கூப்பிடு தூரத்தில் இருந்த ஒரு வீடு தென்பட்டது. தேக்குமர வீடு அது. விழுந்தடித்து ஓடினார் அவர் ; மரண பயம் அவரின் பிடரியை நெட்டித் தள்ளியது. ஓடிய வேகத்தில் அவர் கதவை உதைத்துக் கொண்டு உள்ளே சாடி வீழ்ந்தார். வீழ்ந்த அவர் எழுந்து நின்றார் ; உடல் நடுக்கம் எப்படி ஓய்வு பெறும் ? வழிந்த நீரை வழித்துவிடத் தோன்றாமல், பதுமையென நின்று பயம் கப்பிய முகத்துடன் தேம்பிய அந்தப் பெண்ணைப் பார்வையிட்டார் நாச்சியப்பன்.

“ இந்த அடைக்கலம் கிடைக்கவில்லையென்றால் நானும் இவ்வளவு நாழிகைக்குள் மண்ணோடு மண்ணாகிப் போயிருப்பேன் !” என்று நாத் தழுதழுக்கக் கூறினார் நாச்சியப்பன்.

" எங்கள் கண்கண்ட தெய்வம் புத்தர் நல்லதைத் தான் செய்வார்; ஆனால் அதற்குக்கூட இப்போது சோதனை ஆரம்பமாகி விட்டிருக்கிறது. அதர்மம் எவ்வளவு காலம் நீடிக்க முடியும்?" என்றாள் அந்தப் பெண்.

பர்மிய மொழியொலி தேய்ந்ததும், நாச்சியப்பன் அங்கு மிங்கும் கூர்ந்து நோக்கினார். அகல் விளக்கின் எதிரில் புத்தர் பிரானின் உருவம் இருந்தது. அவர் கைதொழுதார்; உயிருக்குப் பாதுகாப்பு தந்ததற்கு நன்றி கூறினார். அப்போது, " அப்பச்சிக்கு ரொம்பவும் முடியாமல் இருந்து வருகிறது. உனக்குக் கல்யாணம் செய்து பார்க்கத் துடிக்கிறாக அப்பச்சி. கானாடுகாத் தான் மு. சுப. வீட்டுப் பெண் சிகப்பி ஆச்சியைப் பார்த்திருக்காக. தகுந்த சம்பந்தம். அங்கேயுந்தான் நிலவரம் சரியில்லையே! ஆனபடியினாலே, உடனே புறப்பட்டு வரவேண்டியது!" என்று வந்திருந்த ஊர்க் கடிதம் நினைவில் மிதந்தது. நாச்சியப்பன் கைகூப்பி விடைபெறும் சமயம், அந்த அழகி அவருக்கு 'லெப்பே' கொடுத்தாள். அவள் அளித்த தேநீரின் இனிப்பும் முன்பின் முகம் பார்த்திராத அவளது அன்பும் அவருக்கு இதம் தந்தன. பொங்கி மடத்துத் தெருவில் இருக்கும் தம்முடைய சொந்தத் தேக்குமரக் கடை விலாசத்தைச் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார் அவர். நிலைப்படியைத் தாண்டும்பொழுது அவளுடைய பெயர் என்னவென்று அவர் துணிவுடன் வினவிய தற்குக் கிடைத்த பதில் என்ன தெரியுமா?

" மாஸோஹின்!"

x x x

'ஸூலவுண்டே' என்பது பர்மாவைப் பொறுத்த வரை மிகவும் புனிதம் மண்டிய ஒரு நிகழ்ச்சி. காவி யுடைதரித்த பௌத்த முனிவர்களான பொங்கிகளுக் குப் 'பிட்சை'யிடும் சம்பவத்தைத்தான் அவர்கள் அப்படிச் சொல்வார்கள்.

அப்படிப்பட்டதொரு நாளிலே, நாச்சியப்பன் 'பன்ஞு'வைப் போட்டுக்கொண்டு மாஸோஹினைத் தேடிச் சென்றார். பெகு, தாராவடி, மாண்டலே, டோங்வா, மோல்மீன், இரங்கூன், ப்ரோம் பின்மனு ஆகிய பகுதிகளில் ஜப்பானியர்கள் ஆடிய கோரத் திருவிளையாடல்களைப் பற்றிச் சொன்ன பத்திரிகைச் செய்திகள் அவரது நெஞ்சின் அடிவாரத்தில் எதிரொலி பரப்பின. 'மூச்சு விடாமல் மரக்கடையை நம்ப பெரியாத்தா மகன் கிட்ட ஒப்படைச்சிப்பிட்டு, செட்டி நாட்டுக்குப் போயிற வேண்டியதுதான். நிலைமை சீர்ப்பட்டதும், ரங்கூன் முகல் வீதிக்குப்போய் 'ஆறறை'யிலே சொக்கலிங்க அண்ணனைக் கண்டு தண்டி காரியத்தை முடிச்சுப்பிட்டாத்தான் சிலாக் கியமாயிருக்கும்' என்று எண்ணப் பூக்கள் மனமெனும் நாரில் கனவு மாலை தொடுத்தன. அதே கணம், பர்மாவிடமிருந்து ஏற்படப் போகும் பிரிவை நினைத்த தும், அவருக்கு நெஞ்சு வெடித்துவிடும்போல் இருந் தது. போர்ப் பின்னணியில் உழன்று மரக்கடைத் தோட்டத்தில் மனம் தவித்துக் கொண்டிருக்கையில் தாம் பட்ட பாட்டை நினைத்தார். நோக்குமிடம் எங்கணும் தோன்றித் தோன்றி மறைந்த அந்த எழில் உருவைப் பற்றிச் சிந்தித்தார். ஆறு நாட்களை மனப் புழுக்கத்தில் சிதற விட்டு ஏழாம் நாள் பொழுது பட்ட தும் நாச்சியப்பன் புறப்பட்டார். அப்போது, மாஸோ

ஹின் பொங்கிக்குப் பிச்சை ஈந்து உள்ளே நுழைந்தாள்.

" மாஸோஹின் !"

அழைப்பைக் கேட்ட கையுடன், கைகூப்பி வணங்கினாள் பர்மிய அழகி.

நாச்சியப்பனின் இளம் உள்ளம் ஆனந்தக் கடலாடியது. நெற்றியில் இடப்பட்டிருந்த சந்தனப் பொட்டில் ஊர்ந்தாடியது சுருள் கேசம். அதை விலக்கியவாறு, பதிலுக்கு வணங்கினார். கொடுத்த பழங்களை உரித்தார். 'கவனரசி' பொங்கலைச் சுவைத்தார்; தேநீரை அருந்தினார். " ஸிலே !" என்று கூறி, சுருட்டைக் கொடுத்தாள் அவள். புகைச் சங்கிலி விண் முட்டி எழுந்தது. 'மெய்ம்மா ஐங்கி'யைச் சீர்ப்படுத்திக் கொண்டு முக்காலியில் வந்து அமர்ந்தாள் மாஸோஹின். அவளை ஆழ்ந்த அமைதி கொண்டு நோக்கினார் நாச்சியப்பன். வண்ணமலர்ப் பூங்காவில் வாசமிகு நறுமணமலர்களை நோக்கி இன்பமடைவதைப் போன்ற 'தூய உணர்வு' அவருள் பிறந்தது. அவள் நகை முகம் ஏந்தி வினாக்கள் விடுத்தாள்; அவர் பதிலிறுத்தார். பர்மிய மொழிக்கு அவர் மனம் நன்றி கூறியது.

'மாஸோஹின் ஓர் அனாதை! அவளுடைய பெற்றோர்கள் பதினைந்து தினங்களுக்கு முன் ஜப்பான் குண்டுகளுக்குப் பலியாயினர்! பஜாரில் விளையாட்டுச் சாமான்கள் செய்து வயிற்றைக் கழுவி வருகிறாள்!'

ஆறாத் துயரத்தின் மேல்தளத்தில் பொங்கி வழிந்த அந்தப் பரிசுத்தமான அன்பு நாச்சியப்பனுக்குத் தெய்வமெனத் தோன்றியதில் சிறிதும் வியப்பில்லை.

'நான் ஒரு 'கல்லா'—இந்தியன்; என்றாலும் இந்த எழிற்பாவைக்குத்தான் என்பேரில் எத்துணை ஈடுபாடு!'

இந்த ஓர் உட்குறிப்பை மேலும் நன்முறையில் நிதர்சனமாக நிரூபிப்பதுபோல அவர்களது அறவழிச் சந்திப்புக்கள் நடந்தன.

அன்று 'தீஞ்சான் பண்டிகை!'—அதாவது, தண்ணீர்த் திருவிழா. சித்திரைத் தொடக்கத்தில் நடந்தது அவ்விழா. பர்மாவில் வாழும் பர்மியர்களால் கொண்டாடப்படுகின்ற இப்புனித நந்நாளிலே, மற்றவர்களுக்கும் பங்கு கிடைக்கும். இருளடைந்த அன்றைய அரசியல் சூழலில், அது ஒளிகாட்டும் புண்ணிய விழாவல்லவா? வர்ணத் தண்ணீர் இறைத்து விளையாடும் கோலத்தைக் கண்ட நாச்சியப்பனுக்குத் தம் இனத்தவரிடையே திருமண வினையின் போது நிகழும் 'மஞ்சள் நீராடல்' நினைவில் எழுந்தது.

"மாஸோஹின்!"

நாச்சியப்பன் அன்புக் குரல் எடுத்து அழைத்தார். நீர் கசிந்த உடைகளுடன் நாணம் பூத்த பூவையென உள்ளே ஓடி, ஒரு விநாடிப்பொழுதைத் தன் உடைமாற்றத்துக்கு உடைமையாக்கிக் கொண்டு மீண்டாள். அது சமயமே அவருக்கும் உயிர் மீண்டது.

மாஸோஹின் சிரித்தவண்ணம் தின்பண்டத் தட்டைக் கொண்டு வந்து வைத்தாள். பிறகு, 'தண்ணீர்த் திருவிழாப் பரிசாக' அழகு பொதிந்த பர்மாக்குடையொன்றையும் நாச்சியப்பனிடம் நீட்டினாள். அப்போது அவள் நயனங்களில் நெளிந்த அந்தத் தெளிந்த பண்பையும் நிறைந்த அன்பையும் அவரால் எப்படி மறக்கக் கூடும்? வனப்புப் படைத்த ஐராவதி நதியை, வளம் கொண்ட பர்மா நாட்டின் பசுமை வயல்களை எழில் காக்கும் 'அராகான்யோமா' மலைத்தொடரை ஓரிடத்தில் சந்திக்கச்செய்து பார்த்தது

போல, நாச்சியப்பன் ஆனந்தக் கூத்தாடினர். அப்போது ஜப்பானியச் செலாவணியில் இருந்த மதிப்பு மிகுதியாகக் கொண்ட நாணயங்களையும் 'நோட்டு'க் களையும் பட்டுப் பையில் போட்டுக் கட்டி, தம்முடைய அன்புப் பரிசிலாக அவளிடம் சமர்ப்பித்தார் அவர்.

மாஸோஹின் அடைந்த பெரு மகிழ்வுக்கு வரம்பே கிடையாது. "நான் உங்கள் தமிழர் தினமான பொங்கலன்று உங்களுக்கு ஒவ்வொரு வருஷமும் கட்டாயம் பரிசளிப்பேன்!" என்று மொழிந்தாள் அவள். அவளது சிவப்பு முகம் மேலும் சிவந்தது. கொண்டை முடிந்து வலை சுற்றி, சீப்பு வைத்திருந்த கரிய தலை முடியின் மேற்பரப்பில் அவளது தங்க விரல்கள் நெளிந்தன. அவளை அவர் பார்த்தபோது, ஏனே அவள் நாணம் மிகக் காட்டி, தலை குனிந்து கொண்டாள்!

நாச்சியப்பனுக்கு உலகம் ஒரு விளையாட்டுப் பொம்மையாக இருந்தது; ஆனல், உலகமோ அவரைத் தாலாட்டுப் பொம்மையாக்கப் பார்த்தது. இதற்குக் காரணம், 'விதி'யின் செயல் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லையென்றல் தமிழரான நாச்சியப்பனின் நெஞ்சத்திலே பர்மியப் பெண் மாஸோஹின் இடம் பெற முடிந்திருக்குமா? 'மணந்தால் மாஸோஹினைத் தான் நான் மணப்பேன்!' என்ற முடிவு உருவானது; உருவாக்கினர் அவர். பர்மா நாட்டில் பிழைக்க வந்த தம் நண்பர்களில் இரண்டொருவர் பர்மியப் பெண் களைத் திருமணம் புரிந்திருந்ததையும் அவர் அறிவார். ஆகவே, அவர்களை நாடினர். தேவகோட்டை குழ. பழ. பெரியண்ணன் செட்டியார் அவருக்கு உற்றவர்; உதவினர். மாஸோஹினுக்கும் நாச்சியப்பனுக்கும்

இடையே தூது சென்றார். அவள் ஒப்பினாள். அவர் உவகை எய்தினார்.

மாஸோஹினுக்கும் நாச்சியப்பனுக்கும் 'மிங்கலாஸம்'—கல்யாணம் நடப்பதென்று முடிவாயிற்று. அன்று இரவு வீட்டில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார் நாச்சியப்பன். பட்டு 'லுங்கி' வகைகள் கண்ணாடி பீரோவில் அழகு காட்டின. மாஸோஹின் அணிந்து கொள்ள வைர அட்டிகை காத்திருந்தது. 'கபா ஆயே பயா'வுக்குச் சென்று வணங்கிப் பிரார்த்தித்துத் திரும்புங்கால் எடுத்துக்கொண்ட புகைப்படம் சிரித்தது. மாஸோஹின் எட்டு வகையான கோணங்களில் எழில் சேர்த்தாள்!

நடுநிசி. பொங்கி மடத்திலிருந்து மணியோசை மிதந்து வந்தது. அப்பொழுது, ஏதோ அரவம் கேட்கவே, நாச்சியப்பன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார். மறு விநாடி, அவரது கழுத்தில் தொங்கிய 'மைனர் சங்கிலி'யை முரட்டுக் கரம் பற்றியதைக் கண்டு பதை பதைத்தார். இன்னொரு கையில் 'இரங்கூன் பட்டாக்கத்தி' மின்னியது.

நாச்சியப்பன் தலையை நிமிர்த்தினார்; "ஆ!...... கோபாங்குவே!..." என்று தடுமாறினார். வட்டிக்குப் பணம் 'தண்டி'ச் செல்லும் பல பர்மியர்களிடையே கோபாங்குவே ஒருவன்! ஆனால் அவன் இத்தகைய பயங்கரக் கோலம் புனைந்து வருவானேன்?

"இப்பொழுதுதான் எனக்குச் சேதி எட்டியது. இப்பொழுதே நீ மாஸோஹினை மறந்து விடவேண்டும். அவள் எனக்கு உரிமையானவள்! நீ நாளை விடிவதற்குள் பர்மாவிலிருந்தே ஓடிப்போய்விட வேண்டும். இல்லையேல், என் கத்தி உன்னுடைய உயிரைக்

குடித்துவிடும்!'' என்று உறுமினன் கோபாங்குவே. தலையில் முடிந்து வரிந்திருந்த துண்டின் நிறம் கூடவா ரத்தச் சிவப்பு காட்ட வேண்டும்?

நாச்சியப்பனுக்கு எல்லாம் கனவாகவே தோன்றியது. ஆனால் அவரது கனவான மாஸோஹினை மட்டும் அவர் மறக்கத் துணியவில்லை. பர்மியப் போக்கிரியின் கத்திக்கு முன் தம் தலையை நீட்டி, "ம்!...நீ என்னைக் கொன்றுவிடு!'' என்று கூறினர். அந்தக் கணம், தேவகோட்டை பெரியண்ணன் செட்டியார் மட்டும் தெய்வாதீனமாகத் தோன்றியிரா விட்டால் அப்போதே நாச்சியப்பனின் ரத்தம் கோபாங்குவேக்குப் பலியாகிப் போயிருக்கும்!...

x x x

பர்மாவில் கீடவுங்கானிலிருந்து தேவகோட்டை பெரியண்ணன் செட்டியார் ஊருக்கு வந்திருப்பதாகத் தகவல் கிடைத்தது. நாச்சியப்பனுக்கு அளை கடந்த சந்தோஷம் ஏற்பட்டது. 'இத்தனை வருஷமாகப் பொங்கல் பரிசுகளைத் தவருமல் எனக்கு அனுப்பிவந்த மாஸோஹின் இம்முறை மட்டும் அனுப்பாததற்குப் பெரியண்ணன் செட்டியாருக்கு ஏதாவது காரணம் தெரிந்திருக்கும். உடனேயே அவரை இங்கு வர வழைத்துவிடவேண்டும்!' என்று எண்ணிக் கொண்டார் நாச்சியப்பன்.

ஆண்டுகள் சிலவற்றினை உண்டு ஏப்பம் விட்ட காலத்துக்கு, நாச்சியப்பனிடமிருந்து மாஸோஹினைப் பிரிக்க முடிந்ததே தவிர, அவள் நினைவை அவரிடமிருந்து விலக்கிவிட முடியவில்லை. கோபாங்குவேயின் உருவில் விதி ஆடியதுதான் கதை:

கோபாங்குவேயின் குறி இருமுனை கொண்டு இலங்கியது. ஒரு முனையில் மாஸோஹினின் அழகு ஊஞ்சலாடியது; மறு நுனியில் நாச்சியப்பனின் உயிர் ஊசலாடியது. நாச்சியப்பன் அன்றிரவே அங்கிருந்து வெளியேருது போனுல் அவரது உயிருக்குக் கோபாங்குவே உலைவைத்து விடுவான் என்பதைப் பெரியண்ணன் தீர்க்கமாக அறிந்தார். அன்றிரவே நாச்சியப்பன் புறப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினர். தம் பொறுப்பில் மூன்று நாள் தவணை கோரிக் கோபாங்குவேயிடம் யாசித்தார். அறுபதாயிரம் பெறுமானமுள்ள மரக்கடை, நிலுவைக் கணக்கில் பாக்கி நின்ற நாற்பதாயிரம், மரம் அறுவையில் தேங்கிய ஐம்பதாயிரம் ஆகிய 'இனங்'களுக்கு நாச்சியப்பன் வகை செய்ய வேண்டுமல்லவா? இனி நாச்சியப்பன் மாஸோஹின் வழிக்கு வரமாட்டார் என்பதற்கும் தாமே பிணையாகி நின்ருர். ஆனுல், எல்லாம் முடிந்து, ஊருக்குப் புறப்படும் வேளையில், "ஒருமுறை மட்டும் மாஸோஹினைப் பார்த்துவிட்டுப் போய் விடுகிறேன்! ஏற்பாடு செய்யுங்கள்!" என்று விம்மினுர் நாச்சியப்பன். வள்ளி மணுளனின் தலையில் பாரத்தைப் போட்டுவிட்டு, அவரது கடைசி ஆசையை, வேண்டுகோளை நிறைவேற்றினுர்.

"நான் உங்களை என்றுமே மறக்க மாட்டேன், உங்களுக்கு என்னுடைய பொங்கல் பரிசுகள் என் ஆயுள் உள்ளவரையில் வந்து கொண்டே யிருக்கும்!" என்று தேம்பினுள் மாஸோஹின். இந்தச் சொற்களை அவர் எங்ஙனம் மறப்பார்? இவையல்லவா அவரை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன!

x x x

நாச்சியப்பனிடமிருந்து இளமை விடைபெற்றது. சமையற்காரன் காளியைத் தவிர ஊரும் உலகமும்

நாச்சியப்பனைப் ' பைத்தியக்காரன் !' என்றே முடிவு கட்டின. அவருடைய மனக் கோயிலில் தெய்வமாக வீற்றிருந்தாள் மாஸோஹின். ஆகவே அவர் திருமணத்தைப் புறக்கணித்தார். நான்கு தலைமுறைக்குக் காணக் கூடிய சொத்துக்களை என்ன செய்யப் போகிறார் என்று பள்ளத்தூர் ஊர் வாய் முணுமுணுத்ததை அவர் அறியார். ஆனால் அதற்கும் ஓர் ஏற்பாடு செய்தார். ' என் சொத்தில் பாதியைத் தர்மத்துக்கும் மிகுதியை மாஸோஹினுக்கும் பிரித்துக்கொடுக்கப் பெரியண்ணன் செட்டியாரிடம் ஏற்பாடு செய்ய வேண்டும் !' டாக்டர் வந்து போனார்; ஊசியின் வலி கை நரம்புகளில் நெறி கட்டச் செய்தது. பர்மியர்களின் கோயில், நெற்கதிர் வயல்கள் கொண்ட சின்னங்கள் அடங்கிய தபாற் தலைகள் சில நாச்சியப்பனின் முன் பறந்து வந்தன. " இந்தத் தடவை மாஸோஹின் ஏன் பரிசு அனுப்பவில்லை ? ஒருவேளை...... ஒருவேளை அவள்...? கொப்புடை நாயகித் தாயே ! மாஸோஹினை எங்கிருந்தாலும் காப்பாற்றுவாயல்லவா ?" என்று வேண்டினார் நாச்சியப்பன்.

x x x

தேவகோட்டை பெரியண்ணன் செட்டியாரைக் கண்ட சமையற்காரன் காளிக்கு வாயெல்லாம் பல்லானது. இளங் கதிரொளியில் இருவரும் நின்றனர் !

" நாவன்று எப்படி இருக்காக ?" என்று கேட்டார் பெரியண்ணன். அவருடைய கையிலிருந்த பூப்போட்ட ' பர்மாப் பை'யில் விலையுயர்ந்த துணிகளும், கைக் கடிகாரமும் முடங்கின.

" பர்மாவிலேயிருந்து எப்பவும் வருகிறமாதிரி இந்த முறை பரிசு எதுவும் வரலே ; மனசொடிஞ்சு

படுத்த படுக்கையாகிப் பிட்டாங்க" என்றான் சமையற்காரன் காளி.

பெரியண்ணன் பேசலானார்: "காளி! நாச்சியப்பனது நிலவரம் முழுவதையும் அறிந்த உனக்கும் எனக்கும் மட்டுமே தெரிந்திருக்க வேண்டிய மாபெரும் ரகசியம் இது. மஸோஹின் பர்மியப் பெண்களிலே ஓர் அதிசயமான பெண். தன்னை அடையக் கங்கணம் கட்டிய கோபாங்குவேயை மணம் புரிந்துகொள்ள மாஸோஹின் ஒப்பவில்லை. காரணம், அவள் மனத்தில் நாச்சியப்பனே இருந்தார். ஆகவே நாச்சியப்பனின் இன்ப நினைவுடனேயே அவள் ஐராவதிக்குப் பலியானாள். அடுத்த நாள் அவள் எனக்கு அனுப்பி வைத்த கடிதத்தில், நாச்சியப்பனுக்குத் தன்பேரில் வருஷா வருஷம் பொங்கல் பரிசு அனுப்பி வைக்குமாறு வேண்டியிருந்தாள். பர்மியப் பெண் ஒருத்தி தமிழன் நினைவில் மாண்டதும், தமிழன் ஒருவன் பர்மியப்பெண் ஒருத்தியின் நினைவில் பிரம்மசாரியாகக் காலங் கழிப்பதும் உண்மையிலேயே ஒரு விந்தைதான்; ஆமாம். விட்ட-குறை தொட்ட குறையின் விளைவுதான் இது! காசி, இம்முறை மட்டிலும் என் கடமையில் சிறிது தாமதம் ஏற்பட்டது. எனக்கு உடல் நலமில்லை; அத்துடன் என் பயணம் வேறு. நாச்சியப்பனின் உயிர் உடலில் ஒட்டியிருக்கும் வரை மாஸோஹின் வேண்டுகோளை நான் கட்டாயம் நிறைவேற்றுவேன். இந்த ஓர் ஆறுதலாவது நாச்சியப்பனுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கட்டும்!... இதோ பார், இந்தப் பையிலுள்ள பொருள்கள் என்ன, தெரியுமா? எல்லாம் உன் முதலாளி நாச்சியப்பனுக்கு மாஸோஹின் அனுப்பிய பரிசுகள்...!" அவர் விழிகளைத் துடைத்துக்கொண்டார்.

அதே தருணம், " ஐயோ மாஸோஹின் !...ஐயோ மாஸோஹின்......!" என்று அலறியபடி நாச்சியப்பன் சாய்ந்தார் !

சமையற்காரனும் பெரியண்ணன் செட்டியாரும் திசை திரும்பினார்கள்.

நாச்சியப்பனின் 'வெறுங் கூட்டை'ச் சுற்றிலும் அவருக்குரிய பரிசுப் பொருள்கள் சிதறிக் கிடந்தன !

"பெண்ணிற் பெருந்தக்க-யாவுள?"

கன்னியா குறிச்சி மஞ்சள் பூசப்பட்ட வாலைக் குமரியின் அழகிய வதனம்போல, செங்கதிர்வான வனின் உதயத்திலே, அந்தம் நிறைந்த வண்ணமும், இதயத்தை நிறைக்கும் வனப்பும் ஏற்றம் புரிந்தன.

காலை வேளை; மூன்றரை நாழிகைப் பொழுது. குத்து மதிப்பான கால அளவு.

பூவத்தக் குடிக்கு வடக்கு எல்லைக் கோடாக அடையாளம் காட்டிக் கொண்டிருந்த அந்த நீள் பெருவெளியிலே அமைந்திருந்தது, 'காத்தான் துண்டு' 'எண்பது குழி'த்தாக்கு. கருவேல முள் வேலியின் உட்புறத்தே வேர்க்கடலைக் கொடிகள் பசுமை காட்டிப் படர்ந்திருந்தன. அவற்றின் உள்ளங்களை மண் மூடியிருந்தது.

கூண்டு வண்டியின் நுகத்தடியின் ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப் பானையை இடது கையினால்

தாங்கிப் பற்றிய வண்ணம். பானையின் வாயருகில் வலது கை உள்ளங் கையைக் குவித்துத் தண்ணீர் பருகினான் சாத்தப்பன். அரும்பரும்பாக வேர்வை மண்ணில் தெறித்தது; வடிந்த நீர், உழைப்பின் களைப்பைப் போக்க முயன்றது. அலுவல் அழைத்தது. தலை முண்டாசுத் துணியில் முத்துக்கள் ஒளிந்துகொண்டன. 'நிறை' பிரிக்கப்பட்டுப் பூர்த்தி பெற்றிருந்த பகுதிகளைக் கண்ணோட்டம் விட்டவாறு 'கொக்கரை'யும் கையுமாகக் குந்தினான் அவன்.

"ஏலேய் பொடிசு!...அங்கே என்ன பண்றே! உக்காந்துக்கிட்டே கோளித் தூக்கம் போடுறியாடா?"

"இல்லீங்களே!"

"செல்லா, துப்பின எச்சல் காயறதுக்குள்ளாற கீழ்த் துண்டுக் கடலைக் கொடி அல்லாத்தையும் மடமடன்னு பாக்கியில்லாம அரிச்சுப்புடணும் தெரியுமில்ல!"

"ஆகட்டுங்க!"

"மொதலாளி, ஒரு மடக்குப் பச்சத் தண்ணி குடிச்சுப் புட்டு ஓடியாரேங்க!"

"உம்!..."

"மருதங்குடி அம்பலகாரரே, வெத்தலைச் சருகை வெரசாப் போட்டு மென்னுகினே கொக்கரையை மடமடன்னு ஓட்டுங்க!"

"நல்லதுங்க தம்பி!...பொட்டுப் பொளுதுக்குள்ளே நாலு கொடங்கை கொடி அரிச்சு வீசிப்புட்டேன். எங் கணக்குக்குச் சொச்சம் மீந்திருக்கிறதையெல்லாம் அந்திப் பொழுதுக்குள்ளே முடிச்சுப்பிடுவேன்!"

சாத்தப்பன் கருமமே கண்ணுனன். மண்ணில் வேர் பிரித்துப் படர்ந்திருந்த கொடிகளைப் பக்குவமாகக் கொக்கரையால் கொத்தி யெடுத்து, பின்னர் கைவிரல் களை மண்ணில் பதித்துத் தோண்டி கடலைக்காய்கள் அறுந்து விடாத வகையில் கொடிகளைத் தோண்டி எடுத்துத் தூர வீசிக்கொண்டிருந்தன அவன் கைகள். மூன்று கடலை அரிசி கொண்ட ஒரு பச்சைக் கடலை உதிர்ந்து விழுந்தது. அதை எடுத்தான்; ஓடுகளை நீக்கினன்; கிடைத்த மூன்று கடலை மணிகளை வாய்க் குள் போடப்போன தருணத்திலே, அவனுடைய விழி நோக்கிலே ஓர் உருவம் எழில்கூட்டி விளையாட்டுக் காட்டிற்று; அவ்விளையாட்டில் அவனுடைய அயர்வும் பங்கு கொண்டது; புதிய தெம்பு ஊறியது; அவன் மெய்மறந்தான். சிங்காரச் சிரிப்பும் சிந்தூரப் பொட்டும் கனவையும் நனவையும் பாலமிட்டன.

"பவளக்கொடி!..."

உந்திக்கமலம் இப்படி அழைத்தது; உள்ளங் கையிலிருந்த கடலை அரிசிகள் மூன்றையும் எடுத்து மடியில் போட்டான் சாத்தையன்; கொல்லையில் அலுவல் பார்ப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தினக்கூலிப் பணத்துடன் கடலைமணிகளும் முடங் கின.

'அம்மான் மகள் பவளம் வந்ததும் அதுகிட்டே இதுகளைக் குடுக்கோணும், எண்ணி மூணே மூணு கடலை அரிசிதான். ஆனு அது ஒவ்வொண்ணிலேயும் என்னோட ஒவ்வொரு கதை தூங்கிக்கிட்டிருக்கிற தாட்டாந்தான் என் நெஞ்சுக்குப் படுது. ஒண்ணு ஓடிப் போன காலத்துக்கும், இன்னொண்ணு நடப்புச் சேதிக் கும், மத்தது இனிமே நடக்கப்போறதுக்கும் திருட்டாந்

தமோ, என்னமோ? யாருக்கு மட்டுப்படுது? அல்லாம் அந்தத் தாராடி அம்மனுக்குத்தான் வெளங்கும்!'

மனம், எண்ணியது; அன்பு, காட்டியது; காதல், சொர்க்கம் கண்டது.

சாத்தையன் சிரித்தான்; அவன் சிரிக்கத் தெரிந்தவன். காரணம், அவனுள் அவள் அல்லவா கொலு வீற்றிருந்தாள்?...

"மச்சான்!"

ஏறிட்டுத் திரும்பினுன் அவன். ஏந்திழை கனவு இழைகளை நெளியவிட்டு நின்று கொண்டிருந்தாள். அவள்தான் அத்தை மகள் பவளக்கொடி. கொணர்ந்திருந்த கஞ்சிக் கலயத்தைத் தலையிலிருந்து நீக்கி இடுப்பில் வைத்தபடி நின்ருள் அவள்.

"வாங்க மச்சான், கஞ்சி குடிக்கலாம். களைச்சுக் களைதாங்கிப் போயிருக்கீங்களே?"

அவளது இதயம் உதடுகளில் அமர்ந்து பேசியது. அவன் சிரிக்கக் கேட்க வேண்டுமா?

"உம்... இந்தாலே கையலம்பிக்கிட்டு ஒரு எட்டிலே ஓடியாரேன், பவளம்!"

கஞ்சிக் கலயத்தின் வாயை மூடியிருந்த கந்தல் துணியின் முனையில் முடிந்திருந்த உப்புக் கற்களை எடுத்துக் கஞ்சியில் போட்டுக் கலக்கிக் கொடுத்தாள் பவளக்கொடி.

அவன் அனுபவித்துக் கஞ்சியைக் குடித்தான். ஊசி மிளகாய் வத்தல் வாய்க்கு 'உணக்கை'யாக இருந்தது. 'நம்ப எனத்திலே கண்ணாலம் கட்டிக் கிட்டதுந்தான் பெண்சாதிக்காரி புருசனுக்குக் கஞ்சிக் கலயம் கொண்டார ஏலும். ஆனுக்க, எனக்கு மட்டும் கண்ணு

லம் காட்சி நடக்கிறத்துக்கு முன்னாடியே எம்மொறைப் பொண்ணு கஞ்சிக் கலயம் சுமந்துகிணு வந்து கொஞ்சிக் கொஞ்சிக் கஞ்சி ஊத்திக் கிட்டிருக்குது.'

சாத்தையன் கைகளைக் கழுவித் துடைத்தான். பத்திரப்படுத்தி வைத்திருந்த மூன்று கடலை அரிசிகளை எடுத்துக் கொடுத்தான்.

"வாயிலே போட்டுக்கிடு, பவளக்கொடி !"

அவளுக்கு வெட்கம் வந்து விட்டது.

"நைத்தியம் பண்ணுறீகளாக்கும் ?"

"கடலைக்காய் தோண்டிக் கிட்டிருக்கிறப்ப முக் கடலை ஒண்ணு தட்டுப்பட்டுச்சு. உடைச்சு வாயிலே போட்டுக்கிடப் போன சமயத்திலே ஒன்னோட அழகான மூஞ்சி நெனைப்பிலே ஓடுச்சு ; நான் என்னோட பவளத்துக்காக பத்திரமா மடியிலே போட்டு வச்சுக்கிட்டேன். இதிலே என்ன நைத்தியம் ஒட்டி யிருக்குது, அம்மான் பொண்ணே ? இல்லே, ஒரு பேச்சுக்குக் கேக்கிறேன் !"

ஒழுங்கைப் பாதையிலே கிடந்த குறு மணலைக் குவித்து ஒழுங்குபடுத்தி மணல் வீடு கட்டி 'புருஷன்—மனைவி' விளையாட்டு விளையாடி மகிழ்ந்த இன்ப நினைவுகள் கனவு வடிவுபெற்று அவன் நெஞ்சில் கிளை விட்டன.

கால் பெருவிரல்கள் கோலம் போட, கைவிரல்கள் சுங்கடிச் சேலை முந்தானையினை நெருடி விளையாட, நின்றிருந்தாள் பவளம்.

"அம்மான் வூட்டிலே இருக்காகளா ?"

"வண்டி ஓட்டிக்கிணு செவ்வாச் சந்தையை நாடிப் போயிருக்காங்க எங்க அப்பா !"

அவள் பதிலிறுத்தாள். மறுகணம், அவள் முடிந்திருந்த முடிச்சை அவிழ்த்தாள்.

"இந்தாங்க, சுட்ட கடலே !"

கருப்பட்டித் துணுக்கையும் கடலை அரிசிகளையும் சுவைத்தான் அவன்.

"பவளம்! கடலேக்கொடி அரிச்சு முடிஞ்சு, பட்டறையிலே குமிச்சானதும்தான் எனக்கு நல்லமூச்சு வெளிக் கௌம்பும். அப்பறம் தை பொறந்ததும், நானும் அம்மானும் எரிச்சி வள்ளுவனை நாடிப்போயி, நம்பரெண்டு பேரோட பேர்ப் பொருத்தத்தையும் பார்த்துக்கிட்டு வரவேணுமாக்கும் !"

தண்டை ஒலிக்கப் பறந்தாள் பைங்கிளி. நாணம் வரலாற்று மகிமை பூண்டதல்லவா ?

ஆர்வக் கனவின் துளிரில் பச்சை நரம்புகள் ஓடிப் பிடித்துக் களிக்கத் தொடங்கின.

x x x

உருமப் பொழுது வந்தது.

பனை ஓலைக் குடிசையின் குறுவாயிலின் தெற்குப் பாரிசத்தில் இன்மழலைப் பேச்சரவம் கேட்டது. பவளக்கொடி அரிசி நொய்யைச் சுளகில் பரப்பி ஏந்தி வந்து எதிரிலிருந்த கூண்டின் இடுக்குகளின் வழியாகத் தூவிக்கொண்டிருந்தாள். ஒலித்த பேச்சின் அலைகள் அவள் நெஞ்சத்தில் எதிரொலித்தன. பாசம் பெருக்கெடுத்து ஓடத் தலைப்பட்டது; அவளுக்கு இதயம் இருந்ததென்பது புலனாக வேண்டாமா? கோழிக் குஞ்சுகளின் முன்னே பாசத்தின் ஏடுகள் விரிந்தன. பாசம் மொழி கடந்ததல்லவா ? அவள் நெடுமூச் செறிந்தாள்.

"பவளக் கொடி!"

அனல் காற்று ஏந்தி வந்த அழைப்பில் பாசத்தின் தண்மை இருந்தது.

பவளக்கொடி தலையை நிமிர்த்தினாள்.

" அப்பா, வந்திட்டீகளா ?..."

சந்தைப் பேட்டைப் பூரணிக் காளைகள் அணிந்திருந்த சலங்கைகள் பண்பாடின. அவள் உள்ளே ஓடினாள். 'ஆலவட்டம்' சுற்றிக் கொண்டிருந்த உள்ளத்துடன், 'தட்டுப் பலகை'யில் இருந்த பிண்ணாக்குத் துண்டுகளை எடுத்து வந்து உடைத்துத் தண்ணீர்த் தொட்டியில் போட்டுக் கலக்கிய பிறகு, ஆலங்குடி மரக்காலில் இருந்த குறுவை நெல்லுத் தவிட்டையும் அள்ளி அள்ளிப் போட்டுக் கைகளினால் அளைந்தாள்.

காளைகளின் பசி தீர்த்த கட்டிளம் பாவைக்குப் புண்ணியம் கிடைத்தது.

"அம்மா, இப்பத்தான் எம்மனசு ஒரு எடத்திலே நெலைச்சிருக்குது. ஆத்தாளுக்குத் தன்னோட குஞ்சுகளைச் சோதிச்சுப் பார்க்கிறதிலேதான் நமட்டு ஆசை உண்டுண்ணு நாலும் தெரிஞ்சவுக பேசுவாங்க. நல்ல காலம், ஒன் விசயத்திலேயும் ஒன் மச்சான் தாக்கலிலேயும் அப்படி ஏதும் நடக்கலே; பவளக்கொடி! உங்க ரெண்டு பேருக்கும் கண்ணாலம் கட்டி வைக்கிறத்துக்கு நல்ல வாக்குக் குடுத்திட்டான் வள்ளுவன். வார கிளமையே பரிசம் போட்டாகணுமாம். உம் மச்சான் ஒத்தைக் காலிலே நின்னுகிட்டிருக்குது!"

"மச்சான் வேலை வெட்டியில்லாம நின்னாக் கால் வலிக்குமே? ஓட்டமாப்போயி உக்காரச் சொல்லிப்புட்டு வந்திடட்டுமா அப்பா ?"

எண்ணத்திற்கு முன் சிரிப்புப் பிறந்தது.

"பவளம்!"

"என்னுங்கப்பா?"

"மனசுக்குப் புடிச்சிருக்கில்லே?"

"எதுங்க அப்பா?"

"நான் சொன்னது!"

"போங்கப்பா!"

"உன் கண்ணாலத்துக்குக் காரியம் பார்க்கத் தானேம்மா?...போகத்தான் போறேன், பவளம்!... உங்க ரெண்டு பேர் கண்ணாலமும் நடந்து முடிஞ் சிருச்சுதின்னு, அப்புறம் எனக்கு என்னம்மா கவலே?... ஒன்னைப் பெத்தவளும் என் ஒடப் பொறந்தாள்—அது புருசன் இவுகளும் உசிரோட இருந்திருந்தா எம்புட்டோ நெறஞ்சு இருக்கும்...உம், வார விதி ராத்தங்காதுங் கிறது மெய்யான சேதிதான்?...சாப்பிடலையாம்மா?"

"சாப்பிட்டாச்சே, அப்பா!"

"நான் இன்னம் கை கால் அலம்பலியே?"

"நான் சொன்னது அவுகளையாக்கும்!"

"ஒன் மச்சானுக்குச் சோருக்கிக் கொண்டு போய்க் குடுத்துப்பிட்டியா?"

"உம்!"

"நீ..."

"நீங்களே இன்னம் சாப்பிடல்லே. நாலு கடுத்தம் காளவாய்க்கும் செட்டிய வீட்டுக்கும் வண்டியைத் திருப்பியிருப்பீங்க. பசி அடங்கிப் பிட்டாக்க, சோறு செல்லாது. சுருக்கண வாங்கப்பா. கூனிப் பொடிக் கொளம்பு ஆக்கி யிருக்கேன். கொத்தமல்லித் தழை யைக் கிள்ளி துவையல் பண்ணியிருக்கேன்!"

சின்னச்சாமிச் சேர்வையின் கருக்கரிவாள் மீசைக் கூட்டத்தின் இரு பகுதிகளிலே நமட்டுச் சிரிப்பு ஒளிந்திருந்தது.

"மாப்பிள்ளே கொடுத்து வச்சது!"

"மச்சானுக்கு ஒங்களுக்கு முந்திச் சோறு போட்டதுக்குச் சொல்றீங்களா அப்பா?"

கிழவன் பதைபதைத்துப் போனான்; நெற்றி நரம்புகள் புடைத்து வேதனை பேசின.

"அப்பிடிச் சொல்லாதேம்மா! கொண்டவனைப் புரிஞ்சுக்கினு குடித்தனம் நடத்தத் தெரிஞ்ச ஒன்னைப் பொஞ்சாதியா அடையப்போற மாப்பிள்ளை கொடுத்து வச்சதின்னு சொன்னேன். அம்பிட்டுத்தான்!"

பவளக்கொடியின் மீன் விழிகள் புனலிடைத் துள்ளின. இதழில் முறுவல் விளையாடியது.

கழுத்தில் போட்டிருந்த உருமாலையை எடுத்துத் தலையில் முண்டாசு சுற்றிக்கொண்டு, வாசலிலிருந்த தண்ணீர்ச் சாலின் பக்கம் நோக்கி நடந்தார் சின்னச் சாமிச் சேர்வை.

x x x

மூடிக்கிடந்த திருக்கோயிலின் உள்ளே மூடப் படாமல் கிடக்கின்ற தெய்வத்தின் அருள் ஒளி பார்வைக்கு அப்பாற்பட்டது; ஆனால் புனிதம் மண்டியது. அந்தி வானத்தில் அழகுணர்ச்சி திகழ புள்ளிக்கோலம் புனையும் இயற்கையின் நியதி விளையாடல் கண்ணுக்குத் தெரியும். என்றாலும், அதுவும் புனிதம் கொண்டதுதான்! விழிவிரிப்பின் அகத்திலும் புறத்திலுமாக நின்று இயங்கும் தனித் தன்மையுடையது தெய்விகக் காதல்!

வைரமுடி தாங்கிக் கோலோச்சிய சரித்திரத்தை அழித்துவிட்டுப் பசுமை தேக்கி முளைத்திருந்த புல்லை உழவாரம் கொண்டு பவளக்கொடி செதுக்கிக் கொண்டிருந்தாள்.

அப்போது அவள் காதுகளில் மெல்லிய பண் இழைகள் விழுந்தன. அவள் திரும்பிப் பார்த்தாள். அங்கு யாரையுமே காணவில்லை! உள்ளத்தின் உள்ளத்தில் பெண்மையின் பேதைமை நாணம் எனும் வடிவெடுத்தது. 'அம்மான் மவளே அரளிப்பூவேன்னு மச்சான் முந்தாநாத்து பாட்டு இட்டுக் கட்டிப் பாடிக் காட்டினதை நெனச்சுப் பார்த்துக் கிட்டிருந்தேன்; பாட்டு நெஞ்சிலே நிலைச்சிருக்கிறதாட்டமே, பாட்டுப் பாடினவுகளும் சிலையே ாடி இருக்கிறதாலேதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னடி நான் ஏமாந்தேன். என் மச்சான் ஏமாத்திப் பிடுச்சு. மூஞ்சியைக் காட்டிச்சு; ஆறு மூச்சைக் காட்டலையே?...ம்!...நாளைக்கரிச்சு பரிசம் போட்டு வெத்திலை பாக்கு மாத்திக்கிட்டாலே, கண்ணாலம் முடிஞ்சாப்பிட்டதானே!...தாராடி அம்மனே, எல்லாம் உன் தயவுதான்!'

பரப்பப்பெற்ற விரல்களின் இணைப்பு தந்த திரை மறைவில் பவளக் கொடியின் பொல்லாத வெட்கம் கண்பொத்தி விளையாடியது.

நினைவுப்பசி பழங்கணக்கைப் புரட்டியது.

x x x

'வாழி, காவிரி!' என்னும் சிலம்பொலி பரவுகின்ற சோறுடைத்த தஞ்சை மாவட்டத்தின் மண் வளம் மாட்சிமை பெறும் நல்வாய்ப்பை உண்டாக்கிக் கொடுத்த பெருமை பலப்பல குக்கிராமங்களைச் சேரக்

கூடியதாகும். அறந்தாங்கி—பட்டுக்கோட்டை ரெயில் இணைப்பில் தென் கோடியில் இருக்கின்ற ஆயிங்குடியிலிருந்து தென்திசை நோக்கி 'மூன்று கல்' தொலைவிலிருந்தது பூவத்தக்குடி. தாராடி அம்மன் பூவத்தக்குடியையே தரணியாக்கிக் கொண்டு அருட் கருணை வளர்க்க ஒத்திகை பார்த்துப் பழகிக்கொள்ள ஏதுவாக அமைந்ததும் அந்தச் சிற்றூரேயாகும். சக்திவாய்ந்த தாராடி அம்மனின் அருள் வலியும், எழுதிச்செல்லும் விதியின் கையெழுத்தும் பூவத்தக்குடிக் கிராமத்துக்கு 'முன்னடியான்' தெய்வம்போல எல்லைக் கற்கள்.

சாத்தப்பன் மண்ணில் அவதரித்தான், அவன் கடவுளல்ல; ஆனாலும், தான் கடவுளாக அமைய வேண்டுமென்று கனவு கண்டான். 'அம்மானுக்குப் பொண்ணு பொறந்தா எம்பாடு வேட்டைதான். எம் பொண்டாட்டியாகிப்பிடும் அது. அப்பாலே அதுக்கு நானேதான் தெய்வம்!...தெய்வமே, என்னோட ஆசை பலிக்குமா ?' என்று தவங் கிடந்தான். பிஞ்சு நெஞ்சிலே 'முதிர்ந்த ஆவல்' பழுத்துத் தொங்கியது. கனவு பலித்தது, அவன் தவத்தைப்போல. பவளக்கொடி பிறந்தாள். ஐந்து வயதிலே, அறியாப் பருவத்திலே நினைவுகளுக்குப் பசுமை கூட்டிச் சேர்த்து அவற்றிற்கு அன்பும் பாசமும் ஊட்டி வளர்த்து அவனும் அவளும் மகிழ்ந்து பழகின நாட்கள் ஒன்றா, இரண்டா ? தாராடி அம்மன் சந்நிதியிலே நின்று, பால் நிலவில் திளைத்து, 'நின்றால் நெடுமரம்; இருந்தால் இருப்பிருப்பன் சங்கிலி !' என்ற நூதனமான விளையாட்டை விளையாடி, உடல் தீண்டி, உள்ளம் தீண்டி மகிழ்ந்த பிஞ்சுப்பிராயத்தின் நாட்கள் என்றென்றும் சிரஞ்சீவித் தன்மை பெற்றிருக்கலாகாதா ? மணல் வீடு கட்டினார்கள்; கணவன்—மனைவியானார்கள். 'நானு உம் புருசன்;

நீ எனக்கு ஒடையவ!' என்று 'முறை' சொல்லி, 'உரிமை' கோரி, 'உண்மை' நிகழ்ச்சிக்கு ஒத்திகை பார்த்தார்களே அவர்கள்? அத்தி மரத்தடியிலே 'ஹரி நமோத்துச் சிந்தம்' சொல்லித் தன்னுடைய மெல்லிய பூ விரலைப் பிடித்து எழுதக் கற்றுக்கொடுத்த ஆசானுக அத்தான் சாத்தப்பன் உருமாறிய நிகழ்ச்சியையும் பவளக்கொடி நினைத்துக் கொண்டுதான் இருப்பாள்!

காலம் மாறுகிறது.

கனவு மாறுவதில்லை.

'பவளக்கொடி!...''

பவளக்கொடி கண் மலர்களை அகல மலர்த்திஞள். "மச்சான்!" என்று கூவிஞள்.

"பவளக்கொடி, எம்மாப் பொருளுதா நான் ஒன்னை அலட்டிக்கிட்டிருக்கேன், தெரியுமா?"

"நான் ஒங்களோடதானே மச்சான் இம்மா நேரம் பேசிக்கிட்டிருந்தேன்!"

"நான் உன்கூட ஒரு பேச்சு கூட பேசி வாயசைக்கலியே, பவளம்?"

"என் நெஞ்சிலேயும் நினைப்பிலேயும் வாழ்ந்துக்கிட்டிருக்கிற உங்களோடேதான் இம்புட்டுப் பொளுதுக்குப் பேசிக்கிட்டிருந்தேனுங்க, மச்சான்!"

"நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரி!"

"அந்தப் பாக்கியத்தைத் தந்தவுகளே நீங்கதானே மச்சான்?...

"தாராடி அம்மன் சக்தியுள்ள தெய்வம்; கண் கண்ட தெய்வமேதான், பவளம்!"

"மெய்தானுங்க. கண் முன்னலேயே என் தெய்வத்தைக் காட்டிப் பேச வைச்சுக்கிட்டிருக்கிற கண்காணுத நம்ப குலதெய்வமே நெசமாவே சத்துள்ளதுதான்!..."

"நாளைக்கு இந்நேரம் பரிசம் நடந்திடும்."

"உம்!..."

"அடுத்த கிளமை இந்நேரம் நீ என் பொஞ்சாதியாகிப் பிடுவே!"

"இது பொய்!"

"என்ன பவளம் சொல்றே?"

"நான் உங்க சொத்தாகி எத்தனையோ வருசம் ஓடிப் பிடுச்சுதுங்களே, மச்சான்?"

"நல்ல வேளை, நான் பொளைச்சேன்."

"உங்க கையாலே என் களுத்திலே திருப்பூட்டி முடிச்சிட்டீகண்ணு, நானும் பொளைச்சிப்பிடுவேன், மச்சான்!"

அவள் கனவு அவன் நினைவில் கலந்தது!

x x x

சேர்வை குடியிருப்பின் எல்லைத் தடத்தில் மொட்டை வண்டி ஏறியது; அறந்தாங்கிச் சந்தைப் பேட்டைக் காளைகளோ பீடுநடை போட்டு முன்னேறின. திருக்கைவால்ச் சாட்டையை வண்டிக் கூட்டில் செருகினுர் சின்னச்சாமிச் சேர்வை. வேர்வை வழிந்தது. எதிர்த்து வந்த முகம், வண்டியின் மூக்கணாங் கயிற்றைப் பிடித்து இழுத்து நிறுத்தியது.

"கோவிந்த கோனுரய்யாவா? மேலுக்கு எல்லாம் சொகந்தானே?"

"ஆமாங்க, சேர்வைகாரரே! உங்க பொண்ணுக்குப் பரிசம் போட்டாச்சாமே?"

"மெய்தானுங்க. என் ஒடப்பொறந்தா மகன் சாத்தப்பனுக்கே என் மகளைக் கண்ணாலங் கட்டிக் கொடுக்கப் போறேன்!"

"பரிசப் பணம் எம்பிட்டு வச்சிது தம்பி?"

"நூறு ருவா!"

"இம்புட்டுத்தானா?"

"பணத்துக்காகப் பார்த்திருந்தாக்க, சிலட்டூர் கங்காணி வீட்டிலேயே சம்பந்தம் சாடிக்கையை வச்சுக் கிட்டிருப் பேனுங்களே!...கோனாரய்யா, எனக்குக் காசு பணம் ஒசத்தி கிடையாதுங்க! ரத்தக் கலப்பு கைமாறிப் போயிடாம, தலைமுறை தத்துவமா எங்க குடும்பத்துக் குள்ளவே சுத்திக்கிட்டு இருக்கோணு மிங்கிறதுதான் எம்பிட்டு ஆசை!...எங்க பவளத்துக்குப் பசி புரிஞ்சு வேளா வேளைக்குக் கஞ்சித் தண்ணி ஊத்தி அதைப் பக்குவமா நடத்தி வரக்கூடிய கெட்டிக் காரத்தனம் கொண்டது எங்க மாப்பிள்ளை. ஆத்தா புண்ணியத்தாலே சாத்தப்பன் கைகாலோட ராசாவட் டம் எடுப்பாவும் இருக்குது. சாத்தப்பனையும் பவளத் தையும் இன்னிக்கு நேத்தைக்கு நான் புருசன்—பொஞ் சாதியாக் காணலேங்க!...எங்க அக்காவுக்குச் சாத் தப்பன் பொறந்த மறு மூணாம் வருசம் என் வீட்டுக்காரி பவளத்தைப் பெத்தெடுத்துத் தந்து கண்ணை மூடிப் புட்டா. உம்!...இதுங்க ரெண்டுக்கும் கண்ணாலம் கட்டிவச்சு முடிச்சுப்புட்டேன்னா, அப்பறந்தான் நான் பாயிலே பூந்து படுத்துத் தூங்க ஏலுமுங்க!" என்று விளக்கம் தந்தார் சின்னசாமிச் சேர்வை.

"நூத்துக்கு நூறு வாஸ்தவமுங்க. எந்த விக்கினமும் இல்லாம தெய்வம் உடம்பை கொடுத்திருக்கிறப்ப, பணம் காசை கண்ணை மூடித் திறக்கிறத்துக்குள்ள சம்பாதிச்சுக் கிடலாமுங்க. அப்ப நீங்க வண்டியை ஓட்டுங்க. கண்ணால வீருந்துக்கு வந்து சேருகிறேன்!"

"தலைக்குமேலே வேலை வெட்டி கெடக்குங்க. ஆறும் நாள் காலம்பற முகூர்த்தம் வச்சிருக்குது; வந்திடுங்க!"

வண்டி மடங்கியது; வழியும் மடங்கியது.

மாப்பிள்ளை சாத்தப்பனின் குடிசைக்கு முன்னே ஏகப்பட்ட பேர்கள் நின்றனர். சின்னச்சாமிச் சேர்வை பதைபதைத்த உள்ளத்துடன் வண்டியை நிறுத்திக் குதித்தார்.

"அப்பா!...மச்சான் தேங்காய் நெத்துப் பறிக்கிறத்துக்காக தென்னை மரத்திலே எறிச்சாம்; கால் வழுக்கிக் கீழே விழுந்திடுச்சாம்! ரெண்டு காலும் ஒடிஞ்சிடுச்சு; மண்டையிலே வேறே செம்மையா அடிபட்டிருக்குது!...அப்பா, இனி நான் என்ன செய்யப் போறேன்?..."

தலை மயிரைப் பிய்த்துக்கொண்டு பைத்தியம் பிடித்தவள்போலக் குரல் எழுப்பினாள் பவளக்கொடி.

அடித்து வைத்த சிலையாக நின்ற சேர்வை உள்ளே ஓடினார்; பிரக்ஞை தப்பிக் கிடந்த சாத்தப்பனின் ஒடிந்த கால்களின் அடியில் அமர்ந்து விம்மினார்!

x x x

விண்ணிலே நிலவு எரித்துக் கொண்டிருந்தது. ஆனால், சாத்தப்பனின் நெஞ்சிலோ தீ எரிந்து கொண்

டிருந்தது. மூன்று நாட்கள் வரையிலும் அவன் சவம் போலத்தான் கிடந்தான். அன்றுதான் அவனுக்கு லேசாகச் சுயநினைவு எழுந்தது. ஆவணத்தாங் கோட்டையில் சிதம்பர நாவிதன் எலும்பு முறிவைக் குணப்படுத்துவதிலே தேர்ந்தவன். அவனை அழைத்து வந்தார் சின்னச்சாமிச் சேர்வை. சோதனை நடந்தது. தென்னை மரம் ஏறி வழுக்கி விழுந்தவனை விதிமோதி நசுக்கி மிதித்து விட்டது.

"ஒடிஞ்ச ரெண்டு முழங்காலுங்களையும் ஆறவச்சு ஒட்டிப்பிடலாமுங்க. ஆனா, இனிமே இந்த ஆளாலே முன்போல அடி எடுத்து வைக்க ஏலாதுங்க!" என்ற தீர்ப்பை வழங்கியது சோதனையின் அறிவு.

மூன்று ஜோடிக் கண்களும் 'கோ'வென்று அழுது புலம்பிக் கொண்டிருந்தன!

நிலவின் இருதயமும் அழத்தான் செய்தது!

x x x

சிலட்டூர்க் கங்காணியின் வீட்டை சின்னச்சாமிச் சேர்வை மிதித்தபோது, கருக்கல் வேளை. 'தாராடித் தெய்வமே! என் உசிர் இருக்கிறதுக்குள்ளாறவே எம்மவளை தாலியும் கழுத்துமாக் கண்டுக்கிட அருள் செய்!... முந்தி ஒரு வாட்டி கங்காணி ஐயா எம் பொண்ணை தம் மவனுக்குக் கேட்டு ஆளு அனுப்பினாக; அதாலேதான் இப்ப இங்கனே ஓடியாந்திருக்கேன். இந்தச் சம்பந்தம் முடிஞ்சுதின்னா எனக்கு எம்பிட்டோ நிம்மதி. எம் மகளுக்கும் மனசுக்குத் தெம்பாயிருக்கும். காலு ரெண்டும் முடமான ஆளை என் பொண்ணு எப்படிக் கட்டிக்கிட ஒப்பும்?...சொந்தம் வேறே; பந்தம் வேறேயாச்சே?...ஆமா, என் உசிரு இருக்குமட்டுக்கும் சாத்தப்பன் என் மகளைக் கட்டிக்கிட ஒப்பமாட்டேன். இனிமே

சாத்தப்பன் என் பொண்ணு பவளத்தை மறந்துப்பிட வேண்டியதுதான். தர்ம நியாயம்னு அவன் காதிலே சேதியைப் போடச்சொல்லி அனுப்பின எங்க சின்னப்பன் மகன் இம்மாப்பொழுது அவன் கிட்டே தாக்கலைக் கொட்டியிருப்பான் !...தாராடி அம்மனே !... கங்காணி வீட்டுச் சம்பந்தம் கெலிச்சிருச்சின்னு, ஒனக்கு மேலைக்கு தேரோட்டத்தன்னிக்கு பத்து தேங்காய் செதறுகாய் விடுறேன் ! கண் திறடி தாயே !...'

விடிந்தது—பொழுது.

விடிந்தது—அவர் கனவு.

"தெய்வந்தான் உங்களை இங்கே கூட்டி வந்திருக்குது, சேர்வைகாரரே ! உங்க இஷ்டப் பிரகாரம் நீங்க வச்சிருந்த முகூர்த்த வேளையிலேயே எம் மகனுக்கும் உங்க மகளுக்கும் கண்ணாலத்தைக் கட்டி வச்சுப்பிடலாம். ஊடாலே இருக்கிற ஒருநாள் பொழுதிலே உலகத்தை சுத்தி வந்திடலாமுங்களே ?..."

கும்பிடு கொடுத்துத்தானே கும்பிடு வாங்க முடியும் ?...சேர்வையின் தளர்ந்த கைகள் வணக்கம் தெரிவித்தன. அந்த வணக்கத்தில் நூதனமான தெம்பு தலைகாட்டியது !

x x x

ஆவுடையப்பத் தேவர் தோட்டத்திலிருந்து தண்ணீர் கொணர்ந்து வந்தாள் பவளக்கொடி. குறிஞ்சிப் பாடித் தவலையை வெளியிலிருந்த ஒட்டுத் திண்ணையில் 'பிரிமணை'யை அணை கொடுத்து வைத்தாள் ; வாளி வாசற் கோட்டையில் இருந்தது.

அப்பொழுதுதான் சின்னச்சாமிச் சேர்வை 'நூவரல்யா' குடையைச் சுருக்கி மடக்கியவாறு குடிசையினுள்ளே பிரவேசித்தார். 'வேளையும் காலமும்

வந்தா, எல்லாம் தன்னைப்போல நடக்குமின்னு எங்க மேல வளவுப்பாட்டன் சொல்லுவாக ; அது கைக்கு மெய்யாப் பலிச்சிடுச்சு!...இல்லேன்னு, இந்தப் பெரிய சம்பந்தம் கைகூடி வந்திருக்குமா ? இன்னிக்கும் நல்ல நாள் தானும் ; அமிர்தயோகமாம். பரிசப் பணம் ஆயிர ரூபாய் தந்தாகளே கங்காணி ஐயா !...எம்பொண்ணுக்கு பரணி நட்சத்திரமாச்சே ? தரணி ஆளவேண்டியதில்லே எங்க பவளம் !...'

பவளக்கொடியைப் பெயரிட்டுக் கூப்பிட்டார் தந்தை சின்னச்சாமி சேர்வை.

அவள் வந்தாள் ; துயரம் நிரம்பின முகமும் கண்ணீர் வழிந்த முகமும் மாத்திரமே அவர் முன் தரிசனம் தந்தன.

"பவளம், இனி நல்ல காலந்தாம்மா !..."

பவளக்கொடியின் உலர்ந்த உதடுகளிலே நுணுக்கமான மலர்ச்சி ரேகை விட்டிருந்தது.

"ஆமாங்க அப்பா !"

"இனிமே நீ எப்பவும் சிரிச்ச மூஞ்சியோடவே இருப்பேம்மா !"

அவள் இப்பொழுது உளமார்ந்த வகையில் சிரித்தாள் : "மெய்தானுங்க, அப்பா !"

"பவளம், உன்னைத் தாலியும் கழுத்துமாக் கண்டாத்தாம்மா என் மனசு நிம்மதிப்படும் !"

சின்னச்சாமிச் சேர்வை பச்சைக் குழந்தை மாதிரி மெதுவாகச் செருமினர்.

"உங்க மனசுப்படியே என்னைத் தாலியும் கழுத்துமாக் கண்டு கிடாலாமுங்க அப்பா ! உங்க சந்தோசமும்

நிம்மதியுந்தானே அப்பா எனக்கு எப்போதும் ஆதாரம்!"

சேர்வை பெருமூச்சைப் பிரித்த தருணத்திலே வாசலில் ஓர் உருவம் தெரிந்தது. ஓடினார் அவர். கிடைத்த சேதி அவரது இதழ்க் கடையில் முறுவலை உண்டாக்கிற்று, "அக்கா மகன் பரிசப் பணத்தை வாங்கிக்கிடுச்சா? நல்ல வேளை, ஒரு கண்டம் தப்பிச்சிது! இனிமே, எம் பொண்ணு சிலட்டூர் கங்காணி வீட்டு மருமகளாக ஆனது கணக்கேதான்!" என்றார் சின்னச்சாமி சேர்வை.

வந்தவனை வழியனுப்பி விட்டு, சின்னச்சாமிச் சேர்வை உள்ளே நுழைந்தார்; கோணிப் பையிலிருந்த கூறை நாட்டுப் பட்டுப் புடவைகளை வெளியில் எடுத்து வைத்தார்; திருநாகேஸ்வரம் ஜரிகை ரவிக்கைத் துணிகளையும் தனித்து ஒதுக்கி வைத்தார். ஆயிரம் ரூபாய்க்கு ரொக்கப் புள்ளி காட்டிய சில்லறைத் தாள்கள் 'மதிப்பு'க் கொண்டு திகழ்ந்தன. கிழடு தட்டிய சேர்வையின் முகச் சுருக்கங்கள் சில எங்கோ காணுமற் போயின. ஆனந்தம், 'சூ! மந்திரக்காளி!' போட்டதோ? மந்திரச் சொல்லுக்குக் கால அளவை மூன்றே முக்கால் நாழிகை யல்லவா? மறுபடி நெடு மூச்சு விடலானார் சேர்வை. ஏற்று முடித்த பணியின் விளை பொருளா இந்த வெய்துயர்ப்பு? ஆம்; காவடிப் பாரம் சுமப்பவனுக்குத்தான் தெரியும்?..."

"அம்மா, பவளம்!"

பவளக்கொடி வந்தாள். அவளது வலது கையில் திருநீற்று மடல் இருந்தது. அவள் நோக்கு சுற்றித் திரிந்தது; நோக்கத்தில் இனம் புரியாத துள்ளல் இருந்தது.

"அப்பா, உங்க கையாலே எனக்கு விபூதி பூசுங் கப்பா!" என்று அன்பு குழைய, உணர்ச்சி உந்தக் கோரினாள் புதல்வி.

"நானே உன்னைத் தேடி வந்து குலதெய்வத்தை நினைச்சிக்கிணு 'துண்ணறு' பூசணும்னு ரோசிச்சுக் கிட்டிருந்தேன். தேடிவந்த தெய்வமாட்டம் நீயே வந்திருக்கே! நீ சகல சௌபாக்கியத் தோடவும் புள்ளை குட்டிகளோடவும் பூ மஞ்சள் குங்குமத் தோடவும் நல்லா இருப்பாயம்மா!"

திருநீறு திகழச் சிரித்தது யார் தெரிகிறதா? சித்திரப் பதுமை பவளக்கொடி!

"பவளம், இங்காலே கிட்ட வா, ஒரு நல்ல சேதி சொல்லப் போறேன். ஒன்னை சிலட்டூர்க் கங்காணி மகனுக்குக் கண்ணாலம் கட்டிக் கொடுக்கப் போறேன். நாளைக்கு முகூர்த்தம்! ஆமாம்மா, நீ அதிட்டக்காரி!"

ஆனந்தம் வெற்றி பெற்றிருந்தது; ஆகவே தான் சேர்வையின் குரல் தழதழத்தது!

"அப்பா!"

பவளக் கொடியின் நேத்திரங்கள் கலங்கின.

"பவளம்!"

"அப்பா! என்னைத் தாலியும் கழுத்துமாக காண வேணும்னு துடிச்சீகளே, அப்பா? இந்தாப் பாருங் கப்பா என் தாலியை!"

மங்கல நாண் சிரித்தது!

"ஆ...!"

சின்னச்சாமி சேர்வையின் முன்னே உலகம் தட்டா மாலை சுற்றத் தொடங்கியது!

"அப்பா! நான் என் மச்சானுக்குச் சேரவேண்டிய சொத்துங்கிறதை நீங்க மறுக்க ஏலாது. ஆனா, இப்ப உங்க மனசு மாறிக் கிடுச்சு!...எம் மச்சான் நொண்டியானதாவே என்னால் நம்ப முடியல்லே! ஏன்னா, என்னோட நெஞ்சிலேயும் நெனைப்பிலேயும் அந்த நாள் தொட்டு வாழ்ந்துக்கிட்டிருக்கிற என் ஆசை மச்சான் அன்னிக்கு இருந்தாப்பிலேதான் இன்னிக்கும் மன்மத னாட்டம் அச்சுக் குலையாம இருக்காக! கொஞ்சப் பொளுதுக்கு முந்தி நீங்க செஞ்ச சூது எனக்கும் புரிஞ்சிது. மச்சானை நான்தான் வலுக்கட்டாயப்படுத்தி என் கழுத்திலே நல்ல வேளையிலே தாலி பூட்டச் செஞ்சேன். இல்லேன்னா, இந்நேரம் நீங்க எனக்கு ஆசி சொல்லி விபூதி பூசியிருக்கவே முடியாதுங்க!... எனக்காக நீங்க யாதொண்ணுக்கும் மனக் கிலேசப் படாதீங்க. என் மச்சானோட அன்பான தங்க நெஞ்சு என்னிக்குமே முடமாகாதுங்க அப்பா! உங்களைக் கண்டாத்தான் அவுக பல்லிலே பச்சைத் தண்ணி காடும்!" என்று பவளக்கொடி விம்மினாள்.

தந்தையின் காலடியில் பாசம் உருக்காட்டிக் கொண்டிருந்தது!

பேபி எனும் தத்துவம்!

"டாடா!" சொன்னாள் சாருமதி, பிஞ்சுக் கரங்கள் "போய் வா, அம்மா!" என்று அனுமதி கொடுத்தன. நீலக்கார், நீள் சத்தம் பரப்பிக் கொண்டே வெளி வாசலைக் கடந்தது. அவ்வளவுதான்; "அம்மா!... அம்மா!" என்று விம்மிய வண்ணம் 'பேபி' ஓடி வந்தாள். இளம்பரிதி மிதிபட்டது!

"அம்மா வந்திடும். அப்பா நான் இருக்கேனே!... வா, பல் தேய்ச்சு விடுறேன்!" என்று அமைதிப் படுத்தினான் கந்தநாதன். தான் பெற்ற செல்வத்துக்குத் தானே சேவகனானான்; அடிமையும் ஆனான்!

* * *

'ரேடியோக்ராம்' பாடியது.

சாருமதி குறுஞ்சிரிப்புக் காட்டினாள்; கோல நகையும் எழில் வெறியும் அம்பலக் கூத்து ஆடின.

" அம்மா !..."

பாட்டை அனுபவித்தவாறு ஆடும் குதிரையை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த பேபி அம்மாவை அழைத்தாள். சுவரில் பதிந்திருந்த அன்னையை அழைத்தால், வருவாளா ?

" அப்பா !"

" ஏம்மா !"

" வந்து..."

" என்னடா கண்ணு? ஓவல் வேணுமா ? ப்ரூட்னிக் தரட்டுமா ?..."

" ஊஹூம் !"

" பின்னே ?..."

" அம்மாதான் வேணும் !"

" இன்னும் கொஞ்சம் நாழி கழிச்சுத் தாரேன் !"

" முடியாது !...இப்பவேதான் தரணும் !"

" அம்மா வெளியே போயிருக்குதே ?"

" எங்கேயாம் ?"

" ஷூட்டிங்குக்கு !"

" அப்படின்னு ?"

" படம் பிடிக்கிறத்துக்கு !"

" முந்தி என்னைப் படம் பிடிச்சியே, அதாட்டமா?"

" இல்லே !"

" அப்புறம்...?"

" சினிமாப்படம் எடுக்கிற கம்பெனிக்கு !..."

" அங்கே போயி...!"

" அம்மாவைப் படம் எடுப்பாங்க !"

" எடுத்து...!"

" அப்புறம் நாம எல்லோரும் தியேட்டரிலே படம் பார்க்கலாம்!'

" பலே ! நீ, நான், அம்மா மூணுபேரும் போன ஞாயிற்றுக்கிழமை பார்த்தோமே, அதுமாதிரி படமா ?"

"ம் !"

" நீ ஏம்ப்பா அம்மாவோட போகலே ?"

" அம்மாவுக்குத்தான் நடிக்கத் தெரியும் !'

" உனக்கு...?"

" தெரியாது!..."

" அப்பா மக்கு ! அப்பா மக்கு !'

பேபிக்கு வானம் அளந்து குதிக்கத் தெரிந்தது.

கந்தநாதனுக்கு மண் நோக்கி மௌனம் சாதிக்கத் தெரிந்தது.

" அப்பா !..."

" பேபி !...'

" நான்கூட ஒரு நாளைக்கு அம்மாவோட போகப் போறேன் !...'

" ஓ !"

" எங்க அப்பா நல்ல அப்பா !..." தந்தைக்குக் கண் வரம்பில் ஆனந்தக் கண்ணீர். ' ரத்தத்தின் ரத்தத்' திடமிருந்து நற்சாட்சிப் பத்திரம் பெற்று விட்டானல்லவா?

பாடம் எழுத அமர்ந்தாள் பேபி. உபரிப் பாடம் போதிக்க ஆசிரியர் வந்துவிட்டார். மேஜை விளக் கொளியில் விளம்பரம் ஒன்று இருந்தது: "பிரபல நட்சத்திரம் சாருமதி கதாநாயகியாகத் தோன்றும் முதல் திரைப்படம் 'வாழ்வே பொங்கல்!' உருவாகிறது; பொங்கல் நந்நாளில் உங்கள் அனைவரையும் மகிழ் விக்கும்!"

சாருமதியின் நிழற்படம் மட்டிலுமே அச்சிடப்பட் டிருந்தது.

"அம்மா! எங்கம்மா!"

*   *   *

ஓடுகின்ற ஆறு ஓடிக்கொண்டே இருப்பது கிடை யாது. ஆனால், ஓடுகின்ற காலம் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது.

கந்தநாதனின் பார்வைக்கு அந்தப் புகைப் படத் தொகுப்பு இலக்காகிக் கொண்டிருந்தது. ஒரு படம் ஓராயிரம் நினைவுகளுக்குத் தூபம் போட்டது. எழுந்தது சாம்பிராணி மணம் அல்ல; சாம்பிராணிப் புகையும் அன்று; வறுமையின் தீ கக்கிவிட்டிருந்த துன்பப் புகை அது; படத்தில் அது ஒட்டியிருந்தது. வாழ்வு ஒரு கனவைப் போன்றிருந்தது. அன்றைய முதுரை இது. அப்போது, கந்தநாதன் ஓர் ஏழை ஓவியன். உயிருள்ள இயற்கைக்கு அவனது தூரிகை உயிரானது; ஓவியங்களின் உருவங்களுக்கு அவன் திறமை உயிர்ப் பானது.

ஒரு நாள்: சாருமதி அண்ணாமலை மன்றத்தில் புதுக் கருக்குடன் பொலிவுற்று விளங்கிய மேடையில் ஆடினாள். 'சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா!'

என்ற பாரதியார் பாடலுக்குப் பதம் பிடித்தாள்; பாவம் ஏற்ருள்; பாவனே ஏந்திஞள்; பாவை அவள் ஆடிஞள்; பாடிஞள்; பிள்ளைக்கனியமுதும் பேசும் பொற் சித்திரமும் அவளுள் உருப்பெற்றன. கண்ணம்மாவை ஆடித்திரியக் கண்டால், அவளை போய் ஆவி தழுவு கின்றதாம்!...அன்பு தருவதிலே கண்ணம்மாவுக்கு நிகரான தெய்வம் வேறு இல்லையாம்...!

'சீர்பெற்று வாழ்வதற்கே—உன்னைப்போல்
செல்வம் பிரிதுமுண்டோ ?'

இந்தக் கட்டம் ஓவியக்காரனை உலகம் மறக்கச் செய்தது. காரணம், ஆடியவள், சபையோர்களை ஆட்டி வைத்துவிட்டு, அவள் உலகம் மறந்தாள். அவளுடைய நீலோத்பல விழிகளிலே தாய்மைப் பாசம் வழிந்திடக் கண்டான் கந்தநாதன். மண் குடிசையில் ஒளி மிகு தேவதை உயிர்பெற்ருள். 'சிருஷ்டிகர்வம்' அவனுக்கு மண்டை கொண்டதோ ? பின், ஏன் அவன் அப்படிச் சிரிக்க வேண்டும் ? போனுன்; திரும்பிஞன்; உடன் சென்ற சாருமாதியை உரிய இடத்தில் சேர்த்தான்; பணம் தந்தாள்; மறுத்தான்; சந்திப்புக்களை உண் டாக்கிஞள்; சந்தர்ப்பங்களை வாழ வைத்தான். அன்று தரிசித்த 'அந்தத் தாய்மைப் பண்பு' அவனது நெஞ் சத்திடை கனலாக மணத்தது. கனல் புனலானது. ஜோடி மாலைகள் அவனையும் அவளையும் ஜோடி சேர்த் தன. கந்தநாதனின் விழிவெள்ளம் அணை கடந்தது.

"அப்பா !..."

ஆண்டவனின் கருணைக்கு நன்றி தெரிவித்து முடிந்தது.

"அழுதியாப்பா ?..

"இல்லையே !..."

கண்ணீர் சிரிப்பது உண்டல்லவா ?

ஸ்டுடியோவிலிருந்து கார் வந்தது. ஒப்பனை கலந்த வதனத்தில் சூடு ஏற்றம் புரிந்தது. கந்தநாதன் பதறிப் போனான். பொங்கல் நெருங்கியது. இரவு பகலாக படப்பிடிப்பு அலுவல். உடல்நலம் பாதிக்கப்பட்டது. தொலைபேசியும் நாடிக்குழலும் இருப்புப் பெட்டியும் இயங்கின !

'அத்தான், என்னையும் உங்களையும் மறக்காமல், மாயம் நிறைந்ததாகப் பேசப்படுகின்ற அந்தத் திரை யுலகை நினைவிற் கொண்டு, அதே திரையுலகுக்கு வழி காட்டியாக நான் வாழ்வேன். இது என் கற்பின்மீது ஆணை !'

முதலிரவு நிகழ்ச்சி இது !

" அம்மா...!"

மதலை அழுதது ; உயிர் மீண்டவள் தேற்றினாள்.

" அப்பா !...அம்மா!"

மாடிமனையில், சீர்பெற்று வாழ்வதற்குக் கிடைத்த செல்வம் சுவரிலே சிரித்தது !

* * *

பொங்கல் திருநாள் நெருங்கிக் கொண்டிருந்தது. எங்கும் புது மணம் கமழ்ந்தது.

பேபிக்கு வகை வகையான கவுன்கள், கந்தநாத னுக்குப் புது மாதிரி உடைகள், சாருமதிக்குப் பண்பு காக்கும் ஆடைகள்—பொங்கலுக்குத் துணி இனத்தில் மட்டும் ரூபாய் ஆயிரத்துக்குச் செலவு !

உண்ட உணவு போன இடம் தெரியவில்லை.

தொலைபேசி அழுதது. 'ஒரு காட்சியைத் திரும்பவும் எடுக்க வேண்டுமாம்; உடனே சாருமதியை அழைத்தார்கள். எடுத்தது கறுப்பாகி விட்டதாம்!'

பிற்பகல் படப்பிடிப்பு. சாருமதி புறப்பட்டாள். பேபி ஓடோடி வந்தாள். "அம்மா, நானும் வாரேன்!..." என்றாள்; அழுதாள். நான்கு நாட்களுக்கு முன் பேபிக்கு லேசாக உடம்பு சுட்டது. தாய் துடித்து விட்டாளே ?

"ம், வாம்மா பேபி !"

"அப்பா...!"

"ஏம்மா ?"

"நீயும் வாப்பா !"

"நான் எதுக்கு ?...அம்மாதான் வருதே ?..."

"முடியாது !...நீயும்தான் வரவேணும்!..." அ—ஆ எழுத்துக்களை அழித்துவிட்டு செறுமி செறுமி விம்மலானாள் !

"ம் ! வா, போகலாம் !"

மனைவி, நட்சத்திரமாகிப் படப்பிடிப்புக்குச் சென்றதும், மகளுடனும் ரேடியோப் பெட்டியுடனும் தூரிகையுடனும் காலங்கழித்துப் பழகிக்கொண்டவன் கந்தநாதன். அவன் அவ்வாறு விரும்பினான்.

விலக்கு விதிக்கு விதி விலக்கு உண்டுதானே ?

*　　*　　*

பேபி இமைமூடாமல் அந்தப் பூங்காவை நோக்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய குஞ்சுக் கைகள் தந்தையின் பாசப் பிடிப்பில் இணைந்தன. 'எவ்வளவு

நாள் அம்மாகிட்டே சொன்னேன். கடைசியிலே இன்னிக்குத்தானே நான் இதெல்லாத்தையும் பார்க்க முடிஞ்சிது ! ஆஹா ! எவ்வளவு பிரமாதம் !' என்று வியந்தது பிஞ்சு நெஞ்சம். ‘ ஓவல்டின் ’ அடித் தொண்டையில் நின்றது ; ஆப்பிள் துண்டங்கள் கவுன் பையில் இருந்தன.

புகை.

அந்தியில் ஒளி சிந்தியது.

பூங்கா.

தேவகி அழகாக உடுத்துக் கொண்டு பெஞ்சில் அமர்ந்திருந்தாள். அந்தத் தேவகி—சாருமதி ! அப்பொழுது ஆடம்பரமாக உடை அணிந்த இளைஞன் ஒருவன் வந்து அவளுடன் “ தேனே, மானே !” என்று உரையாடினன். அவளோ அவனை ஏசினாள் ; பேசினாள். அவன் அவள் அழகுக் கரங்களைப் பற்றி இழுத்தான்.

அத்தருணத்திலே, “ ஐயோ, அம்மா !...” என்று ஓர் அலறல் ஒலி விண்ணைச் சாடிற்று.

எங்கோ திரும்பி, முதல் இரவுச் சிந்தனையில் மனம் வசப்பட்டிருந்த கந்தநாதன் திடுக்கிட்டு, சுய நினைவை அடைந்தான். அது சமயம், பேபி பூங்காவிற்குள் ஓடினாள். அருகில் கிடந்த மரக்கட்டையை எடுத்து அந்த இளைஞனை நோக்கி வீசினாள்.

உதிரம் சொட்டியது ; கண்ணீரும் சொட்டியது !

“ அம்மா, அம்மா ! எனக்கு இருக்கிற நம்ப அப்பாவே போதும்மா!...எனக்குப் பயமாயிருக்கு அம்மா !... அப்பா ! அம்மாவை அழைத்து வாப்பா ; போயிடலாம் !...”

பேபியையும் கந்தநாதனையும் சுமந்த கார் மெரினு வழியே பறந்தது !

*　　　*　　　*

சாருமதி படித்தாள் :

" ஒப்பந்தம் செய்யப்பட்ட படங்களில் நடித்து முடிந்ததும், பிரபல நட்சத்திரம் சாருமதி பூரண ஓய்வு பெறப்போவதாக அறிவித்திருக்கிறுர்."

பொங்கல் மகிழ்ச்சியில் திளைத்திருந்த பேபி அந்தச் செய்தித்தாளைப் பறித்து முன்னும் பின்னும் புரட்டிக் கொண்டிருந்தாள். அவளுடைய எழிலார் உதடுகள் உச்சரித்தன : " ஆஹ...ஆவன்ஹ !...ஏஹ !...!"

நீலாம்பரி

எதிர் வீட்டுப் பிரஹதத்தின் வீட்டினின்றும் மிதந்து வந்து கொண்டிருந்த அந்தத் தாலாட்டுப் பாட்டின் இன்ப நாதம் அவள் காதுகளில் ரீங்கார மிட்டுக் கொண்டிருந்தது. மெய்யும் மனமும் ஒன்று சேரவே, அவள் தன்னை மறந்தாள்; சூழ்நிலையை மறந்தாள்; உலகத்தையே மறந்து விட்டாள். அவள் முன் அழகு உருவம் ஒன்று தன் கனி இதழ்களைத் திறந்து அழகு காட்டிப் புன்னகை புரிந்து கொண்டிருந்தது. அவ்வுருவம் அவள் விழி விளிம்பில் ஆடாத பதுமையாக, பேசாத பொற்சித்திரமாக, புனையாத ஓவியமாக நெளிந்தோடிக் கொண்டிருந்தது. அவள் சிரித்தாள். தன்னை மறந்து சிரித்தாள்; உலகையே மறந்து சிரித்த சிரிப்பு அது!

குழந்தையின் கண் மலர்கள் சங்கமித்துத் துடித்துப் பிரிந்தன. அவள் விழிகளும் பொருந்தி விலகின; விலக்கப்பட்டன. அவளுடைய இதயம் பெருமூச்சு விட்டது. விழிகள் கண்ணீர்க் குளமாயின. இதயம் வெடித்து விட்டது போல அவள் துடித்தாள்; துவண்டாள்; புரண்டாள்; புலம்பினாள். காரணம்: அவள் தன்னை மறக்கவில்லை; சூழ்நிலையை மறக்கவில்லை; உலகத்தையும் மறக்கவில்லை.

அவள்!—சந்திரா!

சுய நினைவு வந்தது. நீர்த் திவலைகள் வாடிய அவளது கன்னங்களை வருடிநிற்க, உணர்வு உடலுக்கு சவால் விடுத்ததும், திரும்பினாள். எந்தக் குழந்தையையும் அவள் காணவில்லை. எந்தக் குழந்தையும் காணப்படவில்லை. எங்கெங்கும் சுற்றி சூழ ஒரே சூன்ய கோளம் தான் பேயாகப் பயங்காட்டி முறுவலித்துக் கொண்டு நின்றது. அவள் நெஞ்சமும் அதே சூன்ய வட்டத்தினுள்ளே தலைவணங்கிக் கிடந்தது. வேதனையின் வரம்பு எல்லைகடந்து கொண்டே போயிற்று. எரி தழலாகக் கொதித்த அவளின் வெந்து நொந்த உள்ளக் குமுறல் கண்ணீராக வந்தது.

அவள் அழுதாள். வழிந்த விழி நீரைத் துடைக்கவில்லை. பார்வையை நிலை நிறுத்திப் பார்க்கலானாள். எதிர் வீட்டிலிருந்து சற்று முன்னர் எழுந்த 'தாலேலோ' என்னும் பாட்டு அது சமயம் அடங்கிப் போயிருந்தது.

பிரஹஸ்தத்தின் குழந்தை தூங்கிவிட்டிருக்க வேண்டும். அவள் முடிவு அது. உண்மையின் முடிவுகூட அதுவாகத்தான் அமைந்திருந்தது.

'அவள் பாக்கியசாலி; பெற்றெடுத்திருக்கிறாள்'— சந்திராவின் மனம் எதிர் வீட்டுப் பெண்ணைப்பற்றி

முன்னர் படித்த தீர்ப்பையே திரும்பத் திரும்பப் படித்து கொண்டிருந்தது. மனம் சலனத்திற்குள்ளாகின்ற போது வேறெதையும் சிந்திக்கத் தோன்றாமல், குறிப் பிட்ட ஒரே கவலையின் நினைவுகளைக் குழப்பிவிடும் சமயம், கீறல்பட்ட இசைத்தட்டாகத்தான் போய்விடும் போலும்! கீறல்பட்ட இசைத்தட்டு என்றாலும், கீறல் களின் விளிம்புவரை உதயமாகும் சங்கீதமாவது உயிர்த் துடிப்புப் பெற்றிருக்கும். ஆனால் உள்ளத்தின் இசைத் தட்டு கீறலுக்கு இலக்காகிப் போனால், வேதனையும் நெட்டுயிர்ப்பும்தான் திரும்பத் திரும்பச் சுட்டெரிக்கும்!

சில நாள் முந்தி நடந்த சம்பவம் அவள் நெஞ்சைக் கவ்விப் பிடித்தது.

அன்று பிரஹதத்தின் குழந்தைக்குப் பிறந்தநாள் விழா கொண்டாடினார்கள். சாயந்திரம். அவள் குழந் தையைத் தூக்கி வந்து சந்திராவின் ஏந்திய கரங்களில் தவழச் செய்தாள்—பூத்த புன்சிரிப்புடன், பெற்ற பெரு மிதத்துடன், சந்திரா குழந்தையை உச்சிமோந்து, முத்தம் கொடுத்துக் கொஞ்ச ஆரம்பித்தாள். "சந்திரா, கடவுள் இந்தத் தரமாகிலும் கண்ணைத் திறந்து உன்னைப் பார்க்கவேணும். நீயும் என்மாதிரி பெற் றெடுத்து எங்கிட்டே ஆசி வாங்கிக்க வரவேணும்," என்று ஆறுதல் சொல்லிப் பிரிந்தாள் பிரஹதம்.

என்றோ சொல்லிவிட்டுப் போன அவ்வார்த்தைகள் அவள் காதுகளில் 'கணீர் கணீர்' என்று ஒலித்தன; உலுப்பின.

கடந்தகால நடப்புக்களை எண்ணத் தொடங்கியது அவள் மனம். மனம் ஒரு சிலந்திக்கூடு. எண்ணங்கள் வலை பின்னின.

தன்பாட்டில் கண்ணீர் ஆறுக வழிந்தோடிக் கொண்டிருந்தது.

*　　　*　　　*

ரங்கநாதனும் சந்திராவும் கைப்பிடித்து வாழ்க்கைத் தம்பதியாகி கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகும் தறுவாயில் இருந்தன. இருந்தும், அவர்களுக்கு சந்தான பாக்கியம் நிலைபெறவில்லை. இதுதான் அவர்களுக்குப் பெருங் குறை. மற்றப்படி, அவர்களது தாம்பத்திய அன்பில், பிரேமையில், பாசத்தில் கடுகத்தனை சலனமும் தோன்றியதில்லை.

குலத்தை விளங்க வைத்துப் பெயர் துலங்கச் செய்யும் ஒரு சிசுவிற்காகத்தான் அந்த நாள் தொட்டு அவ்விரு உயிர்களும் தவங்கிடந்தன. பெற்றவர்களின் வாரிசுச் சின்னமாகப் பரிமளிக்க ஒரு குழந்தை—அம்புலியின் எழில் காட்டி அன்னம் பிசைந்து ஊட்டுகையில் மழலை மொழி பேசி இன்பக் கதை பல சொல்ல ஒரு பாலகன்—விந்தை லீலைகள் புரிந்து 'லூட்டி' அடித்து வித்தாரத்தன்மை புரியவல்ல ஒரு ஜீவன்—பெண் தெய்வங்களின் முத்திரையில் ஒரு குலச்சுடர்!

தன்னுடைய மனைவிக்குக் குழந்தை ஜனித்து உயிருடன் நிலைக்க வேண்டுமென்ற தீராத தாபம் பின்னும் மேலோங்கி மனத்தை ஏக்கமுறச் செய்யவேண்டும் என்பதற்குத்தானோ என்னவோ ரங்கநாதனுக்குக் குழந்தைகளுக்குப் பாடம் போதிக்கும் உபாத்தியாயர் வேலை கிடைத்தது.

குழந்தை என்றால் சந்திராவுக்குப் பிராணன். யாருடைய பிள்ளையாக இருந்தாலும் சரி, வாங்கி அணைத்து உச்சிமோந்து முத்த முத்திரையிட்ட பின்

ணர்தான் உரியவளிடம் அதைச் சேர்ப்பிக்க அவளுக்கு நாட்டம் கொடுக்கும். அவள் இதயம் அப்படி; பாசம் அவ்விதம்; பெற்றும் பெருதவளாகி நின்ற பேதையின் கனவு அது மாதிரி! குழந்தைகள் புடைசூழ அவர்களது கொள்ளைச் சிரிப்பில், குதூகலக் கேளிக்கையில் தன் துயரை, புத்திரசோகத்தை மறக்க எத்தனித்தாள் அவள். அந்தப் பிள்ளைகளுக்குக் கைநிறைய பிஸ்கட், மிட்டாய் கொடுத்து அனுப்புவாள் அவள். குழந்தைகள் வாய்நிறையச் சிரிப்பை உமிழ்ந்து செல்வார்கள். அவளுக்குரிய விழி வட்டம் நிறைய கண்ணீர் உதிர்ந்தோடும். விதியின் விதி!

* * *

அந்த ஒரு நாள்...!

அவர்களது ஏமாற்றத்தின் முதலாம் எண் அது.

அப்பொழுது சந்திரா கருவுற்றிருந்தாள். நிறை மாசம் நெருங்கும் வேளை. எட்டு மாதம் ஓடி விட்டது பூப்போல. அவர்களது 'இன்பக் கனவு' உருப் பெற்றுக் கொண்டிருந்த பொன் வேளை அது. இளந் தம்பதி இருவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்திருந் தனர். மணமான ஓராண்டுத் திருப்பத்தில் தம்பதி இருவர் தாய்—தந்தையராகிவிடப் போவதில் பிறந்த மகிழ்ச்சி அது. ஆனல் பிறந்த அவர்களது மகிழ்ச்சி 'கனு'வாகிவிட்டது. 'இந்தா அந்தா' என்றிருக்கை யில் குறைப் பிரசவமாகி விடவே, உள்ளங்கள் இரண் டும் வெந்து உருகி உருக்குலைந்தது தான் மிச்சம்.

* * *

அந்த ஒரு நாள்...!

அது அவர்களது ஏமாற்றத்தின் இரண்டாவது எண்.

சந்திரா இரண்டாவது முறை கருவுற்றிருந்தாள். இந்தப் பேறு அவளுக்கு இதயம் நிறைந்த நிம்மதியைத் தந்தது. அடைந்த துயர் வடு தழும்புமாறிப் போகு மென்ற ஆறுதலில் நாட்களை, மாதங்களைக் கணக்கிடு வதில் போக்கினுர் ரங்கநாதன். காலத்தின் நெருக்குப் பிடியில் ஊசலாடிக் கொண்டிருந்த இடை நாட்களில் ஒருவர் முகம் ஒருவருக்கு ஆறுதல்; அவர்கள் வாழ் வின் ஆறுதல் அப்படி; வாழ்க்கையின் நிர்ணயம் அப்படி !

தண்ணீரில் இட்ட சர்க்கரையென, காலம் கரைந் தது. ஆனுல், சர்க்கரைபட்ட தண்ணீராக விளைவு உருத்தேருதிருக்கையில், இன்பம் ஏது? வாழ்வு ஏது?

தினமும் டாக்டர் கமலம் சந்திராவை பரிசோதித் துச் சென்ருள். கர்ப்பந்தரித்து எட்டு மாதங்களும் தேய்ந்தன. அவளது கரு வளர்ந்து கொண்டு வந்தது. முதல் பிரசவத்தின்போது ஏற்பட்ட 'குறைப் பிரசவ எல்லை'யும் நழுவி ஓடியது. எல்லைப் பிரிவு அவர்கள் நெஞ்சங்களுக்குள் ஆனந்தம் பிணைத்தது.

இன்பத்தின் தவிப்பை ஏங்க வைத்து நீட்டி முழங் கிச் சென்றது காலம்.

அன்றும் வழக்கம்போல சந்திராவைப் பரிசோதித் தாள் டாக்டர் கமலம். கடந்த சில நாட்களாக ஆஸ் பத்திரி 'மெடர்னிட்டி வார்டி'ல் விளைந்த கண்காணிப் பின் பேரில் கர்ப்பநாடி சுமுகமாகவே பேசியது. டாக் டருக்கும் திருப்தி.

"சந்திரா, இரண்டொரு நாளில் பிரசவமாயிடும். பயப்படாதே. நான் இன்று இரவு திருச்சிபோய், விடிந் ததும் வந்து விடுகிறேன்," என்று சொல்லிச் சென்ருள் டாக்டர் அம்மா.

இரவு வந்தது. இருந்திருந்தாற்போல சந்திரா புழுவாய்த் துடிக்கத் தொடங்கினாள். பெற்றவர் களுக்கு உயிர் உடலில் இல்லை. ஊரில் பள்ளிக்கூடத் துக்கு ஒரு வாரம் 'லீவ்' எழுதிப்போட்டுவிட்டு வந் திருந்த அவள் புருஷன் ரங்கனாதன் பதை பதைத்துப் போனார். நர்ஸ்கள் ஓலம்கேட்டு வந்தார்கள். பிரசவ மாகப் போகிறதென்று சொன்னார்கள். தலைமை டாக்ட ரம்மா வந்தாள். சோதனை நடந்தது. தைத்த முள்ளை விலக்கும் நேரத்திற்குள் அவள் முகம் மாறிக் காட் டியது.

" ஆயுதம் உபயோகப் படுத்தித்தான் குழந்தையை அப்புறப்படுத்தவேணும். இல்லை யென்றால் தாய் பிழைப்பதே அரிது; குழந்தை உள்ளேயே செத்திருக் கிறது!..."

அழுகை வளர்ந்தது. கடைசி வேளை. சிகிச்சை சமயம், எதிர்பாராத விதமாக வந்து சேர்ந்த டாக்டர் கமலம் குறை வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள். வழிந்து நின்றது கண்ணீர்.

கணம் விட்டுக் கணம் அலறித் தீர்த்துக் கொண் டிருந்த சந்திராவின் கூக்குரல் ரங்கனாதனின் உயிரை ரத்தமாக்கிப் பிழிந்தெடுத்தது. அவர் அழுதார்; கண்கள் அழுதன; இதயம் அழுதது.

இரவு விழித்திருந்தது.

ரங்கனாதன் தூங்கவில்லை. ஆஸ்பத்திரிக்குள் துயரத்தின் பேய்ச் சூழ்நிலையில் அவருடன் உறக்கம் அணைய மறுத்தது. இரவோடு இரவாக அவர் வீட்டுக் குப் புறப்பட்டார். பலப்பல நினைவுகள் அவர் நெஞ்சரங் கிலே பயங்கரமாய்க் கூத்தாடின. இன்பச் சேதியுடன் நுழையலாம் என்ற ஆசையுடன் வீட்டை விட்டுப்

புறப்பட்ட அவர் துயரச் செய்தியுடன் நிராசையைச் சுமந்து உள்ளே மனை மிதிக்தலானார்.

தலையை நிமிர்த்தினார். மேஜை மீது 'ஸ்டாண்'டில் சந்திராவின் புகைப்படம் இருந்தது. கவர்ச்சி கனிந்த அவளது ரூபம் புத்திரதாபத்தினால் ஏங்கித் தவிப்பது போல ரங்கநாதனுக்குப் பிரமை தட்டியது.

அவ்விரண்டு முறைகளில் ஒவ்வொரு தடவையும் சந்திராவை வளைகாப்புக்குப் பிறந்த வீட்டிற்கு வழி யனுப்பும் தருணம், தாயும் பிள்ளையும் வெவ்வேறாகப் பெற்றுப் பிழைத்து, மறுபிறவி எடுத்துச் சுகமுடன் வீடு மிதிக்க வேண்டுமே என்று அவர் எவ்வளவோ தூரம் பிரார்த்தித்திருக்கிறார்; ஆனால் நடந்தது என்ன?

அந்நாளில் மணவினைச் சடங்கொன்றில் ரங்கநாத னும் சந்திராவும் குழந்தை ஒன்றை மாற்றிக் கொண் டார்களே, அப்போது வருங்காலம் வனப்புக் கொண்டு திகழவும், தங்கள் பெயரைச் சொல்லவும் வல்ல குழந்தை குட்டிகளின் பெற்றோர்களாகப் போகும் இன்பத் தவிப் பிலே அவ்விரு இதயங்களும் எத்துணை மகிழ்ச்சியுற் றிருந்தன...? ஆனால், நடந்தது என்ன...?

பார்வையைச் சுழற்றினார் ரங்கநாதன்.

எதிரே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திறந்த பீரோ வில் பொம்மைகளும், விளையாட்டுச் சாமான்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு முறையும், 'விடிவு பிறக்காதா ?' என்ற நம்பிக்கையால் தயாரிக் கப்பட்டவை அவை. எல்லாம் ஒன்றுகூடி அச்சமயம் அவர் இதயத்தை 'டைனமிட்'உருவில் நின்று தாக்கிப் பிளந்து சிதிலமாக்கி விட்டன. அவர் புலம்பினார்.

இவற்றையெல்லாம் திரும்பவும் காண சந்திரா வின் பேதை உள்ளம் எங்ஙனம் சகிக்கப் போகிறது? அவளுக்கு எப்படி ஆறுதல் கூறமுடியும்?...'

மணிக்கூண்டிலிருந்து ஒலிபரப்பி எழும்பிய மணிச் சத்தம் அவர் காதில் உன்னிப்பாகக் கேட்டது. பாதிச் சாமம்; மணி பன்னிரண்டு. எண்ணத் தொலையாத சஞ்சலத்தின் வாயிலில், எரிமலையின் தீக் குழம்பாக உருகி நின்ற அவருக்கு எப்படி உறக்கம் வரமுடியும்?

இருளும் ஒளியும் பிணைந்திருந்த அறையின் ஜன் னல் திரையை விலக்கினார். கூப்பிடு தொலைவில் ஓடிக் கொண்டிருந்த காவிரி நதியின் காட்சியை ஒருமுறை தன் மனக் கண்முன் கொணர்ந்தார். 'வா வா' என்று அபயமளிக்க அது வரவேற்பதுபோல் ஓர் உள்ளு ணர்வு எழுந்தது.

சந்திராவின் நிழற்படத்தைக் கடைசி முறையாகப் பார்க்க ஆவல் குருத்துவிட்டது. அடியெடுத்து வைத்து மின்விசையை அழுத்தினார், ரங்கநாதன்.

நீர்மல்கிய கண்களுடன் சந்திராவைப் பார்த்தார். அந்த நிமிஷம் அவரது மனத்தில் மின்னல் போன்ற ஓர் ஒளி—எண்ணக் கதிர் பளிச்சிட்டது. ஒரு தடவை; இரண்டு தடவை—இப்படிப் பலமுறை அதே கேள் வியைத் தன்னுள்ளே கேட்டுப் பார்த்தார். அவர் மனம் சிரிக்கத் தொடங்கியது.

புத்திர சோகத்தினால் அனலில் புழுவாய்த் துடித் துக்கொண்டிருக்கும் சந்திராவிடம் சென்று ஆறுதல் சொல்வதைவிட்டு, தற்கொலை செய்து கொள்ளத் திட்ட மிட்டது எவ்வளவு மதியீனம் என்பதை அவர் உணர லானார்.

அதே கணம், வீட்டை விட்டு ஆஸ்பத்திரியை நோக்கிப் புறப்பட்ட சமயம், அவர் கேட்ட சேதி புலனனைத்தையும் அடங்கி ஒடுங்கச் செய்து விட்டது.

இதே போல சந்திராவும் புத்திர சோகத்தில் மனம் விரக்தியடைந்து தற்கொலை செய்து கொள்ள எத்தனிக்கையில், யார் செய்த நல்வினையோ அவள் தடுக்கப்பட்டு விட்டாள்.

இரு மனம்!

விசித்திரப் புதிர்!

இது பழைய கதை!

* * *

மனம் ஒரு 'காரம்போர்டு.' எண்ணங்கள் ஆட்டக்காய்களாக நின்று உணர்வின் விழிப்பில் விளையாடின. சந்திராவும் ரங்கனுதனும் ஆட்டக்காரர்கள் ஆனார்கள். வாய்மூடி மௌனிகளாக, எதிர்த்தெதிர்த்து வீற்றிருந்தார்கள். எண்ணங்கள் இதயச் சிறையினுள் முழங்கின; முடங்கின; முயங்கின; சற்றுமுன் ஆடிய ஆட்டத்தின் முடிவுகூட அவர்களுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை.

கனன்று கொண்டிருந்த இருளின் மத்தியில் ஒளி விடும் உதயதாரகை ஒன்றின் தரிசனம் அவர் பார்வைக்கு இலக்காகியது. விரிந்த நேத்திரங்களின் கூட்டுறவில் அடைபட்டு நின்ற அக்காட்சியின் குறிப்பாக அந்தத் தாரகையின் கனவுரு ரங்கனுதனைத் திகைக்கச் செய்தது. திகைப்பு என்றால், எதிர்காலத்து இன்பக் கனவின் ஓர் அரிய உணர்வைக் கூட்டி எழுப்பி நின்றதொரு திகைப்பு; ஆனந்தத் திகைப்பு. கண்கள் நீர்

கூட்டின; ஆனந்தம் வரம்பு தாண்டுகையில் கண்களில் நீர் தளும்புமாமே, அப்படித்தானோ?

அவர் எழுந்தார்.

இரவின் மோடி, உலகிலே போதைக் கிறக்கத்தை ஊட்டி நின்றது.

அவர் எழுந்தார்; நடந்தார்.

படுக்கை அறைக் கதவுகள் திறந்து கிடந்தன. 'வாருங்கள்' என்று முகமன் கூறினவா? அல்லது அவளேதான் மறைமுகமாக வரவேற்பு வாசித்துவிட்டு, உடலை பஞ்சணை மெத்தையிலே விசிறி விட்டுக் கிடக்கிறாளா...?

சந்திரா படுத்துக் கிடந்தாள். கண்கள் உறங்கவில்லை ஏதோ கனவு ஒன்றில் தன் ஆசைக் கனவினைப் பின்னிவிட்டு, விளைவின் மூட்டத்திற்குக் காத்துக்கிடந்தாள் பாவை.

"நீங்களா?"

"ஏன் சந்திரா? ஆமாம்...நான் தான்...!"

"இல்லை.. வந்து!"

தட்டுத் தடுமாறியவாறு மரியாதைக்கு அடையாளமாக அவள் எழுந்தாள்.

அவர் அவளது தோள்பட்டையைப் பிடித்து அமரச் செய்தார்.

"உடல் நலமில்லையா, சந்திரா?"

"ஊஹூம்...!"

"பிறகு?"

"...........…"

பிடித்துவைத்த பொற்பாவையாக அவள் நின்ருள். அவள் நெஞ்சத் துடிப்பை அவர் நன்கு கேட்டிருக்க முடியும். இமைப்பினையே மறந்தவர் போன்று அவளைப் பார்த்த வண்ணம் நின்ருர். அவரது நீண்ட சிந்தனை அவளுடைய ஆழ்ந்த மௌனத்திற்குக் காரணம் கூற வில்லை.

" சந்திரா...!"

" .... "

" சந்திரா !"

" நான்... "

"நீ......"

" நான்......தாயாகப்......போகிறேன்...!"

" என்ன...?"

ஆனந்தம் குமிழியிட, பொங்கும் புளகத்துடன் அவள் கூறினதற்கு, ஆத்திரம் வெடித்துக் கிளம்பும் பாவனையில் இவர் இப்படிக் கேட்கிறதென்ருல்...?

" ஏன் இப்படிக் கேட்கிறீங்க ?"

" ஒன்றுமில்லை...!"

அவர் தொடரவில்லை. தொடரும் நிலைக்கு தன்னைத் தயார் படுத்திக் கொள்ளவுமில்லை. ஓடிப்போய் படுக்கையில் படுத்தவர்தான், மாலை மாலையாகக் கண்ணீர் பெருக்கினுர். உறக்கம் தடம் புரண்டது. கலக்கம் ஆட்சி செலுத்தியது.

'சந்திரா மூன்ருவது தவணை கருவுற்றிருக்கிருள். ஆனுல், இம்முறை...மறுபடியும் அவள் சாவின் சந்நிதியில் ஊசலாடுவதா...?'

அவருக்கு அங்கத்துக்கு அங்கம் உயிர்க் கனல் பற்றி எரிவது போன்ற வேதனை ஊடுருவியது.

அவருடைய இதழ்கள் மறுபடியும் முணு முணுத்தன.

அவர் முன் இறந்த சம்பவங்கள் உயிர் பெற்றன. இழந்த இன்ப நினைவுகள் உயிர் மீண்டன. முதல் ஏமாற்றம்; அதையடுத்து இரண்டாவது ஏமாற்றம்; சந்திரா செத்துப் பிழைத்த சம்பவங்களல்லவா அவை?

கண்மடையில் வெள்ளம் பெருக்கெடுத்தது.

இரவின் பிரிவுக்கு ஏங்கிய உலகிற்கு உதயம் தேறுதல் தர ஆயத்தமானது.

ரங்கநாதன் விழித்தெழுந்தார். மூளை மரத்துவிட்ட மாதிரி அவர் உணரலானார். தன் துணைவியை நாடினார். அவள் முகத்தில் கண்ணீரின் உவர்க்கோடுகள் வரி வரியாகப் பரவியிருந்தன. அவளும் இரவெல்லாம் அழுதாளா?

" சந்திரா, ஏன் ஒருமாதிரி இருக்கிறாய்?"

" எதுவுமில்லை. உடலில் என்னவோ வலி ஏற்படுகிறது!..."

" அப்படியென்றால் வா; டாக்டரிடம் காண்பிக்கலாம். சீக்கிரம் புறப்படு...!"

பரிசோதனை நடந்தது.

" கருவின் அமைப்பு சரியாக இருக்கிறது. ஒரு குறையும் ஏற்பட நியாயமில்லை..." என்றார் டாக்டர் ஒருவர். புதிதாக மேல் நாட்டில் படித்துத் திரும்பியவர் அவர். அனுபவசாலி என்று ஊர்வாய் முணுமுணுத்

தது. இருக்கலாம். முன் இரண்டு தடவைகளில் கூட பழைய டாக்டர் ஒரு குறையும் வராது என்றுதானே சொன்னார்?

எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டை வாங்கிக் கொண்ட தருணம், ரங்கநாதன் டாக்டரை நெருங்கிக் காதுடன் காதாக ஒரு ரகசியம் பேசினார். வரும்போது மருந்து பல உருவில் அவர்கள் வீட்டை அலங்கரித்தது. சந்திராவும் ரங்கநாதனும் அலுத்துப்போய் வீட்டிற்கு வந்தனர். கிளர்ந்தெழும்பிய வேதனை காரணமாக உள்ளே கூடத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்தாள். அது ஆடியது. அதை நிறுத்திக் கொண்டாள்; கால் நுனி விரல் பூமிமீது பதிந்தது.

ரங்கநாதன் குரல் கொடுத்தார்:

" சந்திரா, இந்த மருந்தையும் சாப்பிடு. நலமென்று புது டாக்டர் கூறினார்!..."

கணவர் நீட்டிய மருந்தை வைத்தவிழி வாங்காமல் ஒரு முறைக்கு இருமுறையாக பார்த்தாள்; பார்த்துக் கொண்டேயிருந்தாள் சந்திரா. ஏந்தி நின்ற மருந்துடன், அவளது தளிர்க்கரங்கள் தாமாகவே நடுங்கின.

"சந்திரா...!"

"..........."

"சந்திரா...!"

அவள் நிமிர்ந்தாள்.

அவள் கண்கள் கனல் கக்கின

அவள் நெடுமூச்சு விட்டாள்.

அவள் விம்மி அழுதாள்.

"இந்த மருந்தை எனக்கு எதற்கு நீங்கள் கொடுக்கிறீர்கள்? என் கருவை நாசம் செய்யவா?"

அவள் அலறினாள்; பதறினாள்; பதை பதைத்தாள்.

"சந்திரா, பதறாதே! உன்னுடைய கேள்வி—மாற்றம் என்னையே குலைநடுங்க வைக்கிறது; இரண்டு முறை நீ கர்ப்பமுற்று பிரசவ சமயங்களில் அடைந்த ஏமாற்றம் நிர்மாணித்த வேதனை, வேதனை பிறப்பித்த உன் அலறல், ஐயோ அவை யாவற்றையும் எண்ணி எண்ணி இதயம் நொந்த நான், மறுபடியும் நீ கருவுற்று விடக் கூடாதே என்றுதான் கடவுளிடம் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். நீ தாயாகப் போவதறிந்ததும், அக்கணம் முதல் நான் நிம்மதியைப் பறிகொடுத்தேன். யோசித்தேன். டாக்டரிடம் ஓடினேன். 'நீங்கள் சம்மதித்தால் மருந்து தருகிறேன். கருவை அழித்து விடலாம்' என்று சொல்லி என் சம்மதம் கேட்டு டாக்டர் இந்த மருந்தைத் தந்தார். நீ தாயாக, நான் தந்தையாக மாறவேண்டுமென்பது உன்—என்—நம் பல நாளைய ஆசைக் கனவு. ஆனால் நீ மீளவும் அத்தகைய பழைய பிரசவ நரக வேதனையை அநுபவிக்க நான் சற்றும் சம்மதிக்க முடியாது. சந்திரா, வா...இந்த மருந்தைச் சாப்பிடு, சந்திரா...!"

"அத்தான், முன்போல இனியும் என்னால் அந்த நரகவேதனையை அநுபவிக்கச் சத்தியில்லை என்று எண்ணி நானே நேற்று இரவு இதே 'கர்ப்ப நாசினி'யை வாங்கி வந்து அருந்த நினைத்திருந்தேன். ஆனால் என் தாய்மை அத்தகைய பாவத்தைப் புரிய ஒப்பவில்லை. என் கருவில் அணு அணுவாக உருப்பெற்றுவரும் என் சிசு—உங்கள் ரத்தப் பிண்டம்—நம் குலச்சுடர் என்னை

எள்ளி நகையாடிச் சித்திரவதை செய்து விட்டது. நல்ல வேளை, தப்பினேன்! சிசுவைச் சிதைத்துவிட வில்லை. என் மனச்சாட்சி என்னை இன்னமும் பிய்த்துத் தின்கிறது, நேற்று நான் செய்யவிருந்த தவற்றுக்காக! என் கருவும் பிழைத்தது. நான் பிழைத்தேன்! நான் இப்போது தாய்மை பெற்றவள்! தாயாகப் போகிறேன். 'குவா குவா' மொழி பேசிக் குதூகலிக்கச் செய்யப் போகும் இன்னமுதம் என்னை 'அம்மா' ஸ்தானத்தில் வைக்கப்போகிறது. நீங்கள் 'அப்பா' வாகும் வாய்ப்பு அண்மையில் நிற்கிறது!...அந்த மருந்தை வீசி யெறியுங்கள். எனக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் இன்ப நினைவு ஒன்றிலேயே நான் சகலவேதனைகளையும் துச்சமாக மதிப்பேன். நான் தாய்! பெண்மையின் உருவில் உருப்பெற்ற 'தாய்மை' வளரப்பெற்ற தாய்...''

சந்திராவா இப்படி வீறு கொண்டு பேசினுள்? தாய்மைப் பாசம் கற்பித்த துணிச்சலா, பந்தமா, கனவா?

தம்பதிகள் வடித்த கண்ணீர் முத்துச்சரம் தொடுத்துக் கன்னங்கள் வழியே வாய்க்கால் வகுத்து ஓடிக் கொண்டிருந்தது.

x x x

அன்று:

சந்திராவும், ரங்கனுதனும் போட்டி போட்டுக் கொண்டு நீலாம்பரியில் தாலாட்டுப் பாடி, தங்கள் முதற் குழந்தையைத் தங்கத் தொட்டிலில் இட்டுத் தூங்க வைத்துக் கொண்டிருந்தார்கள்!

தம்பி உடையான்

ராஜாத்தியை உள் வாசலில் இருத்திவைத்துவிட்டு வெளி வாசலுக்கு வந்தாள் பூங்காவனம். கடலைக் கொடிப் பட்டறை மீதிருந்த சிவசாமியை ஓரக்கண்ணால் அளந்தவண்ணம், 'கவ்வல்' கம்பினால் எஞ்சிக்கிடந்த கடலைக் கொடிகளைச் சுருட்டி மடக்கித் தூக்கி வீசினாள் அவள். பழகிப்போன குறிப்புக்கு இரு தரப்பிலுமேதான் வெற்றி. அவளைப் போலவே, அவனும் வேர்வைக்கு அணை கோலினான்.

"பாளத்த வெய்யில் ஆளை வறுத்து எடுத்துப்பிடும் போலே!"

"ஆமா, மச்சான். நீங்க சொல்றது மெய்தானுங்க!"

பூங்காவனம் சொல்லி வாயை மூடவில்லை. கோடை வெயில் குணம் மாறியது. மழை கண் திறந்தது. அதே சமயத்திலே, ராஜாத்தியின் சிணுங்கல் அழுகையும் கண்

திறந்தது. கோடை மழை நினைத்தால் பொழியும்; குழந்தையின் கண்ணீர் மழைக்குங்கூட நேரம், காலம் கிடையாதுதானே ?

சிவசாமி பட்டறையி னின்றும் தரையில் குதித்தான். பூங்காவனம் ஓடிப்போய் மகளை எடுத்துக் கொண்டாள்.

"நம்ம மாணிக்கத்தைக் காணலையே, மச்சான் ? பள்ளிக்கோடம் விட்டிருப்பாகளே?... நான் பெத்த மவன் தூத்தலிலே நனைஞ்சிக்கிணு எங்கணே அவதிப்படுருனே? எனக்கு ஒண்ணும் மட்டுப்படல்லீயே?..." என்று வருந்தினாள் அவள்; சேலைத் தலைப்பினால் தலையைத் துடைத்துக் கொண்டாள்; ராஜாத்திக்குச் சிரிப்புக் கொள்ளவில்லை.

"ஒரு மூச்சு பறிஞ்சு போய்! புள்ளையைத் தேடிக்கிட்டு ஓடியாரேன், பூங்காவனம்!" என்று சொல்லிவிட்டுச் சிவசாமி வாசலுக்கு விரைந்தான். அப்பொழுது விண்ணுக்கும் மண்ணுக்கும் ஊடாகப் பொன்நிறக் கதிர்கள் விளையாடின; தூவானம் அழகுடன் திகழ்ந்தது.

'அப்பா!" என்று சன்னக் குரலெடுத்துக் கூவியபடி ஓடிவந்தான் மாணிக்கம். பாதங்களிலே ஊர்ந்திருந்த வேகம் தன் போக்கில் மட்டுப்பட்டது. மாணிக்கத்தின் தலையைத் துடைத்தாள் பூங்காவனம்.

"தூத்தலுக்கு எங்கேடா ராசா ஒண்டியிருந்தே? ..." என்று கவலையுடன் கேட்டான் சிவசாமி.

"அரசமரத்து ஒண்டலிலே அப்பா!"

"எம்புட்டு வக்கணையாச் சேதிசொல்லுறான்,கேட்டியளா, மச்சான் ?"

"ம்!" என்று 'ம்' கொட்டிக் கொண்டே வந்த சிவசாமி தன் மகனுடைய மேற் சட்டையையும் 'ட்ரௌசர்'ரையும் கழற்றினான். பைகளிலிருந்து மிட்டாய்கள் சில உதிர்ந்து விழுந்தன.

"ஏதுடா இதெல்லாம் கண்ணு?"

"சேக்காளி குடுத்தான்!..."

"இல்லே மாமா! இவுக பெரியப்பா குடுத்தாக. எங்கண்ணாலே நான் கண்டேனுக்கும்!" உண்மையைச் சொல்லிய பெரு மகிழ்ச்சியுடன் வந்து நின்றாள் சிறுமி அல்லி.

"யாரு அல்லி, வேலாயுதத்தோட அப்பாவா?"

"ம்!...உங்க அண்ணாச்சி, மாமா!" என்று அழுத்தம் வீசிப் பேசினாள் சுட்டிப் பெண்.

சிவசாமியின் பற்கள் ஒன்றுடன் ஒன்று உரசின. "அண்ணாச்சி!"—மறுகணம், கையிலிருந்த மிட்டாய்களைத் தூர வீசியெறிந்தான் அவன். "ஏலே, இனிமே அங்கனே போனே, அப்பவே உன்னை முறிச்சுப் போட்டுப் பிடுவேன். ஆண் குஞ்சு சாமி பிடிச்சுப் போடலைன்னு நெனைச்சுக்கிடுறேம்!" என்று அபாய அறிவிப்பைக் காட்டி, கைகளையும் ஓங்கினான் தந்தை.

குழந்தை மணம் விம்மியது!

*　　*　　*

'தம்பியுடையான் படைக்கு அஞ்சான்!' என்பது வரலாறும் காப்பியமும் வடித்துக் கொடுத்த உண்மை.

குப்புலிங்கம் சேர்வைக்கு இரு கண்கள் போல, பெரியசாமியும் சிவசாமியும் அமைந்தார்கள். சிவசாமி தம்பி; பெரியசாமி மூத்தவன். பிஞ்சு உள்ளந்

களுக் கெல்லாம் அவர்கள் இருவரும்தான் 'தலைக்கட்டு' கொண்டவர்கள்; 'கார்வார்' போன்ற உரிமைக்கும் பாத்தியம் பூண்டார்கள். ஒருநாள், 'உப்புக்கோடு' மறித்து விளையாடினார்கள். 'தண்ணீர் பாய்ச்சி' முடிந்ததும், கரையில் காக்கும் பொறுப்பு பெரியசாமியின் தலையில் விழுந்தது. அந்த விளையாட்டில் முறைமையில் இன்னொருவன் தப்புச் செய்தான். உடன் பிறந்தானை எதிர்த்த பொடியன்கள் எழுவரையும் எதிர்த்தான் தம்பி சிவசாமி. 'எங்க அண்ணாச்சியை! இந்த ஊர்க்காட்டிலே ஒருத்தன் கை நீட்டித் தொட வா?...' என்று வீறு பேசி, தமையனைக் காத்து வெற்றியும் பெற்றான்.

சிவசாமி சின்னவன் தானே? அவனுக்கு ஒரு திருப்பம் அம்மை கண்டது. குய்யோ முறையோ வென்று, வெளிவாசலில் செருகப்பட்டிருந்த வேப்பிலைக் கொத்தைப் பார்த்து அழுதான் பெரியசாமி. உடன் பிறப்பு இல்லையெனில், அவ்வுடம்பு பாழ் என்ற மூதுரைக்குப் ,பொழிப்புரையாக அமைந்தது அவன் வடித்த கண்ணீர். அம்மன் இரங்கினாள்; அம்மை இறங்கியது! "தம்பி! தம்பி!" என்று வானத்துக்கும் பூமிக்கும் கூத்தாடினான் பெரியசாமி.

பெரியசாமியும், சிவசாமியும் பையன்களாகவே இருந்திருக்கலாகாதா...?

* * *

பொடுகுத் தலையில் தூதுவளை இலைச்சாற்றைப் பிழிந்தாள் பூங்காவனம். வாயைத் துடைத்துவிட்டு 'லேஞ்சை' உதறித் தோளில் போட்டபடி வந்தான் சிவசாமி. நண்டுக் குழம்பு இன்னமும் அவன் கையில் மணத்தது; 'வெத்திலைச் சருகு' போட்டுக் கொண்டான் அவன். மண் வெட்டி, கடப்பாறை, கரணை அரிவாள்

போன்றவைகளை எடுத்து உள்ளிருந்த 'சாப்பு'க்குள் போட்டு மூடினான் அவன்.

நிலவுப் பெண் பூ முடித்துச் சிங்காரப் புன்னகையை வெள்ளி முலாம் பூசி வெளியேற்றிய வண்ணம் 'வெள் ளோட்டம்' வந்து கொண்டிருந்த ஆனந்தமான பொழு தல்லவா அது !

மாணிக்கம் "ஆத்தா!" என்று அழுதான். புண் வலித்திருக்க வேண்டும்.

"ரெண்டு பொளுது போனதும் பொடுகு குணமாகிப் பிடும்டா, கண்ணு!...மாரியம்மன் தேரோட்டத்தன் னிக்கு உனக்கு முடி இறக்கவேணும். அதுக்குள்ளாற எப்படியும் தலைப்புண்ணு சாடா காஞ்சிப்பிடும்!" என்று விளக்கினான் சிவசாமி. 'பாவம், நான் அண்ணைக்கு அப் பிடித் தலையிலே குட்டி யிருக்கப்புடாது!' என்ற கழி விரக்கம் அவனுள் கோட்பாடு காட்டிற்று. அதே வேளை யில் சிவசாமியின் மனம், மாணிக்கத்தை அடிப்பதற்கு வழி காட்டிய துணை நிகழ்ச்சியை நினைத்தது; அந்தத் துணை நிகழ்ச்சியின் ஆதார சுருதியாகக் குரல் தந்த தலைமைச் சம்பவம் ஏடு திருப்பியது. அவன் பார்வை எங்கோ திசை போனது. அவன் உதடுகள், "அண்ணாச் சியாமே! அண்ணாச்சி!" என்று உரக்கக் கத்தின.

ஆண்ட பெருமாள் ஆசாரி நாட்டு வைத்தியர்; கைராசிக்காரர். சூரணமும் பச்சிலையும் அவருக்குள் அடக்கமே! அவர் வந்து சிவசாமியிடம், "தம்பி, உங்க அண்ணாச்சி பெரியசாமி, சேதி தெரியாதாங்காட்டியும்? ...அந்தி சாஞ்சுங்கூட மிளகாய்க் கண்ணுகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கிட்டிருந்தாராம். ஏற்றமரம் முறிஞ்சு, உச்சாணியிலே நின்ன உங்க அண்ணாச்சி தவறி அப்படியே சாம்பான் கிணத்துக்குள்ளறவே

விழுந்துப்பிட்டாகளாம்!...மஞ்சப்பத்து போடுறதுக்கு கொடுத்து வச்சிருக்குது. வழியிலே போன ஆளுங்க அவரைக் காப்பாத்தி வெளியேத்தித் தூக்கிக்கிட்டு வந்து வீட்டிலே போட்டிருக்காங்க! இன்னம் பேச்சு இல்லே!...ஆமா, உங்களுக்குத் தெரியாதா?...நீங்க போய்ப் பார்க்க வேணுமா, தம்பி?" என்று விவரம் சொன்னார்.

சிவசாமி 'ம்' என்று பெருமூச்சைப் பிரித்தான். அங்கிருந்து விரைவு பாய்ச்சிச் சென்று மறைந்தான்.

"பெரியப்பாவுக்கு மேலுக்கு முடியலேயாம். சொல்லு ஆத்தா!" என்று வேண்டினான் மாணிக்கம். ப-ட-ம் எழுத்துக்கள் சிலேட்டுப் பலகையில் அழிந்திருந்தன.

"ஆமா, ஆமா!..."

* * *

ஐயனார் குதிரையையே இமை வலிக்க, நெஞ்சு வலிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் சிவசாமி. அவனுடைய விழிகளிலே ஆத்திரம் பொங்கியது.

தோளுக்கு மேல் தோழன் என்ற அளவுக்குப் பெரிய சாமியும், சிவசாமியும் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் தான், குப்புலிங்கம் சேர்வை கண்களை மூடினார். கடன் கட்டி போக, சேந்தங்குடி ஜமீன் கிணற்றுத் தொங்கலில் இருந்த இரண்டு சோளக் கொல்லை அவர்கள் இருவருக்கும் மிஞ்சின. பெரியசாமியின் பொறுப்பில் இவை இருந்தன; அண்ணனும், தம்பியும் உழைத்தனர். சாண் வயிற்றைக் கழுவி மூடவே பிரம்மப் பிரயத்தனமாக இருந்தது. இதற்கிடையில், பெரியசாமி பட்டணத்துப் பக்கம் போய்ச் சாயாக்கடை வைத்து மூன்று வருஷங்களை ஓட்டிவிட்டு ஊருக்கு ஓடிவந்தபோது,

அவனிடம் பணப் புழக்கம் மிஞ்சி யிருந்தது; கல்யாணம் கட்டிக் கொண்டான். இரண்டு சோளக் கொல்லையில் தனக்கு ஒன்றை எடுத்துக்கொண்ட பெரியசாமி, தம்பிக்கு ஒன்றையும் ஈந்தான். ஆனால், பெரியசாமியின் பால் அதிருஷ்ட தேவதையின் நோக்கு விழுந்திருந்தது. எனவே, அவன் தொட்டது துலங்கியது. ஆனால், தம்பியான சிவசாமி உடல் உழைப்பையே நம்பினான்; உழைப்பு முழுப்பலன் சொல்லி விடுமென்று கூறுவது சாத்திய மில்லைதானே!

காலம் நிற்கவில்லை.

பூங்காவனத்தின் மீது சிவசாமிக்கு இஷ்டம் விழுந்தது; கல்யாண விஷயத்தைச் சொன்னான் அவன்; தன் தமையனிடம் பிரமாதமாக எதிர்பார்த்தான் அவன். ஆனால் அவனோ நூறு ரூபாய் மட்டுமே கொடுத்தான். "எங்கிட்டே இதுக்கு மேலே கிடையாது. நான் சுயார்ஜிதமாகச் சம்பாதிச்சுக் கை கொஞ்சம் வலுத்தப்புறந்தான் கண்ணாலம் கட்சியைப் பத்தியே மனசிலே நினைச்சேன். அது போலே, நீயும் சொந்தமாச் சம்பாரிச்சு ஆனதும், உன் மனசுக்கு ஏத்தவளைக் கட்டிக்கிடேன்!" என்று நிர்த்தாட்சண்யமாகத் தீர்ப்பளித்து விட்டான் பெரியசாமி.

அன்று தினம் உடன்பிறப்புப் பிளவு கண்டது; 'முகாலோபனம்' நின்றது.

பெரியசாமியின் 'கை' ஓங்கியது; வெள்ளாமை விளைச்சல் மட்டுமல்ல, கொடுக்கல் வாங்கல் தொழிலும் நடத்தினான். மிளகாய் 'உபயத்'துக்கு ஐந்து பத்து கடன் கொடுத்தும் வரலானான் அவன். தலைச்சன் குழந்தை வேலாயுதம். அவன் பிறந்ததும், அதிருஷ்டம் மேலும் வளர்ந்தது.

சிவசாமி தனிமரம் ஆனுன். மேலத் தெருவில் இருந்த பூங்காவனத்தின் பூங்கரம் பிடித்தான்; அந்தக் குடிசையிலேயே வாழ்க்கை நடத்தினுன். கையடக்கமாக 'டீ கடை' ஒன்றை நடத்தினுன். வரவுக்கும், செலவுக்கும் போக, அஞ்சு கணக்கில் உண்டியல் கலயத்தில் 'நிதி' சேரத் தொடங்கியது. தலைச்சன் மாணிக்கம்.

மாணிக்கத்தைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தான் சிவசாமி. அப்போது பெரியசாமி மாணிக்கத்திடம் வழியில் கண்டு ஒரு ரூபாய் கொடுத்தானும்! இதை மகன் வாய்மொழியில் கேட்டதும் சிவசாமி அந்தப் பணத்தை ஆள் மூலம் அண்ணனிடம் அனுப்பிவிட்டுத் தான் மூச்சு விட்டான். 'என் கண்ணாலத்தை நடத்தி வைக்காத அண்ணனுக்கு, எனக்கு மூணும் வருசம் பேதி வந்து சாகப் பிழைக்கக் கிடந்தப்ப ஒண்ணுஅரை தந்து உதவாத அண்ணனுக்கு இப்போ என்ன புதுசா கரிசனை வந்து முளைச்சுதாம்?...சாகப் போறப்ப, இம்பிட்டுக் கஞ்சத்தனத்தையும் தான் தலைமேலே சுமந்துகினு போவணும்!... நூறு அம்பது பணம் சேர்ந்திருக்கிறதைக் கடைசிக் காலத்திலே தலையிலே தூக்கிக் கிட்டா போகப் போறுங்க?...ம்!'—இவ்வாறு வருந்திய நாட்கள் ஒன்ரு, இரண்டா?

* * *

மாணிக்கம். பள்ளிக்குப் புறப்பட்டான்; கோணியால் செய்யப்பட்ட புத்தகப் பை தோளில் இருந்தது; நெற்றியில் விபூதி இலங்கிற்று.

சிவசாமி வந்து வாசலில் நின்ருன். அவனைத் தேடி ஓடி வந்தான் ஒருவன். "சிவசாமி, உங்க பெரியசாமி அண்ணுச்சிக்கு தொண்டைக்கும் வாய்க்கும் இழுத்துப் பறிச்சுக்கினு இருக்குது; உன்னை ஒருவாட்டி பார்த்துப்

பிடணும்னு கையோட கூட்டியாரச் சொல்லுறுரு; உங்க அண்ணுச்சி மகன் வேலாயுதம் வேலை பார்க்கிற குறிஞ்சிப்பாடிப் பாத்திரக் கடைக்குப் பையனை உடனே அனுப்பும்படி தந்தி கொடுத்திருந்துச்சு; பாவம், வேலாயுதத்துக்கு அம்மை பூட்டியிருக்குதின்னு பதில் தந்தி பேசியிருக்காகளாம்!...என்ன தீவினையோ, உங்க அண்ணுச்சி பெரியசாமிக்குத் தன்னுடே மகன் கையாலே கொள்ளி வைச்சு, வாய்க்கரிசி ஏத்துக்கிடறத்துக்குக் கூட லவிதம் போடலே!''...என்றான். சிவசாமி சிலையாகிவிட்டான்.

சிவசாமி காயகல்பம் ஏதும் சாப்பிடவில்லை. ஆனாலும் அவன் சிறுவன் ஆனான். காலத்தின் பாசம் அவனுள் பெருக்கெடுத்தது. முன்னம் ஒரு நாள் இம்மாதிரி உப்புக் கோடு விளையாடிய வேளையிலே, தான் தன் தமையனைக் காத்த நிகழ்ச்சியை எண்ணமிட்டான். அவ்வளவுதான்; அவன் ஓடினான். "ஏலே முருகு, நீயும் உங்க அண்ணனுமே சண்டை போட்டுக்கிடலாமா? ராசியாயிருந்து விளையாடுங்கப்பா!'' என்று சொல்லி, அண்ணன்—தம்பியைச் சேர்த்து வைத்தான்; பிறகு திரும்பினான். காற்பாதங்களில் இருந்த கண்ணீர் அவன் முன் தெரிந்தது. "அண்ணுச்சி!''என்று கூவிக் கதறியபடி ஓடினான் சிவசாமி!

x x x

"பெரியப்பா!...பெரியப்பா!"

சிவசாமி அவ்வீட்டிற்குள் அடியெடுத்து வைத்ததும், கேட்ட முதற் குரல் இது. அவன் விழித்துப் பார்த்தான். மாணிக்கம் தேம்பியழுது கொண்டிருந்தான். அவனது பிஞ்சுக் கரங்களில் பத்து ரூபாய்

நோட்டுக்கள் பல இருந்தன; காலடியிலே ரொட்டிகளும் மிட்டாய்களும் இருந்தன.

"அண்ணாச்சி!...அண்ணாச்சி..."

அழைத்தான் சிவசாமி; கூவினான்; கதறினான்!

'தம்பி!' என்று கூப்பிடக் கூடாதா பெரியசாமி?— அவன் வாயில் மஞ்சள் துணி விளங்கியது.

"அண்ணனுக்கும் தம்பிக்கும் கடைசிக் காலத்திலே யாச்சும் ஒட்டுதல் இருந்திருக்கப்படாதா?...பெரியசாமி யோட கஞ்சத்தனம் நல்லவேளை, சிவசாமி மகன் மாணிக்கம் வரை செல்லுபடியாகலே!...மாணிக்கத்தும் பேரிலே என்னமோ உசிரையே வச்சிருந்தார் மூத்தவர்! ...அப்பன்—ஆத்தாளுக்குத் தெரியாம கடைசிவரைக்கும் பெரியப்பன் பக்கத்திலேயேதான் இந்தப் பையன் கிடந்தான்!"

காதுகளின் இடைவெளியில் காற்றில் மிதந்த செய்திகள் சிவசாமியை அண்டின!

'சரி, அப்பாலே குளிகை வந்திடும். கொள்ளி வைக்கிறது யாருன்னு முடிவு பண்ணலையா?" என்று பெரியவர் ஒருவர் வினவினார்.

"அண்ணாச்சி!...ஐயோ அண்ணாச்சி!..."

விழிநீருடன் வீறு கொண்டு எழுந்தான் சிவசாமி; குறுக்கே ஓடிவந்தான் சிறுவன் மாணிக்கம்!

"அப்பா!......வேலாயுதம் அண்ணாச்சி வரலேன்னு, நானேதான் கொள்ளி வைக்கோணுமின்னு பெரியப்பா கேட்டுக்கிணாங்க!..."

மாணிக்கம் குழந்தைத் தெய்வம்!

தீபாவளி நாணயம்

காந்த விளக்கின் ஒளி கண்ணைப் பறித்தது.

காசியின் கண்களிலே உறக்கம் ஊஞ்சலாடியது; வெட்டிப் போட்டிருந்த துணிமணிகளைப் பகுதி பகுதியாகப் பிரித்தான்; சட்டை, கவுன், சோளி என்று தனித்தனியாக அடுக்கி வைத்தான். புறப்பட்டு வந்த கொட்டாவிக்கு வழி திறந்து விட்டவாறு, எல்லாவற்றையும் ஒருமுறை கண்ணோட்டம் செலுத்தினான். 'தீபாவளிக்கு இன்னும் மூன்று நாட்கள் தான் கிடக்குது' என்ற நினைவு அவனுள் ஒரு வகையான சிலிர்ப்பை உண்டாக்கியிருந்தது.

"ராமையா, ரங்கூன்காரர் சட்டைக்குக் 'காஜா' எடுத்து முடிச்சுட்டியா?"

"ஆமாங்க, அண்ணாச்சி!"

"பச்சை ஆச்சி தந்திட்டுப் போன ரவிக்கைக்குப் பொத்தான் தைக்க ஆரம்பி. இந்தா, பொத்தான் எட்டு!"

"ஆகட்டுங்க!"

"அது முடிஞ்சதும், இந்தக் கொட்டடிப் பாவாடைக்கு நாடா போட்டுக் கைத் தையலாவே தைச்சிப்பிடு, தம்பி!"

"சரிங்க!"

"பாவாடை ஆறு 'பாட்டம்' அகலம்; நாடாவை டேப்பிலே கணக்கா அளந்து நறுக்கிக்க ராமையா!"

"ஓ!"

'ஓ' என்ற இணக்கக் குறிப்புடன் கொட்டாவியும் உறவாடி விளையாடியது.

"ஏ, சாயாவைக் குவளையிலே ஊத்திக்கொடு; சொச்சத்தை நீ குடி; குந்தினவன் எழுந்திருக்கையிலே இன்னிக்கு வந்த புது ஆர்டரையெல்லாம் சாடாவா முடிச்சிப்பிட்டிருக்க வேணும்!"

"நல்லதுங்க!"

சோடாப் போத்தல் 'சாயா'வை இழந்த வருத்தத்தில் கள்ளிப் பெட்டிக்கு அடியில் பதுங்கிக்கொண்டது.

தையல் இயந்திரம் சுறுசுறுப்புடன் இயங்கியது. மிதி பலகையில் பாதங்கள் அழுந்தின. இரட்டைத் தடமாக ஓட முனைந்த ஊசியைச் செம்மைப்படுத்தி ஜாக்கெட் துணியையும் சமன் செய்தான் காசி.

ஊர் காக்கும் காளி கோயிலில் இரவுப் பூசனை நடந்தது; ஆலய மணி அந்தத் தையற்கூடத்தில் வந்து மோதியது.

'ராமையா! நான் முன்னடி போய்ச் சாப்பிட்டுப்

பிட்டு ஓடியாறேன். துணி மணியெல்லாம் போட்டது போட்டபடியே சிதறிக் கிடக்குது. பத்திரம். சைக்கிள் கம்பெனி அண்ணன் வந்தால் ஒண்ணேகால் ரூபாய் வாங்கிக்கிட்டு நீலச் சட்டையை மடிச்சுக் கட்டிக் கொடு.''

''ம்!''

வீட்டுக்குப் புறப்பட ஆயத்தப்பட்டான் காசி. கடையிலேயே விடு முளைத்தது. இன்றோ, நாளையோ என்று பிரசவ நாளை எதிர்பார்த்திருந்த உயிர்த்துணையின் உருவம் அவனுள் தோன்றியது. ஆற்றாமையுடன் பெருமூச்சை உதிர்த்தான். 'தலைப் பிரசவம். காமாட்சி பெற்றுப் பிழைக்கணும், கடவுளே!'

மிதியடியில் பாதங்கள் பதிந்தன; மடித்து வைக்கப்பட்டிருந்த முழுக் கைச் சட்டை ஒன்றில் 'சிலும்பல்' ஒன்று தலைகாட்டியது. கத்திரிக்கோல் பணி புரிந்தது. அவன் புறப்பட்டு விட்டான்.

அப்போது, ''காசி!'' என்ற குரல் கேட்கவே திரும்பினான் அவன்.

அவனுக்குக் கைகால்கள் விளங்கவில்லை. 'கங்காணி ஐயாவா?'

கங்காணி கைப் பையை—உதறிப் போட்டார். சங்கு மார்க்கு சுருட்டில் தீ எரிந்தது. இழுத்துப் போடப்பட்ட கயிற்றுக் கட்டிலில் அவர் அமர்ந்தார். ''காசி! பொண்டுக உன்னைப் பத்திப் பெருமையாய்ச் சொன்னாங்க. எல்லாம் விலை ஒசத்தியான துணிமணிக. ஜாக்கிரதை! ஒவ்வொண்ணுக்கும் அளவுக்கு மாதிரியும் இருக்கு. தீபாவளிக்கு முந்தி அவ்வளவையும் கொடுத்துப்பிடணும். கூலி அஞ்சு பத்து கூடுதலானுக்கூடப் பரவாயில்லை!'' என்றார் கங்காணி.

"நல்லதுங்க, எசமான் ; கொஞ்சம் சாயா சாப்பிடுங்க!"

"வேண்டாம்ப்பா!"

"ஒரு மடக்குக் குடியுங்க. தட்டப் படாதுங்க கங்காணி ஐயா!"

x x x

காமாட்சி உணவு படைத்தாள். சமையல் கட்டுக்கும் நடைக்குமாக வந்து திரும்பினாள். "நல்லாச் சாப்பிடுங்க, அத்தான்! ராத்திரி முச்சூடும் கண் விழிக்கணுமே! இன்னும் ஒரு வாட்டி குழம்பு ஊத்திக்கிடுங்க!" என்று கூறினாள்.

காசி கையமர்த்தினான். "ஊஹூம்!" விக்கல் வந்தது. "நீ உட்கார்ந்துக்க. நான் போய்த் தண்ணீர் வாத்துக்கறேன், காமாட்சி!" என்று சொன்னான் அவன். அவள் கேட்பாளா ?

உரிமை பூண்டு, மனத்தைக் கொள்ளை கொண்டு, மணவறையில் கைத்தலம் பற்றியவளை ஒருமுறை கூர்ந்து நோக்கினான் காசி. சுற்றிக் கொடுத்த தாம்பூலத்தில் முதல் இரவு நிழலாடியது. அவள் தாயாகப் போகும் இன்பச் செய்தியைக் கேட்ட நினைவு ஊர்ந்தது. அவள் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்ப வேதனையையும் எண்ணினான். சிரிப்பும் அழுகையும் நெஞ்சில் மிதந்தன. 'தெய்வம் நம்மைச் சோதிக்காது, காமாட்சி! நீ பெற்றுப் பிழைத்துக் குழந்தையோடு சுகமாயிருப்பாய். உனக்கும் பிள்ளைக்கும் உயர்வான துணிமணி எடுத்துக் கொடுக்கிறேன். நான் இவ்வளவு கஷ்டப் படுகிறதெல்லாம் உனக்குத்தானே ?' என்று கூறிய நாட்களும் மனத்தளத்தில் சுவடு பதித்தன. பிரசவம்

ஆகி விடுமென்று எண்ணிக் கணக்கிட்டு எதிர்நோக்கி ஏமாந்த சம்பவங்கள் வந்து போயின. அவன் பெருமூச் செறிந்தான்.

"வலி எடுத்தாக்க, ஆள்கிட்டே சொல்லி யனுப்பு, காமாட்சி!"

கடமையும் நாணயமும் அவனை நெட்டிப் பிடித்துத் தள்ளின.

x x x

ராமையா தூங்கி வழிந்து கொண்டிருந்தான். சட்டையின் கைப்பொத்தான்களுக்குக் 'காஜா' எடுத்துக் கொண்டிருந்தவனை உறக்கம் ஆட்டிப் படைத்திருக்க வேண்டும். வலது கை நடுவிரலில் போட்டுக் கொண் டிருந்த இரும்புக் குமிழ் அவனது பாதங்களில் நழுவிக் கிடந்தது. பழக்கத்தின் விளைவினால், கைப்பற்றிய ஊசி இடது கைப் பெருவிரலுடன் உரசி விலகிக் கொண்டிருந்தது. ஏந்தியிருந்த சட்டை கீழே விழுந்து விட்டதை அவன் எப்படி அறிவான் ?

எதிரிலிருந்த வேறொரு தையற்கடையின் சுவர்க் கடிகாரம் இரண்டு முறை அடித்து ஓய்ந்தது.

சூடு பறந்திருந்த டீயில் ஒரு வாய் உறிஞ்சினான் காசி. எதிர்க் கடையைப் பார்த்தான். அப்துல்லா குறட்டைவிட்டுக் கொண்டிருந்தார். 'நாளைக்கு ஒரே ஒரு பொழுதுதானே மிஞ்சிக் கிடக்குது தீபாவளிக்கு! பாவம், சாயபுக்கு வேலை சரியாக் குதிரலே போலே!'— எண்ணத்தில் அனுதாப உணர்வு பொறி தட்டியது. 'இந்த மாங்குடிக் கிராமத்திலே அப்துல்லா பழம் தின்று கொட்டை போட்டவர்; ரொக்கப் பணமாக நிரம்ப வைத்திருக்கிறார்!' என்று தையற்காரர் அப்துல்லாவைப்

பற்றிக் கேள்விப்பட்ட தகவலும் அப்பொழுது காசியின் உள்ளத்திடையே மின்வெட்டத் தவறவில்லை!

இருட்டின் பயங்கரமான தோற்றம் மாறிக் கொண்டிருந்த வேளை அது.

காசி தலையைத் திருப்பினான்; சின்னப் பையன் தென்பட்டான். இப்போதுதான் சுவரில் சாய்ந்தபடியே கண் வளர்ந்தான். காசி மெல்ல அவனை நெருங்கினான். ராமையாவின் இடது கைப் பெருவிரலில் ரத்தம் கசிந்து காய்ந்திருந்தது. காரணத்தை அவன் புரிந்து கொண்டான்; சிதறிக் கிடந்த பட்டுத் துணிச் சிதறலை எடுத்தான். பட்டில் ரத்தம் ஒட்டியது. சிறுவனைத் தூக்கிக் கட்டிலில் படுக்க வைத்தான். 'பாவம்!'

இரண்டு வருஷங்களுக்கு முன்னர் ராமையா அனாதையாக வந்தான். வறுமைக் கோலம் புனைந்திருந்தான். இப்போது அவன் அனாதையில்லை. அவனுக்கு ஆதரவாகத்தான் காசியை அண்ணனாகவும், காமாட்சியை அண்ணியாகவும் தெய்வம் காட்டிற்றே? நீர் ஊற்ற ஆள் இருக்கையில் செடிவளரக் கேட்பானேன்? 'அண்ணிக்குப் பாப்பா பொறந்ததும் எனக்குப் பொழுது போறதே தெரியாது' என்று அன்பும் சிரிப்புமாகப் பேசத் தெரிந்தவன் அவன்.

தையல் இயந்திரத்தின் உயிர்ப் பகுதிகளுக்குத் தேங்காய் எண்ணெய் போட்டான் காசி. பிறகு கங்காணி கொடுத்து விட்டுச் சென்ற முட்டையை அவிழ்த்தான்; அளவெடுக்கும் நாடாவும் கத்தரிக்கோலும் முன் வந்தன.

அந்நேரத்தில், "காசி!...காசி...!" என்று கூவியபடியே பெரியவர் ஒருவர் வந்தார். "உன் பெண்சாதிக்

குப் பாதி சாமத்திலேயிருந்து இடுப்புவலி ரொம்பக் கூடுதலாயிருக்கு; நாவிதச்சிகூடப் பயப்படுரு; ஆன தாலே, அறந்தாங்கிக்கு ஓடிப் போய் டாக்டர் ஐயாவை அழைச்சுக்கிணு வந்திடு, காசி!'' என்ருர். தெரிந்தவர்; அவ்வளவுதான் ஒட்டுதல்; ஏன் அவர் கண்களில் கண்ணீர் மல்கவேண்டும்? 'என்னுடை காமாட்சிக்கு ஜாஸ்தியாத்தான் இருக்கும் போலிருக்குது! ஐயையோ!'

வீட்டுக்குள் அடியெடுத்து வைத்த தருணத்திலே, "ஐயோ, அம்மா!'' என்ற தன் மனையாட்டியின் அபயக் குரல் அவன் நெஞ்சத்தில் எதிரொலித்தது. அதைத் தொடர்ந்து, "சுருக்க ஓடிப் போய் அறந்தாங்கி டாக் டரைப் கூட்டியாப்பா !'' என்ற எச்சரிக்கைத் தொனி களும் ஒலித்தன. ஆறு மைல் தொலைவில் இருந்த 'பெரிய டாக்டர்' மனக்கண்ணில் தோன்றினர். அவர் மிகவும் கெடுபிடிக்காரர் ; பண விஷயத்தில் கருர்ப் பேர்வழி. பெரியவரைக் கலந்து ஆலோசித்தான். "ஆமாம், தம்பி! நூத்தைம்பது ருபாயாச்சும் கொடுத் தாத்தான் அவர் கிளம்புவார்! இது ஊரறிந்த சேதியாச் சே ?'' என்று கூறினர் அவர்.

டிரங்குப் பெட்டி திறந்தது; மூடிக்கொண்டது; பதினொரு ஒரு ரூபாய் நோட்டுக்கள் சிதறின. 'டாக்டரை இட்டுக்கிட்டு வரப் பணத்துக்கு எங்கே போவேன் ?'— காசியின் உயிர் அழுதது ; அலைக்கழிந்தது. கடையில் இருந்த தையல் இயந்திரம் உருக்காட்டிற்று. பள்ளத் தூரிலிருந்து அவன் கூடவே வந்தது, அந்த இயந் திரம். புது மாப்பிள்ளைக் கோலம் மாருமலிருந்த அவனுக்கு அதுவே வாழ்வும் வளப்பமும் தந்தது. 'இரண்டாங்கை மாறி வாங்கினதே நூற்றைம்பது ரூபாய்தானே ? இதை விற்ருலும் நூறு ரூபாய் கூடத் தேருதே? அடகு வைச்சா யார் இதை நம்பிப் பணம்

தருவாங்க ?''—ஏமாற்றத்தின் பாதையில் வேருெரு ஒற்றையடி வழி புலப்பட்டது. 'முந்தி இருந்த காதர் பாக்ஷா தைக்கக் கொடுக்கிற துணியையெல்லாம் புதுக் குளத்து ஒண்டலிலே இருக்கிற வேலாயுதஞ் செட்டியார் கிட்டே அடகுவச்சுப்பிட்டுப் பணம் வாங்கிச் செலவு செய்து கடைசியிலே அகப்பட்டுக்கிட்டு ஊரை விட்டே அவரைத் துரத்திப்பிட்டாங்க!' என்று பூடகமாக யாரோ ஒருவர் அறிவித்த தகவல் நினைவில் எழுந்த போது, காசியின் கண்களின் புறவெளியிலே நிழல் கோடிட்டுக் காட்டியவை கங்காணியின் விலையுயர்ந்த துணிமணிகள் தாம்!

"கண்ணை மூடிக்கிட்டு இருநூறு ரூபாய் கொடுப்பார் அந்தச் செட்டியார்; எல்லாம் அக்கரைச் சீமைத் துணிகள்''—மனம்!

"ஐயோ, நான் மாட்டேன்!''—மனச்சாட்சி.

"காசி!...காசி! நீ போகலே இன்னும் ? உன் பெண் சாதியை உசிரோடே பறிகொடுக்கத் துணிஞ்சுப் பிட்டியா ?'' என்று கிழவி ஒருத்தி ஏசினுள்.

பையப் பைய ஓடினுன்; பிறகு தலைப்பித்தம் கொண்டவன் கணக்கிலே ஓட்டமாக ஓடினுன்.

அவன்—காசி!

x x x

'பச்சை மண்' முதற் குரல் கொடுத்தது.

'காமாட்சி தாய் வேறே, பிள்ளை வேறே ஆகி ரெண்டு உயிரும் பிழைச்சுதே கடவுள் புண்ணியம்.'

அறந்தாங்கி டாக்டரிடம் பத்து ரூபாய் தாள் பதினைந்தைக் கொடுத்து, வாடகைக் !காரில் ஏற்றி,

கைகூப்பி வழி யனுப்பி வைத்த காசியின் செவிகளில் ஊராரின் மேற்கண்ட பேச்சு எதிரொலி பரப்பியவாறு இருந்தது.

அப்பொழுது பத்து நாழிகைப் பொழுதிருக்கும்.

காசிக்கு உடம்பு முழுவதும் அடித்துப் போட்ட மாதிரி இருந்தது. பக்கத்து வீட்டுக்காரப் பெரியம்மா இட்டிலி கொணர்ந்தாள். "பல்லைத் தேய்ச்சுப்பிட்டு வந்து சாப்பிடு, தம்பி!" என்று கூறினாள்.

அவன் அசையாமல் இருந்தான். விழி வெள்ளம் சிந்தியது.

"ஏன் தம்பி இப்படி அழுகிறே? அதுதான் தாயும் பிள்ளையும் பிழைச்சுட்டாங்களே!"

'இவ்வளவு நாட்களாகக் காப்பாத்தி வச்சிருந்த என்னோட நாணயம் காற்றிலே பறந்திடுச்சே? என்னை இனி யார் நம்பப் போறாங்க? நான் பாவி!'—உள்ளம் அழுதால், கண்களும் அழத்தானே செய்யும்?

சிறுவன் ராமையா 'ஆயில்காலை' நழுவ விட்டான். அது சத்தம் விளைத்தது. அந்தச் சத்தத்தில் காசியின் மனம் விழித்தது. "டேய், தோசிப் பயலே! வேலை மேலே கண் வைச்சுப் பாரடா!" என்று இரைந்தான். காசியின் காய்ந்த விரல்கள் பால் முகத்தைப் பதம் பார்த்து விட்டன.

'கோவிச்சுக்கிடாதீங்க, அண்ணாச்சி. நீங்க துணியை வெட்டிப் போடுங்க. நான் தைக்கிறேன். அப்பாலே நீங்க கொஞ்ச நேரம் தூங்கி முழிச்சதும், நீங்க தையுங்க!"

காசியின் விழி நீரில் ராமையா நகை புரிந்தான்.

'நான் தூங்கவா?'—விஞுவுக்கு உள்ள இதயம் ஒன்றல்லவே! வகை வகையான கேள்விகள் அவனை உரித்தெடுத்தன. சீன வெடிகள் அதிர்ந்தன. அவன் மனம் அதிர்ந்தான். மணி பார்த்து, துணி வாங்கிச் செல்ல வந்தவர்களிடம் இதம் பதமாக விஷயத்தை விளக்கி, மாலையில் வருமாறு கோரினுன். வாடிக்கைக் காரர்கள் அவர்கள்; வம்புக்காரர்கள் அல்ல!

ரங்கூன்காரர் வந்தார். நோட்டுப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து, சட்டை, ரவிக்கைகளை நீட்டினுன் ராமையா. பணக்காரர் பணத்தைத் தானே நீட்டுவார்! "காசின்னு காசி தான்! எவ்வளவு நாணயம்! எவ்வளவு கஞுர்!" என்ற புகழுரையும் அல்லவா நீட்டினுர்!

ஆனுல், காசி அழுததை அவர் எங்ஙனம் அறிவார்?...

'காசி, வீட்டிலே பொண்டுக உன்னைப்பத்திப் பெருமையாச் சொன்னுங்க. எல்லாம் விலை ஒசத்தியான துணிமணிக; ஜாக்கிரதை!'—கங்காணியின் எச்சரிக்கை ஆயிற்றே இது? அப்பொழுது காசியின் சப்த நாடிகளும் ஒடுங்கின. விழி திறந்தான். கங்காணி இல்லை!—வேலாயுதஞ் செட்டியார்!

'வேலாயுதஞ் செட்டியார் கைதேர்ந்த செட்டியார்; இவ்வளவு நாள் முகம் அறிஞ்ச எனக்கு ஒருத்தர் கூட ஆபத்துக்கு உதவலையே இந்த ஊரிலே! ஆனு, இந்த மனுஷன் மட்டும் என்ன; கங்காணியோடே துணிமணிகளைத்தான் நம்பிப் பணம் நூற்றைம்பது கொடுத்தார். இப்போ, இன்னெரு நூற்றைம்பது ரூபாய் சேர்த்துக் கொடுத்தா அடகுவைச்சிருக்கிற துணிகளைச் செட்டியார் திருப்பிக் கொடுப்பார். ஆனு, பணத்துக்கு எங்கே போவேன்? விடிஞ்சா தீபாவளி. இரவு கங்காணி

வீட்டுத் துணிகளைத் தைச்சுக் கொண்டு போய்க் கொடுக்க வேணுமே!' இயந்திரத்தில் அவனுடைய ஜீவன் இணைந்தது. 'ஆமாம்; அதுதான் வழி. பொழுது பட்டதும் கங்காணி ஐயா வீடு தேடிப்போய், வீட்டு நிலவரத்தைச் சொல்லி, இந்தத் தையல் மிஷினை அவர் கிட்டே அடகு வைச்சு, பணம் நூற்றைம்பது எப்படியும் கேட்டு வாங்கி, அதை வேலாயுதஞ் செட்டியார் கையிலே கொடுத்து, கங்காணி வீட்டுத் துணிமணிகளைத் திருப்பியாந்து, கங்காணி வீட்டிலேயே உட்கார்ந்து எல்லாத்தையும் ராத்திரியோடே ராத்திரியா முடுச்சுக் கொடுத்துப்பிடணும். அப்பத்தான் என் நாணயமும் மானமும் பிழைக்கும்.'

x x x

பொழுது பட்டது. சிறுவன் ராமையாவை வீட்டுக்கு அனுப்பி விட்டு, சந்தடி இல்லாத பகுதிகளில் மறுகி மறுகி வழி நடந்தான் காசி. தலையில் சுமந்து சென்ற தையல் இயந்திரத்தின் பாரத்தைத் துளியளவு கூட அவன் உணரவில்லை. தன் தவற்றுக்குப் பிராயச்சித்தம் தேடிக்கொள்ளப் போகும் நினைவுதான் அவனுக்கு ஓர் அமைதியாகத் தோன்றியது. குப்பான் ஊருணி, காளி கோவில், சாம்பான் தோட்டம் ஆகியவை விலகி வழி விட்டன. ஆயிங்குடியின் முகப்பில் இருந்த அந்தப் பெரிய மாடிவீடு தென்பட்டது. காசியின் உடல் தன் போக்கில் ஆடியது. சுற்று வேலியை அணைத்திருந்த கதவைத் திறந்து உள்ளே அடியெடுத்து வைத்தான் அவன். இருட் செறிவில் மாட்டுத் தொழுவம் தட்டுப் பட மறுத்தது. பாதத்தில் ஏறிய நெருஞ்சி முள் கூட அவனுக்கு ஒரு பொருட்டெனத் தோன்றவில்லை.

தையல் இயந்திரத்தை இறக்கிக் கீழே வைத்தான் காசி. அணை வைத்திருந்த மேல் துண்டை உதறிக் கையில் பிடித்திருந்தான். "ஐயா!" என்று குரல் கொடுத்தான். 'தெய்வமே! என் மானத்தையும் நாணயத்தையும் காப்பாற்று!' என்று வேண்டினான்.

கங்காணி வந்தார். கூட, 'ஹரிக்கேன்' விளக்கும் வந்தது.

"ஐயா...!"

காசிக்குத் தொண்டையை அடைத்துக்கொண்டது.

"காசி, எல்லாத் துணிகளையுமே அற்புதமாத் தைச்சுக் கொடுத்துப்பிட்டாய். எல்லாத்தையும் கடைப் பையன் ராமையா கால்நாழிப் பொழுதுக்கு முந்திதான் கொடுத்திட்டுப் போனான். மனசுக்கு ரொம்பத் திருப்தியாயிருக்குது ; கணக்குப் போட்டுக் கூலி என்ன ஆச்சுதின்னு சொல்லு. இப்பவே தந்திடுறேன், காசி!" என்றார் கங்காணி.

கனவா இது என்று ஐயப்பாடு எழுந்தது; அவன் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டான்; கங்காணி கொண்டுவந்து போட்ட தைக்கப்பட்ட உடைவகைகள் வெளிச்சத்தில் அழகுகாட்டிச் சிரித்துக்கொண்டிருந்தன. அவனுக்குத் திக்குத் திசை ஏதும் புரியவில்லை.

கங்காணியின் பார்வையில் தையல் இயந்திரம் தட்டுப்பட்டது, "ஏன் இதைக் கொண்டு வந்திருக்கே, காசி?" என்று வினவினார் அவர்.

கங்காணியின் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை; அவருடைய பாதங்களில் நெடுஞ்சாண் கிடையாகக் காசி விழுந்து கதறினான். "இது உங்களுக்குச் சேர வேண்டிய சொத்துங்க, முதலாளி!" என்று விம்மினான் அவன். நடந்த கதை நடை பயின்றது!

தீபாவளிப் பலகாரங்களைக் காசியின் அருகில் வைத்து விட்டுப் பேசத் தொடங்கினார் கங்காணி. "காசி! எல்லா நடப்பையும் கடைப் பையன் ராமையா வந்து சொன்னான். நான்தான் நூற்றைம்பது ரூபாய் எடுத்துக் கொடுத்து அடகிலிருந்த துணிமணிகளை மீட்டுக் கொடுத்தேன். உனக்கு உள்ள அலுக்கையிலே உன்னாலே இவ்வளவு துணிகளையும் தைக்க முடியாதுன்னு தான் உங்க எதிர்க்கடை சாயபு கிட்டே கொடுத்து வீட்டிலேயே தைக்கச் சொல்லிக் காரியத்தை முடிச்சுக் கொண்டாந்திட்டான், ராமையா! மூர்த்தி சிறிசானாலும் கெட்டிக்காரப் பையன்; அவன் செஞ்சதாக உனக்குச் சொல்லப்படாதுன்னு வேறே அவன் எங்கிட்டே கேட்டுக்கிட்டான். சாயபுவுக்குச் சேர வேண்டிய தையற்கூலியை அனுப்பிச்சுப்புட்டேன். இவ்வளவு ரகசியத்தையும் இனியும் மூடி மறைச்சு, பாவம், உன்னோட மனக் குழப்பத்தை அதிகமாக்கி, உன்னைச் சோதிக்கிறதுக்கு என் மனம் ஒப்பலே, அதான் உன்னைத் தேடிப் புறப்பட்டேன்; நீயே வந்திட்டே! காசி, உன்னோட கடமையும் நாணயமும் நேர்மையும் எனக்குச் சேர வேண்டிய பணத்தைத் திருப்பிக் கொடுத்திப் பிடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்குது. கஷ்டங்களிலேதான் சோதனைகளும் உண்டாகும். இதுதான் வாழ்க்கை என்கிறது! உன்னுடைய தையல் மிஷினை நீயே எடுத்துக்கிட்டுப் போ. உன்னுடைய கடமைக்கும் நல்ல மனசுக்கும் இந்த யந்திரமே சாட்சி சொல்லிப் பிடும். இந்தாப் பாரு, இந்தக் கவரையும் நீ மறுக்காமல் வாங்கிக்க. அக்கரைச் சீமையிலேயும் சரி, சொந்தத் தாய் நாட்டிலேயும் சரி, நான் கற்றுக்கிட்ட உண்மை, மனிதன் மனிதனாக வாழ்ந்து காட்டவேணும் என்கிறதுதான்! நீ போ. நிம்மதியாகத் தீபாவளி கொண்டாடு, அப்பா!"

மனிதர்களின் உருவிலே தெய்வம் வருவது உண்டாமே, அது இதுதானே ?

x x x

ராமையாவின் பிஞ்சு மனம் தன்னுடைய முதலாளி காசியைக் கண்டதும் பயந்து விட்டது.

''ராமையா, இங்கே வா !''

அவன் அச்சம் ஏந்தி வந்தான்.

'நீ செஞ்ச வேலையைக் கங்காணி ஐயா என்னிடம் நீவிளக்கமாகச் சொன்னுங்க. ஆமாம், இம்புட்டையும் நீ ஏன் என் காதிலே அப்பவே போடலே ?'' என்று கேட்டான் காசி.

''உங்க ரகசியம் எனக்கு எப்படித் தெரிஞ்சுது. இந்த ரகசியத்தை ஏன் நான் கங்காணிகிட்டே சொல்லணும்—அப்படின்னு நீங்க கேட்டு அடிப்பீங்களேன்னு தான் பதுக்கிப்பிட்டேனுங்க, அண்ணுச்சி ! உங்க தம்பி நான். நல்லதிலேயும் கெட்டதிலேயும் எனக்கும் பங்கு இல்லீங்களா ?'' என்று பதில் விடுத்தான் சிறுவன்.

''ராமையா ! ஆமாம், நீ என்னுடைய தம்பிதான் !''

கங்காணியின் தீபாவளிப் பரிசு ஐந்து, பத்துரூபாய் நோட்டுகளாகப் பிரிந்தது. அவை ஒவ்வொன்றிலும் காசியின் ஆனந்தக்கண்ணீர் தெறித்தது. 'கங்காணியோட அன்புக் கடனைக் கழிக்கிறதுக்கு நான் இன்னும் எத்தனை பிறப்பு எடுக்க வேணுமோ, கடவுளே !' என்று எண்ணி மெய்ம்மறந்தான் காசி.

தீபாவளி வாசலுக்கு வந்தது !

சலங்கை

குமாரி தமிழரசியின் கழுத்தில் ரோஜாப்பூ மாலை போடப்பட்டது. பூங்கரங்கள் குவிந்தன. 'வணக்கம்' என்னும் பாவனை அதில் இருந்தது. 'சிரோ அஞ்சலி நிலை' ஏறத்தாழ அமைந்திருந்தது.

அண்ணாமலை மன்றம் அதிர்ந்தது; ஆர்வம் கொண்டவர்களின் அனுபவம் உதிர்த்த கையொலியின் எதிரொலி நாற்புறச் சுவர்களையும் முற்றுகையிட்டது.

மாலையிட்ட சிறுமியின் சிந்தூரக் கன்னங்களைத் தடவிக் கொடுத்தவாறு நின்று கொண்டிருந்தாள் தமிழரசி. அம்பலக் கூத்தனின் தூக்கிய திருவடியில் மனம் பதித்தாள். 'எல்லாம் உன் மெய்யருள், அப்பனே!' என்ற நன்றிக்கடன், மனச்சாட்சியின் மடியில் தவழ்ந்தது. மதுக்குடமேந்திய மணமலர் வெய்துயிர்ப்பை கெட்டிப்பிடித்து எட்டித் தள்ளியது. வைர அட்டிகை

அழகு காட்டியது; ஜாதி முத்து மூக்குத்தியில் 'ஒட்டம்' இருந்தது. காதுத் தொங்கட்டான்களில் கனிவு சொட்டிற்று; கைவளையில் 'வைரம்'மட்டும் அல்ல, முத்திரையின் பண்பும் இருந்தன. நெற்றிச் சுட்டியில் லயமும், காற் சதங்கைகளில் 'ஜதி'க் குறிப்பும் ஒளிந்திருந்து ஒளிர்ந்தன.

அவள் ஆடினளா?

அல்ல!

ஆனலும், அவள் ஆடற்கலைக்கு அழகுதர வந்தவள்; 'ஆட வந்த பொற்பாவை'; ஆடித்தான் வந்தாள்; ஆடித்தான் முடித்தாள். ஆரம்பத்தில் முடிவு முனை பதித்தது!

'மாம்பலம் மாதர் நல விடுதி'யின் கட்டட வளர்ச்சி நிதிக்குக் குமாரி தமிழரசி ஒரு நாட்டிய நிகழ்ச்சி நடத்தித்தர வேண்டுமென்று விடுதித் தலைவி கோரினள்; ஒன்றரை நிமிஷத்துக்குப் பிறகு, அந்தரங்கக் காரிய தரிசி சாருபாலாவின் நாட்குறிப்புப் புத்தகத்தின் ஆதரவின் பேரில் நாள் குறிக்கப்பட்டது: குறிக்கோள் முடிந்தது.

இதோ, பூமாலை!

அதோ, கை தட்டல் ஒலி!

போதுமே!...

புகழ்!—குமாரி தமிழரசி, அந்த மூன்று எழுத்துக்களில் நின்ருள்; நிலைத்தாள்; ஆடினள்; பாடினள்; வாழ்கிருள்!

இந்திய ஜனதிபதியின் பெயரைக்கூட கருதியறிந்து கருத்தில் பதித்துக் கொள்ள மனமிழந்தவர்

களும் குமாரி தமிழரசியை அறிந்திருந்தார்கள். அவள் பெயருக்கு அவ்வளவு வல்லமையோ...?

விண்ணில் பிறை; மண்ணில் பிறை மதியாள்: பிறைசூடிய பெம்மானின் பக்தை அவள். தூப தீபா ராதனை நடந்தது. நிருத்தம் முத்திரை காட்டும் ஞான யோக அம்சம் அவளுள் உருவானது. சிட்டிகைப் பொழுது. ஆடித் திளைத்த உலக நாயகனின் திருச் சிற்றம்பலம் அப்பொழுது அங்கே உருவானது. 'தமிழச்சிமனை'யில் பக்திப் பெருக்கு வழிந்தது. தமிழர சியின் நெருஞ்சத்தில் பூம்புனல் வெள்ளம் புதுப் பெருக் குடன் ஓடியது.

நரை திரண்ட மாது ஒருத்தி அவள் நெற்றியில் விபூதி பூசினாள்.

''ஈஸ்வரா!...''

தமிழரசியின் அழைப்பில் உலகாளும் தெய்வம் தோன்றவில்லை; அதற்குப் பதிலாக, பிச்சைக்காரிக் கோலத்தில் வாலைக்குமரி ஒருத்தி 'தரிசனம்' தந்தாள். கிழிந்த பாவாடை; கந்தல் தாவணி; உடலைப் பிடித்து விட்டிருந்த சீட்டி ரவிக்கைத் துணி; ஏழை மைக் கோலம்; இயற்கையின் மாறிச் சுழலும் சக்கரமும், எழுதிச் செல்லும் விதியின் கையும் சேர்ந்து 'மாயனார் குயவன் செய்த அந்த உயிர்ப் பாண்ட'த்தை எதுவும் செய்துவிட முடியவில்லை; உடலிலே உயிர் ஒட்டியிருந்ததைப் போலவே, அழகும் தேங்கியிருந்தது. கருத்தழிக்கும் உடல்வாளிப்பு; கருத்தைக் கவர்ந் திழுக்கும் கள்ளங்கவடு இல்லாக் கண்புலம். அவள் வாலைக்குமரி; 'பிச்சை' போடுபவர்களுக்குப் 'புண் ணியம்' சேர்த்துக் கொடுத்தவள்.

"அவள்...!"

சுடுநீர் சரம் தொடுத்துக்கொண்டே இருந்தது.

தமிழரசிக்குச் சுய நினைவு தடம் புரண்டிருந்த நேரங்கெட்ட நேரம்; 'மாறிப் புக்கு இதயம்' சேர்ந்த வேளை; மனத்தைக் காட்டி மனச் சான்றைப் பேசு மாறு சொடுக்கிய இக்கட்டான பொழுது; காற்பெரு விரல்களில் ஈரம் இருக்கக் கண்டாள்; குனிந்தாள்; சரிந்து விழத் துடித்த 'நைலான்' பட்டுடை முன்று னையைச் சீர் செய்து கொண்டாள். நடந்தாள்; நடை பயிலும் அன்னத்துக்குப் போட்டியோ...? அவளது முழு உருவத்தையும் பிரதிபலித்துக் காட்டவேண்டு மென்று 'ஆர்டர்' கொடுத்துச் செய்து வாங்கியது போன்ற நிலைக்கண்ணாடி, முன் வந்து தலை வணாங் கியது; விழுந்த பிரதிபிம்பத்தின் பூரணச் சந்திர வதனத்தில் சஞ்சலம் பேசியது; அர்த்த சந்திர வடிவு கொண்ட நுதலில் பெருமூச்சின் ஒலி முட்டி நின்றது.

காலம் ஒரு கைக்குழந்தை; நினைத்தபோது சிரிப் புக் காட்டும்; வேண்டாத வேளையில் அழுகை யூட்டும்!

'அந்தக் காலம்' வாழவேண்டும்!

ஏன், புரிகிறதா...?

குமாரி தமிழரசியும் வாழ்கின்றாள்!

தமிழ் நாட்டின் 'ஹாலிவுட்' வழி கூட்டி அனுப்பி வைத்த அந்த 'பிளிமத்' தமிழரசியை வாழ்த்தி பங்களாவிற்குள் சேர்த்த பிறகு, ஒய்வறையில் முடங் கியது. சிறு பொழுதுக்கு நிம்மதி. மறுபடி அவள் யடப்பிடிப்புக்குப் பறந்தோடவேண்டும். 'ஒப்பனை' கலையாத 'பொய்' வேடத்துடன் அவள் மாடிக்கு

ஓடினுள். உச்சி வெயிலேயும் உருகியோடும் தாரின் சூட்டையும்கூட 'சற்றே விலகியிருக்கும் பிள்ளாய்!' என்று பணித்துத் தான் காரில் விரைந்து வந்தபோது, தம் கண்களை வீசி, தன் கண்களைப் பிடுங்கித் தின்று விடுவது போன்ற பார்வையைப் பதித்த 'முப்பத்து மூன்று நயா பைசா ரசிக மகாஜன'ங்களைப் பற்றின எண்ணம் மாருமல் இருந்ததால்தான் அப்படி அவள் 'தப்பித்தோம்; பிழைத்தோம்' என்று எண்ணி ஓட வேண்டியவள் ஆனுள்.

உணவு அறையில் சாப்பிட உட்கார்ந்தாள் அவள். உணவு கொண்டாள்; முடித்தாள். சாம்பார்; இரண்டு தேயிலேக் கரண்டி அளவுக்குத் துளி ரசம். மோர் போட்டுக்கொள்ளவில்லை. படப்பிடிப்பில் தொண்டை கட்டி விடுமல்லவா? சகுந்தலே, துஷ்யந் தன் சந்திப்புக் கட்டத்தில் மத்தியான்னம் அவள் வசனம் பேசியாக வேண்டுமே...?

உறைக் கடிதம் ஒன்று தலே நீட்டிற்று; பிரித் தாள்; உள்ளுறை இதயம் காட்டியது.

" அன்புள்ள குமாரி தமிழரசி அவர்களுக்கு,

வணக்கம்.

நேற்று முன்னேய தினம் 'காதல் போயில் சாதல்!' சித்திரத்தின் படப்பிடிப்பு முடிந்தவுடன், நான் திரும் பவும் உங்களுக்கு ஞாபகப்படுத்திய விஷயத்தைத்தான் இப்போதும் தெரிவித்திருக்கிறேன். என்வரை, காத லுக்கும் தெய்வத்துக்கும் ஒரே பொருள் இருப்பதாகவே கருதுகிறேன். தெய்வத்தை நேரில் காணமுடியாத தால், தெய்வமே இல்லே என்று சொல்லி வரும் சில விந்தை மனிதர்களின் பட்டியலில் என்னேயும் சேர்த்து

விடாதீர்கள். ஒவ்வொரு மனித மனத்திலும் தெய்வம் இருக்கிறது; தெய்வத்தன்மை பரிபக்குவம் எய்துகிறது. அதே போலத் தான் காதலும்! காதல் என்ற சொல்லடுக்கிலே காதல் பிறப்பதோ, பிறப்பதாகக் கருதுவதோ, பிறக்க முடியுமென்று எதிர்பார்ப்பதோ தவறு. பண்பட்ட உள்ளங்களின் ஒருமித்த சங்கமத்தில்தான் 'காதல்' என்ற புனிதத்தன்மை விடிபொழுதைக் காட்ட முடியும்; அப்போதுதான் வைகறையின் தூய்மையை—ஓடக்காணும் பூம்புனல் வெள்ளத்தின் பூரிப்பை ஒப்பிட்டு நோக்க முடியும்.

'காதல் பிறந்தது' என்ற திரையோவியத்தில் நீங்களும் நானும் முதன் முதலாக அறிமுகமானோம்; அறிமுகப்படுத்தப்பட்டோம்; பொது உலகமும் அறிமுகம் ஆனது; இப்போது வளர்ந்து கொண்டிருக்கின்ற 'காதல் போயில் சாதல்!' எனும் திரையோவியம் வரை கழிந்த மூன்று வருஷங்களிலே கிட்டத்தட்ட பத்துப் படங்களிலே நாம் இருவரும் சேர்ந்து நடித்திருப்போம்; நீங்கள் கதாநாயகி; நான் கதாநாயகன் தமிழரசி—தமிழ் வேந்தன்! இந்தப் பெயர் ஜோடியை ஜோடி சேர்த்துப் பார்த்து மகிழும் பொது ஜனங்கள் எத்தனை பேரோ? அத்தகைய பொதுமக்களிலே ஒருவனாக இயக்கப்பட்டு, இயங்கி, இந்தப் பெயர் இணையைக் கண்டு இனம்பிரித்து, இனம் சேர்த்து என்னுள் நானே மகிழ்ந்த நாட்கள் ஏட்டிலடங்கா!

அந்த இன்ப நாட்களுக்கு நீங்கள் ஒரு நல்ல தீர்ப்பு வழங்குவீர்களேயானால், அது என் உள்ளத்துக்குமட்டுமல்ல, உருவத்துக்கும் உயிர்ப்பும் துடிப்பும் வழங்கும்.

'ஒரு பெண் பூரணமடைவது தன் பதியின் நிழலில் தான்' என்று யாரோ எழுதியதைப் படித்திருக்கிறேன்.

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், நீங்கள் இல்லறத்தில் இறங்கவேண்டும் என்பதைச் சுட்டத்தானே யன்றி, மற்றபடி, கணவன்—மனைவியருக்குள் நிலவ வேண்டிய எதிர்கால சமதர்மப் பிணைப்பைப் பற்றி முன்னதாகவே எச்சரிக்கவல்ல !...' இதயங்களின் கூட்டுறவில் எந்த ஒரு உயர்வும் தாழ்ச்சியும் செல்லுபடி யாவதில்லையல்லவா ?'—முந்தின படப்பிடிப்பில் கதா நாயகியாக மாறியபோது, நீங்கள் சொன்ன வார்த்தை களேயல்லவா இவை ?

உங்கள் இதயம் எழுதும் பதிலை என் இதயம் எதிர் பார்க்கிறது. உங்களுடைய 'தூய உள்ளம்' என்னுடைய 'தூய உள்ள'த்தில் ஒன்றிப் பின்னப்பட்டதன் விளைவே இக்கடிதம். இதன் விளைவு நீங்கள் நிர்ணயிக்கத் தக்கது ஆகும்.

அன்புள்ள,

தமிழ் வேந்தன்."

தமிழரசியின் 'பெண்மனம்' இனம் விளங்கமாட்டாமல் சலனமடைந்தது. பெரு மூச்சைப் பிரித்துவிட்டு, வெளி வாசலில் வந்து நின்ருள். அந்தரங்கக் காரிய தரிசி சாருபாலாவிடம் அக்கடிதத்தைக் கொடுத்தாள்

"இரவு வந்ததும், பதில் எழுதலாம்," என்று சொல்லிச் சென்ருள் நட்சத்திரம். காரில் ஏறுவதற்காக கடைசிக் கதவைத் திறந்தாள் அவள். டிரைவரைப் பார்த்தாள். காணும். அவள் விழிகள் காரோட்டியின் ஆசனத்திற்கு ஊர்ந்தன. கச்சிதமாக மடித்து வைக்கப்பட்டிருந்த பத்திரிகை ஒன்று தெரிந்தது ; ஏனோ பார்த்தாள் ; ஏனோ எடுத்தாள் ; ஏனோ படித்தாள் !

தமிழரசியுடன் இணையாக நடித்த 'திரைப்படக் காதலர்களை'யும் தயாரிப்பாளர்களையும் தாறுமாருகப் பிணைத்து அவளைப்பற்றி 'கன்ற பின்ற' வென்று எழுதிய 'மஞ்சள் பத்திரிகை' அது.

மலைபுரண்டு வந்து தலையில் விழுந்ததைக் கண்டு மனம் கலங்கிஞள். கசிந்து உருகின கண்ணீர், தொலை பேசியின் மேற்பரப்பில் ஆறுதல் கோரியது. 'மிருக சீடம் படப்பிடிப்பு நிலைய'த்துக்குச் சேதி பறந்தது : "தமிழரசிக்கு உடல் நலம் இல்லை !"

தமிழரசியின் இதயத்தின் இதயம் விழித்தது ; நடுவெளி காட்டிய 'நடந்து வந்த பாதை'யைத் திரும்பிப் பார்த்தாள். தவமுனிவருக்கு மட்டுந்தான் 'வந்த வழி' மாயப் பிசாசமாகத் தோற்றும் !

மூன்று, நான்கு நாட்கள்கூட பிடி அன்னத்தைக் கண்களால் காணக் கொடுத்து வைக்காத அவல நிலையில் இருந்த சிறுமி கருப்பாயி எங்கே ? செக்கச்சிவந்த மிளகாய்ப் பழத்தின் நிறத்தில், செந்தாழம் பூவின் மணத்துடன் ஓடும் ரெயில்ப்பெட்டியில் பாடிப்பிழைத்துக் கொண்டிருக்கையில், அவளது பாடலில் தன்மை இருக்கக் 'கண்டும்' கேட்டும் முடிந்த பிறகு, அறிமுகமற்ற கிழவன் ஒருவன் அவளை நாட்டியக்குழு ஒன்றில் கொண்டு சேர்த்த விந்தை நாளது தேதிவரை அவளுக்குக் கனவு போலத் தோன்றுவதுதான் இயற்கை.

"தத்...தை...தை...தத்...!

சலங்கைகள் ஒலித்தன ; புகழ் மணத்தது.

புகழ் ஒலித்தது ; சதங்கைகள் எட்டுத் திக்கிலும் முழங்கின.

பணம் ஒலித்தது. தமிழரசி 'தசாவதாரம்' புனைந்தாள்!

மங்கலப் பாடல் தொடங்கி வைத்த மாதவியின் நாட்டியம் ஒன்று. அந்தரக் கொட்டு, தேசிக் கூத்து, மார்க்கக்கூத்து ஆகிய உட்பிரிவுகளால் ஆட்டி வைக்கப்பட்ட நிகழ்ச்சி அவள் கருத்தில் ஆடியது. 'பூம் புகார்ப் பொன் தொடி' மாதவியினின்றும் தமிழரசி பிரிந்தாள்.

விரிசடைக் கடவுளின் ஊழித் தாண்டவம் மன அரங்கில் நிழற்படம் காட்டியது. எண்ணம் புரண்டது. ஆணை விட்டுப் பெண் பிரியத்தான் வேண்டுமோ?

அவளது எழிலார் மார்பாகம் விம்மியது.

'அந்தத் தாத்தா எங்கே...?'

அழுந்தி எழும்பிய பட்டு மெத்தையில் குப்புறப் படுத்தபடி தமிழரசி விம்மினாள். கண்ணீர் கரையக் கரைய, தலைப்பளு கரைந்து வந்தது. தலைக் கனம் குறையக் குறைய, மனத்தின் மனம் திறந்து கொண்டது. விழிப்பு நிலையின் திறப்பு விழா வைபவம்.

ஓர் உருவம்!

அது: தமிழ் வேந்தன்.

"இவர்தான் தமிழ்வேந்தன்!" புகழ் சேகரித்துக் கொண்ட நடிகரைப் படத் தயாரிப்பாளர் பழக்கப் படுத்தி வைத்து, வேடம் தாங்குவதற்கு ஒப்பந்தத்தில் கையெழுத்துக்களைப் பரிமாறிக் கொண்ட கட்டம் அவள் வரை தொன்மைப் பழங்கதை.

தமிழ் வேந்தன் அனுப்பிய அந்தக் கடிதம் சிறகடித்துத் துடித்தது.

அவள் தன் கைப்படப் பதில் அனுப்பினுள்:"நேரில் வாருங்கள். நல்ல மனம் காத்திருக்கிறது!"

புகழ்!

'நாட்டியப் பேரொளியாக—குணசித்திர நடிகை ராணியாக தமிழகத்தில் மட்டுமல்ல, அயல் நாடுகளிலும் பயணம் போய்ப் பேரெடுக்க வேண்டுமென்று நான் கனவு கண்டு வந்தேனே ?...எல்லாம் மாயம்தானு ?... மண்தானு...?'

மண்ணில் பிறந்து மண்ணில் மடியப் போகும் 'எண் சாண் உடம்பின்' போலித் தன்மை அவளை அச்சுறுத்தியது. வந்தது எல்லாம் 'சிவன் சொத்து' என்று கச்சி ஏகம்பனை விளித்துப் பாடிய பட்டினத்து அடிகளார் பொன்னுன அந்த வாய்ப்பை நழுவ விடுவாரா, என்ன...?

சுவர்ப் பக்கம், மெள்ள மெள்ள நடந்தாள் தமிழரசி.

அம்பிகாபதி—அமராவதியாக நடித்த படங்களும் இருந்தன.

அம்பிகாபதியின் உருவம் மாறியது...!

தமிழரசியின் சித்தம், 'தமிழ் வேந்தன்!' என்று முனகியது!

அவள் விலகி நடந்தாள். புகைப்படம் ஒன்று தெரிந்தது. அகில உலகப் புகழ் பெற்ற குமாரி மோகினியின் உருவம் அது. அவளைப் பற்றி எண்ணமிட்டாள் தமிழரசி. 'மோகினியின் பேரும் புகழும் எங்கே? புகழ் கானல் நீரா?...புகழ்கூட அழியக் கூடியதுதானு...?'

தன் கற்பைக் காக்கப் போராடிய அனுபவங்கள் நினைவில் கூத்தாடின; தன்மேல் வெறிகொண்டு ஊரை விட்டு ஓடிவந்த ஒரு பைத்தியத்தின் கதையை யும் தமிழரசி ஞாபகப் படுத்திக்கொண்டாள்!

'ஆம்; திரைக் காதலர்களான நானும் 'அவரும்' இனி வாழ்விலும் காதலர்களாகி அழியாப்புகழ் பெறு வதுதான் உசிதமான வழி!'

தமிழ் வேந்தனுக்குத் தொலை பேசி மூலம் செய்தி சென்றது: "உடனே வருக!"

தமிழ் வேந்தனின் 'பாண்டியாக்' வந்தது. நடிக வேந்தனுடன், பிச்சைக்காரக் கிழவன் ஒருவன் தொடர்ந்து வந்தான்.

"தாத்தா!"—நன்றிக் கடன் பரிவர்த்தனை ஆனது.

கண்ணீர் புகழ்மாலை சூடியது.

"பணமும் புகழும் போதும், அம்மா; இனி நீ வாழ்க்கையில் பிரவேசித்து விடு, தமிழரசி! இவ்வளவு வருஷமாக உன் கண்ணில் நான் படாமல் இருந்த தற்குக் காரணம், நீ புகழும் பேரும் பெற வேண்டு மென்ற கவலைதான். வந்த பணமும் கிடைத்த புகழும் போதும்! எல்லாம் ஒரு நாள் மறைய வேண்டியவை. ஆனால், இனியாவது, உனக்காக நீ வாழ வேண்டாமா, தாயே?"

தெய்வ மறை பேசவில்லை. தொண்டு கிழம் பேசியது.

"நீங்களும் எங்ககூடவே தான் இருக்க வேணும், தாத்தா!"

"ஊஹூம்! 'நான்' நானாகவே தான் இருப்பேன் அப்படித்தான் இருக்க இயலும்!"

தமிழரசி—தமிழ்வேந்தன் தாம்பத்திய வாழ்க்கைப் புத்தகத்தின் முதல் பக்கம் அந்தக் கிழவனின் குடிசையில்தான் ஏடு விரிந்தது.

அக்கினி ஆற்றுப்பாலம்

மேஸ்திரியின் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடிக்கக் கண்டதும், வள்ளிக்கு ஈரல் குலை நடுங்கியது. தலையிலிருந்த சோற்று முடிச்சு முதலில் இடுப்புக்குத் தாவியது; பிறகு சோற்றுக் கைக்கு நழுவியது. உள்ளங் கால்களில் சூடு ஏறத் தொடங்கியது. இதை உணர்ந்தவுடன் அவளுடைய விழிகள் இரண்டும் நாற்புறமும் அலைந்து மீண்டன. அக்கினி ஆற்றுப் பாலத்தை மையமாக வைத்துவிட்டு, சுற்றிலும் மனிதர்கள் இயந்திரங்களாகவும் இயந்திரங்கள் மனிதர்களாகவும் சுற்றிச் சுழன்ற அதிசயம் வள்ளிக்குப் புலனாகாமல் போய்விடுமா, என்ன?

நெஞ்சில் கை வைத்தாள்; அது ஏன் சுடப் போகிறது? 'என் மச்சானுக்கு மூணுநாளா மேலுக்குச் சரிப்படலே; சுடு தண்ணி காச்சிக் கொடுத்திட்டு,

வைத்தியரைக் கூட்டியாந்து கைபார்க்கச் சொல்லிப் பிட்டு வந்தேன். அடுப்பிலே அரை வேக்காடிலே இருந்த கஞ்சியை இறக்கி வச்சுப்பிட்டு வரக்கூட முடி யல்லலே !'

கொண்டவனின் கோலமுகம் வள்ளியின் நினைவில் நிழலாடியது. அவளைக் கொண்டவன் சிங்காரம். சிக்கல் சிங்கார வடிவேலனைப் போலவே சிங்காரமான வன் ; அவன் சிரிப்பு அவளுள் எதிரொலித்துக்கொண் டிருந்தது. அந்தம் கலைந்த புள்ளிக் கோலம் போன்று பாயும் படுக்கையுமாகக் குடிசையில் கிடந்த தன் ஆசை மச்சானின் நேசமும் அவளது கண் கடையில் நீர் காட் டிற்று ; நினைவு தடுமாறினாள் அவள்.

" ஏ புள்ளே வள்ளி ! அய்யனார் குதிரை யாட்டம் நின்னுக்கிட்டேயிருந்தாப் போதுமா ?...தஞ்சாவூர் கார் போய்க்கூட ஒரு நாழிகைப் பொழுது கழிஞ்சிடுச்சே?... ஏன் இவ்வளவு நேரம் ?..."

நடப்பைச் சொன்னாள் வள்ளி ; நடந்ததை நம்ப வேண்டியவரானார் நாற்பதைத் தாண்டியவர்.

"சரி, இன்னிக்குமட்டும் உனக்கு மாப்பு விட்டிருக் கேன். இன்னொரு வாட்டி இப்படி பத்து நாழிகைப் பொழுதுக்கு வேலைக்கு வந்தா வீட்டுக்கே திருப்பி அனுப்பிச்சிடுவேன். ம்...போய் வேலையைப் பார் !"

"நல்லதுங்க, எசமான்!"

தட்டுக் கூடை கைதட்டி வள்ளியை அழைத்தது ; சோற்றுப் பொக்கிஷத்தை அருகிருந்த மொட்டைப் பூவரச மரக் கிளையில் தொங்கிடச் செய்தாள் ; உடன் கொணர்ந்திருந்த பழஞ் சேலைக் கிழிசலைச் ' சும்மாடு ' சுற்றித் தலையில் வைத்து, அதன்மேல் மூங்கில் கூடை யைச் சுமத்தி வைத்து வழி நடந்தாள் ; சரளைக் கற்கள்

காற்பாதங்களைத் தொட்டுப் பதம பார்த்தன. உழைப்பாளர் இனம் இன்முகம் காட்டியது.

"இந்தா, வள்ளித்தங்கச்சி!...கூடை பத்திரம்!... எல்லாம் அழியாங்கிலேச் சரளை! ரொம்பக் கனக்கும்!"

"பார்த்துக்கிறேன் அண்ணுச்சி!"

"ஏலே முத்தம்மா!...இன்னுங் கொஞ்சம் வேகமாக் கையை வீசிப் போடு!...அப்பதான் சாந்துப் பொடி நல்லா இடிபடும்!"

"ஆகட்டுங்க மச்சான்!"

"பெரிய மாமு! இந்தச் சின்ன ஆணியை அந்த இரும்புக் கூட்டத்தைக் கண்டு வீசுங்க! யார் காலிலே யாச்சும் பாஞ்சா அப்பறம் விஷமாயிடும்!"

"நல்லது மாப்பிள்ளை!"

"ஏடே, முண்டம்!...இன்னும் முறுக்காச் சுத்தேண்டா. இல்லேன்னு இந்த காளி ஆத்தா தேர் நகளுமாக்கும்?...ம்!...பத்துப் பேரும் மூச்சைப் பிடிச்சுக்கிட்டு சுத்துங்க...! ஆ!...பலே!... இந்தப் பெரிய மிசின் நகர்ந்தாத்தானே பாலத்தின் உள்வாய் மணியாசு கெட்டிப்படும்!"

"ஹூம்...அப்படியே!...சரி! அம்மாடியோ!"

விண்ணில் காலத்தைக் கணித்துக் கொண்டிருந்தவனுக்குக் கடமையில் கண்; மண்ணிடை மணி பார்த்துக்கொண்டிருந்த மேஸ்திரிக்குப் பணத்தில் கடமை பதிந்திருந்தது!

அறந்தாங்கி—பட்டுக்கோட்டை பஸ் மார்க்கத்திலே ஆவணத்திற்கும் திருச்சிற்றம்பலத்திற்கும்இடையில்தான் அக்கினி ஆறு இருந்தது. அக்கினி ஆறு

என்ற பெயரே விசித்திரமாகத் தோற்றுகின்றதல்லவா?" என்றே நடந்ததாகச் சொல்லப்பட்டு வருகின்ற அந்தக் கர்ண பரம்பரைக் கதைதான் மேற்சொன்னபெயருக்குக் காரணமாக அமைகிறது. அந்தக் கதை: ஆவணத்தின் ஊர் முகப்பில் கோயில் கொண்டிருந்த பெருங்காரர் முண்டர் கோவிலில் பங்குனி உத்தரத்தின்போதுதான் பத்து நாள் திருவிழா நடைபெறுவது வழக்கம். கடைசி நாளான தேரோட்டத்தன்று பொழுது விடிவதற்குமுன் சில நாழிகைப் பொழுதுக்கு தொடர்ந்து பெய்த பெருமழை அந்த ஆற்றில் மாபெரும் வெள்ளத்தை உண்டாக்கிவிட்டது. இதனால் திருச்சிற்றம்பலத்தைச் சார்ந்த ஊர் மக்கள் அடுத்த கரையிலிருந்த சுவாமியின் தேரோட்டத்துக்குப் போக முடியாமல் திண்டாடித் தவிக்கலானார்கள். அவர்களிலே, பெருங்காரர்முண்டர் கோயில் தேர்வடத்தை முதலில் பிடித்திழுக்கும் 'பாத்தியம்' பெற்ற தலைமையாளரும் ஒருவர் 'என் தலைமுறையிலே இப்படிப்பட்ட கூத்து நடந்ததே இல்லையே ?...வெள்ளக்காடாக ஓடுகிற தண்ணீரை எப்படிக் கடக்க ஏலும் ?...நான் போகல்லையானால், தேரோட்டமே நடக்க முடியாதே ?...தெய்வமே ! உன் தரிசனம் காண என்னைப்போல எத்தனை பக்தர்கள் தவியாத் தவிச்சுக்கிட்டிருக்காக!...ஏதாவது ஒரு வழியைக் காட்டு, இல்லை, நானே முதலாளாக நின்று பயங்கரமான இந்த ஆற்றில் இறங்கிப்பிடுவேன் !' என்று நெஞ்சம் நெக்குருகினார் அவர். அவ்வளவுதான் ; உச்சிப் பொழுதுக்குள் அவ்வளவு வெள்ளமும் எங்குதான் ஓடி வடிந்ததோ ?...காய்ந்த வெயிலில் ஆற்று மணல் துகள்கள் அக்கினிபோலச் சுட்டன. அக்கரையில் நடந்த திருநாளை இக்கரை மக்களும் சென்றுகோலாகலமாகக் கொண்டாடினர். அப்பொழுது கோயில்

கர்ப்பக் கிருஹத்தின் உள்ளே நிறைந்திருந்த வெள்ளத்தில் ஈசன் சிலை நின்றதையும் கண்டு, மூக்கில் விரல் வைத்து அதிசயப்படவும் செய்தனர். அந்தத் தண்ணீரும் மாயமாக மறையும்படி பக்தர்கள் வேண்டுதல் செலுத்தினர். உடனே அவ்வாறே நடந்தது. அடைமழைக் காலங்களில் மட்டும் ஊர் பேர் இன்றி வெறும் ஆறுக இயங்கி வந்த அந்த ஆற்றை அதற்கப்புறம் 'அக்கினி ஆறு' என்றே எல்லோரும் அழைத்தனர். பெரும்பாலான நாட்களில் அந்த மணல் ஆற்றினைக் கடந்து செல்லும்போது, அக்கினி ஆற்றைக் கடந்து செல்வதேபோன்றுதான் உணர்வு ஏற்படுமென்ற காரணமாகவே இருக்க வேண்டும்! பெயரில் என்ன இருக்கிறது ? இல்லை, காரணத்தில் என்ன உள்ளது?... எதுவும் இறைவனின் செயல்தானே!...

பஸ் போக்குவரத்து தொடங்கப்படவிருந்த தருணத்திலே பஸ் உரிமையாளர் ஒருவரும் இரு ஊர் பெரியதனக்காரர்கள் சிலரும் சேர்ந்து தஞ்சை ஜில்லா போர்டின் அனுமதியும் உதவியும் பெற்று, மழைகாலத்தில் தடையாக இருக்கும் இந்த அக்கினி ஆற்றுக்குப் பாலம் சமைக்கத் திட்டம் போட்டார்கள். காரியம் செயல் வடிவுபெற ஒரு வருஷம் ஆனது; பாலமும் உருவாகத் தொடங்கிவிட்டது. அடுத்த சித்திரை வந்தால், அக்கினி ஆற்றுப் பாலத்திற்கு திறப்பு விழா நடைபெறும்!

'எல்லாம் கடவுள் கிருபை!' என்ற குரல்கள் நாற்சந்திகளிலும் எதிரொலி செய்தன.

ரெயில் தண்டவாளத் துண்டில் இரும்புக்கழி எழுப்பின ஒலி, பாலத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்குப் பசியைக் கிள்ளிவிட்டிருக்க வேண்

டும். மணியோசை எழுந்ததுதான் தாமதம், ஆண்களும், பெண்களும் அவரவர்கள் கைவேலையை அப்படி அப்படியே போட்டுவிட்டு மதியச் சாப்பாட்டுக்குக் கிளம்பினார்கள். பாலத்திடை அங்கங்கே திட்டுத் திட்டாகக் கிடந்த மணல்மேடுகளைத் துளைத்தெடுக்க வல்ல பெரிய இயந்திரத்தின் பக்கத்தே தோண்டப்பட்டிருந்த அகலமான ஆழம் நிறைந்த ஊற்று, தொழிலாளர்களின் கைகால் மேனியைக் கழுவிவிட்டது. சாப்பாட்டுப் பொட்டணங்களும், பாத்திரங்களும் அமுதசுரபி போலவே அவர்களின் கண்களுக்குத் தோன்றின.

அப்பியிருந்த ஈரத்தை அழுத்தித் துடைக்கக்கூட வள்ளிக்கு ஓடவில்லை. வேலையில் ஒன்றிய தருணம் அவள் வீட்டை மறக்க முயற்சி செய்தாள். ஆனால், இப்போது அவளுக்கு உடல்நலமின்றித் தவிக்கும் கணவனின் ஞாபகம் நெஞ்சிலும் நினைவிலும் ஓடிற்று. மூச்சுவிட நேரமின்றி, வேர்வையை வழித்துவிடப் பொழுதில்லாமல் ஒரு முனையிலிருந்த கற்களையும் மண்ணையும் இன்னொரு முனைக்குச் சுமந்து கொட்டிய போது உண்டான அயர்வைவிட இப்பொழுதுதான் அதிகப்படியான அலுப்பும் மயக்கமும் ஏற்பட்டன.

"நீ போ வள்ளி. நான் எப்படியோ பார்த்துக்கிடுறேன்; நம்ப பொண்ணு செவந்தியை அனுப்பி, கோடி வீட்டுக் கிழவியைக் கூட்டியாரச் சொல்லிக் கஞ்சியை இறக்கி ஊத்திச் சாப்பிடுகிறேன். மகளுக்கும் கஞ்சி கொடுக்கிறேன்; நீ ஓடு. இன்னைக்குச் சனியாச்சே!... வாரச் சம்பளப் பணம் ஏதாச்சும் கொடுப்பாக; வைத்தியருக்குக் குடுக்கணும்; அரிசி உப்புப் புளி மிளகாய் வாங்கணும். என்னமோ, அந்தப் பெருங்கார முண்டர்

சாமிதான் நம்பளைக் காப்பத்தவேணும் !'' என்று அவளுடைய துணைவன் சிங்காரம் ஆறுதல் மொழிந்த வார்த்தைகள் அழிந்த முரசொலியின் பாங்கிலே தேய்ந்து ஒலித்தன. ஆறு வயசுச் சிறுமியான செவந் தியை அவள் எப்படி மறப்பாள் ? 'அம்மா, வாரப்போ தேத்தண்ணிக் கடையிலே காராப்பூந்தி வாங்கியார ணும் !' என்று நினைவுக் குறிப்பைக் கொடுத்தல்லவா அவள் வழியனுப்பி வைத்தாள் ?

கண்களிலே நிரம்பின நீரை வள்ளியால் துடைக்க முடிந்தது ; இதயத்தின் கண்ணீரை வழித்துவிட அவளால் இயலவில்லை. பழங் கஞ்சியும் பட்ட மிள காயும் உப்புக் கல்லும் அவளைக் கைகொட்டி அழைத் தன. துணி முடிச்சை அவிழ்த்தாள். கணவனும் மகளும் மாறி மாறித் தோன்றினர் ; வெம்மி வெடித்தது நெஞ்சு ; கதறிய உள்ளத்தின் கண்களை மூடி மறைத்து விட்டு, சோற்றுக் கவளத்தை அள்ளி வாயில் திணிக்க முற்பட்ட சமயத்திலே, பாலத்தின் ஓரமாக ஜனக் கும்பல் தெரிவதை உணர்ந்தாள் ; 'ஒருவேளை மச்சான் வந்து நடக்க முடியாம மயக்கம் போட்டு விழுந்திருக் குமோ '...பணம் காசை முன்னாலே வாங்கிக்கினு போய் நாட்டு வைத்தியர்கிட்டே கொடுத்து மருந்து சாப்பிட எண்ணியிருக்குமோ ?... இல்லே, செவந்திதான் என்னைத் தேடிவந்து ஆபத்திலே அகப்பட்டிருக்குமோ ?' என்று அலை பாய்ந்த மனத்துடன், பிடி சோற்றை அப்படியே போட்டுவிட்டு, கையலம்பியவாறு விரைந்து சென்றாள் வள்ளி. அவள் அக்கூட்டத்தை அண்டியதும், செவி களில் மோதிய அனுதாப மொழிகள் இவை :

"ஐயோ பாவம் !...கொஞ்ச வயசு ஆம்பளையாட்டம் தான் தோணுது ; பாவம், யாருமேயில்லாத அனாதை போலே !...உடம்பெல்லாம் நெருப்பாக் கொளுத்துது!...

நடுப் பாதையிலே வர்றப்பவே மயக்கம் போட்டு விழுந் திட்டாற்போல தெரியுது !...''

விழிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு வள்ளி ஆழ்ந்து நோக்கினாள். எடுத்த எடுப்பிலேயே அவள் பார்வையில் பளிச்சிட்டது அந்த எனுமல் மோதிரம். 'க' என்னும் அந்த ஒற்றை எழுத்து அவளது மேனி யில் பூகம்பத்தை, எரிமலையை, சூருவளியை உற்பத்தி செய்தது. 'கனகலிங்கம் மச்சான் !' என்று அவள் தன் மனசுக்குள்ளாகவே கூறிக்கொண்டாள். மறுபடியும் அந்த ஆளை ஆழ்ந்து நோக்கினாள். க்ஷவரம் செய்யப் படாத முகம் புறக்கண்ணோக்கில் பதிந்தது. ஆனால், அகக்கண்களிலே இளமை ரேகை விட்டிருந்த அழகான வதனம் தெரிந்தது. கிழிந்திருந்த சட்டையும் வேஷ்டி யும் மறையலாயின ; 'சோமன் பட்டும்' 'ஜரிகை லேஞ் சும்' உருவாயின. 'வள்ளி, உன் கழுத்திலே நான் தங்கத் தாலி கட்டுவேன்னு ஆசைக் கனவைத் தாங் கிக்கிட்டு கடல்கடந்து ஓடியாந்தேனே !...ஆனா, நீ இன் னொருத்தர் சொத்தாகியிருக்கியே !... ஐயோ, நான் மகாபாவி !...போன பிறப்பிலே என்ன பாவம் செஞ் சேனோ ?...அதனாலேதான் இத்தனை பெரிய ஏமாற்றம் என்னை வரவேற்றிருக்குது !...தெய்வமே !' என்று ஏழாண்டுகளுக்கு முந்தி கண்ணீரும் கம்பலையுமாக, சிதைந்த கனவில் பாதத்தில் தத்தளித்தவண்ணம் சொன்ன அந்தப் பேச்சு விசுவரூபம் எடுக்கத் தொடங் கியது.

நிகழ் காலத்துக்குக் கண்ணாடியாக இலங்கும் 'காலம்' இறந்த காலத்துக்கு 'நாட்குறிப்பு' ஆகவும் இயங்க முடியுமல்லவா ? ஆகவே, வள்ளி கலந்த கனவின் பயணத்தைத் தொடங்கலானாள்

அந்தக் கனவு...!

ஆவணத்திலே மன்மதன் என்னும் பட்டப் பெயர் பெற்றவன் கனகலிங்கம். பார்த்த பெண்களைப் பார்த்துக்கொண்டேயிருக்கத் தூண்டும் பரந்த விழிகளும், பரவசமூட்டும் உதட்டோரத்துச் சிரிப்பும், சுகாதாரம் நிறைந்த உடலமைப்பும் கொண்டவன் அவன். பள்ளி வாசலுக்கு அடுத்திருந்த அவன் வீட்டுக்குப் பக்கத்துத் தெருவில்தான் வள்ளியும் வசித்து வந்தாள். சாண் வயிற்றைக் கழுவும் அளவுக்கு இரு தரப்பிலும் நிலங்கள் இருந்தன.

அப்போது, வள்ளி பன்னிரண்டு வயதைப் பூர்த்தி செய்திருந்தாள். இளைஞனை கனகலிங்கம் கடல் கடந்து பர்மாவுக்குப் பயணப்பட முடிவு கட்டினன்; மரக் கடை முதலாளிச் செட்டியார் ஒருவரின் துணையினுல் 'பாஸ்போர்ட்' போன்ற வழிகளையும் சமாளித்துக் கொண்டான். புறப்படும்போது பயணம் சொல்லிப் போக வள்ளியைத் தேடி வந்தான்; 'வள்ளி! இன்னும் மூணே மூணு வருசத்திலே ஒரு கணக்கு முடிஞ்சிடும்; திரும்பி வந்ததும் உன்னைக் கட்டிக்கிடுவேன்; புதுப் பொண்ணாட்டம் நீ என் கண்ணுக்குக் காட்சி யளிக்கணும்; உன் நினைப்பு ஒண்ணுதான் என் கவலையை மாற்றுகிற மருந்து!...ஆமா, வள்ளி!...பர்மாவிலே இப்போ யாதொரு அச்சத்துக்கும் வழி கிடையாது!... நான் போயிட்டுவாரேன்!' என்று செருமலுடன் புன்னகை சேர்த்து அவளுக்குச் சமாதானமும் கூறி விடை வாங்கிச் சென்றான், கனகலிங்கம்.

பருவம் வள்ளிக்குத் தாவணி கொடுத்தது; கன்னி நீங்கினாள்; காலம் கரைந்தது.

இரண்டாண்டுகள் கழிந்தன. 'இன்னம் ஒரு பங்குனி உத்தரத் திருநாள் கடந்து போயிட்டுதின்ன, என் மச்சான் வந்திடும்!' என்று மனத்தை அமைதிப் படுத்தி வரலானாள், அவள். தூரத்துச் சொந்தமானாலும் நெருங்கிப் பிணைந்த இதயங்கள் காலத்தையும், தூரத்தையும் பொய்க் கணக்காக்கி உறவு கொண்டு திகழ்ந்தன.

அப்பொழுதுதான் அந்த எதிர்பாராச் சம்பவம் தோன்றியது.

'வள்ளி, உன் மச்சான் கனகலிங்கத்தை பர்மாவிலே கோரங்கிக்காரங்க அடைச்சுவச்சிட்டிருக்காங்களாம்; டோங்குவான்னு ஒரு ஊராம்; அங்கே பணம் தண்டலுக்கு அவங்க முதலாளி அனிப்பிச்சாங்களாம்! ...செட்டியார் வீட்டுக்கு கடுதாசி எழுதியிருக்காராம்! ஒரு சமயம்...!' என்று மென்று விழுங்கிய தந்தையின் பயம் வள்ளியைக் கசக்கிப் பிழிந்தது. கொலை கொள்ளைக்கு அஞ்சாமல் நிகழ்ந்த சம்பவங்களையும் அவள் கேள்விப்பட்டிருந்தாள். 'ஒருசமயம்...!'—அவளாலும் அந்த வாக்கியத்தைப் பூர்த்தி பண்ணக்கூடவில்லை; திருச்சிற்றம்பலத்தில் இப்படித்தான் ஒருவன் ரங்கூனில் மொகல் வீதியில் அநியாயமாகக் காணாமல் எதிரிகளால் பூட்டி வைக்கப்பட்டுப் பிறகு கத்திக்குப் பலியானானும். அச்சம்பவமும் நினைவில் புரையோடியது. 'மச்சான்...! மச்சான்...!' என்று தேம்பினாள்; அழுதாள். அடுத்த வருஷமும் நழுவியது. 'கனகலிங்கத்தைப் பற்றி அப்புறம் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை' என்று அழைத்துச் சென்ற முதலாளி கடிதம் எழுதிவிட்டார்.

பெண் ஓர் ஊர்க் குருவிபோல. ஊர்க்குருவி உயர உயரப் பறந்தாலும், அது பருந்தாக முடியமாட்டாது. ஆனால், பெண் மனம் மாத்திரம் தன்னையுமிழந்த

பாவனையில் உயர உயரப் பறந்துகொண்டுதான் இருக்கும். ஆணை பருந்துக்கு உவமை சொல்லலாம். ஆணின் பருந்துப் பார்வை, பெண்ணின் பருவத்தைச் சுற்றியே தான் சதா மொய்த்திருக்கும். இது இயற்கையின் நியமம். இப்படிப்பட்ட வாழ்க்கை விதிக்கு விலக்காக வள்ளி அமைய அவளது தாய்—தந்தை விரும்பவில்லை. 'நாலு பேர் நாலுவிதமாச் சொல்லறத்துக்குள்ளே உனக்குக் கண்ணாலம் செஞ்சிடுறதுதாம்மா நல்லது. பனங்குளம் கோடித் தெரு சிங்காரத்துக்கும் உன்னைப் பிடிச்சிருக்குது; ஏதோ சொத்துப் பத்தும் காணும்படியாயிருக்குது!' என்று பூசி மெழுகினார்கள்.

அடுத்த மாசமே வள்ளி மங்கல நாண் ஏந்தினாள். சொல்லி வைத்தமாதிரி அதற்கு மறுநாள், கனகலிங்கம் அவள் முன் நின்றான்; "இப்பிடி நடக்குமின்னு தெரிஞ்சிருந்தா, அங்கேயே நான் நாக்கைப் பிடுங்கிக்கிட்டுச் செத்திருப்பேனே!...காடு மாத்திக் காடுக்கு என்னை அனுப்பின கோரங்கிக்காரங்க; என்னை கடைசி காலத்திலே இரக்கப்பட்டு விடுவிச்சு உயிரோட விட்டது, இப்போ இங்கே கிடைச்ச பேரிடியை சுமக்கிறதுக்குத் தானா?..." என்று என்னவெல்லாமோ புலம்பினான். தன் கணவனின் கண் திருஷ்டியில் படுமுன் கனகலிங்கத்தை அனுப்பி வைக்க எண்ணிய வள்ளி, தெய்வத்தின்பேரில் பாரத்தைப் போட்டு ஏதோ ஆறுதல் பகன்று அவனை அங்கிருந்து நீங்கச் செய்தாள். பழங்கனவுக் கதையை மணவறையில் அமர்வதற்கு முன்னதாகவே மறந்துவிட்டிருந்த வள்ளிக்கு இந்த விசித்திரச் சந்திப்பு புதிய சலனத்தைத் தோற்றுவித்தது; கண்ணீரால் கழுவி அந்நிகழ்ச்சியையும் மறக்க முயன்றாள் அவள்.

அடுத்த இரண்டாம் நாள் மாலையில் வள்ளி கிணற்

றுக்குச் சென்றுகொண்டிருந்தாள். கணகலிங்கம் அவளை நாடி வந்தான்; தான் கொணர்ந்த பணம், பலகாரம், சாமான் கொண்ட பையை நீட்டினுன். அவள் ஏற்க மறுத்தாள். இறுதியாக, தன்னுடைய பெயரின் முதலெழுத்தைக் கொண்ட 'க' என்னும் எழுத்துப் பொறிக்கப்பட்டிருந்த எனமல் மோதிரத்தைத் தன் நினைவுப் பரிசிலாகக் கொடுத்தான் கனகலிங்கம். அப்போதைக்கு அவள் அதை வாங்குவதைத் தவிர, வேறு வழியில்லாமற் போய்விட்டது. ஆனல், அம் மோதிரம் புத்தம் புதிய மணவாழ்விலே புயலாகுமென அவள் எதிர்நோக்கியிருந்தால்தானே ?..." அன்னியன் மோதிரத்தை நீ கையிலே போட்டிருந்தா, ஊர் உலகம் என்ன நினைக்கும் ?...உன் மனசைப் புரிஞ்சவன் நான்; உன்னை நம்புறவன் நான். ஆனபடியாலேதான் நான் இப்படி இதம்பதமாச் சொல்கிறேன். முதல் காரியமாய் இந்த மோதிரத்தை அந்த ஆள்கிட்டேயே அனுப்பிச்சுப் பிடு !" என்று எச்சரித்தான், வள்ளிக்கு வாய்த்த சிங்காரம்.

மோதிரத்தைப் பெற்றுக்கொண்ட கனகலிங்கத்தை அதற்கப்புறம் அவ்வூர்ப் பக்கமே காணவில்லை! ஆண்டுகள் ஆறுக்குமேலே ஆகிவிட்டன. இன்று தான் அவன் மீண்டும் 'தரிசனம்' தந்திருக்கிறுன் !

"வள்ளி !...வள்ளி !"

அக்கினி ஆற்றுப் பாலமும், அது நினைவில் காட்டிய கனகலிங்கமும் இப்பொழுதுதான் வள்ளிக்குச் சுய நினைவைத் தந்தன.

"அண்ணுச்சி, எல்லாரும் கொஞ்சம் விலகி நில்லுங்க. அக்கா, சொம்பிலே தண்ணி கொண்டா றியா ?.. இவரு எங்க சொந்தக்காரர். மயக்கம் தெளிஞ்ச

தும் என் வீட்டுக்கு வண்டி வச்சு இட்டுக்கிட்டுப் போறேன்!'' என்ருள் வள்ளி.

மின்னல் கொடியின் மனத்திடை கொடி மின்னலென ஒரு பயம் புறப்பட்டது. 'கனகலிங்கம் மச்சானை வீட்டுக்குக் கொண்டு போனு, வீட்டுக்காரர் கோவிச்சா என்ன செய்யறது?.. ஒண்ணுகிடக்க ஒண்ணு நெனைச்சுத் திட்டினலும் திட்டுவாங்களோ?... பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கா முடிஞ்சுதின்ன என்ன ஆகிறது?...' என்று மனம் மறுகினுள்.

அச்சமயம் அவளது மனச்சாட்சி பெரிய குரலெடுத்துப் பேசியது. '...பெண்ணுகப் பிறந்த நீ மனசு இரங்கி ஆபத்துக்கு உதவ வேண்டியதுதான் உன் கடமை. இதேமாதிரி ஒன் புருசன் ஒரு இடத்திலே நினைப்பு தப்பிக் கிடந்தா, இன்னெரு பெண் கண்டு உதவி ஒத்தாசை செய்யாமப் போக ஏலுமா?...இன்னிக்கு நீ மனசு இளகிஞத்தானே, நாளைக்கு உனக்கு தெய்வமும் இரக்கம் காட்டும்?...ம்...சீக்கிரமா கனகலிங்கத்தை வீட்டுக்கு வண்டியிலே கொண்டு போ!...'

x x x

வறுமையின் திருவுருவமாகக் காட்சியளித்த அந்த வீட்டின் முன் வாசலில் மொட்டை வண்டி வந்து நின்றது. வள்ளி முதலில் இறங்கினுள். அவள் மனம் பட்டாம்பூச்சியின் சிறகுகள் மாதிரி படபடத்தது. அவள் தலையை உயர்த்தியபோது, தன் தங்கை அன்னக்கிளி 'விருந்தாடி' வந்திருப்பதை அறிந்தாள். 'அத்தானுக்கு மேலுக்கு முடியலையாமே?...ஆவணத்திலேருந்து அதுதான் ஓடியாந்தேன்' என்ருள் அவள்.

"மச்சான், கொண்டாங்க கையை!...மெதுவாப் பிடிச்சுக்கிட்டு இறங்குங்க!' என்று வள்ளி சொல்லிக்

கொண்டிருக்கையில், அன்னக்கிளியின் விழி விரிப்பில தன் தமக்கையின் கணவன் சிங்காரத்தின் உருவம் பட்டது.

'அக்கா!...அதோ அத்தான்'' என்ருள் அன்னக்கிளி.

தானே கீழே இறங்கிவிட முயன்றுகொண்டிருந்த கனகலிங்கத்தைக் கண்டதும், தன்னையறியாமலேயே தன் வலதுகையை அவனிடம் நீட்டிஞள் அன்னக்கிளி. இக்காட்சியை விழி விரியப் பார்வையிட்டபடி துணை நாடிஞள் வள்ளி.

பனங்குளத்தில் தினகரன் இறங்குமுகத்தில் இருந்த வேளை அது.

"வள்ளி, கனகலிங்கமா அது?...போ!...நீ உதவிக்கு நின்னு அவரை உள்ளே கொண்டுபோய்ப்படுக்க வை. வைத்தியர் ஐயாவும் வந்திடுவாக. நானே இந்த உடம்போட கனகலிங்கத்தைத் தேடிவரத்தான் புறப்பட்டேன்!..." என்ருன் சிங்காரம். வள்ளிக்குத் தன் செவிகளை நம்ப இயலவில்லை. தயங்கிஞள்.

'ம்! சல்தியாப் போ வள்ளி!...உன் தங்கச்சியை விலகிக்கிடச் சொல்லு. கன்னிப் பொண்ணு இன்ஞெரு ஆம்பளை கையைப் பிடிக்க வேணும். அப்பாலே நாக்கிலே நரம்பில்லாம ஊரிலே ஏதாலும் பேசுவாங்க இதயத்தை அடகுவச்ச பாவிங்க!...நீ போ வள்ளி... பாவம், அவர் ஒடிஞ்சு சாய்ஞ்சிடுவார் போலே!..." என்று மீண்டும் கூறிஞன் சிங்காரம். அவனது 'உயர்ந்த மனிதப் பண்பு' அவள் விழிகளைக் கலங்க வைத்தது. அவள் மனம் அமைதி கண்டது; தன் நீதி பலித்ததைக் கண்டு அவளது மனச்சான்று மகிழ்ச்சி பூண்டது.

கனகலிங்கம் கண் திறந்தான்.

வள்ளி இதைப் பார்த்தாள். ஆனால், ஆண்டவன் கண் திறந்த ரகசியத்தை அவள் அறியாள் அல்லவா ?

" வள்ளி, நம்ப வைத்தியருக்குப் பணம் கொடுத்து மருந்து கொடுக்கச் சொன்னது கனகலிங்கம்தானும் !... இந்த உண்மையை வைத்தியர் ஐயா சொல்லி முடிக்கிற துக்குள்ள கனகலிங்கம் எங்கிட்டே வந்து நூறு ரூபாய்ப் பணம், பலகாரம், சாமான் அல்லாத்தையும் கொடுத்தார் ; அவரோடே ஆசையைக் கெடுக்கிற துக்கு எனக்கு மனசு வரலே. நல்ல நெஞ்சைப் புரிஞ்சுக் கிட்டேன் ; வாங்கிக்கிட்டேன் !" என்று தெரிவித் தான் சிங்காரம்.

அந்தி வந்தது.

மெலிந்து நலிந்த உடலுடன் திண்டில் சாய்ந் திருந்த கனகலிங்கம் கண்களைத் துடைத்துக் கொண் டதை வள்ளி பார்த்துவிட்டு அவனருகில் வந்தாள்.

" அழுதீகளா ?...கண்ணீர்த் தண்ணி கலங்குதுங் களே ?" என்று வினவினாள் வள்ளி. வெடித்து வந்த விழிப் பெருக்குக்கு அவள் அணை கட்டிக்கொண்டாள்.

" வள்ளி, இது ஆனந்தக் கண்ணீர், கடைசிகாலத் திலே உன்னை காண முடிஞ்சுதே, அதை நினைச்சேன் ; கண்கலங்கிச்சு !...அம்பிட்டுத்தான் ! உன்னோடை பரி சுத்தமான அன்புக்கு ஈடேயில்லை !" என்று தேய்ந்த தொனியில் பேசினான் கனகலிங்கம்.

' மச்சான் !' என்று கூவிவிடத் துடித்த உதடு களைக் கடித்துக்கொண்டாள். அந்தச் சுய உரிமைக்கு பூரணமான பாத்தியதை பூண்டவன் அவளுடைய சிங் காரம் !

வள்ளியால் கண்ணீரைக் கட்ட இயலவில்லை. எலுமிச்சம்பழம் பிழிந்து, முறித்த பாலைப் பீங்கான் கிண்ணத்தில் ஊற்றி அவன் கையில் கொடுத்தாள்.

"அக்கா, பத்தியக் கஞ்சி வச்சுப்புட்டேன்!" என்று குரல் கொடுத்தபடி தலையை சாக்குத் திரை மறைவில் இழுத்துக்கொண்டாள் அன்னக்கிளி.

"ஒரே மடக்கிலே குடிச்சுப்புடுங்க!" என்றான் சிங்காரம்.

"சிங்காரம், எனக்கு இதெல்லாம் வேணும்; நான இங்கேருந்து கிளம்பப் போறேன்! உங்க ரெண்டு பேருக்கும் ரொம்ப நன்றி!" என்று எழுந்தான் கனக லிங்கம்.

சிங்காரம் மலைத்தான்!

"எங்கே போகப் போறீங்க, மாமா?" எனக் கேட்டுக்கொண்டே தாவியோடி வந்தாள் சிறுமி செவந்தி.

"மாமா!"—வள்ளி மலைத்தாள்.

"மாமா!"—சிங்காரம் திகைத்தான்.

"மாமா!"—செவந்தி சிரித்தாள்.

வள்ளி தன் மகளின் தலைமுடியைக் கோதியவாறு, "செவந்தி, இவரை இனி மாமான்னு கூப்பிடாதே!" என்று கூறினாள்.

"மாமான்னுதானே இவங்க சொந்தம் சொல்லித் தந்தாக!...அம்மா!" என்றது குழந்தை மனம்.

"அதுசரி; இனிமேலே இவரு ஒனக்கு என்ன சொந்தம், தெரியுமா? சித்தப்பா..." என்று பதில் கொடுத்தாள் வள்ளி, உணர்ச்சிப் பெருக்குடன்.

“ சித்தப்பா !...சித்தப்பா !” என்று கூவி மகிழ்ந்த செவந்தி, ஓடிச் சென்று கனகலிங்கத்தின் மடியில் சாய்ந்தாள் !

கனலிங்கம் ஏதும் விளங்காமல் சிலையானுன் ! ஆனுல், விழிகள் எல்லாம் புரிந்த பாவனையில் சிரிக்கத் தலைப்பட்டன.

“ அம்மாவ் ! இந்த மோதிரத்தைப் பாரு ; இதை யும் இந்த சித்தப்பாதான் எங்கையிலே போட்டுவிட் டாக !”

‘க’ என்ற எழுத்தைக்கொண்ட எனுமல் மோதிரம் நூல் சுற்றப்பெற்று செவந்தியின் நடுவிரலை அலங் கரித்தது.

“ இந்தாப் பாருங்க, இனி நீங்க எங்கேயும் போக ஏலாது ! எண்ணி பத்து நாளையிலே ஒங்களைப் பழைய நிலைக்குக் கொண்டாந்திடுறது என் தங்கச்சி அன்னக் கிளியோட பொறுப்பாம் !...ஒங்க நிழலிலே அதை ஒண்டச் செஞ்சிடணுங்கிறது எம்முடிவு ; பெருங்காரர் முண்டர்சாமி முடிவும் இதுவேதான் !” என்ருள் வள்ளி, கனகலிங்கம் அமர்ந்திருந்த திசை நோக்கி.

“ சபாசு !...சித்தப்பாவுக்கும், சின்னம்மாவுக்கும் கண்ணலம் !...சபாசு !...” என்று வானத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தாள் செவந்திப் பெண்.

ஆசி

உயர்திரு அ மு. வே. கனக வேலுச் செட்டியாரென்ருல், கொத்தவால்:சாவடியிலே வெகுவாகப் புகழ் பெற்றவர். புகழ் என்ருல், அற்ப சொற்பமான புகழ் அன்று. 'நாணய'மும் நாணயமும் கட்டிக் காத்துத் தந்த புகழ் அது. ஆகவேதான் அவ்வட்டாரத்தில் அவரால் 'கொடி கட்டி' வாழ முடிந்தது ; தொழில் செய்யவும் வாய்ப்புக் கிட்டியது. நேர்மை கொண்ட நெஞ்சம் ; அதற்குரிய பரிபக்குவமும் பண்பும் பக்திநெறியில் வளர்ந்தன ; வளர்க்கப்பட்டன. வாழ்க்கைத் துறை, தொழில் முறை ஆகிய இரண்டையும் செந்தில் திருக்குமரனின் அன்புப் பரிசில்களாகவே மதித்து மனம் பூரிப்பது செட்டியாரின் நித்திய கடன்களிலே ஒன்ருகும். நீறு துலங்கும் நெற்றியும், நரை இலங்கும் உருவமும், தும்மைப்பூ உடைகளும், 'பாக்கெட் கடிகார'மும் வலது கை மோதிர விரலில் ஒளிசிந்திய வைர மோதிர

மும் அவரைப் பிறருக்கு அடையாளம் காட்டும் நினைவுக் குறிப்புக்கள். ஆனால் ஓர் எச்சரிக்கை : அவர் கோபக் காரர் !

அன்றைக்குக் கிருத்திகை. புனலாடி, பூசனை முடித்து, புசித்துத் திரும்பும்போது, செட்டியாரின் சட்டைப்பைக் கடிகாரம் 'மணி பன்னிரண்டு' என்று சொன்னது. அவருடைய தலையைக் கண்ட சடுதியில், கடைச் சிப்பந்திகளின் தலைகளிலே அச்சமும், கடமை யுணர்வும் தூக்க விழிப்பும் இடம்பெறலாயின. கல்லா வில் வீற்றிருந்த கணக்குப்பிள்ளை எழுந்தார் ; ஆசனத் தில் போடப்பட்டிருந்த திண்டைத் துண்டினால் தட்டி னார் ; செட்டியார் அமர்ந்தார் : ' அப்பனே முருகா !' செட்டியார் கல்லாப் பெட்டியைத் திறந்து மூடினார் ; நெற்றிச் சுருக்கங்கள் விரிந்து விலகின ; பண்டை வாழ்வுக் காதையின் சருக்கங்கள் திரை விரிந்து விலகினவோ ? காரோட்டி வந்து காதைக் கடித்தான் ; பதிலுக்கு அவரும் காதைக் கடிக்காமல், பதிலுரைத்து அனுப்பினார் ; பின்னர், அன்றையத் தபால்களில் கவனம் பதித்தார். அவருக்காகக் கையொப்பம்செய்து வாங்கப்பட்டிருந்த ' ரிஜிஸ்தர் தபால் ' அவரது ஆர்வத் துக்குத் தூபமிடவே, அவசரத்தைத் துணை சேர்த்துக் கொண்டு, உறையைப் பிரித்தார்; உள்ளுறை பிரிந்தது.

முந்நூறு விநாடிகள் காலத்தின் சேமநிதியினின் றும் நீதியுடன் செலவாயின.

படித்து முடித்த கடிதத்தைத் தாறுமாறாக மடித் துச் சட்டைப்பைக்குள் திணித்துக் கொண்ட கனக வேலுச் செட்டியாரின் முகத்தில் எள் வெடித்தது ; அவர் தலையைத் திருப்பினார். பணியாளன் ஒருவன் எண்ணெய் அளந்துகொண்டிருந்தான். முகத்தில் வெடித்த எள்தான் எண்ணெய் ஆனதோ ?

கண்களை மூடி மூடித் திறந்தார் செட்டியார்; ஒரு காட்சியும் ஓர் உருவமும் மாறி மாறி நிழலாடின. நிழலின் ஒளி மாறவில்லை; மறையவில்லை. காலம் முக்காலமென்னும் நியதிக் கோட்பாட்டைக் கடந்த தல்லவா? "மணிவாசகம்!...மணிவாசகம்!..." கூப்பாடு கூட்டினார் கடை முதலாளி. சிப்பந்திகள் கலக்கம் காண்பித்தனர்.

"மணிவாசகம் போய் வருஷம் அஞ்சு ஆச்சுங்களே, எஜமான்!..."

திகைப்பின் நிலை மறைந்தது; சுய நினைவின் உணர்வு பிடிப்புக் கண்டது. "ஆமா ஆமா!...நீ போய் வேலையைப் பாரு, கோவிந்தா!"

x x x

"காமாட்சி!" என்று விளித்தவண்ணம் பங்களாவின் தலைவாயிலில் மிதித்த செட்டியாரை முதலில் வரவேற்றவள் பாப்பா. பாப்பா என்றால் சின்னப் பாப்பா அல்லள். செல்லப் பாப்பா! கண்களிலே அமர்த்தி இமைகளால் மூடி முடி வளர்க்கப்பட்டவள். பாப்பா 'ருது'வானாள்; ஆனால் அவள் அவர்களுக்கு எப்போதுமே பாப்பாதான்! அது அவளது இயற்பெயர்!

"அம்மா இல்லையா, பாப்பா?"

"உள்ளே விரதத்துக்குப் பலகாரம் செய்யுது!"

'காமாட்சி' என்ற அழைப்பை விடுத்து, நடையில் விரைவு பாய்ச்சி, நடையைக் கடந்த அவர், தான் எண்ணியதை மீண்டும் நினைவு கூட்டிக் கொண்டார். அந்தி மாலைப் பொழுதில் கிடைத்த தொலைபேசி இணைப்பில் மிதந்து வந்த அமுதச் சேதியை அவர் சொல்லத் துடித்தார். நிலா முற்றத்தில் சித்தம் பதித்துச் 'சித்து'

விளையாடிய சீதள நிலாவின் முகம் பாப்பாவின் நிலவு முகத்தில் ஆட்டம் போட்டது. திரும்பவும் மகளைப் பார்வையிட்டார் அவர். தாலியும் மாலையுமாகத் திகழப் பொலிவு காட்டினுள் அவள். நெஞ்சத்தில் சுரந்த பாசத்தின் ஈரம் விழிகளில் கரை கட்டிற்று. 'என் வீட்டிலே நடக்கக்கூடிய முதல் கல்யாணம் ஆயிற்றே இது?'—சிந்தனையின் லயிப்பில் கண் புனல் வழிந்தது; கட்புலம் விழித்தபோது, இதயம் காட்டிய ஏதோ ஒரு நினைவு மூடிக் கொண்டது.

மனைவி காமாட்சியின் கை பட்ட கல்லும் இனிக்கும் என்பது செட்டியாரின் நெடுநாளையக் கருத்து. ஏனெனில், அவரது கருத்தைக் கவர்ந்தவள் அவள். ஆனாலும், அன்றுதினம் அவருக்கு அவள் கேசரி, அல்வா எல்லாம் படைத்தாள். கல்லைக் காட்டவில்லையாதலால், அவை இனித்தன. உப்புமா பரிமாறினுள். அதில் உப்பு கச்சிதமாக இருந்தது. உண்டு முடிந்தது. தாம்பூலச் சிவப்பு மண்டியிட்ட இதழ்களைப் பரப்பி அவர் ஆதார பூர்வமாக வெளியிட்ட செய்தி இதுதான்: "காமாட்சி! நம்ம பாப்பாவுக்கு நல்ல மாப்பிள்ளை திகைஞ்சிருக்குது. கண்ணுக்குக் கண்ணான பிள்ளை; கண் நிறைஞ்சவன்; பாப்பா கொடுத்துவச்சது; நீ பெத்த பொண்ணாச்சே?...ஐப்பசியிலேயே கல்யாணத்தை முடிச்சிட வேண்டியதுதான்!"

x x x

இரவு கண் வளர்ந்தது. ஆகவே, ஊரும் உலகமும் கண் வளர்ந்ததில் தவறில்லைதானே?

ஆனால் ஒரு திருத்தம்: மேற் குறித்த தகவலுக்கு ஆதார பூர்வமான' விதிவிலக்கு ஒன்று உண்டு. அது,

செட்டியார் மட்டிலும் 'கொட்ட கொட்ட'க் கண் விழித்திருந்தார் என்பதுவே! அவருடைய பார்வைக்கு இலக்குப் பதித்துக் கிடந்தது. அன்று வந்த பதிவுக் கடிதம் மனத்தட்டில் பதிவு பெற்றிருந்த வரிகளை எண்ணிப் பார்க்க விரும்பாத அவர், வெள்ளைத் தாள் களிலே 'கறை' காட்டிக் கிடந்த வரிகளை நினைவுடன் படிக்கலானார். மூக்குக் கண்ணாடி துடித்தது.

" மதிப்பிற்குரிய முதலாளி அவர்கள் சமுகத்திற்கு, மாணிக்க வாசகம் அடிபணிந்து எழுதுவது :

ஐயா! இந்த லெட்டர் உங்களுக்குப் பேரதிர்ச்சி யாகத்தான் இருக்கும் என்பதில் துளியும் சந்தேகம் கிடையாது. கிட்டத்தட்ட ஐந்து வருஷங்களுக்கு அப்பால் நான் மனசைத் திறந்துகாட்டி எழுதும் கடிதம் இது என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படு கிறேன். என் மனசை மூடிவிட்டு நான் செய்த தப்புக்கு மன்னிப்புக் கேட்கும் நான் இப்போது உங்களிடம் இரண்டு வரங்களை யாசிக்கும் நிலையில் நின்று கொண் டிருக்கிறேன். நான் செய்து விட்ட அந்த மாபெரும் குற்றத்தைத் தாங்கள் மன்னிப்பதோடு, அந்தக் குற்றத்தை யாரிடமும் வெளியிட்டு விடாமலும் இருக்க வேண்டும். அதற்கும் காரணம் இருக்கிறது. இத்துடன் அனுப்பப்பட்டிருக்கிற கல்யாணப் பத்திரிகை மூலம் என் நினைப்பை நீங்கள் புரிந்து கொள்ளுவீர்களென்று நினைக்கிறேன். எனக்குக் கல்யாணம் நடந்து முடியும் வரையிலாவது நீங்கள் என் தவற்றை அம்பலப் படுத் தாமலிருக்க வேணுமாய்க் கோருகிறேன். இது என் முதல் வரம். அடுத்தபடியாக, நீங்கள் புதுக் கோட் டைக்கு என்னுடைய திருமணத்திற்கு வந்து என்னை ஆசீர்வதிக்க வேணுமென்றும் தங்களது திருப்பாதார

விந்தங்களைத் தொட்டுக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கின்றேன். இரண்டாம் வரம் இது!...

இப்படிக்கு,
உங்கள் அடிமை
மணிவாசகம்."

பின் குறிப்பு: என்னுடைய நெஞ்சத்தை உங்களுக்குத் திறந்து காட்ட வேண்டுமென்று நினைத்து இந்தத் தபால் எழுதினேன். எப்படியும் நீங்கள் என்னை மன்னித்து, மன்னித்ததாக ஒரு வரி பதிலும் எழுதினால் எனக்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்கும். என்னுடைய வாழ்க்கையில் விளக்கு ஏற்றிவைத்த பெருமை தங்களையே சேரும். இது ஆண்டவன் சத்தியமாக சொல்லும் உண்மை.

"ம. வா."

மின் இயக்க விசிறியின் சுழற்சியில் கடிதத்தின் தாள்கள் அலைக்கழிந்தன. அவற்றிற்கு அழுத்தம் வைத்துவிட்டு, தம்முடைய மன அழுத்தத்தைக் கீழே இறக்கி வைக்க மூடிவிட்டு, எதிரில் இருந்த புதிய கடிதத் தாள்களை எடுத்துவைத்துக்கொண்டு பேனாவின் மூடியைக் கழற்றிய தருணத்தில் செட்டியாரின் மனச் சிமிழில் அடைத்து வைக்கப் பட்டிருந்த ஆத்திரம் மூடியைப் பிய்த்துக்கொண்டு சீற எத்தனம் செய்தது. மணவினை அழைப்பிதழைப் பிரித்தார். 'மணமகன் சிரஞ்சீவி மணிவாசகன்'; 'மணமகள் சௌபாக்கியவதி செல்வம்' என்னும் வரிகளைப் படித்தார்; பிறகு மண மகளின் தந்தையின் பெயரையும் வாசித்தார். புதுக் கோட்டையில் செல்லாக் காசாக, புதுக்கோட்டை அம்மன் காசு கூட இல்லாமல் வறுமையில் உழன்ற

அவலம் மண்டிய வேளைகளிலே தனக்கு இயன்ற மட்டில் ஆதரவு தந்த வேலாயுதத்தை நிறைவயிற்றுடன் எண்ணி, மதித்து, நன்றிக் கண்ணீர்க் காணிக்கை வைத்து வருபவர் செட்டியார். 'ஆமா, இப்படிப்பட்ட தங்கமான மனுஷனுக்கு அந்தப் போக்கிரிப் பய மணிவாசகன் ஒரு நாளும் மாப்பிள்ளையாக ஆகவே கூடாது!'

சுருட்டைத் தலைமயிர்; சுறுசுறுப்புப் பார்வை சுத்தமான அழகு!—அன்றைய மணிவாசகனுக்குரிய கோட்டுருவச் சித்திரம் இது. உள்ளத்தைப் படம் எழுத இந்தக் கோட்டுருவ ஓவியத்திற்குத் தெரியாதல்லவா? அந்த உள்ளத்தைச் சித்திரம் தீட்டத்தான் இப்போது கனகவேலு அவர்கள் பேனாவும் கையுமாக வீற்றிருக்கிறாரோ?

"அன்புடைய வேலாயுதம் அண்ணன் அவர்களுக்கு, அ. மு. கனகவேலு எழுதிக் கொண்டது யாதெனில்: இப்பவும் ஓர் அவசரக் காரியமாக இதை எழுத வேண்டியிருக்கிறது. அடுத்த வாரம் உங்களுடைய மகளுக்குக் கல்யாணம் என்று கேள்விப்பட்டேன். எனக்கும் மறக்காமல் பத்திரிகை அனுப்புவீர்கள். அது எனக்குப் புரியும். இப்போது வேறு காரியமாக இதை எழுதுகிறேன். என் கடமை இது என்று என் மனசாட்சி சொல்லுவதால் எழுதுகின்றேன். நீங்கள் உங்கள் மருமகனைத் தேர்ந்தெடுத்திருக்கக் கூடியவனை மணிவாசகத்தை நான் ரொம்பவும் துல்லியமாக அறிந்தவன். அவன் என்னுடைய கடையில் இரண்டு வருஷ காலம் நடந்த நல்ல முறையைக் கண்டு 'கல்லாவை'யே ஒப்படைத்தேன். ஆனால் ஐந்து வருஷத்துக்கு முந்தி மன்னிக்கக்கூடாத ஒரு தப்புக் காரியத்தைச் செய்து விட்டான் அவன். நான் சேஷித்

திராடனம் போயிருந்த போது சமயம் பார்த்து, எனக்கு வரவேண்டிய பாக்கி—நிலுவைப் பணத்தை வசூல் செய்து ஏழாயிரம் ரூபாய் சேர்த்துக் கொண்டு பம்பாய்க்கு ஓடி விட்டான் அவன். அந்தப் போக்கிரிப் பயலை எங்கெங்கோ தேடினேன் ; கிடைத்திருக்கும் பட்சத்தில் அன்றைக்கே சிறையில் தள்ளியிருப்பேன். எப்படியோ இன்று தினம் அவன் விஷயம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இப்படிப் பட்ட துர்ப் புத்தியுள்ள அயோக்கியன் உங்களுடைய மாப்பிள்ளையாக வரு வதைத் தடுக்கவும், உங்களுடைய அருமைப் புதல்வி யின் வாழ்க்கையை ஒரு பெரிய ஆபத்திலிருந்து காப் பாற்றவுமே எண்ணித்தான் இதை எழுதுகிறேன். எல்லாம் ஆறுமுகப் பெருமான் செயல்.

அ. மு. வே. கனவேலு."

கடிதத்தைப் பூர்த்தி செய்து கையொப்பம் செய்த போது, சுவர்க் கடிகாரம் பன்னிரண்டு தடவை ஒலி கிளப்பி ஓய்ந்தது. 'நாய்கள் ஜாக்கிரதை' என்ற அபாய அறிவிப்புப் பலகையைச் சுட்டுவதைப் போல இராஜபாளையம் நாய் குரைத்த சத்தம் அவரது செவி களில் எதிரொலித்தது. கொட்டாவி வந்தது; தூங் கினார். விடிந்ததும் எழுதப்பட்ட தாள்களை உறையி லிட்டு ஒட்டி அதைத் தபாலில் சேர்க்குமாறு கடைக் குட்டிப் பையனிடம் 'கெஞ்சிக் கூத்தாடிய' பிறகு கடைக்குச் சென்றார் செட்டியார். தான் இயற்ற வேண்டிய பணி ஒன்றினைச் செம்மையுற செய்துவிட்ட தாக ஓர் உள்ள நிறைவு பூத்தது. 'மணிவாசகா !... வயிற்றையும் வாயையும் கட்டி பைசா—பைசாவாகச் சம்பாதித்த என் பணத்திலே ஐயாயிரத்தை திருடிக் கிட்டு ஓடினே. உப்பிட்டவனுக்கே மனசார துரோகம் செஞ்ச பாவி நீ. உனக்கு விடிமோட்சம் ஏற்பட

முடியுமா? இனிமே நீ எப்படி வாழப் போறே?...ஒரு பக்கம் கடுதாசி எழுதி இரண்டாம் தடவையும் என்னை ஏமாத்திடலாம்னு யோசிச்சியா?...'

கண்களின் ரத்தச் சிவப்பை விடிபொழுதுச் சூரியனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்ட நிம்மதியுடன் மெத்தையைச் சரணடைந்தார் செட்டியார்.

x x x

உதய சூரியனின் பூபாள ராகம் காற்றில் பரந்து படர்ந்து கொண்டிருந்த இனிய வேளையில், மலர்ந்த பூக்களைக் கொய்து எடுப்பதில் பாப்பாவுக்கு ஓர் ஈடு பாடு உண்டு.

அப்போது, வெளி வாசற் கதவு திறக்கப்பெற்ற அரவம் கேட்டு, அரவத்தினைக் கண்டாற் போன்ற பாவனையில் திகைப்பைக் கண் இணையில் ஏந்திநின்றாள் பாப்பா. அரவம் வந்ததா? அல்ல!

மணிவாசகன் நின்றான், மாப்பிள்ளை போல—அல்ல, அசல் மாப்பிள்ளையாகவே நின்றான்!

தன்னுணர்வு மீண்டதும், "வாங்க அண்ணா!" என்று சொன்னாள் பாப்பா.

"ஐயா, இருக்காங்களா?"

"ஓ! இப்படி உட்காருங்க. அப்பா கிட்டே பேர்ச் சொல்லி விட்டு வாரேன். அப்புறம் நீங்க போகலாம். இருங்க, முதலிலே உங்களுக்குக் காப்பி கொண்டாரேன்!" என்று கூறிக் கொண்டே 'விசுக்' கென்று உள்ளே மறைந்தாள் பாப்பா.

'காப்பியா?'—மணிவாசகனுக்கு மேனி நடுங்கிற்று; மெய் சிலிர்த்தது. குன்றிப்போய் அமர்ந்திருந்தான்.

முள் மேல் இருப்பதைப் போன்ற வேதனை கிளர்ந்தெழுந்தது ; விழிகளின் வழியை உடைத்தது கண்ணீர் வெள்ளம். காப்பி கொணர்ந்து நீட்டிவிட்டு மாடியை நாடிச் சென்றாள் பாப்பா.

அங்கே செட்டியார் நீர்சோர நின்றுகொண்டிருந்தார்.

" அப்பா !"

அவர் திரும்பினார் ; கண்களைத் துடைத்துக் கொண்டார்.

" ஏம்பா இப்படிக் கண்கலங்கி நிற்கிறீங்க ?"

"உன் அண்ணன் சாமிநாதன் இந்நேரம் உசிரோடே இருந்திருந்தா, அவனுக்கும் நாலுபேரைப்போல இந்நேரம் கல்யாணம் காட்சி நடந்திருக்குமேன்னு ஞாபகம் வந்திச்சி அம்மா !"

விம்மினார் அவர். மகளின் திருமண வினையைப் பற்றிய எண்ணம் தோன்றிய வேளையில், விழித்த கட்புலத்தினை மூடிக்கொள்ளச் செய்த நினைவும் இதுவேயன்றோ ? கண்ணீர் மடை திறந்தது.

பாப்பாவின் நோக்கு, சுவரில் தொங்கிய அந்தப் படத்தில் நிலைத்தது. அவளும் விம்மினாள். சிறு பொழுது கழிந்தது. " அப்பா, முந்தி நம்ம கடையிலே அலுவல் பார்த்தாரே மணிவாசகம் அண்ணன்...அவரு வந்திருக்காரு !" என்றாள் பாப்பா.

செட்டியாரைத் தேடிக்கொண்டு வந்த வெஞ்சினம் அவரது தேய்ந்த பற்களுக்கிடையே குத்திக் கொண்டது. கைகளைப் பிசைந்து கொண்டார் ; " வரச் சொல்லு !" என்றார்.

இவ்விவரத்தைத் தெரிவிக்கக் கீழே பாப்பா வந்தாள்; காப்பி அப்படியே இருக்கக் கண்டாள். "நீங்க சாப்பிடுங்க, உங்களுக்கு அடுத்த வெள்ளிக்கிழமை கல்யாணம்னு சேதி கிடைச்சுது. உங்களுக்கு மனைவியாக வரப்போற பொண்ணு செல்லம் என்னோட தோழியாக்கும்!" என்று சொல்லி, மணிவாசகத்தைக் காப்பி குடிக்கச் செய்தாள்; அப்பால் மாடிக்கு அனுப்பி வைத்தாள் பாப்பா.

x x x

"வரவேணும்...வரவேணும்!"

"எஜமான், நான் உங்க அடிமையுங்க. நீங்க அப்படியெல்லாம் சொல்லப்பிடாதுங்க!"

"ஏய்! மணிவாசகம்! நீ போட்ட அந்த நாடகத்தைத்தான் காட்சி காட்சியாக நினைப்பு வச்சுக்கிட்டிருக்கிறேனே நான்? இப்போ மறுபடியும் புது நாடகம் நடத்தறதுக்கு நீ வந்திருக்கிறயா?..."

உடல் நடுங்க, கண்ணீர் தாரை தாரையாக விழ நின்றுகொண்டிருந்த மணிவாசகன் ஓடிப் போய்ச் செட்டியாரின் கால்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான்: "நீங்க என்னை மன்னிச்சிடுங்க முதலாளி!"

கால்களை உதறிக் கொண்டு அப்புறம் நகர்ந்த செட்டியார் கொதித்தெழுந்த உள்ளத்தை அடக்க இயலாமல், மணிவாசகத்தின் முடியைப் பற்றியவாறு, அவனுடைய கன்னங்களில் 'முன் அறை பின் அறை' யாக அறைந்தார். அவன் அப்படியே பொம்மையைப் போல ஆடாமல் அசையாமல் நின்று கொண்டே யிருந்தான்.

" ஹும், போடா வெளியே! உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செஞ்ச துரோகியே, ஓடுடா!" என்று கூச்சல் போட்டார் அவர்.

" எஜமான், செத்தாலும் உங்க காலடியிலேயே தான் சாவேன். ஆனால், உங்க மன்னிப்பை வாங்கிக் கிடாமல் போகவே மாட்டேன். நான் சொல்லப் போறதை ஒரு விநாடி காது கொடுத்துக் கேளுங்க. நான் உங்க பணம் ருபாய் ஐயாயிரத்தைத் திருடினேன்; வாஸ்தவந்தானுங்க. உயிருக்கு ஊசலாடிக்கிட் டிருந்த என் அப்பா படுத்துக் கிடந்த வீட்டை கடனுக்காக ஏலத்துக்குக் கொண்டாந்தான் என் சித்தப்பன் சாகப் போற சமயத்திலே, படுக்கிறதுக்குக் கூட இடம் இல்லாம இருக்கப்பிடாதேன்னு நினைச்சு, வசூல் பண்ணின பணத்தை எடுத்துக்கிட்டு ஊருக்கு ஓடி, கடனைக் கட்டி வீட்டை நிலைக்கச் செஞ்சேனுங்க. எங்க அப்பாவும் நிம்மதியாக் கண்ணை மூடினாரு. சடங்கு முடிஞ்சதும், டில்லிப் பக்கம் ஓடினேன். என் வீட்டை வித்த பணம் கைகொடுத்திச்சி; அம்மாவைச் சொந்தக் காரங்க ஊரிலே விட்டுப்புட்டு ஓடினேனுங்க. நான் பம்பாய்க்குப் போனதாகக் கிளப்பிவிட்ட புரளியை நீங் களும் நம்பினீங்க. அஞ்சு வருஷம் நாயாக உழைச்சுப் பணம் சேர்த்தேன். என்னைப் பெத்த தாயாருக்குச் சுகமில்லைன்னு அறிஞ்சு ஓடியாந்தேன். சாகிறதுக் குள்ளே என்னை மாலையும் கழுத்துமாப் பார்க்க வேணும்னு ஆசைப்படுறாங்க அம்மா. அதுதான், இவ்வளவு சீக்கிரமாய்க் கல்யாணத்துக்கு ஏற்பாடு செஞ்சு உங்களுக்கும் லெட்டர் போட்டேனுங்க. இண்ணைக்கு இல்லாட்டியும், எண்ணைகோ ஒரு நாள் உங்ககிட்டே மன்னிப்பு வாங்க முடியும்னு நான் நினைச்சு நினைச்சு மனசை உடைஞ்சு போகாமக் காப்

பாத்தி வந்தேனுங்க. எஜமான், என் வரைக்கும் நீங்களேதான் தெய்வம். என் தப்பை மன்னிச்சுப் பிடுங்க. எங்க அம்மா மனசு அமைதிப் படவும் என் நெஞ்சு ஆறுதல் படவும் நீங்க என்னை மன்னியுங்க, முதலாளி. நீங்க பணம் தந்துதான் நான் வீட்டை நிலைக்க வச்சேன்னு அந்த நாளையிலே அம்மாகிட்டே சொன்னேன், இப்போ நீங்க வரலைன்னு, எங்க அம்மா சந்தேகப்பட்டு, விஷயம் அறிஞ்சு, நெஞ்சு வெடிச்சுச் செத்துப் போயிடுவாங்க!...அப்புறம், பெண் வீட்டுக்கும் சேதி அம்பலமாயிடுங்க!...எஜமான், என்னைப் பெரிய மனசு பண்ணி மன்னிச்சு, என் கல்யாணத்துக்கு வந்து எனக்கு ஆசி தாங்க!...இந்தாங்க, உங்க பணம்!...''

மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கப் பேசி நிறுத்தினன் மணிவாசகம். கண்ணீரை அவனால் நிறுத்தக்கூட வில்லை.

நூறு ரூபாய்க் கட்டுகளாகக் காட்சியளித்த பணத்தை எற்றிவிட்டார் செட்டியார். "டேய் மணி வாசகா!...நீ உன்னோட அம்மாகிட்டே பொய் சொன்ன மாதிரி அன்னிக்கே நீ என்கிட்டே கேட்டிருந்தால் நான் சமாளிச்சுக் கொடுத்திருப்பேண்டா!...ஆனா, ஒண்ணை மாத்திரம் நினைப்பிலே வச்சுக்க. என்னை ஏமாத்திட்டு ஓடின உன்னோட கல்யாணத்துக்கு நான் வந்து வாழ்த்த வேணுமாக்கும்!...பாவம்!...'' கேலி தொனிக்க நையாண்டிச் சிரிப்பை உதிர்த்தார் அவர். அச்சிரிப்பில் அன்று மணமகள் வீட்டுக்கு எழுதப்பட்ட 'கடிதத்தின் உட்பொருள் நிழல் காட்டியது. 'பாவம், இந்த பயலுக்குக் கல்யாணம் நடக்கப் போகுதின்னு ஞாபகம் போல'!

செய்வகை புலனுகாமல் நின்ற மணிவாசகம் பின்

ஞல் திரும்பி, கீழ்ப் பகுதிச் சுவர்ப் பக்கம் நடந்தான். செட்டியாரின் இறந்த மகனின் புகைப் படத்தைக் கண்டு கண்ணீர் விட்ட மணிவாசகம் கன்னத்திலும் தலையிலும் அடித்துக்கொண்டே நிலகுப்புற விழுந்து, "சாமிநாத அண்ணு, நீங்க இருந்திருந்தா, இவ்வளவு நேரம் முதலாளியோட மன்னிப்பு எனக்குக் கிடைச்சிருக்குமே!... ஐயோ, தெய்வமே!...நீ எங்க அண்ணனைக் கொண்டுக்கிட்டுப் போயிட்டியே ?...ஐயையோ! நான் மகாபாவி!..." என்று கதறிக் கதறி அழுதான். அடுத்த கணம், "தம்பி!" என்று குரல் கேட்டது.

"யாரு, சாமிநாத அண்ணனு ?"

மணிவாசகன் திரும்பினுன்.

கனகவேலுச் செட்டியார் நீர் மிதக்க நின்ருர். "உன்னுேட கறை படிஞ்ச மனசிலே உண்மையான பாசமும் ஒளிஞ்சுக்கிட்டிருக்குதா ?...எனக்கே அதிசயமாப்போச்சி; என் மகன்மேலே நீ கொண்டிருக்கிற அந்தப் பாசம்தான் என்னுேட கோபத்தையும் ஆற்றியிருச்சு...!"

"எஜமான்!...இப்பதான் என் உயிர் திரும்பிச்சு; எங்க அம்மாவுக்கும் நிம்மதி கிடைச்சிடும். எனக்கு எங்க அப்பா ஸ்தானத்திலே நின்னு நீங்க ஆசி வழங்கிடுவீங்க!..." என்று உணர்ச்சிப் பெருக்குடன் பேசிக் கொண்டிருந்தான் மணிவாசகம்.

இடையிட்டார் செட்டியார்: "தம்பி, இப்போ நீ என்னை மன்னிக்கமாட்டியா ?" என்ருர்; வேண்டுகோளில் கண்ணீர் இருந்தது.

"நீங்க என் தெய்வமாச்சுங்களே, முதலாளி ?... எங்கிட்டே மன்னிப்புக் கேட்கிறீங்களா?...எஜமான்!..."

“ மணிவாசகம், நீ நினைக்கிறமாதிரி நான் தெய்வம் இல்லே !...உன் பேரிலே நான் கொண்டிருந்த கோபத்திலே, நீ என் பணத்தைக் களவாடின தகவலைப் புதுக்கோட்டைக்குப் பெண் வீட்டுக்காரங்களுக்கு எழுதிப் போட்டுப்பிட்டேனே !...இந்நேரம் அது கிடைச்சிருக்குமே !” என்று செருமலானுர் செட்டியார்.

‘ கடவுளே !’ என்று அலறினுன் மணிவாசகம்.

அக்கணம் அங்கே பாப்பா தோன்றினுள். “அப்பா, நீங்க என்னை மன்னியுங்க. நீங்க எழுதின லெட்டரை அன்னிக்கு ராத்திரியே படிச்சேன். ஆனு காலையிலே தபாலிலே சேர்க்கச் சொல்லித் தம்பி கையிலே கொடுத்தீங்க. நான் அதை வாங்கிக் கிழிச்சுப் போட்டுப்பிட்டேன். ஏன் தெரியுங்களா, அப்படி ?...கல்யாணப் பெண் செல்லம் என்னேட சிநேகிதியாக்கும் !...அவளுக்கு இந்த மணிவாசக அண்ணன் பேரிலே ரொம்ப இட்டமாம் ; லெட்டர் போட்டிருக்குது. ஒருநாளைக்கு இந்த அண்ணனைக் கண்டு அதோட தப்புத்தவறுகளைச் சொல்லித் திருப்பிடலாம் என்கிற நம்பிக்கையும் எனக்கு உண்டு !” என்று சிரித்தாள் பாப்பா.

“ ஆறுமுகப் பெருமானே, என்னைக் காப்பாற்றினே !” என்று மனம் பூரித்தார் கனகவேலுச் செட்டியார். “ மணிவாசகம், நீ குளித்துச் சாப்பிடு ; உன் கண்ணீரைத் துடைச்சிக்க. நான் வந்து உன் கல்யாணத்தைச் சீரும் சிறப்புமாய் நடத்திவச்சு ஆசீர்வதிக்கிறேன். நீ மனம் திருந்தினது பெரிய அதிசயம். நான் செய்யவிருந்த குற்றத்திலேயிருந்து நான் காப்பாற்றப்பட்டது அதைவிடப் பெரிய அதிசயம் !...எல்லாம் முருகன் செயல் !”

ஆறுபடை வீடு கொண்ட வல்லவேல் முருகன், விளையாட இடம் கிடைக்காமல், அந்தச் சுவரைத் தேர்ந்தெடுத்த பெருமையில் இளநகை சிந்திக் கொண்டிருந்தான் !

இரண்டாம் பீஷ்மன்

"பலே! சபாஷ்!" என்று வானத்துக்கும் பூமிக்குமாக ஒரே குதியாகக் குதித்தான்; சேதுவுக்கு வாயெல்லாம் பல்.

ரேடியோவில் கிரிக்கெட் பந்தய விளக்கம் நடந்தது; முடிந்தது. பட்டணத்துக்காரர்கள் பந்தயத்தில் வெற்றி கண்டதில் அவனுக்கு அத்தனை குதூகலம்.

இந்த டார்வின் சித்தாந்தம் இருக்கிறது பாருங்கள், அதைப்பற்றி சேதுவுக்கு எப்போதுமே ஒரு தப்பபிப்பிராயம். "வாங்கடா, போவோம்..." என்று தன் 'பட்டாள'த்திற்குத் தாக்கீது அனுப்பினான். தேர் திருநாள் பட்ட பாடுதான். பட்டாளம் தாவித்தாவி ஓடியது!

சேது, வீட்டு வாசலில் அடி எடுத்து அடி பிரித்து வைத்தான்; அவன் மனசில் 'டக் டக்'கென்ற நாதம்

புறப்பட்டது; சட்டையைப் பிடித்து அழுத்தினுன். "பரீட்சை கிட்டே நெருங்கிடுச்சே...அம்மாடி...!" என்ற சிவப்பு விளக்கு, இதயத்தின் அடிவாரத்தில் ஒளி காட்டியது. நரம்புகளில் உணர்ச்சியிழந்து விட்டாற் போல ஒரு தளர்ச்சி; அரைக்கணம் தன்னை மறந்து நின்ருன்.

வாசற் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழையப் போனுன் சேது. அங்கே யாரோ இரண்டு பேர் கனத்த குரலில் பேசுவது கேட்டது; அந்த 'யாரோ' என்பது 'இன்னின்னுர்' என்பதை அரை நொடியில் புரிந்து கொண்டான். ஒரு குரல் அவன் தந்தை; இன்னொருவர் தந்தையின் நண்பர்! ஒரு கதவை ஒருக்களித்தவாறு மூடி, அதன் நிழலில் தன்னை அடக்கிக் கொண்டான். வேர்வை முத்துக்கள் நெற்றி மேட்டில் சரம் கோத்திருந்தன; அந்தித் தென்றல், முத்துக்களைப் பகற்கொள்ளை அடித்துக் கொண்டது.

சம்பாஷணை நடந்தது: "நீங்கள் சொல்லுவது சரிதான். ம்......எனக்கு என்னவோ, வீட்டில் ஒருத்தி இல்லாமல் காலம் கடத்துவது இப்போதைக்குச் சங்கடமில்லாமல்—ஏன், சௌகரியமாகக்கூட யிருக்கிறது... ஆமாம், மூர்த்தி?"

"ம்...அப்படியே காலம் பூராவும் போய்விடுமென்று சொல்லுகிறீர்களா? உங்களுக்குத் தலையை, காலை வலித்தால், வீட்டில் ஒரு பெண்பிள்ளை இருந்து செய்கிற மாதிரியாக வருமா? யோசனை பண்ணிப் பாருங்கள், ராமசாமி..."

"வராதுதான்; அதற்காகச் சொல்ல முடியுமா? வருகிறவள், என்னதான் தேனுக அள்ளிக் கொட்டிஞு

லும், என் மகன் சேது 'சரி' என்பாஞ ?...ஒத்துக்கொள்ள த்தான் முடியுமா, மூர்த்தி...?''

" ராமசாமி, அப்படிப் பேசாதீர்கள்; அந்தப் பையனுக்கும்தான் ஒத்தாசை; அவனை அக்கறையுடன் - அன்புடன் போஷித்துக் கவனிக்கவும் ஒரு பெண், தாய் ஸ்தானத்தில் அவனுக்குக் கிடைக்கும்போது, அது அவனுக்கும் நல்லதுதானே?...ஏன், நீங்களே சற்று யோசித்துப் பாருங்களேன், ஸார்...!''

சலவைச் சட்டையில் வேர்வை சொட்டியது; கையில் பாடப் புத்தகமொன்று தேங்கிக் கிடந்தது. அப்பொழுதுதான் வந்தவன்போல, கதவை மெல்லத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான் சேது; "அப்பா...'' என்று சன்னமாகக் குரல் கொடுத்தான்.

மின்னல் துவளும் நேரம் அமைதி.

" தம்பி, பிளாஸ்கிலே காப்பி ஊத்தி வச்சிருக்கேனே...போய்ச் சாப்பிடு...போப்பா, சேது'' என்று சொன்ஞர் ராமசாமி; பின்பக்கம் தலையை நகர்த்திக் கண்களைத் துண்டால் துடைத்துக் கொண்டார்.

ஒரு கணத்திற்குள் சேதுவுக்குக் கண்கள் பொங்கி வந்தன. 'விசுக்'கென்று அறையைவிட்டு நகர்ந்தான்.

* * *

சேது, பிளாஸ்கிலிருந்த காப்பியை எடுத்து டவராவில் ஊற்றி ஆற்றிக் குடித்தான். பிறகு, பாடப் புத்தகமும் கையுமாக முற்றத்துத் தாழ்வாரத்தில் அமர்ந்து கொண்டான். வேலைக்காரக் கிழவி மின் விளக்குப் பொத்தானைப் பொருத்தினுள். அவன் சிந்தை படிப்பில் ஒட்டவில்லை; எழுந்தான்; எழும்

போதே அவனுக்குக் கண்களில் நீர் ஊற்றுச் சுரந்தது. நெஞ்சில் படபடப்பு. சேது விவரம் தெரிந்த பிள்ளை; 'வினயம்' புரிந்த பிள்ளை; ஒன்றை இரண்டாகப் பெருக்கும் பருவம்.

என்னவோ ஒரு பதட்டம்; எழுந்து நடைக்கு வந்தான்; விளக்கின் ஒளியில் தலையை உயர்த்தினான். அங்கு அவனை ஈன்ற புண்ணியவதி ஆனந்தமாகச் சிரித்துக் கொண்டிருந்தாள்—படத்திலே! அவள் நிழலை விட்டு, சேது பிரிந்து இரண்டு வருஷங்கள் ஓடி விட்டனவே...!

"அம்மா...அம்மா..." என்று புலம்பினான் சேது; எம்பி எம்பிக் குதித்தது அவனது பிஞ்சு நெஞ்சு. சட்டையின் நுனியை எடுத்துக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, வெளியே ஓடி வந்தான்; அப்பா பார்க்கக் கூடாதென்ற எண்ணம்.

நான்காவது படிவத்தின் தமிழ்ப்பாடப் புத்தகம் ஏடு விரிந்து கிடந்தது. வாய்விட்டுப் படித்தான்:

" ஆறு தலையில்லை, அடியேனுக் கன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலரில்லை—வேறெனக்குத்
திக்காருமில்லை, சிவனே பழிக்கஞ்சி
சொக்கேசா, நின்றனே துணை!......"

ஞான சம்பந்தர் பாட்டு அவனுக்கு இதம் சொல்லியிருக்க வேண்டும்; வடிவமாக அமைந்த சிவந்த அவனுடைய உதட்டில் இள நகைக் கீற்று ஓடியது.

சேதுவின் தகப்பனார் ராமசாமி வந்தார். தீர்வை வரி சம்பந்தப்பட்ட 'ஆபீஸ் பைல்'கள் அவருக்குத் தலைவேதனை தரும் தருணம் பார்த்து, பையன் பக்கம் வருவார்; வந்து தமிழ்ப்பாடம் சொல்லித் தருவார்; போதிய ஞானம் உண்டு தமிழில்.

"தம்பி..."

சேது திரும்பினுன்.

"இன்னிக்கு ராத்திரி சாப்பாட்டு 'மெனு' என்னவாம்.. ?"

"வத்தல் குழம்பு; அப்பளமும் குடமிளகாயும் வறுத்திருக்குது; மத்தியானத்து அரைக்கீரைக் கூட்டு ..சமையல்காரப் பாட்டி சொன்னுங்க...!"

"சேது, அப்பா இருக்காங்களா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார் கோதண்டம்; ராமசாமியின் நண்பர் பட்டியலில் ஒருவர்.

"வாருங்கள், வாருங்கள். ஏது வெகு நாளைக்கப்புறம் இன்றைக்குத்தான் இந்தப் பக்கம் தலையைக் காட்டுறீங்க...?" என்று பையனைக்கூடக் கவனிக்காமல் அக்கறையாகப் பேச்சை ஆரம்பித்தார் ராமசாமி.

"ஆமாம், காலம் அறிந்துதானே வரவேணும் ராமசாமி?...வெறுமனே எதுக்காக அலையணும்? சவுக்கியம் எப்படியிருக்குது?...பையன் சேது கொஞ்சம் இளைச்சிருக்கான் போலிருக்குதே என் கண்ணுக்கு...?"

"இளைக்காமல் எப்படி இருப்பான், கோதண்டம்? அவன் எதிரில் பேசக்கூடாது. தாயைப் பறிகொடுத்த மனக்கவலை இருக்குமே?..."

அதுதான் சரியான சமயம் என்று சிந்தித்தார் கோதண்டம். இவ்வளவு ஆதரவாகக் கோதண்டத்தோடு என்றைக்குமே ராமசாமி பேசினது கிடையாது. இந்தச் சந்தர்ப்பத்தை எப்படியும் நழுவ விடாமல் பேசி விடவேண்டும் என்ற தீர்மானத்தோடு, "அதுதான் நானும் சொல்கிறேன், ராமசாமி! பையனுக்கும் மனக் கவலை தீரும்; உங்களுக்கும் இந்த நல்ல வயசில்

தொல்லை தராமல் காலம் போகும். தாய்முகம் பாராத சேய் எதுக்கு லாயக்கு? வந்து...அந்தக் கீழத் தெருச் சாம்பசிவம் நடையாய்...''

"ஓய், கோதண்டம்! உமக்கு மட்டுமரியாதை கொடுத்தது என் முட்டாள்த்தனங் காணும்! அன்றைக்கே இந்தப் பேச்சை எடுக்கிறதாக யிருந்தால் வரவேவேண்டாம் என்று சொல்லியிருக்கிறேனு, இல்லையா? எனக்கு இரண்டாந்தாரம் கட்டி வைப்பதில் அப்படி என்ன ஐயா உமக்கு அத்தனை கரிசனை...?'' என்று ஆத்திரமும் கோபமும் கைகுலுக்க, சேதுவின் பாடப் புத்தகத்தை ஆட்டி ஆட்டி அவர் முகத்திலே எறிந்து விடுபவர்போல அப்படிக் குதித்தார் ராமசாமி.

கோதண்டம் பதில் பேச முடியுமா, என்ன? ராமசாமியா, இல்லை, கொக்கா...?

* * *

நிலவு.

"டோய், சேது...!''

"யாரது...''

"ரமணி டோய்...''

"பறக்கும் தட்டு மிஸ்டரா!''

"ஆமாம்!''

"இதோ வந்திட்டேண்டா...!''

தந்தை கட்டிலில் புரண்டு கொண்டிருப்பதைப் பார்த்தவாறே, வாசலுக்கு வந்தான் சேது; சிந்தனை கோடு கிறுக்கிக் கிடந்தது; கண்கள் எங்கோ சூன்ய வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தன, பாவம்.

"சேது, என்னடா அவ்வளவு யோசனை...?" என்று அவனுடைய தோள்மீது கையைப் போட்டு இழுத்துப் போனான் ரமணிப் பயல்.

"ஒண்ணுமில்லே. அப்பாகிட்ட வந்து யார் யாரோ என்னவெல்லாமோ சொல்லிக்கிட்டிருக்காங்க; அதுதான் யோசனை..."

"ஏய், எனக்கு எல்லாம் தெரியும்டா. எங்க அப்பாரு கூட அப்படித்தாண்டா, எங்க ராமுவோட அம்மா செத்துப்போயிட்டப்புறம், அப்பா, பின்னாலே எங்க அம்மாவைத்தாண்டா இரண்டாந்தாரமாக் கல்யாணம் பண்ணிக்கிட்டாராம்...!"

"ம்...ம்..."

x x x

யானையின் திருவடி பட்ட குளம் படும்பாட்டை எப்படிச் சொல்வது?

சேதுவின் பிஞ்சு நெஞ்சம் உருகியது: "...அம்மா செத்துப் போனதிலிருந்து இப்படி யாராவது வந்து அப்பாவை மறு கல்யாணம் பண்ணிக்கச் சொல்லித் தொந்தரை பண்ணுறது சகஜமாப் போச்சுதே...ஆனால் அப்பாவோ அவர்கள் கிட்டே யெல்லாம், 'என்னால் என் முதல் மனைவியை மறக்கவே முடியவில்லையே; எப்படி நான் இன்னொருத்தியைப் பற்றிச் சிந்திக்க முடியும்? எனக்காக ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறபோது சொல்கிறேன்!' என்று முகத்தில் அடித்தது கணக்கில் சொல்லி விடுகிறாரே...! எல்லாம் ஒரே புதிராட்டம் இருக்குதே...!"

*

"அப்பா...!"

"என்ன, தம்பி...?"

"அப்பா, நம்ம வீட்டிலேயும் அம்மா—புது அம்மா வந்தால் எத்தனை சவுரியம்? அந்த கோதண்டம் ஐயா கூடச் சொன்னரேப்பா?..."

"உனக்கு ஏண்டா இந்தப் பேச்செல்லாம்?..."

"இல்லேப்பா! நான்கூட அதுதான் யோசனை பண்ணுறேன். நம்ப வீட்டிலேயும் அம்மா இருந்தால் நான் வர்ரப்போ, போறப்போ எல்லாம் எவ்வளவு அன்பா இருப்பாங்க? எத்தனை சந்தோஷமாப் பேசு வாங்க...?"

"அதுக்கென்னடா, உனக்காகத்தான் நான் இது வரை ஒருத்தியைக் கட்டிக்கலே. நீயே சொல்கிற பொழுது ஒரு அம்மாவைக் கூட்டிக்கொண்டு வந்தால் போச்சு...நீ போய் பாடத்தைப் படி..."

அவரது முகத்தில் ஓர் அசட்டுப் புன்னகை நெளிந்தது.

'அப்பா முகத்தில்கூடச் சந்தோஷம்...! நிஜந்தான்; அது நிஜமேதான். அவருக்கும் உள்ளூற ஆசைதான். எனக்காக வேண்டித்தான் இத்தனை நாளும் அப்பா இரண்டாம் கல்யாணம் கட்டிக்கல்லே...?'—சேது எண்ணமிட்டான்.

வெளியே ஓடி மறைந்த மகனைப் பார்த்தார் ராம சாமி.

'இவனுக்கு என்ன யோசனையெல்லாம் இப்படி விபரீதமாகப் போகிறது? இவனை யோசித்து நாம் மனசைக் கட்டுப்பாடு பண்ணுகிறோம். இரண்டு வரு

ஷம் ஓடியே போய்விட்டது. இப்போது இவன்—இந்தப் பத்து வயசுப் பயல், அம்மா—புது அம்மா வேணு மென்று பேசுகிருனே? ஒரு வேளை விபரம் புரிந்த கிண்டலோ.........? இல்லை, உண்மையே தானு...... ம்...!' என்று மனம் குழம்பினுர்.

சேதுவின் முகத்தில் கல்மிஷமோ, களங்கமோ தெரியவில்லை. பால் சொல்லிச் சொல்லி வழிந்தது. எல்லாக் கல்மிஷமும் களங்கமும் அப்பா ராமசாமியின் கண்களிலேதான். சேதுவின் முகத்தில் மகிழ்ச்சி கொப்புளிக்க, ரமணியோடு கட்டிப் புரண்டு வாழை மரத் தடியில் குதித்துக் கொம்மாளமிட்டுக் கொண்டிருந்தது இனிய காட்சியாக இருந்தது.

கண்களைத் துடைத்துக்கொண்டு, எதிரே இருந்த தன் முதல் மனை விளக்கான லக்ஷ்மியின் படத்தைப் பார்வை யிட்டார் ராமசாமி. "நீ சொன்ன பிரகாரம் நான் என் மன ஆசைக்காகக் கல்யாணம் பண்ண வில்லை; உன் மகன்தான் ஏதேதோ கேட்கிருன்; நச்சரிக்கிருன். வீட்டுக்கு புது அம்மா வேண்டுமாம் அவனுக்கு!.........நான் திருமணம் செய்து கொள்ளட் டுமா, லக்ஷ்மி...?" என்று மனத்திற்குள் வார்த்தைகளை வரம்பு கட்டி, மேற் பரப்பில் கண்ணீரையும் மிதக்க விட்ட வண்ணம் வேண்டினுர்.

பிரகதீஸ்வரர் கோவிலினின்றும் உச்சிக் காலப் பூசைக்குரிய கண்டா மணி ஒலித்தது.

"எதிர்பாராமலேயே நல்ல சகுனம்தான் இது! பேச்சும் வந்தது, மணியும் அடிக்கிறதே! ஒருவேளை ஆண்டவனின் திருவுள்ளமும் அப்படித்தான் இருக்கு மோ?..." என்று நெஞ்சத்தில் இனம் பிரிக்க முடியாத படபடப்பும் சலனமும் பட்டுவிட்டது அவருக்கு.

எழுந்திருந்து கிணற்றடிக்குச் சென்று, கைகால் முகம் கழுவிக்கொண்டு புறப்பட்டார். வாசல்படியைத் தாண்டுவதற்குள் பக்கத்துவீட்டு அம்மணி தேங்காய் பழத்தட்டுடன் திரும்பினுள்.

“ சேது இருக்காறு ?...பழம் தேங்காய் வச்சுட்டுப் போறேன்” என்ருள் அம்மணி.

“ அதுக்கென்ன, வச்சிட்டுப் போங்க. இங்கே தான் பயல்களோடு சுத்தப்போயிருப்பான். சின்னப் பிள்ளைதானே......?”

“ ஆமாம், இல்லாவிட்டால் மனசைக் கட்டுப் படுத்த முடியுமோ ?......ஏதோ விளையாட்டுப் புத்தியில், அம்மாவைப் பறிகொடுத்த துக்கத்தை மறந்திருக்கான் பாவம்...!”

“ ஆமாம் ” என்று தலையை ஆட்டினுர் ராமசாமி. “ வாஸ்தவமாகவே நல்ல சகுனம்தான். அம்பிகையின் பிரசாதங்கூட இந்தச் சமயத்திற்கென்று வருகிறது... ...கோயிலுக்குப்போய் சுவாமி தரிசனம் செய்துவிட்டு வரலாம்...” என்று எண்ணிக்கொண்டு நடையை விட்டுத் திரும்பினுர்.

* * *

அம்பலவாணர் அருட்சிரிப்புடன் நின்ருர். அவருக் கென்ன, காதற்கிழத்தி பக்கமிருக்கும் ஆனந்தம் !

தீபாராதனை நடந்தது.

கண்ணை மூடிக்கொண்டு தியானத்தில் லயித் திருந்த ராமசாமி, “ ஏண்டி, விமலா, ஊரில் எல்லாரும் சுகம்தானே ?......” என்ற குரல் கேட்டுத் திடுக்கிட் டார். எதிரே அந்தப் பெண் விமலா—சாம்பசிவத்தின் பெண் நின்று கொண்டிருந்தாள் !

ராமசாமி கண்ணைக் கொட்டாமல் பார்த்தார். அழகும் யௌவனமும் போட்டி போட்டுக்கொண்டு நின்றாள் அந்த அழகு ரம்பை விமலா. மனம் சலனம் கண்டுவிட்டால், அதற்கேற்பத்தான் தொடர்ந்து சம்பவங்களும் நிகழும் போலும்!... அர்ச்சனை முடியும் வரையில் அந்தப் பெண்ணின் மனமும் நிலை கொள்ளாமல்தான் தவித்திருக்க வேண்டும்!

"ஈஸ்வரா, உன் சித்தம்...!"

* * *

உலகத்திலே இந்த அதிசயங்கள் ஏற்படவில்லையென்றால், உலகம் அஸ்தமித்துவிடுமோ......?

கோதண்டம் மனம் வைத்தால் நடக்காதது ஒன்றுமே இருக்காது; முடியாது.

மனம் கவர்ந்த பெண்ணே மனையாட்டியாக வாய்க்கவும் வாய்த்துவிட்டாள், ராமசாமிக்கு. ஆடம்பரம் இல்லாமல் நடந்தது கல்யாணம். ஆனாலும், அமைதியும், ஆனந்தமும் ததும்பிக் கொண்டிருந்தன.

சேதுப் பயலுக்கு வாயெல்லாம் புன்னகை வெள்ளம், போங்களேன்! அவனுடைய அர்த்தமற்ற ஆனந்தத்திலே பூரித்துப் போனார் ராமசாமி. விமலாவுக்கும் ஆச்சரியமும் அன்பும் பொங்கின. இப்படி ஓர் அபூர்வமான, அன்பான பிள்ளை இருக்குமோ என்று அவளையும் அறியாமல் பாசம் சுரந்தது. 'மகன்'மேல். கட்டியணைத்து, "என் கண்ணு, நீ ராஜாடா!..."என்று ஆனந்தம் உலா பாட, அன்புடன் அவள் கொஞ்சியது சேதுவுக்கே என்னமோ போலத்தான் இருந்தது.

"சரி, அம்மா!" என்று தன்னை யறியாமலேயே சொன்னான் சேது!

ராமசாமிக்கு ஆனந்தம் பிடிபடவில்லை.

*　　　*　　　*

டிசம்பர் விடுமுறை.

வீட்டில் எல்லோரும் ஒன்றாக இருந்தார்கள் பொழுது ரொம்பவும் சுவாரஸ்யமாகக் கழிந்தது.

சேது என்னவோ வீட்டிலேயே தங்கமாட்டான், ரமணியோடு ஊர் சுற்றிக்கொண்டிருந்தான்.

இரண்டே இரண்டு நாட்கள் தாம் மகன் ஊர் சுற்றுவதைக் கவனிக்க முடிந்தது, ராமசாமியால். "இந்தப்பயல் எங்கே தொலைந்து போனான் விமலு?..." என்று கேட்டுக்கொண்டே மாடிப்பக்கம் போனார். அந்தப் பயல் சேது ஊர் சுற்றவோ, விளையாடவோ போய்விடுவதன் சுகத்தை இப்போது அனுபவிக்கத் தலைப்பட்டார் ராமசாமி.

கிறிஸ்துமஸ் கழித்து பள்ளிக்கூடம் திறந்து பத்துப் பன்னிரண்டு நாட்கள் 'கடலே கதி' என்று ஓடிவிட்டன.

பொங்கல் வந்தது.

வீட்டிலே புதுத் தீபாவளி கொண்டாடிய காட்சிகளை நெஞ்சில் நிறுத்திப் பார்த்தான் சேது. மறுபடியும் பொங்கலுக்குத் தாவிற்று அவன் மனம். தமிழ்த் திருநாளுக்குரிய ஏற்பாடுகள் நடந்தன.

விமலா, ராமசாமியின் தோளைத் தொட்டுக் கேலியாக என்னவோ சொல்லிக்கொண்டிருந்தாள். காதல்

சிரித்தது ! ராமசாமி நாற்காலியில் இருந்தவாறே அவளுடைய செந்தாமரை முகத்தை லேசாகப் பதம் பார்த்துத் தட்டியபடி, " என்னவாம்...?" என்பதாகக் கேட்டார் ; ஏகக் குஷி இருக்காதா, பின்னே ?...

வாசல் பக்கம் நிழலாடியது.

" யார், சேதுவா ?" என்று கரகரத்த குரலில் கேட்டார் சேதுவின் தந்தை.

"...நான் இந்த வாட்டி ஹாஸ்டலிலே சேர்ந்துடறேன்...!"

'சுருக்'கென்றது ராமசாமிக்கு.

" ஏண்டா ?... இங்கேதான்..."—மேலே அவரால் பேச முடியவில்லை.

" இல்லேப்பா, ரமணியோட அண்ணு ராமுகூட ஹாஸ்டலிலேதானே இருக்கான் !...அவனோடு சேர்ந்து படிக்கலாமே என்றுதான்...!"

இப்பொழுது உள்ளே வந்து நின்ற சேதுவின் முகத்தைப் பார்த்தார் அவர் ! விமலாவின் அழகும் சோபிதமும் அவருடைய வாயைக் கட்டிவிட்டன.

' அதுக்கென்ன ? ஹாஸ்டலிலேயே சேர்ந்திடு... பீஸ் கட்டிப்பிடு !" என்று சொல்லிவிட்டு, முகத்தைத் திருப்பிக்கொண்டார் ராமசாமி.

" ஏதுக்குடா சேது நீ ஹாஸ்டலுக்குப் போகணும் ? பெரிய பரீட்சையுந்தான் வரப்போகுது ?......அரமனையாட்டம் வீடு வாசல் இருக்க, நீ ஏண்டா தனியா..." என்று இழுத்தாள் அந்த ' இரண்டாவது அம்மா.'

" இல்லே, சின்னம்மா !......வந்து..."

அது, பத்து வயதுப் பையன் பேசும் பேச்சாகத் தோன்றவில்லை !

ஹாஸ்டலிலிருந்து வந்த கடிதம் மேஜைமீது கிடந்தது.

"....பரதவ மன்னரே! நீர் யோசிக்கவே வேண்டாம். உம் மகள் பரிமளகந்தியை நீர் தைரியமாக என் தந்தைக்குத் திருமணம் செய்து கொடும். ஒருநாளும் என் தந்தைக்குக் குறுக்கே நான் நிற்கவேமாட்டேன். என்னுடைய தந்தைக்காக இந்தத் தியாகம் செய்ய மாட்டேனு...?"

சேதுவின் பள்ளிக்கூடத்துப் பாடப் புத்தகத்தில் வந்திருந்த இந்தப் பகுதியை மட்டும் புத்தகத்திலிருந்து கிழித்து, வெள்ளைக் காகிதத்தில் ஒட்டி, அதன் கீழே "சேது" என்று கச்சிதமாகக் கையெழுத்திட்டு அப்பாவுக்கு அனுப்பியிருந்தான் மகன்.

சேதுவுக்கு தான் பாடம் சொல்லிக் கொடுத்த காட்சி விளக்கம் நினைவு வந்தது ராமசாமிக்கு. எண்ணலானுர்: "...சந்தனு மகாராஜா, பரதவர் தலைவன் மகள் பரிமளகந்தியின் அழகில் மனத்தைப் பறிகொடுத்து விடுகிருர். ஆனுல் தன் மகளுக்குப் பிறக்கும் சந்ததியினரே அரிசு புரிய வேண்டுமென்று செம்படவத் தலைவன் நிபந்தனை போடுகின்ருன். சந்தனு மன்னனின் புதல்வன் இளவரசன் தேவவிரதன்—பீஷ்மன் இதற்குக் குறுக்கே நிற்பானே என்பதாக அச்சம் மன்னனுக்கும் பரதவர் கோனுக்கும் ஏற்படுகிறது. செய்தி யறிந்த இளவரசன், பரதவத் தலைவனிடம் சென்று, 'ஐயா, பரிமளகந்தியின் சந்ததியினரே அரசாளட்டும்; என் தந்தையின் நிமித்தம் நான் அரசாட்சியையே தியாகம் செய்கிறேன். மூவர் அறிய, தேவர் அறிய, ஊர் உலகம் அறிய நான் என்றென்றும் பிரமச்சாரியாகவே இருப்பேன்...!" என்று சபதம் செய்தவண்ணம் அங்கிருந்து

புறப்பட்டுவிடுகிறான்—பீஷ்மன் !...பீஷ்மன் சபதம் என்றால் உலகப் பிரசித்தமல்லவா ?......"

*　　　*　　　*

பாசத்தின் குரல் பாகாய் உருகிக்கொண்டிருந்தது.

"...சேது !...சேது...!"

வேல் உண்டு துணை

சாண் வயிற்றை நிரப்பி முடிவிட்ட கடமை யுணர்ச்சியுடன் கோரைப்பாயைத் தரையில் உதறி விரித்தார் வேலாயுதத் தேவர். எட்டடிக்குச்சுக்குள்ளே சூழ்ந்திருந்த புழுக்கம் நெஞ்சை அடைக்கவே, தலைவாச லுக்கு வந்து தலையைப் பாயில் பதித்தார். நிலவில் உடல் அடங்கிற்று; ஆனால் நினைவில் உள்ளம் அடங்கவில்லை; பாயில் பரப்பியிருந்த துவாலையைப் பற்றியவாறு குடிசைக்குள் தேவர் அடியெடுத்து வைத் தார். சுவர் விளக்கு அவருக்குத் துணை நின்றது; ஏடு விரித்த புத்தகம் அவரது மனத்துக்குத் துணை சேர்த்தது.

" முருகா !"

நெஞ்சில் ஒருகால் நினைத்தார் அவர்; இருகாலும் தோன்றினன் குன்று தோறும் குழகன். ' கந்தர்

அலங்காரம்' இளையானைப் பாடியது; தேவரின் மனம் கண்ணீர் சொரிந்தது. "அப்பனே, எனக்கு என்ன வழி காட்டப்போகிறாய்? சித்திரா பருவத்துக்கு இன்னும் இருப்பது மூன்றே நாள்தானே?" என்று வாய்விட்டுப் புலம்பினார்; விழிநீர் வழித்திட மனமின்றி, சுவரில் இருந்த வள்ளி தெய்வயானை மணாளனை ஏறிட்டு நோக்கினார் வேலாயுதம். 'இரு மகளிர் மருவும் இறைவன்' சிரித்துக்கொண்டே இருந்தான். தேவர் இருதயம் திறந்து கண்ணீரையும் கவலையையும் வெளியேற்றினார். வேர்வை ஆறாகப் பெருகி வழிந்தது; ஆற்றாமைப் பெருமூச்சு உருக் காட்டாமல் மெல்ல நழுவியது.

சற்றுத் தொலைவிலிருந்து காற்றில் மிதந்து வந்த ஆலய மணியோசை வேலாயுதத் தேவரின் உள்ளத்திலே எதிரொலி பரப்பிற்று. மெய் நடுங்கியது; கிறுக்குப் பிடித்த பாவனையில் அவர் எழுந்தார்; குமையும் மனம் கொந்தளித்தது; நடந்தார்; கணடித் தேக்குப் பெட்டி ஒன்று இருந்தது. அதை அவர் திறந்தார். வெறும் கிழிசல் துணிமணிகள்தாம் காணக் கிடைத்தன. பிரித்து எறிந்த சடுதியில், கடிதம் ஒன்று அவர் கைகளில் சிக்கியது; படித்த கடிதத்தை மீண்டும் படிக்கலானார்:

"தேவரீர் தகப்பனார் அவர்களுக்கு.

உபய க்ஷேமம், இப்போது எனக்கு உடம்பு சுகம் இல்லாததால், இந்த மாதச் சம்பளத்தை முன்னால் வாங்கி மருந்துக்குச் செலவழித்து விட்டேன். ஆனபடியால், அடுத்த மாதம் கட்டாயம் உங்களுக்கு இருபது ரூபாயாவது மணியார்டர் பண்ணுகிறேன். முருகன் துணை.

முருகையன்."

ஆனந்த நடராஜர் கோயிலில் இரவுப் பூஜை நடந்து முடிந்தது என்பதை அவர் உணரலானுர். மூன்று நாட்களுக்குப் பின்னே ஒளிந்துகொண்டிருக்கும் அந்தப் பயம் மண்டின வேளையை—அந்த வேளை உள்ளடக்கிக் கொண்டிருந்த குடும்ப கௌரவத்தை—அந்தக் கௌர வத்தின் பிற்புலமாக இருந்து நிலவிய தம் கடமையை எண்ணிப்பார்த்து கண்ணீர் சொரிந்தார் தேவர்.

'என் கௌரவத்தை நிலை நாட்டுவதற்குக் குறைந் தது முந்நூறு நானூறு ரூபாயாவது கைவசம் வேணு மே!...இவ்வளவு மோசமான நிலைமையிலே இருக்கிற எனக்கு எப்படி அவ்வள்வு பெரிய தொகை கிடைக்கும்? தெய்வமே!'

x x x

மாங்குடியில் அம்பலக் கூத்தன் ஆலயம் புகழ் கொண்டது. சித்திரா பௌர்ணமியன்று கோயில் திருநாள் ஆரம்பமாகும். காப்புக் கட்டு விழாவிலிருந்து வெள்ளி ரத ஊர்வலம் வரைக்கும் ஊர் திமிலோகப் படும். அண்டை அயலில் இருக்கக் கூடிய உறவு முறையினர் அங்கேதான் பத்து நாட்களுக்கும் விருந் தாளிகளாக வந்திருப்பார்கள். இத்தகைய சீரும் சிறப்பும் உள்ளடங்கப் பெற்ற அந்தக் கோயிலில் மற்றுமோர் அதிசயமும் ஆண்டுதோறும் நிகழ்வது உண்டு. அந்த ஆலயத்தின் மூலக் கடவுள் ஆனந்த நடராஜர். சித்திரா பௌர்ணமியன்று விழாவில் அவருக்கென்று நிர்மாணிக்கப் பெற்றிருக்கும் வழக்க மான வெள்ளியம்பலக் கூத்தரங்குக்குக் கீழே தனியாக ஓர் உற்சவக் கடவுளின் உருவம் உருவாக்கப்படும். அதற்கு நாளுக்கு ஒரு வேடம் புனைந்து, விழா நடத்தப் படும். ஊரின் தலைக்கட்டுக்காரர்களுக்குள்ளாக வழி

வழித் தொடர்பு பூண்டு நிலவி வரும் வழக்கத்தை அநுசரித்து மண்டபப்படி செய்வார்கள் அடிமைக்காரர் கள். பிட்டுக்கு மண் சுமந்த பெம்மான், குழலூதும் வண்ணக் கண்ணன், மன்றிலாடும் மாமணி என்று அவதாரங்கள் கிளை பிரித்துக் கொடுக்கப்படும். இப்படிப்பட்ட தோரணையில் வாய்த்த கௌரவத்துக்கு உரிமை வழங்கப்பட் டிருந்தவர்களிலே வேலாயுதத் தேவரும் ஒருவர். அவருடைய விழா இரண்டாம் நாள். ' அருள் சேர் பழனிச் சிவகிரி'யில் வேலேந்திய ஞானத் திருக்கோலத்துடன் விளங்கும் தண்டபாணிக் கட வுளின் அவதாரம் அன்று நடைபெறும். இப்படிப் பட்ட நிலையில்தான் அன்று ஊர்க் கூட்டம் நடை பெற்றது. அன்றைத் தினம் கோயில் பூசாரி கூறிய செய்தி வேலாயுதத் தேவரின் புலன்கள் அனைத்தையும் அடங்கி ஒடுங்கப் பண்ணிவிட்டது. ' வேலாயுதத் தேவ ரின் மண்டபப்படியன்றைக்கு அலங்கரிக்கப்படும் தண்டபாணித் தெய்வத்தின் வீரவேல்—வெள்ளியா லான அந்த வெற்றி வேல்—களவு போய்விட்டது' என்பதே அந்தச் செய்தி.

ஊர்க் கூட்டம் நடந்து முடிந்தது. அப்போது தீர்ப்புப் போலத் தெரிவிக்கப்பட்ட முடிவு : வேலாயுதத் தேவர் தம்முடைய திருநாளுக்குள், திருட்டுப் போன வேலுக்குப் பதிலாகப் புதிய வேலொன்று செய்து வைத் தால் தான் அவருக்கு மண்டபப்படி செய்யும் உரிமைச் சீட்டு வழங்கப்படும் ; இல்லையேல், இரண்டாம் நாள் திருவிழாக் கொண்டாடும் பாத்தியம் இனிமேல் வெள்ளைச்சாமித் தேவருக்கு வழங்கப்படும்.

ஒரு காலத்தில், எட்டுக் கண்ணும் விட்டெறியும் வண்ணம் சீரும் சிறப்புமாக வாழ்ந்தவர்தாம் வேலா யுதம். அக்கரைச் சீமைக்கு நான்கு கணக்குப் போய்த்

திரும்பினார்; வாழ்வும் வளப்பமும் வந்தன. கடல் கடந்த சீமையில் ஏற்பட்ட கலவரம் போன்ற குழப்பங் களினால் தேவரின் பிழைப்பு நொடித்தது; தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று எண்ணிப் பிறந்த மண்ணுக்கு ஓடிவந்தார்; வெள்ளாமை விளைச் சலில் இருந்த பணம் முடங்கியது. தேவரின் மனைவி தன் நினைவுச் சின்னமாக ஓர் ஆண்மகவைக் கொடுத்து விட்டுக் கண்களை இறுக மூடிவிட்டாள்.

வேலாயுதத் தேவரின் கைக்கு மெய்யான உறவினர் வெள்ளைச்சாமித் தேவர். ஆகவே அவரிடம் ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கி அறந்தாங்கியில் பெரிய ஹோட் டல் வைத்தார். புரோநோட்டுக் கெடுவுக்குள் கடனை அவரால் அடைக்க முடியவில்லை. ஆகவே, அன்பு ஆத்திரமாக மாறிற்று. தாவாபோட்டு வேலாயுதத் தேவரின் வீட்டை வெள்ளைச்சாமித் தேவர் ஏலத்தில் எடுக்கப்போகும் இரகசியம் தெரியவந்தது; மனம் நொந்தார் வேலாயுதம். உடனே தம் வீட்டைத் தாமே விலைபேசி முடித்துக் கடனை அடைத்தார். மானம் காப்பாற்றப்பட்டதை எண்ணி அமைதி கண்டார். ஹோட்டலை மூடினார், பாட்டன் சொத்தாக எஞ்சிக் கிடந்த ஐயனார் திடலில் உழைப்பை நல்கினார்; வயிற்றுப் பாட்டுக்கு வகை சொல்லும் வகையில் வேர்க்கடலை அவருக்குப் படி யளந்தது. இந்த வருமா னத்தில்தான் அவர் இரண்டாம் நாள் மண்டபப் படியையும் செய்து வரலானார்; பட்டணத்தில் இருக் கும் மைந்தன் அனுப்பும் பணம், ஆபத்துச் சம்பத் துக்குக் கை கொடுத்தது.

காலச்சக்கரம் சுழன்றோடிய கதையின் சாரம் இவ்வளவுதான்.

சித்திரா பௌர்ணமியை எண்ணிக் கணக்கிட்டுத் தெரிந்த இடத்தில் ஐம்பது ரூபாய் கடனுக்கு வகை செய்து வைத்தார் வேலாயுதம். மண்டபப் படியன்றைக்கு அர்ச்சனை, சுண்டல் விநியோகம் போன்றவற்றுக்குப் பணம் வேண்டுமல்லவா ?

'ஐம்பது ரூபாய் நாளைக்குக் கையிலே கிடைக்கும் ; அதை வைத்துக்கொண்டு மண்டபப் படியைக் கவனிக்கலாமென்று தைரியமாயிருந்தேன். அதற்குள்ளே பெரிய இடி விழுந்து விட்டதே ! பெருமானுக்கு வேல் செய்து வைக்கிறதற்கு இப்போது எனக்கே 'வக்கு' இல்லையே ! தெய்வமே, நான் மனசறிந்து யாருக்கும் எந்தத் தீவினையும் செய்தது கிடையாதே ! பின்னே, ஏன் என்னை இப்படிச் சோதிக்கிறாய் அப்பனே ?...'

* * *

காப்புக்கட்டு அறிமுகம் செய்துவைத்த திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வந்தது.

தெய்வத்தின் திருச் சந்நிதானத்தில் நின்று வணங்கினார் வேலாயுதத் தேவர். தம்முடைய திருநாள் விசேடத்துக்கென்று தயாரித்திருந்த பணம் அவரது மடியில் அடங்கியிருந்தது. தொழுது திரும்பும் தருணம், கோயிற் பூசாரி வந்து, களவு போன வெள்ளி வேலுக்குப் பதிலாக வேறு வேல் செய்தாகிவிட்டதா என்று விசாரித்தார், "கட்டாயம் அதற்கு ஏற்பாடு செய்துவிடுகிறேன், பூசாரி ஐயா !" என்று தாழ்குரலில் விவரித்தார் தேவர். விடைபெற்றுத் திரும்பினார். கோயிலின் பிற்பகுதிச் சுவர் கன்னம் வைக்கப்பட்ட கோலம் தெரிந்தது. தாம் புதிய வேல் செய்து வைக்காவிடில், வெள்ளைச்சாமிக்கு இரண்டாம் நாள் திருநாள்

கொண்டாடும் பந்தம் இணைக்கப்படுமென்ற முடிவைக் கேட்டதும், 'ஒரு வேளை என்னை உயிரோடே மண்ணிலே மூடி விட வேண்டித்தான் வெள்ளைச்சாமி திரும்பவும் ஏதாவது சூது பண்ணி, நான் அந்தக் காலத்திலே செய்து வைத்த வெள்ளி வேலைக் களவுபோகச் செய்திருப்பானோ?' என்று வேலாயுதத் தேவர் எண்ணியது உண்மையே. ஆனால் அதற்கு விடையளித்தது, துண்டுபட்ட சுவர்ப்பகுதி.

முனையில் நின்ற புளியமரத்தின் அடியில் ஒரு கணம் தேவர் நின்றார். அப்பொழுது அவருக்கு ஒரு யோசனை உதித்தது. சிங்கார ஆசாரியை நெருங்கினார்; விஷயத்தை விளக்கினார் அவர். "எங்கிட்ட ஏதுங்க தேவரய்யா அம்பிட்டுக்கு வெள்ளி?" என்று கையை விரித்தார் ஆசாரி. வேலுக்கும் விழாவுக்கும் ஏற்பாடு செய்வதற்குப் பணத்துக்காக முயன்ற எத்தனங்கள் ஒன்றன் பின்னொன்றாக நிழலாடிச்சென்றன. குடிசையை நெருங்கும்போது, " அண்ணாச்சி, வெள்ளைச்சாமித் தேவர் சாமிக்குக் கையிலே வைக்கிறதுக்காக வெள்ளி வேல் ஒண்ணைப் புதுசாச் செஞ்சிட்டாராம்! ரொம்பப் பணமாம் " என்று பக்கத்துத் தெருக்காரன் சுப்பன் செய்தி சொல்லி, தேவரின் கொஞ்ச நஞ்சம் இருந்த நிம்மதியையும் பறித்துச் சென்றான்.

x x x

பூரண நிலவின் ஒளி துளியளவு குறைந்திருந்தது. விடிந்தால், வேலாயுதத் தேவர் கோயிலின் இரண்டாம் நாள் விழாவைக் கொண்டாடியாக வேண்டும்; அதற்குள் வேலுக்கும் வழி செய்யவேண்டும்.

இரவு பதினைந்து நாழிகைப் பொழுது இருக்கும். வேலாயுதத் தேவர் பித்துக் கொண்டவர் போன்று

வீற்றிருந்தார்; அவர் கைகள் குவிந்திருந்தன; கண்ணீர்த் துளிகள் முத்துச்சரம் தொடுத்தவாறு இருந்தன.

"அப்பனே, எனக்கு வரவிருக்கும் பழிக்கு உன்னுடைய பன்னிரு தோள்கள்தாம் காவலளிக்க வேணும்; என் நல்வழிக்கு—உன்னுடைய வெள்ளி வேலுக்கு—நீ இன்றிரவுக்குள் வழி செய்யாவிடில், என் உயிரை உன் பாதங்களுக்குக் காணிக்கை வைத்துவிடுவேன். உன் வேலின் மீது உறுதி இது. அப்பனே முருகா! ஐயனே தண்டபாணி!"

தம்மை மறந்து கதறினார் வேலாயுதத் தேவர். மறுவிநாடி, அவர் மயங்கிச் சுருண்டு விழுந்தார். தயாரித்து வைத்திருந்த விஷப் பச்சிலைச்சாறு கொண்ட சட்டி அவரது தலைமாட்டில் பத்திரமாக இருந்தது.

x x x

வேலாயுதத் தேவர் கண் மலர்ந்தார். சுருக்கங்கள் வழி மறித்திருந்த முகத்தில் விழி வெள்ளம் குழி பறித்தது.

"ஐயா!..."

தரையில் கிடந்தவர் எழுந்து உட்கார்ந்தார். மங்கலான நிலவொளி எதிரில் இருந்த கிழவனின் முகத்தைக் காட்டியது. மத்தியான்னம் பசியால் துடித்துப்போய் வந்தான் இந்தக் கிழவன். எஞ்சியிருந்த கஞ்சியை அப்படியே எடுத்து உப்பிட்டுக் கொடுத்தார் தேவர். அப்போது அவரிடம் இருந்தது அவ்வளவே என்றும், தேவர் சோறு வடித்து இரண்டு நாட்கள் ஆகின்றன என்றும் அந்தப் பிச்சைக்காரக் கிழவனுக்கு எப்படித் தெரியும்?

"ஐயா !"

கிழவன் செருமிக்கொண் டிருந்தான்.

"என் கண்ணீரைத் துடைச்சுக்கிடவே எனக்கு வழி கிடைக்கல்லே ; என் கண்ணீரைத் துடைக்கத் தெய்வமும் முன்வரல்லே ; நீ வேறே ஏம்பா அழுகிறே?" என்று வினவினார் தேவர்.

"எசமான், வேல் வேல்னு என்னமோ சத்தம் போட்டுப் பேசினீங்களே, என்னுங்க ஐயா அது ?" என்று கேட்டான் கிழவன்.

தேவர் களவு போன வேலின் கதையை விளக்கினார்.

மறுகணம் தேவரின் கால்களைத் தொட்டுக் கதறினான் பிச்சைக்காரக் கிழவன்.

"உங்க கஞ்சியை மதியத்திலே நான் குடிச்சேனுங்க ; கொஞ்ச முந்தி உங்க கதறலைக் கேட்டதும், உங்க சங்கடத்தைப் புரிஞ்சுக்கிட்டேனுங்க. உங்க உப்பை ஒருவேளை தின்னாலுங்கூட, ஆயுசுவரைக்கும் நான் உங்களை மறக்கப்படாதுங்க. இந்தப் புதுப் பாடம் என் கண்ணைத் திறந்திடுச்சு ; நீங்க சாமிக்குச் செஞ்சு வச்ச வெள்ளி வேலைத் திருடின பாதகன் நானேதானுங்க. காலம்பற புக்கோட்டைப்பக்கம் போய் வேலை வித்துப் பணம் பண்ணலாம்னு வந்தேன். வந்த இடத்திலே என் திருட்டுப் புத்தியை மறக்கடிக்கிறதுக்கு உங்க கதறலும் அன்பும் ஒரு காரணமாயிருந்துச்சு. எசமான், இனிமே நான் திருடவே மாட்டேன்" என்று புலம்பினான் கிழவன்.

வேலாயுதத் தேவரின் கையில் வெள்ளி வேல்

விளங்கியது. வேலும் கையுமாகக் கோயிலுக்கு ஓட லானார் அவர்.

x x x

"வேலாயுத அண்ணாச்சி!..." நாடி ஓடின கால்கள் நின்றன.

வெள்ளைச்சாமித் தேவர் கையில் வேலுடன் காட்சி யளித்தார்; ஆனால் அவர் 'வல்லவேல் முருகன்' அல்லவே!

வேலாயுதத் தேவர் பதறித் துடித்தார்; வெள்ளைச் சாமியைத் தோள் பற்றி அணைத்துக் கை தூக்கி விட்டார்.

"அண்ணாச்சி, முதலிலே பெரிய மனசு பண்ணி என்னை மன்னியுங்கள்; என் தலைச்சன் மகன் சாகப் பிழைக்கக் கிடக்கிறான்; அவனைக் காப்பாத்துங்க. ஆண்டவன் சோதனை செய்கிறதுக்குள்ளார, நீங்க என் ராஜாவுக்கு உயிர்ப்பிச்சை தாங்க. நான் பாவி. நீங்க செய்யவேண்டிய மண்டபப் படியை நான் நடத் தறதுக்கு என்னென்னவோ தீவினை செஞ்சேன்; கொஞ்ச முந்தி ஒரு கிழவன் உங்ககிட்ட சாமி வேலைக் கொண்டாந்து கொடுத்ததையும் அவன் சொன்னதை யும் நான் காணவும் கண்டேனுங்க, கேட்கவும் கேட் டேனுங்க. என்னாலே அந்தக் கிழவன் திருடன் ஆனான். எனக்கு வர வேண்டிய அவப் பேரைத் தன் தலைமேலே அவன் சுமந்துக்கிட்டான். அந்தப் பழியை நான்தா னுங்க சுமந்தாகணும். இல்லையானா, என் மனம் என்னை மன்னிக்காது. நீங்க அந்தக் காலத்திலே செஞ்சு வச்ச வேல் களவு போயிட்டா, அதுக்குப் பதிலுக்கு இன்னொரு வேலை உங்களுக்குச் செஞ்சு

வைக்கச் செயல் இருக்காது; அப்புறம், வேல் செய்ய லேன்னு மண்டபப்படி உரிமை எனக்குக் கைகூடி வந்துப்புடும்; என்னோடே பல நாளைக் கனவு பலிச்சுப் பிடும்னுதான் நான் இம்பிட்டுப் பொல்லாதவனாக மாறி னேன்! உங்க மானத்தை என் கௌரவத்துக்கு நடை பாதையா அமைச்சு அதிலே வழி நடக்கத் துணிஞ்ச என்னைக் கொஞ்சப் பொழுதுக்குள்ளே நடைப்பிண மாக்கத்தான் என் மகனை இப்பிடி ஆட்டிப் படைக் கிறான் போலே ஆறுமுகக் கடவுள்? அண்ணாச்சி, ஓடி யாங்க; உங்க பொன்னான மனசிலே சாமியைக் கும் பிட்டு, உங்கத் தங்கக் கையாலே விபூதி எடுத்து எம் மகன் நெற்றியிலே பூசுங்க. உங்க பக்தியும் நல்ல மனமும் என் ராஜாவையும் என்னையும் காப்பாத்தும்!"

சோமன் ஒளியில் இரட்டை வேல்கள் மின்னின. அந்த ஒளியிலே கண்ணீரின் காதை கதை சொன்னது.

x x x

ராஜா சொன்னான்: "அப்பா!...அப்பா!"

எண்ணெய் முந்தியோ, திரி முந்தியோ என்று இருந்த அகல் விளக்கில் உயிர் சுடர் தெறித்தது.

வெள்ளைச்சாமித் தேவரின் காதுகள் ஒலிபரப்புக் கருவியாயின.

"வெள்ளைச்சாமி, எல்லாம் அப்பன் செயல்! நான் போயிட்டு வாரேன்; அப்பன் வேலை அப்பனிடம் சேர்ப்பிக்க வேணும். நீ புதுசாச் செஞ்ச வேலை நீயே குமரப் பெருமானுக்குக் காணிக்கை செலுத்திவிடு. நான் அதைத் தொடக்கூடாது.

ஞானப் பழமான தண்டபாணித் தெய்வம் ஜோதிப் பிழம்பென மிளிர்ந்தது. பழைய வேலில் புதிய பிரகாசம் பளிச்சிட்டது.

வேலாயுதத் தேவர் கண்களைத் துடைத்துக் கொள்ளவில்லை; நெஞ்சின் அலைகள் ஆர்ப்பரித்தன: "அப்பனே! தண்டபாணி!"

பக்கிங்ஹாம் கால்வாய்

கார்த்திகைபாலன் ஏறு மயிலேறி விளையாடிக் கொண்டிருந்தான்!

காளிங்க நர்த்தனம் புரிந்து கொண்டிருந்தான் வண்ணக் கண்ணன்.

விடுதலை தவறிக் கெட்டுக் கிடந்த தாய்த் திருநாட்டை வாழ்விக்க வந்த ஜோதி மகாத்மா!

"ஆகா!...அற்புதம்!" என்று ஆரவாரம் கொட்டினார்கள் மக்கள். அவர்களுடைய பார்வைகள் முழுவதும் அந்தக் கரித் துண்டிலும் வெள்ளைச் சாக்குக் கட்டியிலுமே நிலைபெற்றிருந்தன.

ஞானப்பிரகாசம் நெடுமூச்செறிந்தான்; நித்திலங்கள் நிலத்தில் உதிர்ந்தன. சம்மணம் போட்டு உட்கார்ந்திருந்த அவன் எழுந்தான். கால் சட்டை

யினைச் சரி செய்தான்; கைச் சட்டைத் தலைப்பினால் முகத்தைத் துடைத்துக்கொண்டான். வான் சுடரை யும், விண் முட்டிய பதினான்கு மாடிக் கட்டடத்தையும் அளந்தது அவன் நோக்கு.

மீண்டும் ஞானப்பிரகாசம் தரையில் அமர்ந்தான்.

"தம்பி, சினிமா ஸ்டாருங்க படங்கூட எழுது வியா?" என்று ஒரு குரல் குறுக்கிட்டது.

"ஓ! எழுதுவேனுங்க! யார் படம் எழுதணும்?"

உள்ளக் குறிப்பு உணர்த்தப்பட்டது. சற்றைக் கெல்லாம் நட்சத்திரப் பெண்கள் நால்வர் குறுஞ் சிரிப் பைக் கொட்டிக் கொண்டிருந்தனர்.

"பலே!..."

"சபாஷ்!"

"இதெல்லாம் பகவானுடை திருஷ்டி விநோதம், சார்!"

"இந்த நாலு நட்சத்திரங்களும் வந்து அவங்க அவங்க சித்திரத்தைப் பார்த்தால், மலைச்சுப் போயிட மாட்டாங்களா?"

"பாவம், ஏழைப் பையன்! மூர்த்தி சிறிசானாலும், கீர்த்தி ரொம்ப ரொம்பப் பெரிசு!"

சுற்று முற்றும் பார்வையைப் பரப்பினான் ஞானப் பிரகாசம். விழி வரம்புகளில் நீர்த்திரை விளிம்பு கட் டியது; பிஞ்சுக் கரங்களைச் சேர்த்துக் குவித்துத் தலை வணங்கினான் அவன். சிதறிக்கிடந்த காசுகளை ஒன்று சேர்த்தான். "மூணு ரூபாயும் இருபத்தி ஏழு காசும் கிடைச்சிருக்குது. இன்னிக்கி நான் நரி முகத்திலே தான் முழிச்சிருக்கோணும்!"—எண்ணங்கள் கிளையாக

வெடித்தன. இன்பம் போர்த்தது. கருக்கலில் விழித்து வந்த முகம் நினைவிலும் நெஞ்சிலும் நிறைந்தது : "அம்மா !...அம்மா !"

x x x

அந்தி மாலை வந்தது; வளர்ந்தது. மவுண்ட்ரோடு, சென்ட்ரல் ஸ்டேஷன், சைனா பஜார்போன்ற பகுதிகளை மையமாக்கித் தழுவியது; அத்துடன் நிற்காமல், ஞானப் பிரகாசத்தின் நிழலையும் தொடர்ந்தது.

'பாரிஸ்' முனைக் கட்டடங்களைக் கூர்த்த மதி பதித்துக் கண் செலுத்தினான் சிறுவன். அவை வானோங்கி நின்றன. அவை அவனுடைய பிஞ்சு நெஞ்சத்தின் ஆவலுக்கு அடையாளமோ? அந்த ஆவல் , 'இன்னைக்குக் கொஞ்சம் நிரம்பச் சம்பாதிச்சுக் கினுதான் அம்மாவைப் பார்க்கப் போகணும்! பாவம், அதுக்கு இந்நேரம் தலைவலி விட்டுருக்கத்தான் வேணும்!'

நடந்தான், கால்கள் கெஞ்சின; அமர்ந்தான், பசி கிள்ளியது; எழுந்தான். ஓர் அணுவுக்குப் பொங்கல்— அரிசிக் குறுணைப் பொங்கல். அரையணுவுக்கு 'சைனா டீ!' ஒன்றரையணுவுக்குக் கூட ஏப்பம் பறிக்கிறதே...? கடற்கரை வழியே வீட்டுக்குச் செல்ல விரும்பினான் அவன். கால் வலியுடன் நடந்தே செல்லத் திட்டம் புனைந்தான். 'ஆமா, சிறுகச் சிறுக சில்லறையைச் செலவழிச்சுட்டா, அப்புறம் என்ன செய்யறது? அம்மாவுக்குத் தீபாவளிக்குப் புதுசு எடுத்துக்கொடுக்க வேணும்; எனக்கும் புதுசு எடுத்துக்காட்டி அம்மா வுக்கு மனசு நிறையாது. பலகாரம் செய்யணும்...?' என்று எண்ணங்கள் அலை மோதின.

மின்சார வண்டி ஓட்டம் பழகிக் கொண்டிருந்த தூல், வழிக் கதவு வழி மறைத்தது. ஞானப் பிரகாசத்துக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. 'அம்மா நேரமாச்சு தானு தேடுமே ?'

"தம்பி! ஏ, பையா!"

அழைப்பின் தொனி அவனை இழுத்தது. புத்தம் புதிய காரொன்று ஓரமாக நின்றது. உள்ளே பெரிய மனிதர், அவர் மனையாட்டி, மகன் ஆக மூன்று பேர் காணப்பட்டனர்.

"நீங்கதான் கூப்பீட்டீங்களா ஐயா?"

"ஆமா ; படம் போடுவியே அது நீ தானே?"

"ஆமாங்க !"

வறுமையின் உருவமாய் விளங்கிய அவன், தன்னைத்தானே ஒரு முறை விசையுடன் பார்த்துக் கொண்டான். பிறகு, காரின் பின் பக்கத்தின் ஆசனத்தில் அமர்ந்திருந்த பையனையும் அவன் பார்க்கத் தப்பவில்லை. கைக்குக் காப்பிக்கொட்டைச் சங்கிலி; கடிகாரம்; மோதிரங்கள் ; பட்டுச் சொக்காய்.

பெரிய மனிதர், சின்னப் பையனிடம் வினு விடுத்தார். "தம்பி, உனக்கு எப்படிச் சித்திரம் வரைகிறதுக்கு வந்திச்சு ?"

"கைப் பழக்கமுங்க !"

"உனக்கு அப்பா—அம்மா இருக்காங்களில்லையா ?"

"அம்மா இருக்கு; அப்பா இல்லிங்க !"

செத்துப் போயிட்டாங்களா ?"

"இல்லிங்க !"

"பின்னே ?"

"எங்கேயோ அக்கரைச் சீமைக்குப் போயிருகாங் களாம் எங்க அப்பா; சம்பாரிச்சுக்கிணு வருவாங் களாம்."

கதவு திறக்கப்பட்டது.

"நான் போறேனுங்க. அம்மா தேடும்!"

"கொஞ்சம் பொறு தம்பி. உன் படங்களைக் காலையி லேயே மவுண்ட் ரோட்டிலே கண்டேன். அப்பவே உன்னைக் கண்டு பேசியிருப்பேன். ஆனா, கும்பல் ஜாஸ்தியா யிருந்துச்சு. நல்ல வேளையாக, உன்னையும் இப்ப காண முடிந்தது. தம்பி, இனி நீ தெருவிலேயெல் லாம் படம் போட்டுப் பிழைக்க வேணும். இந்த விலா சத்துக்கு நீ வந்து சேர். சித்திரத் தொழிலே நல்லாக் கத்துக்கிடலாம். மாசாமாசம் ஐம்பது ரூபாய்போட்டுத் தாரேன். தெய்வக் கிருபையாலே உனக்கு ஆகி வந்திருக்கிற இந்தக் கைப் பழக்கத்தை நல்ல முறை யிலே பிரகாசிக்கச் செய்யவேணும் என்றது தான் என்னுடை ஆசை!"

பெரிய மனிதர் கொடுத்த முன் பணம் பத்து ரூபா யுடன் இருந்த சீட்டில் காணப்பட்டது, 'பூலோக சுவர்க் கம் படப் பிடிப்பு நிலையம்' என்ற விலாசம்.

இரணிய வேளை.

ஒரு கணம் வெறி பிடித்தாற் போன்று ஓடியு ஞானப்பிரகாசம் மறுகணம் வெறியேறியவன் மாதிரி நின்றான். நிலத் தழல் அடங்கி விட்டிருந்தது. காற் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தான்; பிறகு

விரல்களை நுழைத்தான். கரித்துண்டும் சாக்குக் கட்டியும் வந்தன. ரூபாய்த் தாள் ஆறு, பத்து ரூபாய்நோட்டு ஒன்று: புதுக் காசுகள் முப்பது! நன்றியறிதலை உணர்த்திற்று நெஞ்சு. ஈரம் கொண்ட பணக்காரரின் முகம் அவனுள் விரிந்தது. 'அம்மா காதிலே எனக்கு இந்தச் சின்ன வயசிலேயே வேலை கிடைச்ச சேதி விழுந்தா, அதுக்கு கைகால் ஓடாது!...'

பெரியவரும் சிறுவனும் தந்தையும் மகனுமாக ஞானப் பிரகாசத்தின் மனக் கண்ணில் உருக்காட்டினர். "அப்பா!...அப்பா!" என்று வாய் ஓயாமல் அழைத்தானே அந்தப் பையன்...?

ஞானப்பிரகாசத்துக்கு ஓர் ஆசை வேர் விட்டது. இதழ்களை விலக்கி, "அப்பா!" என்று வாய்விட்டுக் கூவினான்.

நிகழ்ச்சி ஒன்று:

ஞானப்பிரகாசம் கோலிக் குண்டு விளையாடினான். அவனுக்குச் சேக்காளி அதே குப்பத்துச் சிறுவன்தான் ஆட்டத்தில் தகராறுமுளைத்தது. வம்புக்காரப் பையன், ஞானப்பிரகாசத்தை நோக்கி, "அப்பன் இல்லாத பயலுக்கு ராங்கியைப் பாரு. ராங்கியை!" என்று ஏசினான். ஞானப் பிரகாசம் கலங்கிய கண்களுடன், கலக்கம் அடைந்த இதயத்துடன் அன்னையிடம் வந்தான். "அம்மா, அம்மா! என் அப்பா எங்கே? என் அப்பா யாரு?" என்று கேட்டான்.

"பிரகாசம், உன்னோடை அப்பா அக்கரைச்சீமைக்குப் பொழைக்கப் போயிருக்காங்க. வந்திடுவாங்க. வாரப்ப, உனக்குப் பலகாரம், பணம் எல்லாம் கொண்டாரு வாங்க. அவுங்க வந்ததும், நமக்குக் கஷ்டமில்லே" என்று தேறுதல் சொன்னாள் தாய்.

அவன் சுயநினைவை மீட்டுக் கொண்டான் : 'எங்க அப்பா வந்திடுவாங்க. சம்பாதிச்சுகிட்டு வருவாங்க!... அப்பா வரட்டும்!...நான் நிதம் சினிமாப் பார்ப்பேன். அப்புறம் அம்மாவுக்கு ஆப்பம் சுட்டுப் பிழைக்கிற வேலை மிஞ்சிடும். கடவுளே, எங்க அப்பாவை சல்தியா ஊருக்கு வரச் செய்!'

திரைகடலின் ஒலிக்கிடையே ஞானப்பிரகாசம் கரித்துண்டை எடுத்தான்; தரையில் கிறுக்கினான். ஓர் உருவம் தோன்றியது. "அப்பா!"—எழுத்துக்களை அவன் உச்சரித்தபோது, அகில உலகத்தையுமே ஆட்கொண்ட நிர்மலனின் 'சிருஷ்டி கர்வம்' எதிரொலித்தது!

ஓட்டமாக ஓடினான் பையன். மறுகி ஓடிய போழ்தில், அவன் கால்களில் ஓர் உடல் இடறியது. தாடியும் மீசையும் கொண்டிருந்த ஒருவன் மயங்கிக்கிடந்தான். அவனுடைய உடலைக் கையால் தொட்டுக் கும்பிட்டான் ஞானப்பிரகாசம். "ஐயா!" என்று எழுப்பினான். விழிகள் மடலவிழ்ந்தன. தண்ணீருக்குப் பதிலாக சோடா வாங்கி வந்து கொடுத்தான் அந்தச் சிறுவன்! எழுந்து நடக்கும் வரை அந்த வழிப்போக்கனுக்குத் துணை நின்ற பிறகு, ஓட்டம் பிடித்தான் ஞானப்பிரகாசம்!

* * *

பக்கிங்ஹாம் கால்வாய்ப் பாலம் ஞானப்பிரகாசத்திற்கு நல்ல மூச்சைக் கொடுத்தது; அங்கு சூழ்ந்த துர்நாற்றத்தை மிதித்தவனாக அவன் விரைந்தான். "அம்மா!...அம்மா!" என்று அழைத்துக் கொண்டே குடிசைக்குள் அவன் நுழைந்தான். மங்குத்தட்டில் சோற்றைக் கொட்டி ஆற வைத்தவாறு இருந்த அஞ்சுகம் தலைநிமிர்ந்தாள். "அம்மா, தலைவலி விட்டுப் போச்சில்லே அம்மா?" என்று கேட்டான்.

"ஆமாப்பா !"

"அம்மா, இனி நமக்கு ஒரு கஷ்டமும் இருக்காது. சினிமா கம்பெனியிலே நாளையிலேருந்து நான் வேலை கத்துக்கிடப் போறேன். ஒரு பெரிய ஐயா சொன்னுரு. சம்பளம் வேறே ஐம்பது ரூபாயாக்கும் !..."

"எல்லாம் கடவுள் கடாட்சம்டா, ராஜா !"

அன்னையின் அகமகிழ்வைக் கண்ட பிஞ்சு மனம் விண்ணுக்கும் மண்ணுக்கும் தாவியது. "ஏம்மா, இப்ப என்னேட அப்பாவும் இருந்தா, உன்னைமாதிரி அவரும் எவ்வளவு சந்தோஷப்படுவாரு!..." என்று பேசிய போது, அவனுக்குத் தொண்டையை அடைத்தது.

கண்ணீரை மறைத்த வண்ணம், தட்டைக் கொணர்ந்தாள் அஞ்சுகம்.

ஞானப் பிரகாசம் பக்கத்துத் தெருவுக்குக் கூத்துப் பார்க்கச் சென்முன்; பிடிக்கவில்லை ; பாதியில் திரும்பி விட்டான். அஞ்சுகம் தந்தனுப்பிய நாலணு அவனுக்குத் தின்பண்டச் செலவுக்குப் பயன்பட வேண்டுமென்பது அன்பு இட்ட கட்டளை; ஆனுல் அவனே நாலணுவுக்கும் ஓமப்பொடி, காராப்பூந்திப் பொட்டலங்கள் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடிவந்தான். உள்ளே நுழைய அடியெடுத்து வைத்தவன், ஓர் அரைக் கணம் திகைத்து அப்படியே நின்று விட்டான்.

பேச்சொலி கிளம்பியது.

"...ஆமா, அஞ்சுகம் !...ஆறு மாசக் குழந்தையிலே மகனைப் பிரிஞ்ச நான் அவனைப் பத்து வருசம் கழிச்சுப் பார்க்கப் போறேன். ஞானப் பிரகாசம் நம்ப ரெண்டு பேரையும் காப்பாத்திப்பிடுவான்னு நிச்சயமாத் தோணுது. தெய்வம் அவனுக்கு புத்தியையும் வித்தையையும் கொடுத்தாப்லே, ஆசையும் எழுதிப் போடணும்.

அப்பான்னு அவன் வாயாலே சொல்லிக் கூப்பிட்டுக் கேட்கிறதுக்கு எம் மனசு துடிக்குது, அஞ்சுகம்!"

ஞானப் பிரகாசத்துக்கு பூதலத்தின் நினைவே இல்லை. 'அப்பா!'—தோன்றிய எண்ணம் உள்ளே ஒட்டியது.

கையை விடுவித்துக் கொண்டு எழுந்த அஞ்சுகம், "தம்பி பிரகாசம்! உங்க அப்பாவைத் தேடிக்கினு இருந்தியே, இந்தா வந்திருக்காங்க!" என்று விளக்கினாள்.

"ஞானப்பிரகாசம்!"

அன்பு மழை பொழிய அழைத்தான் அந்த ஆள். எழுந்து விரைந்து வந்து சிறுவனை வாரியணைத்தான்; கன்னத்தில் முத்தம் பதிக்க முனைகையில், "ஐயோ!" என்ற ஓலம் சிலிர்த்தது.

எடுத்த கல்லை வீசினான் ஞானப்பிரகாசம். பணி முடிந்தது போலும்!

புதிய மனிதனின் நெற்றிப் பொட்டில் ரத்தம் பீறிட்டது.

அகல் விளக்குச் சுடர் தெறித்தது.

"இந்த ஆள் என் அப்பன் இல்லே! யாரோ களவாணி!......அக்கரைச் சீமைக்குப் போயிருக்கிற எங்க அப்பா இப்பிடியா இருப்பாரு?...ஊஹூம், இவன் என் அப்பன் இல்லவே இல்லை! திருடன்!" என்று ஞானப்பிரகாசம் அலறினான்.

"திருடன்! களவாணி!"—அஞ்சுகத்தின் இருதயம் வெடித்துவிடும்போல் இருந்தது. 'பணம் திருட்டு போன விஷயமா ஒரு கேஸிலே அகப்பட்டு, இத்தனை வருசமும் சிறையிலே வாடி வதங்கித் திரும்பியிருக்கிற

எம் புருசனைப் பத்தின ரகசியம் என் மகனுக்குத் தெரியப்படாதின்னு மூடி மறைக்கப் பார்த்தேனே ?...கடைசியிலே, அதுகூடப் பலிக்கலே !" மனத்தின் நீதிபதி மனச்சான்று ஆயிற்றே ?

பித்தங் கொண்டவளைப் போன்று அண்டிவந்தாள் அஞ்சுகம். மகனின் தலை முடியைப் பற்றிக் கொண்டு முன் அறை, பின் அறை கொடுத்தாள்.

"அம்மா !...அம்மா !"என்று ஓலமிட்டான் சிறுவன்.

"நான் உன் அம்மா இல்லே !. . .இல்லே !. . . நீ அநாதை !. . .பாவம், புண்ணியத்துக்கு இரக்கப்பட்டு உன்னை நான் வளர்த்தேன் பாரு. . .ம் !. . .!"

அவ்வளவுதான் ; ஞானப்பிரகாசம் தலைதெறிக்க வெளியே ஓடினான் ! "ஞானப்பிரகாசம் !"—மனம் துடிக்கப் பாய்ந்தாள் அஞ்சுகம். தொடர்ந்தாள் அவள் கணவன் ;

x x x

பக்கிங்ஹாம் கால்வாய் நீரில் ஞானப்பிரகாசம் உருண்டு கிடந்தான். அவனை ஏந்தி எடுத்தாள் அஞ்சுகம் ; குடிசைக்குக் கொணர்ந்து உடுப்பு மாற்றினாள்.

"ஞானப்பிரகாசம் ! நீ என்னோட மகன்தான் ! ஆண்டவன் மேலே ஆணை, நான் பெத்த பிள்ளைதான் நீ ! நீ எங்க மகன். அம்மான்னு சொல்லமாட்டியா ? நீ பேசாட்டி, நானும் உன்னைப் போலச் செத்து மடியத்தான் போறேன். அம்மான்னு சொல்லுடா என் ராஜா!"

"அம்மா !" என்று உணர்ச்சிச் சுழிப்புடன் கூவினான் ஞானப்பிரகாசம். மெய்ம்மறந்தாள் அஞ்சுகம். பாசத்தின் அரவணைப்பில் இருந்த அவள் பின்புறம் திரும்பினாள். அவளது கைத்தலம் பற்றியவனைக்

காணோம்! வெளியே விரைந்தாள். அவன் கண்ணீர் சொரிந்து நின்று கொண்டிருந்தான்; "அஞ்சுகம், ஞானப்பிரகாசம் என்னை அப்பான்னு ஒப்புக்கொள்ளாம இருக்கையிலே, நான் இனி உன்னோடே இருக்கிறது சிலாக்கியமில்லை. நான் திரும்பிவர ஏலாத இடத்துக்கே போயிடுறேன்!" என்று உருகினான்.

தெரு விளக்கு அழுது வடிந்தது!

அவனது கைகளைப் பரபரவென்று இழுத்துக் கொண்டு குடிசைக்குள் நுழைந்தாள் அஞ்சுகம்.

கை கூப்பித் தெய்வம் தொழுத ஞானப்பிரகாசம் கரித்துண்டையும் சாக்குக் கட்டியையும் எடுத்துக் கிறுக்கினான். சித்தன் போக்கு சிவன் போக்கு!

"ஞானப்பிரகாசம், என்னை நம்புடா கண்ணு! இவருதான் உன் அப்பா!...செஞ்ச தப்புக்குத் தண்டனை அனுபவிச்சு, இவ்வளவுகாலம் கழிச்சு மனசு திருந்தி வந்திருக்கிற இவரு உன் அப்பா தான்!"

ஞானப்பிரகாசம் நிமிர்ந்து அன்னையை நோக்கினான்; பிறகு, அந்தப் புது மனிதனையும் பார்வையிட்டான். தாடி, மீசையுடன் கடற்கரையில் மயங்கிக் கிடந்த அவனுக்குத் தான் சோடா வாங்கிக் கொடுத்த சம்பவமும் அப்பொழுது அவன் இளம் மனத்தில் பளிச்சிட்டது. கடைசியாக, தரையில் முழுமை பெற்றிருந்த உருவத்தையும் கண்டான்.

அஞ்சுகத்தின் கணவன், தன் உருவத்தைச் சித்திரத்தில் கண்டு ஆனந்தம் கொண்டாடினானோ?

"அப்பா!...அப்பா!..."

"..ம்..மா!"

"என்னைப் பெத்த அப்பன்மார்களே! அம்மா மார்களே!...நான் பெத்த பிள்ளை குட்டிங்களோட துன்பத்தைக் கண்பார்த்து, கையிலே மடியிலே கிடைக்கக் கூடிய ஒரு காசு, ரெண்டு காசு, காலணு, அரையணு தர்மம் பண்ணுங்க. உங்க வாய்க்கு வெத்தலே; எங்க ஏழு பேர்க்கும் வயித்துக்குக் கஞ்சித்தண்ணி. கிடைச்சதை வீசிப் போடுங்க. தயவு பண்ணுங்க கடவுளர்களே...!"

சிலும்பலும் பிசிறலும் பரப்பிக்கிடந்த அந்தத் தடி அட்டையிலே சிவப்பு வர்ணச் சுண்ணும்புக் கட்டி எழுதிய எழுத்துக்கள் பளிச்செனத் தெரிந்தன, அபாய அறிவிப்பு விளம்பரம் போன்று! தங்களுடைய வாழ்வில் அண்டியிருக்கின்ற அபாயத்திற்கு அபயம் தரவல்ல 'தெய்வமணிக் கரங்க'ளின் ஈரத்தை ஈர்க்க

வேண்டுமென்றுதான் அவ்விளம்பரம் அவ்வாறு செந்தீ நிறம் உமிழத் தயாரிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவ்வழியே சென்றவர்களுக்கு அந்த அட்டைஉண்மை யிலேயே ஓர் அபாய அறிவிப்பாகியிருக்குமோ, என்னவோ? இல்லையென்றால், சிமெண்டு பூசப்பட்ட அந்த நடைபாதையின் மையப் பகுதியின் கீழ்த்திசை ஓரத்தில் விரிக்கப் பெற்றிருந்த சேலைக் கிழிசல் துணி அப்படிச்சோக பிம்பமெனக் காட்சியளித்துக்கொண் டிருக்குமா? உதயசூரியனைத் தரிசித்த அக்கிழிசல் இதோ, கதிரவனின் விடை பெறுங் காட்சியைக் கூடக் காணப் போகின்றதே? ஆனால், அந்தக் கந்தைக்குக் கிடைத்த 'தர்மம்' எவ்வளவு தெரியுமா? ஐம்பத்து நாலு காசுகள்—புதுக்காசுகள்! உஸ், இரையாதீர்கள்!.. இந்தச் சில்லறையில் தான் அத்தனை இதயங்களும் அடங்கவேண்டுமா? ஈஸ்வரா!...ஒருவேளை, இந்தச் சில்லறையில்தான் உலகமே மொத்தமாக அடங்கி விட்டதோ? கற்பனை வளம் மிக்க விந்தைமிகு இலக்கிய மனத்திலே ஊற்றெனப் பாய்ந்தோடும் எண்ண வெள்ளம் போலத்தான் 'மனித மந்தை' நெளிந்து கொண்டிருந்தது. இருந்தும், என்ன புண்ணியம்? புண்ணியமாவது, பாவமாவது? மேற்கத்திய நாகரிகம் கடல் கடந்து வந்து, கூவம் நதிக் கரையிலே நல்ல வேளையாக இறங்கித் தொலைக்காமல், 'சைனாபஜா'ரில் பாதம் பதித்தது; அந்நாகரிகத்தின் தாளடியில் தண்டனிட்டுக்கிடப்பதற்கே அவர்களுக்கு நேரம் காலம் போதவில்லை என்கிறார்களாமே? ஆம்; அதோ பாருங்கள், ஜோடி சேர்ந்து, ஜோடி பிரிந்து செல்கிறார் கள் ஒரு சாரார். குளிர்பானம் குடித்தது போதாதென்று கடற்காற்றையும் குடித்துத் திரும்புகிறது பிறிதொரு கூட்டம். விடுதலை அடைந்த மண்ணிடை அடிமைக் கதையை நினைவூட்டுவது போல இதோ மற்றொரு

கும்பல்! குடும்பங்கள் சில பட்டாளம் பட்டாளமாக அணி வகுத்துப் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருக்கின்றனவே?

சீனத்துக் கடை வீதியிலே தீபாவளி தன் பாதச் சுவடுகளைப் பதிக்க 'வேளை' கணித்துக் கொண்டிருந்தது.

" அப்பா!...அம்மா! கடவுளே!"

தீர்க்கமான மணிக்குரலுக்குப் ' பிசிறு தட்டும் ' பின்பாடகர் கிடைத்துப் பாட்டுப் புறப்பட்டால், எப்படி இருக்கும்?—அவ்வாறு இருந்தது இந்தக் குரல்; ஒரு குரலா? அல்ல; கூட்டுக் குரல்! அவளுடைய மெலிந்த கைகள் கூப்பியவை கூப்பிய கோலம் தப்பாமல் இருந்தன; பிள்ளை குட்டிக்காரத் தாய்தந்தையர் போனார்கள். போன பெரியவர் பின்னால் வந்தார்; வந்து, அந்த அட்டையைப் படித்தார்; அட்டை போல எழுத்துக்கள் ஒட்டிக் கொண்டனவோ? ஊஹூம்! வெள்ளெழுத்து! கண்ணாடி கை கொடுத்தது. காலங் கடந்து அவதரித்த தலைச்சன் பிள்ளையாண்டானுக்குப் படித்துக்காட்டினார். கௌரவமான சிரிப்புச் சிரித்தார்; அச் சிரிப்பில் அவரது சட்டை உட்பையிலிருந்த பத்து ரூபாய்த்தாள்கள் முகம் காட்டின; ஆனால், அகம் காட்டக்காணோம்! மூச்சுவிடாமல், அதாவது, அலுங்காமல் குலுங்காமல் நடை பயின்று மறைந்துவிட்டார்! அதாவது, நகர்ந்து நடந்து, தன் அருமை இல்லக் கிழத்தியின் அருகில் சென்று, சற்று முன்னர் படித்த விளம்பரத்தினை கதை கதையாகச் சொன்னார். இது காரணமாகவேதான், வாழ்க்கையை கதைகுக் ஒப்பிடுகிறார்களோ?

தெய்வமே!'

'ஈர'த்தை எதிர்பார்த்தாள் அந்தத் தாய்; ஈரம் அண்டியது, விழிகளிலே!

'ம், இன்னிக்குத் தெய்வம் அளந்த படி இம்புட்டுத் தான் போலே!'

அவளுடைய கூப்பிய கரங்கள் துவண்டு விழுந் தன. கிடைத்த சில்லறைக் காசுகளை எண்ணி, சேலைத் தலைப்பில் முடிபோட்டபடி எழுந்தாள் அவள்; 'குழந் தைகளும்' எழுந்தனர்; ஏழாவது குழந்தை 'சவலை.' பெற்றவள் இடுப்பில் இடுக்கிக்கொண்டாள். குஞ்சும் குளுவானுமாகக் காட்சி தந்த தன்னுடைய 'செல்வங் களை' அவள் நோக்கினாள்: "கண்ணுங்களா, பசிக் குதா?" என்று நெஞ்சு விம்மி வெடிக்கக் கேட்டாள்.

"ஆமாம்மா!..."

பேசத் தெரியாத இரு குழந்தைகள் 'ஊம்! பசிக் குதே!' என்ற பாவனையில் தலையாட்டின. கைக் குழந்தை விதியின் சிரிப்பைத் தோற்கடிப்பதைப் போலச் சிரித்தது!

'ஐயோ...!'

* * *

மாணிக்கம், மரகதம், பச்சை, தங்கம், பரமசிவன், உமையாள், லக்ஷ்மி ஆகிய இவர்கள் எல்லோரும் கண் வளர்ந்து கொண்டிருந்தனர்! கட்டுத் திட்டங்களைக் கடந்து வீசிய கடற்காற்று; பாரபட்சமில்லாமல் பொழிந்த வான் நிலவு; சிமெண்டுத்தரை! போதுமே? ஆனால், அவள் மட்டும் கொட்டக் கொட்ட விழித்திருந் தாள்; அடங்கிக் கிடந்த பசியைக் கிளறிவிட்ட ஒரே ஒரு சோற்றுக் கவளம் போன இடம் தெரியவில்லை.

சிறுகுடல் பெருங்குடலைக் கவ்விற்று; நெஞ்சம் விம்மியது, துயரத்தால்; நினைவுகள் ரத்தக்கண்ணீரில் குளித்தெழுந்தன, வேதனையால்; காலம் தன் போக்கில் ஓடியது, கடமையுணர்வில்!

எங்கோ இருந்த ரேடியோப் பெட்டியினுள்ளே சாவேரியில் ஆலாபனம் நடந்து கொண்டிருந்தது; அவளுக்குச் சங்கீதம் ஒருகேடா? 'எங் கதையே எனக்குப் பெரிசாப்பூடுச்சே?' என்று வக்கணை பேசியது பெண் மனம், பேதை மனம்! பசித்தது; ஆகவேதான் பழங் கணக்கைப் பார்த்தனளோ?

அவள்!—ஆம்; அவளுடைய வாழ்வென்கின்ற கணக்குப் புத்தகத்தில் வறுமையும் பசியுமே 'நிகர லாபம்!' இன்பமும் துன்பமும் மாறி மாறி வருமென்று சொன்னார்கள் பெரியவர்கள். அவள் வரை இவ்வுரை பாதி பொய்! காரணம், அவளுக்குக் குறுக்கே மறித்த நிகழ்ச்சிகள் அனைத்தும் வறுமைப் பின்னணியில் அமைந்தன. அவள் ஏழை; அதுவே அவளது வாழ்வின் விதியாக விதித்தது!

'அவுக இருந்திருந்தாலாச்சும் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் கயிட்டம் கொறைஞ்சு போயிருக்கும்!'

சுபயோக சுபதினத்தில் தன் தங்கக் கழுத்தில் தாலிக் கயிற்றை முடிந்த 'அவனுடைய' உருவம் நிழலாடியது. சாண் வயிறு இரண்டையும் கழுவி மூடி, தங்கள் தரித்திரத்தை அரங்கேற்றாமல் கட்டிக் காத்து வந்த அவனுக்கும் அவளுக்கும் அடுத்த வருஷமே 'சோதனை' வந்தது; அந்தச் சோதனைக்குப் பெயர்தான் 'மாணிக்கம்!' தலைச்சன் பிள்ளை மீது தாயும் தந்தையும் போட்டி போட்டுக் கொண்டு அன்பையும் பாசத்தையும் சொரிந்தார்கள். அவர்களால் முடிந்தது அவ்வளவே தான். பெற்றவளுக்குப் பால் சுரக்கவில்லை; கண்ணீர்

சுரந்தது. அரை வயிற்றுக்கஞ்சிக்கே 'லாட்டரி' அடிக்கும் நிலையிலே பாலாவது, மண்ணாவது ? அப்பன் காரன் குருதியை வேர்வையாக்கினான் ; அந்த வேர்வை யில்தான் மாணிக்கம் வளர்ந்தானோ ?

காலம் ஓடியது ; அந்த ஓட்டத்தில் தடம் பதித்துக் காட்டிய இயற்கையின் விளையாட்டில் மாணிக்கத்திற்குத் தம்பியும் தங்கைகளுமாக அறுவர் கிடைத்தனர். விளையாட்டுக்குத் துணைவேண்டாமா ? ஆனால், விதியின் விளையாட்டிற்குத் துணைபோய் விட்டான் அவளுடைய அவன் ! கடைசிக் குழந்தை, பெண் ; லக்ஷ்மி என்று பெரிட்டார்கள். ஒருநாள், குழந்தைக்குப் பால் பற்றவில்லை ; பாயும் படுக்கையு மான தந்தை, குடும்ப சகிதமாக அனுபவித்த பசிக் கொடுமையைக் கண் கொண்டு பார்த்து, நெஞ்சுக்குள் ளேயே நெக்குருகினான். "வெளியிலே போயி கொஞ் சூண்டு பசும்பால் வாங்கியாரேன், அன்னம் !" என்று சொல்லிச் சென்றவன், பசும் பாலையா கொணர்ந்தான் ? அன்று. அவனுடைய 'வெறுங் கட்டையை'த்தான் யாரோ கொணர்ந்தார்கள் !

பூவும் மஞ்சளும் குங்குமமும் அவளைக் கண்டு, கண் தெரியாத இடத்துக்கு ஓடி ஒளிந்து கொண்டன !

x x

நெல்லுக்குள்ளே அரிசி இருப்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை, இராமநாதபுரம் மாவட்டம் 'மானம் பார்த்த' சீமை என்பது ! மானம் : வானம்.

பிறந்த மண்ணைத் துறந்தாள் அவள். சனிப் பெயர்ச்சிக்குப் பேர் பெற்ற புண்ணியஸ்தலம் தேவி

பட்டினம். ஆனால், அவளுக்கு மட்டும் அவ்வூர் விலக்கு விதி போலும்! பிள்ளை வரம் வேண்டிச் செல்பவர்கள் முதலில் தேவிப்பட்டினத்தில் 'ஸ்நானம்' செய்துதான் தங்கள் பயணத்தைத் தொடர வேண்டும். அதன் காரணமாகத்தான், அவளுக்குப் பிள்ளைச் செல்வங்கள் நிரம்பி வந்தனவோ? இவ்விதிக்குள் அவள் 'விதி' உடன்பாடானது! பிறந்த மண் சீதனம் தந்த குழந்தைகள் ஏழையும், எண்ணிக்கைக்கு இடம் தர ஒப்பாத நல் குரவையும் துணைக்கு அழைத்துக் கொண்டு அவள் வழி நடந்தாள்; விதி வழியே நடைதொடரலானாள். 'கட்டின பொஞ்சாதியையும் புள்ளை குட்டிகளையும் காப் பாத்த ஏலாம அவுரு மட்டும் தப்பிச்சிக்கிட்டாரு!' என்ற நினைவை, அவளுடைய பூங்கரம் பற்றியவனது இதழ் முனைகளில் ஒட்டிக்கிடந்த விஷப் பச்சிலைத் துணுக்குகள் அவளுக்கு எடுத்துக்காட்டிய வண்ணம் இருந்தன. அந்த நினைவினூடே, அவளுக்குப் பட்டணம் வழி காட்டிற்று. அதுவேதான் விதியின் வழியெனவும் அவள் நிர்ணயம் செய்தாள். ஜனநாயக அரசாங்கம் என்ற உரிமையில் அவளும் குழந்தை குஞ்சுகளும் ரெயில் வண்டியில் ஏறப்போய், ஊர்பேர் புரியாத பொட்டைக் காட்டு நிலையம் ஒன்றில் இறக்கிவிடப் பட்டு, இம்மாதிரியான கூத்துக்களில் துணைகொண்டு, ஒரு வழியாக அவள் சென்னப்பட்டணம் வந்து சேர்ந்தது அவளுக்குச் சொப்பனமாகவே பட்டது. 'கெட்டும் பட்டணம் சேர்' என்ற வாசகம் அவளுக்கும் மனப் பாடம் ஆகியிருக்கத்தான் வேண்டும்!

சவலைக் குழந்தையை இடுப்பில் வைத்து அணைத்துக்கொண்டு, மற்றப் பிள்ளைகுட்டிகளை 'என்.ஸி.ஸி.' அணிவகுப்புப்போல அமைத்தவாறு அழைத்துக் கொண்டு அவள் பட்டணத்தை வலம் வந்தாள்.

பெரிய பங்களாக்களை எட்டிப்பார்த்தாள்; 'நாய்கள் ஜாக்கிரதை' என்ற எச்சரிக்கைப் பலகைகளும் அந்தப் பலகைகளின் மறைவில் உடலொடுங்கிக் கிடந்த நாய்களும் எட்டிப் பார்த்தன; சில இடங்களில் 'கூர்க்கா' எட்டிப் பார்த்தான். இவள் ஏதோ கேட்டாள்; அவன் ஏதோ சொன்னான். இப்படிப்பட்ட மொழிப்பரிவர்த்தனையில் விளைந்த குழப்பத்தின் காரணமாக, பங்களாக்களின் சொந்தத் தலைகள் சில அவளுடன் பேசின; விஷயம் அறிவுக்கு எட்டினவுடன், தயாளசிந்தை இருட்டடிப்புப் பெற்றது; பிழைப்புக்கு வேலை கேட்கப் போய், வசவும் உதையுமே கிடைத்தன. இப் பரந்த உலகிலே அவளுக்கு உற்றதுணையாக—உருத்தெரிந்த தெய்வமாய் இருந்தது, இருந்து வருவது அவளுடைய கண்ணீர்தான்! அது வாழட்டும்! அந்தக்கண்ணீர் அவளை வாழவைக்க முடியாவிட்டாலும், அவள் அந்தக் கண்ணீரை வாழ வைத்தாள். ஆகவே, அது கொட்டு முழக்கோடு வாழட்டும்.

நல்லவர்கள் ஓரிருவர் இல்லாமலா? அவர்கள் இருப்பதால்தானே மழைக்கண் திறக்கிறது? அதனால் தான், அவளும் அவள் பெற்ற செல்வங்களும் உயிர் வாழ்கின்றன! சோற்றுக்காரிகள் உதவினார்கள்; குழந்தைகள் வளர்ந்தன. அவள் தன்னையே மறந்தாள்! பசி அவளை மறக்காமல் அழும்பு பண்ணினாலும், பசியை அவள் மறந்து அன்பு பாராட்டினாள்! அவள் பெயர் என்ன தெரியுமா?

அன்னம்!

அவள் அங்கங்கே சுற்றியலைந்தாள்; இரண்டொரு இடங்களில் பற்றுப் பாத்திரம் துலக்கும் 'உத்தியோகம்' கிடைத்தது. 'என்னம்மே இது?...இந்தச்

சனியங்க ஒன்னைச் சுத்திச் சுத்திக்கினு இருந்தா எப்படி அம்மே நீ காரியம் செய்வே ?' என்று சட்டம் பேசினான் ஒருவன். விழாக் கூட்டாமல், தன் குழந்தைகளுக்குச் சனியன் பட்டம் சூட்டிய அந்த ' நல்லவனை ' ஆத்திரம் விளையாடப் பார்வையிட்டவளாக, வேலை செய்த கூலியைக்கூட வாங்காமல் அங்கிருந்து நகர்ந்து விட்டாள் அவள் ! பிறகு, கையேந்திப் பிச்சை எடுத்தாள் ; ஔவைப் பாட்டியை மனத்தில் நிறுத்திக் கொண்டே அவள் பிச்சை எடுத்தாள். அவளுடன் அவளது குழந்தைகளும் அல்லற்படுவதைப் பொறுக்காதவளாகப் புலம்பிப் புலம்பிக் கதறினாள். ஒருமுறை, ஏழு செல்வங்களையும் ' லோன் ஸ்கொயர் ' பூங்காவில் வைத்து, மூத்தவன் மாணிக்கத்தை அவர்களுக்குப் ' பாரா ' இருக்கச் சொல்லிவிட்டு, அவள் புறப்பட்டாள். குழந்தைகள் திக்குத்திக்காகப் பிரிந்தனர் ; ஆனால், லக்ஷ்மி மட்டும் கெட்டிக்காரி ! புல்தரையில். தவழ்ந்து கொண்டே அழுது ஓலம் பரப்பினாள் கடைசியில் அவர்களைக் கண்டுபிடித்த போது தான் அவள் ' உயிர் ' பெற்றாள்.

இத்தகைய நிலையில் தான் அவளுக்கு மெய்யன்பர் ஒருவர் ' உபதேசம் ' செய்தார் ; அதன் விடிமோட்சம் மாதிரியாகத்தான் அவளுக்கு இந்த அட்டையும் அட்டையில் எழுதப்பட்ட வாக்கியங்களும் கிடைத்தன. ஓரிடத்தில் அவளும் குழந்தைகளும் கூப்பிய கரங்களுடன் வீற்றிருந்து, இடையிடையே ' அறம் ' என்ற சொல்லைச் சுண்டிச் சொல்லிக் கொண்டிருக்கத் தலைப்பட்டார்கள். சின்னக் குழந்தையின் கூப்பிய பிஞ்சுக் கைகளில் இரண்டொரு ரூபாய் நாணயங்கள் வீழ்ந்ததும் உண்டு ! ' பாவம், இங்கே சோத்துக்கு இல்லாதவளுக்கு ஏகப்பட்ட குஞ்சுக ; நமக்கோ ஏராளமாச்

சொத்து இருக்கு ; ஆனா அதை அனுபவிக்க ஒரு பூச்சி பொட்டைப் பகவான் புடிச்சுப் போட மாட்டேங்குறான்!'

சுடுநீரைத் துடைத்துக் கொண்டாள் அவள். சேலைத் துணியில் பத்திரமாக முடிந்து வைக்கப்பட்டிருந்த 'காசு' தென்பட்டது. கடைக்குட்டி லக்ஷ்மிக்கு விடிந்ததும் விடியாததுமாக அரையணா இட்டிலி இரண்டு வாங்கிக் கொடுக்க வேண்டுமல்லவா ? மாணிக்கத்தை ஆழ்ந்து நோக்கினாள் அன்னை. ஈர்க்குச்சியைவிடக் கேடாக இருந்தான் பயல். சிறுவர்களுக்குகந்த புதுமாதிரிப் பட்டுச் சொக்காய்களுக்குச் செய்யப்பட்டிருந்த விளம்பரம் ஒன்றிலே எழுதப்பட்டிருந்த சிறுவனின் உருவம் அவள் மனக்கண்ணில் தெரிந்தது. அதற்குப் பலன், நெடுமூச்சுத் தொடர் மட்டுந்தான் ! "'பசிக்குதா ?' அப்படிண்ணு பேச்சுக்குக் கேட்டேன். பசியை மறந்திடாமே, 'ஆமாம்மா' அப்படிண்ணு மாணிக்கமும் மற்றதுங்களும் சொன்னதுங்களே ?...காட்டேரித் தாயே, நீ எங்க குலதெய்வமாச்சே? உங் குஞ்சு குட்டிங்களை மறந்துப் பிட்டியா ?"

ஒருமுறை : ஒன்றும் 'துட்டு'கிட்டவில்லை. அவள் வெம்பி மனம் நொந்தாள். இந்நிலையிலே மாணிக்கமும் மற்றவர்களும் "பசிக்குது !...பசிக்குது !" என்று ஒப்பாரி வைத்துவிட்டனர். அவளுக்குக் கண்மண் தெரியாமல் கோபம் வந்தது. எல்லோரையும் முன் அறை பின் அறையாக அறைந்தாள் அவள்.

'ஐயையோ !...தெய்வமே !'

தாய் மனம் சுடர்விளக்கானது.

'அம்மா !...அம்மா !'

குழந்தை மனம் புனிதம் மண்டியது.

கவனிப்பற்றுக் கிடந்த சேலைக் கிழிசலில் அவளுடைய விழி நீர் வெள்ளமென வடிந்து சொட்டிக் கொண்டிருந்தது. பசிப்புரட்சி நடந்து கொண்டிருந்த சாண் வயிற்றில் கட்டிக் கொள்ள ஈரத் துணி வேண்டாமா ?

அவளுக்குச் சூட்டப் பெற்றிருந்த பெயர்தான் உங்களுக்குத் தெரியுமே ?

அன்னம் !

அடி வயிற்றில் விழுந்த அடிகளின் வலி தலைக்குத் தாவியது ; ஓலமிடலானாள் !

* * *

விடிந்தால், தீபாவளி !

எங்கெல்லாமோ அலைந்தாள் அந்தத் தாய்க்காரி.

" அம்மா, என்னம்மா, ஒரே முட்டாச் சத்தம் வெடிக்குதே ?"

" நாளை விடிய தீவாளி !"

" தீவாளிண்ணு என்னும்மா ?"

" புதுசு உடுத்தி, பலவாரம் சாப்பிடுவாங்க !"

" அப்படின்னு, நம்மளுக்கும் தீவாளி உண்டில்ல, ஏம்மா ? அதான் வாரப்ப எங்கணே பார்த்தாலும் ஒரேதா வாசனை அடிச்சுதுபோலே !"

" ம் !"

" பலே, தீபாளி உண்டாம் நம்மளுக்கு !...அம்மா நல்ல அம்மா !"

" டே, மாணிக்கம். நான் சொல்லுறுப்லே கேட்டேங்கண்ணு, தீவாளி உண்டாக்கும் !"

"ஓ!"

"சரி, எம்பின்னாலே வாங்க!"

"ஓ!"

ஆழியின் பேய் இரைச்சல் காதுகளைச் செவிடுபடச் செய்தது. அமாவாசைக் கொண்டாட்டம் அதற்கு; கும்மிருட்டு வேறு.

கடல் அலைகளின் ஈரம் அந்தத் தாயின் பாதங்களுக்கு மட்டும் ஈரத்தைக் காட்டவில்லை. இதயத்திற்கும் ஈரம் ஈந்ததா? சுற்றுமுற்றும் நோக்கினாள்; இரும்பு வாராவதி இருந்த இடம்கூட அவளுக்குத் தட்டுப்பட மறுத்தது. பொதி மணலில் பதிந்துவிட்டிருந்த பாதங்களை எடுத்துக்கொண்டு கரைக்கு வந்தாள். 'நான் இல்லேன்னா, அப்பாலே என்செல்வங்க அம்பிட்டும் திண்டாடிப் பூடுமே!'—வெறிப்புயலை விரக்தி பெற்றுப் போட்டது.

"மாணிக்கம்!"

"அம்மா!"

"மரகதம்!"

"அம்மோவ்!"

"பச்சை!"

"என்னாம்மோ!"

"தங்கம்!"

"அ...ம்...மா!"

"பரமசிவா!"

"ம்!"

"உமையா!"

"...ம்...மா!"

"லச்சிமி !"

"..............!"

"மாணிக்கம், பசிக்குதாடா ராஜா ?"

"ஆமாம்மா !"

அவள் தலைச்சன் மகனுக்கே முதலில் முத்தம் ஈந்தாள்.

"அழுவுறியா அம்மா ?"

"இல்லையே ? ஏம்ப்பா, ஒனக்கு பசிக்குதா...?"

"பசிக்குதும்மா !"

"ஒனக்கு !"

"ம்...ம் !"

"இங்க எனக்கு பயமாயிருக்கம்மா ; வாம்மா, நாம போயிடுவோம் !"

"ஒருநாளைக்கு நீ கடலிலே குளிக்கோணுமின்னு அடம் புடிச்சியே, மாணிக்கம் ?"

"வேண்டாம்மா ! இப்ப வேணும்மா !"

மற்றக் குழந்தைகளை மீண்டும் பெயரிட்டு அழைத்தாள் பெற்றவள் ; ஒவ்வொருவருக்கும் முத்தம் கொடுத்தாள். கடைசிப் பெண் பொதி மண்ணில் தவழ்ந்து கொண்டிருந்தாள். கண்ணுக்குப் புலப்படவில்லை ; ஆனால், கைகளுக்குப் புலப்பட்டாள் ! அவள் தன்னைச் சுற்றிக் கண்ணோட்டம் செலுத்திக் கொண்டிருந்தாள். 'நல்ல வேளை, செகப்புத் தொப்பிக்காரங்க யாரையும் காணலே ! ஆமா; பாதிச்சாமமிருக்குமே ? இனி அவுங்க வரமாட்டாங்க. நல்லவேளை !...சாமியே, நீ நல்லவந் தான் !'

மூன்று நாட்களாக அவளுக்குக் காய்ச்சல். மூன்று நாட்களாகக் குழந்தைகள் ‘குலேபட்டினி!’ துணைவரின் வதனம் ஒருமுறை அவளுள் சுழன்றது. அவள் தன்னுடைய பழங்காலத்திற்கு ஓட்டம் பிடித்தாள். உடல் நடுங்கியது. ‘அம்மம்மா!...தெய்வமே!... கடவுளே! நீ எங்கே இருக்கிறே?...நான் பைத்தியக் காரி! நீ இருக்கிற இடம் எனக்குத் தெரிஞ்சுபோச்சு!... ஆனு, நான் பெத்த என் ஜீவங்களைக் காப்பாத்திறத் துக்குத்தான் வழி புரியாம போச்சு. பாவம், என் செல்வங்க ஏளையும் இனியும் இப்பிடி நரகவேதனைப் படச் செய்யப்புடாது; ஆமா! காட்டேரித் தாயே!’

அவள் நல்லதங்காள் ‘வேடம்’ புனைந்தாள். வாழ்க்கை நாடகத்தில் அவளும் நடித்துத்தானே தீர வேண்டும்? இல்லையா?

மாணிக்கத்தைக் கைப்பிடியாகத் தூக்கிக் கொண்டு கடலை நோக்கி இறங்கினாள் தாய். “அம்மா!” என்ற குரல்கள் கூக்குரல் எழுப்பின. அவளுக்கு அது பொருட்டல்லவே! ‘மொதல்லே மாணிக்கம்; அப்பாலே மரகதம்; அதுக்கப்பாலே பச்சை! கடோசியா நானு...!’

“அம்மா! அம்மா!” மாணிக்கம், தாயின் பிடியினின்றும் திமிறிக்கொண்டு மண்ணில் குதித்தான். கார்முகிற் கூட்டங்களிடை மின்னல் கீற்றுக்கள் வெட்டிப் பாய்ந்தன.

“அம்மா! அம்மோ!...எனக்குப் பசிக்கலேம்மா!... இனி பசிக்குதிண்ணு சொல்லலேம்மா!...என்னையும் எந்தம்பி தங்கச்சிங்களையும் சாகடிச்சுப்புடாதேம்மா!... இனிமெ நீ எங்களைக் காப்பாத்திறத்துக்காகக் கஷ்டப்பட வேணும்மா! நானும் எந்தம்பி தங்கச்சிங்க ஏழுபேருமாச் சேந்தே ஒன்னை எப்படியும் காப்பாத்துறோம், அம்மாவ்!.

சாமி சத்தியமாச் சொல்லுறேம்மா! அ ம் ம ா!... அம்மோவ் !...''

பெற்ற மணி வயிறு வெடித்துவிட்டதோ ?

"ஐயையோ! நான் பாவி!...மகா பாவி !...கொடும் பாவி !"

அவள் கதறினுள் ; கதறி அழுதாள் !

"அம்மா, எங்களுக்குப் பசியே இல்லேம்மா!... அந்தாலே பாரு, உம் மூஞ்சியைக் கண்டடியும் தம்பி தங்கச்சி அல்லாரும் சிரிக்குதுங்க ! லெச்சுமிக் குட்டி கூட சிரிக்குது அம்மா ! வாம்மா...நம்ம பளைய எடத்துக்கே போவம் !..."

"ம்...மா !..."

சுழல் விளக்குச் சிரிக்கிறதே ? அதுதான் விதியின் சிரிப்பா ?

இரட்டை விழிகளைப் பதினன்கு கைகள் துடைத்துக் கொண்டிருந்தன !

ஓர் இதயம் பதினன்கு பாதங்களிலே தஞ்சம் புகுந்து கதறிக் கொண்டிருந்தது !

"...ம்...ம !...மா...!" அவள் தன்னுடைய ரத்தச் சின்னங்களுடன் வழி நடந்தாள்.

x x

புலரிப் பொழுது.

எல்லாம் அறிந்த ஐயனுக்கு எல்லோரும் கொண்டாடும் தீபாவளி வைபவத்தைக் கொண்டாடினுர்கள் கோயில் சொந்தக்காரர்கள்.

புதுச் சோமன் துணி! எண்ணெய் விளக்குகள்! பட்சண வகைகள்!

ஆண்டவன் சந்நிதியிலே சர்க்கரைப் பொங்கல் விநியோகம் நடைபெற்றது.

அவளுக்கு ஓர் உருண்டை கிடைத்தது. அதே போல, மற்ற ஆறு குழந்தைகளோடு லக்ஷ்மிக்குட்டிக்கும் சேர்த்து ஒவ்வொரு உருண்டையை வழங்கினார் அர்ச்சகர்.

மாணிக்கம் பயல் அண்டி நடந்து, சிறுவன் ஒருவனின் புதுச் சட்டையைத் தொட்டுப் பார்த்தான். குளிரில் நடுங்கியது திறந்த மேனி. பிறகு, சர்க்கரைப் பொங்கலை ஒரே வாயில் உள்ளே தள்ளி விட்டான்!

அன்னம் தன் பங்கிற்குக் கிடைத்ததை ஏழு பங்காக்கி ஆளுக்குக் கொஞ்சம் நீட்டினாள்.

கைப்பிள்ளை சப்புக் கொட்டிற்று!

தாயின் ' தெய்வமணிக் கரங்கள் ' யாதும் உணிர்ந்தானைத் தொழுதன.

" நீ சாப்பிடலையாம்மா? ஏம்மா நீ சாப்பிடலே? ஐய பாவம்! ஒனக்குப் பசிக்கவே பசிக்காதாம்மா?"

முன்னடியான் ஆணை

கோணிச் சாக்கைக் குதிகாலில் மறைத்துக் கொண்டு, உடலினின்றும் குளிரை மறைக்கத் தெரியாமல் முண்டி முடங்கிக்கிடந்த சாம்பான் விழுந்தடித்துக் கொண்டு எழுந்தான். சாக்கு போன கடவு புரியவில்லை. அதே போலத்தான், வெளிவாசலுக்கு முப்பதடி தள்ளி நின்ற முருங்கைப் போத்தடியிலிருந்து புறப்பட்டு வந்த குரலும் புரியவில்லை. எண்சாண் உடம்புக்கு எட்டடிக் குச்சுதானே சரி? எழுந்தவன் கொட்டாவி பறித்தான்; பிறகு, உச்சந்தலையைத் தடவி விட்டுக்கொண்டான். மூளைக்குச் சுறுசுறுப்பு ஏற்றவா? அல்ல! புளியங் கம்பு அவன் மண்டையைப் பதம் பார்த்துத் தொலைத்தது. நீராழியில் சுட்டுவிரல் கொண்டு நீரைச் சுழித்தால், அலைக்குமிழிகள் சுழித்தோடாவா? அம்மாதிரி, தூக்கக் கலக்கம் சுற்றியது. கூரைப் பொத்தலில் விண் தெரிந்தது.

மம்மல் பொழுது.

மண்ணை இனங்காணத் தவித்தவனாக, தப்படி-தப்படியாக நடைபயின்று நடந்தான் சாம்பான். தன் பெயர் ஓயாமல் அலட்டப்பட்டுக் கொண்டிருந்ததை அவன் உணர்ந்தான். "சாமியோ!" என்று குரல் செலுத்தினான். செலுத்தப்பட்ட நோக்கில், காத்துநின்ற புள்ளியின் நோக்கம் புலன்பட்டிருக்க வேண்டும்!

"டேலெ, சாம்பான்!"

"கும்புடுறேனுங்க சாமியோ!"

"ஏலேய், எத்தனை கடுத்தம் கத்துறது? கால்முட்டு விட்டுப்போகுதேடா!"

"சமிச்சுக்கங்க மொதலாளி!"

"டே! எங்க மொதலாளிச் செட்டியாரு சிவலோகம் போயிட்டாங்கடா! ஒரு இருபது ஆளுக்குத் துண்டு விழுகாம, சாடாப் பேரையும் கூட்டிக்கிணு சட்டுப் புட்டுண்ணு வந்து சேருடா!"

"பாயும் படுக்கையுமா தக்காமுக்காக் கெடந்தாங்க ஐயா. பாவம், போயிட்டாங்க!...ம்...அவுக நல்லதனமாப் பறிஞ்சிட்டாக. பேரன் பேத்திகூட எடுத்திட்டாக! அவுக இனிமே சாமி கணக்குத்தான்!...ராவு சோளக்கொட்டை இடிச்சுக்கிட்டிருந்தேனுங்க; அதாங்க, அடிச்சுப் போட்டாப்லே ஆழ்ந்திட்டேன்! சரிங்க சாமி! நீங்க நடங்க; இந்தாலே பொட்டுப் பொழுதுக்குள்ளார ஓடியாரேனுங்க!..."

ஒரு கல் தொலைவிலே கொள்ளிவாய்ப் பிசாசு தெரிந்தால், அதன் உருவமும் ஒளியும் சின்னப் புள்ளியாகத் தானே தெரியும்? அதுபோன்று, ஓர் ஒளித் துணுக்குத் தெரிந்தது. சேதி சொல்லத் தூது வந்த

ஆள், காதிடுக்கில் இருந்த பாதி 'பாவட்டா பீடி'யைப் பற்றவைத்துக் கொண்டு வழி நடந்தான்.

சாம்பான் குடிசைக்குள் அடிமிதித்தான். மாட்டுக் காலில் மிதிபடும் போரடித் தளைகளையொப்ப, எண்ணங் களை மிதித்தான். எண்ணங்கள் அவனை மிதித்தன. கைகளை விழிப்பரப்பில் ஊரவிட்டான். பிஞ்சுச் சவுக் கின் கூரிய இலைகளென முகம் பூராவும் மீசையும் தாடியும் மண்டியிருக்கக் கண்டான். செட்டித்தெருவில் 'சிவ பதவி' அடைந்த செட்டியாரை எண்ணினான். செய்த தான தருமத்தை எண்ணம் ஞாபக மூட்டியது. 'தீ மூட்டத்திலே வேகப்போகுது செட்டியாரோட மேனி. சோத்தாங்கை தாரது பீச்சாங்கைக்குக்கூடத் தெரியாம குடுத்துக் கிட்டிருந்த மவராசரு அவரு. மேலோகம் போயிட்டாரு. இந்தப் பாளத்த கட்டைக்கு அந்த ஐயா ஊத்தின கஞ்சி ஒரு மட்டையா, ரெண்டு மட்டையா ?...என்னமோ, இதுவுந்தான் நாளைக்கோ இன்னைக்கோ சுடுகாட்டிலெ தெக்குப்பக்கம் மண்டை யை வச்சுப்படுக்கப்போவுது!...அதுக்குள்ள அது... எம்புட்டு ஆசை கெலிப்புக்காட்டிப்புடுமா ?...அல்லாம் சங்கிலிக் கறுப்பண்ணசாமி தொணைதானுக்கும்...!'

ஓர் எட்டு எடுத்துவைத்தான் சாம்பன். "ஆத்தா. . . பொன்னியோ!. . .ஆ. . .த். . .!"

நிறைபெருக்குக் காட்டித் தவழும் பொன்னியாகத் தலைவைத்துப் படுத்திருந்தவள்,விசுக்கென்று விரைந்து எழுந்தாள். உயிருக்கு மன்றாடிய எச்சம்பாய்க் கிழிசல் ஒதுங்கியது. ஒதுங்கிக்கிடந்த 'மாராப்புச் சேலை'யை ஒதுக்கியவாறு, கண்களைத் துடைத்துவிட்டாள் ; பிறகு நிமிர்ந்தாள். "அப்பனுங்காட்டி அழைச்சது ?" என்றாள்.

"ஆமா. செட்டிய வூட்டிலே சாவு விழுந்திருச்சாம். சேதி வந்திச்சு. மேலவூட்டுத் தம்பி, கீழவூட்டு அண்ணாச்சி, சாமியாடிமவன், சிங்கப்பூரான், அப்பாலே நம்ம சேரி பொடிசுக அம்புட்டுப்பேரையும் உசுப்பு. தாமசம் பண்ணாப் போயி, மொதல் கொட்டு கொட்டினால்தான், அண்டை அசலுக்குக் கேதத்துக்கு வாரத்துக்குத் தோதுப்படும். சுருக்கண ஓடிப்புட்டுத் திரும்பு. வந்தடியும், எனக்கு ஒரு வட்டி நீச்சத்தண்ணி ஊத்தி அதிலெ ரெண்டு உப்புக் கல்லுப் போட்டுக் கரைச்சுக் குடு. அப்பத்தான் பசி தாங்கும்!...நீ போ!... அதுக்குள்ளே நான் தப்பு, கொம்பு, தாளம் சகலத்தையும் எடுத்துவைக்கிறேன்!..."

"ஒஞ் சொல்லுப்படி!..."

சாம்பானின் மனக்கயிறு முறுக்கேறியது: 'எம்மவ களுத்திலே ஒரு மஞ்சக்கவுறு விளுந்திருச்சின்னு, அப்பாலே எனக்கு ஒரு கவலையும் கெடையாது!'

x x x

"காசு இருக்குது, ஆத்தா," என்று குரல் கொடுத்தான் சாம்பான். குரல் நடுங்கிய அளவிலேயே மேனியும் நடுங்கியது. பீத்தல் சாயத்துணியைப் பிழிந்து கோவணம் கட்டிக்கொண்டு, இடுப்பு வேட்டியை புளியங்கொம்பில் முடிந்தான்; முடிந்துவிட்டிருந்த குடுமியை அவிழ்த்து விரல்களால் கோதிவிடலானான்.

மிஞ்சி ஒலித்தது. வஞ்சியின் வருகை லேசுப்பட்டதா? கட்டியம் கூறவேண்டாமா?

"வந்து பொளுது உண்டன ஆகிருச்சாப்பா?"

"இப்பத்தான் வந்தேன்; நகத்தைக் கடிச்சுத் துப்புற நேரம்கூட ஆகியிருவாது!" பணத்தை

எண்ணி நீட்டினுன் அவன். "ஒரு ரூவாயும் மூணு பணமும் நீட்டினுங்க. உச்சிக்கு ஒரு கொட்டாச்சி தேத் தண்ணி குடிச்சேன். அதுக்கு ஆறு காசு போச்சின்னு, சொச்சப் பணம் இதான் !"

இறங்கு வெய்யல். ஏறும் குளிர். மார்கழிக் கம்மல்.

"ஆத்தா !..."

"ஏம்பா !"

"வவுத்துக்கு..."

"ஓ!...சுடுகஞ்சி வடிச்சிருக்கேன்."

"அரிசி நொய் போட்டா, தாயி?"

"பின்னே ?. . ."

"குருதிலே குறுணைகூட தொடைச்சிப் போட்டுப் பிட்டியே, பொன்னி?...ராவு ஒடைச்ச சோளக் கொட்டையிலே ஒரு உளக்கு போட்டுக் காச்சிறது தானே ?"

"நீ என்னுப்பா, வயசு காலத்திலெ சதா சோளக் கூழையே குடிக்கிறேன்னு அழும்பு செய்யிறே ?..."

"அதுசரி, தாயி !...அரிசிக்கு வக்கு வேணுமே ?"

"அல்லாம் இருக்காக்கும் !. . ."

"புக்கந்தியிலே பேசுறீயே, பொன்னி ?"

"அப்பாவ் ! மதியத்துக்கு ஊருக்குள்ளாற நடந் தேன். நம்ம மணியக்கார எசமான் வூட்டாலே ஒதுங்கிப்போனப்ப, ஆச்சி வந்தாக ; சேமம் சாரிச்சாக. மடி ரொம்ப குருணையைக் கொட்டினுக. பெரிய எசமானரு சாவுக்காரக வூட்டிலே குந்தியிருப்பாங்க போலே. இந்தாப்பாரு அப்பாவ் !. . .சின்ன ஐயா

பட்டணக்கரையிலேருந்து வாராகளாம். அவுகளுக்குக் கண்ணாலம் தெகைஞ்சிருச்சாம்!...”

மனம் நிறைந்து பேசியவள், வாய் நிறைந்து சிரித்தாள்.

“பலே! அப்படீண்ணாக்க, விருந்துச் சோறு நம்மளுக்குக் கெடைக்கும்ணு சொல்லு!”

“பைய சொல்லுறீயே?...”

பேசியவள், பேசாமடந்தையின் பாவனையிட்டு ஒரு சிட்டிகைப் பொழுது நின்றாள். விளைந்த களவுகள் உதட்டுத் திடலில் ‘கண்டு முதல்’ ஆயினவோ?

சாம்பானின் கூனல் முதுகு எழும்ப எத்தனம் புரிந்தது. ‘கண்ணாலப் பேச்சைப் பேசிப்புட்டு, இப்ப இதுவே இப்படிச் சொந்த நெனைப்பில்லாம குத்துக்கல்லாட்டம் நிக்குதே?.. இது அளகையும், ஆணி பாஞ்ச மாதிரி பேசிற பேச்சையும் காண பெத்தவளுக்கு எளுதிப்போடலே!...ம்...! அண்ணைக்கு எளுதின அப்பன் அ ளி ச் ச ா எளுதப்போறான்?...சேந்தங்குடி புள்ளே கையாலே முடிபோட்டுக்கிருச்சுதின்னு, எம்பாடு விட்டுச்சு!...’

“ஆத்தா!...”

தோளைத் தொட்டது கை. பாசம் மணத்தது.

“ஆத்தா!”

“அப்பனு?...”

“ஊம்!”

“என்னமோ ரோசிச்சேன்!”

“சேந்தங்குடியை நாடி பயணம் போனீயாக்கும்?”

"நீ என்னுப்பா வவுத்துப் பொண்ணையே நைத்தியம் பண்ணுறே ?" கைவிரல்களுக்கு ஊடே மின்னிய விழிகளிலே நாணப்பூக்கள் மலர்ந்தன. "நானு ஒரு சங்கதி பத்தி நெனைச்சுக்கிட்டேன். நம்ம சின்ன ஐயா எங்கண்ணுலத்துக்கு என்னு குடுப்பாருண்ணு ரோசிச்சேனுக்கும் !"

"கோட்டையிலே படிச்சுப்போட்டிருக்க வேண்டிய தங்கமில்ல நீ! ஒங்கண்ணுலத்துக்கு அவுக தங்கக் கையினுலே எதைத் தந்தாலும் தட்டாம வாங்கிக்கிடு! ...இந்தக் குச்சே அவுகளோட நல்ல மனசினுலே தானே ஆத்தா, கயிட்டம் தெரியாம இருக்குது ?..."

ஈரம் காய்ந்த துணி பொன்னியின் தலையில் அவிழ்ந்து வீழ்ந்தது.

"தொண தொணன்னு பேச்சுக் குடுத்தாளம் மாமியாருக்காரி. சுட்ட தோசையையே மறந்துப்புட்டாளாம் மருமவ—அப்படிங்கிற கதைகணக்கிலே, நான் மூச்சு விடாமப் பேசிக்கிட்டே நிக்கிறேன். பாவம், ஒங்க மூஞ்சி வாடிக்கிடக்கு. வா, போவலாம் !... பசியாறிப் புட்டு, அப்பாலே லாவிலே குந்திக்கிணு பேசுவோம் !"

"அல்லாம் தாயி தயவுதான் !"

சிரிப்பில் சிரிப்பு ஜனனம் எடுத்தது.

* * * *

சங்கராந்திச் சேலையின் சலசலப்புப் பண் கால் மெட்டிச் சத்தத்துக்குச் சுருதி சேர்த்தது போலும் ! அவள் நடந்து கொண்டிருந்தாள். தடம் கண்டாள் ; தடம் பதித்தாள்—நடந்துகொண்டே யிருந்தாள்! கனவு கண்டாள் ; கனவு கொண்டாள் ; நடந்துகொண்டே யிருந்தாள் !

‘ வாட் வெத்தலே வதங்க வெத்தலே
வாய்க்கு நல்லால்லே...
வாடிப்போன மரிக்கொளுந்து
கொண்டைக்கு நல்லால்லே !...’

‘சிண்டிருவம்’ செய்யும் சுட்டிப்பிள்ளை மாதிரிப் பாட்டுப் புறப்பட்டது. உச்சிச் சூரியனின் உச்சிச் சூட்டைச் சட்டை செய்யாதவள் போல ஒரு ‘பூ’சொல்லி விட்டு, நடை பயின்ருள் பொன்னி. இடுப்பில் இடுக்கிக் கிடந்த ‘முட்டி’யில் தண்ணீர் முட்டிச் சொட்டிற்று. வலதுகைப் பெருவிரல், தலைக் கேசத்திளைக் கோதியது; பிறகு கழுத்துக் கருகுமணிகளை நெருடியது. அப்போது பதிந்த உள்ளங்கை எம்பித்தாழ்ந்தது. இன்பக் கிளு கிளுப்புப் பூத்தது ! சன்ஞசிக் கம்மாயிலிருந்து சனி மூலைப் பாரிசத்தில் மடங்கிய ஒற்றையடிப் பாதையில் மடங்கிஞள் அவள்.

“பொன்னி ! பொன்னீ !...”

அவள் தலையைத் திசை திருப்பிஞள். கண்கட்டு அவிழ்க்கப் பெற்ற சின்னக் குட்டிக்குச் சமதையாகச் சன்னமாய்ச் சிரித்தாள். ‘ஆத்தாடி !...எங்க சின்ன ஐயா!...இவுக கட்டிக்கிடப்போற மொறைப் பொண்ணு கமுக்கமாச் சொன்ன தாக்கல் மெய்யேதான் !... ஊருக்கு மொதலாளி மவன் வந்திருக்கிற சேதி சுத்தந் தான் !’ இழுபறியாக, தன்னைச் செம்மைப் படுத்திக் கொண்டாள். ரவிக்கை முடியைச் சரிப்படுத்திஞள். பின்னல் கோலாட்டத்தின்போது மறுகி மறுகிப் ‘பாதம் போடும்’ பாவனையில் அவள் நடை ஊர்ந்தாள் ; வெட் கம் வெள்ளோட்டம் வைத்தது. “சாமீ !...தெண்ட னுங்க !”

"சௌக்கியமா இருக்கியா, பொன்னி ?"

"ஆமாமுங்க. மேலுக்குச் சொகந்தாங்க !...நீங்க நல்லா இருக்கீங்களா ?"

"என்னைப் பார்த்தால் தெரியலையா, பொன்னி ?" என்று வினவிடுத்துச் சிரிப்பைச் சொடுக்கினன் சச்சிதானம்.

அவள் தலை தாழ்ந்தது. நயனங்கள் ஏறிட்டு நின்றன. "சேமம் சாரிக்கிறது வளமையில்லீங்களா? ...ம்...ஒங்க அத்தைமவ சொன்னது பலிச்சிருச்சுதுங்க!..."

"என்ன விஷயம் ?"

"நீங்க வந்திருக்கிறதாகக் காதைக் கடிச்சிது !..."

"அஞ்சுகம் காதைக் கடிச்சுப்பிட்டாளா ? அடடா! ...கரும்புக் கட்டு நாலு வாங்கியாந்து.போட்டிருக்கேனே !..."

"சத்தம் காட்டாதீங்க. அப்பாலே அவுக காதுக்கு ஒங்க நையாண்டிப் பேச்சு எட்டப் போவுது !...நீங்க ஊரை நாடி வந்திருக்கிறதை அவுகதான் சொன்னிச்சுங்க. எம் பேச்சைக் கொண்டே கேலி பண்ணுறீங்களே ?..."

"அஞ்சுகம் எங் காதிலேயும் ஒரு இனிப்புச் சமாசாரம் சொன்னிச்சுதே ?..."

"சொல்லுங்க முதலாளி !. . ."

"இதுக்குப் பதினைஞ்சாம் நாள் உனக்குக் கல்யாணமாமே ?"

கதிரொளியின் ஸ்பரிசம் படப்பட, மொக்கவிழ்ந்து சுகந்தம் பரவுவதைப்போல நகை பூத்தாள் பொன்னி.

"இப்ப உன்னே ஒரு படம் எடுத்தாக்க, ரொம்ப ரொம்ப பேஷாயிருக்கும்!" என்று கூறினன் சச்சிதானந்தம்! ஜரிகை வேஷ்டித் தலைப்பைக் கொய்து, வேர்வை மணிகளைக் கொய்தான்! வழிமறித்த 'குறுக்குப் பார்வைகள்' சிலவற்றை அவன் கருதி நின்ருல்தானே ?....

"நானு வாரேஞ்சாமி!..."

அழகு விடை கேட்க, அன்பு விடை ஈந்தது. 'சேரியிலே செந்தாமரைப்பூ! ஆண்டவன் விளையாட்டு விநோதமாத்தான் இருக்குது!'

முன்னர் ஒரு முறை காமிராவும் கையுமாக வந்து, பொன்னியை 'படம்' எடுத்த நிகழ்ச்சியை அவனுல் எங்ஙனம் மறக்கக்கூடும் ?

x x x

சாணம் தெளிக்கும் வேளை.

சாத்தன் குடியிருப்புச் சேரி திமிலோகப் பட்டுக் கொண்டிருந்தது.

புதுத்தோல் போர்த்திய பறைகளை கணப்பில் காட்டி, 'பதம்' பார்த்துக் 'கல்யாணக் கொட்டு' கொட்டிக் கொண்டிருந்தார்கள் சிலர். ஜாலரா குலுங்க, தாளங்கள் குலுங்கின. 'பீப்பீ' ஊத்துக்கள் ஒலித்தன. கொம்புகள் மங்கலக் குரல் கூட்டின.

முகத்தில் மஞ்சள் நிறக்க, கண்ணின்மணிகளில் நாணம் சிறக்கக் குந்தியிருந்தாள் பொன்னி. கூறைப் புடவை ஒளிர்ந்தது. ஒளிந்த காதலின் கதை ஓடிப் பிடித்து விளையாடியது.

கனவல்ல!

சேரி வட்டத்தில் சுற்றிய பொன்னியின் கண் வட்டத்திற்குள்ளே சுழன்ற இளசுகள் ஏராளம், ஏராளம்! 'சமைந்த' பெண் சமைத்த இதய நற்கனுக் கனே அவர்கள் அறிவார்களா, என்ன? 'நானுகொண்டு கிடப்போறவுக நல்ல ஆம்புளேயா இருக்கோணும், தெய்வமே! எங்க சின்ன ஐயா சதா கவலேப்படுறதுக் குத் தக்கனே, எனக்கு வார ஆளு மம்மதனு வாய்க்காட் டியும் குத்தமில்லே, சொத்து சொகம் அத்த—கை இளேச்ச புள்ளியானுக்கூட போவுது; ஆனு எல்லாச் சேரியிலவும் காணுருப்பிலே, எனக்குத் தாலிக் கவுறு முடியிறவுகளும் பட்டைத் தண்ணி குடிக்கிற போகு டியா வாய்க்காம இருக்கோணும். அதுதான் எங் கவலே! மணியாரு வூட்டு இளேயராசா சொன்னுமாரிதி, எனக்கு பசி தோணும கஞ்சித்தண்ணி ஊத்திருலே போதும். நாலுமா தோட்டம் இருக்கு; ரெண்டு பிலாமரம் நிக்குது. மேலிலே சத்து இருக்குது. ரெண்டு கைக்கு நாலு கையா நித்தமும் உளேச்சாக்க, பொளேக்கத்தானு ஏலாது!...'

போட்டி வலுத்தது.

எருக்கலக் கோட்டை செவ்வந்தியான் நானூறு ரூபாய் பரிசம் போடுவதாக தூதனுப்பினுன். கணக்கன் விடுதி கந்தப்பன் அக்கரைச் சீமைப் பணத்தைப் பகடைக் காயாக்கி உருட்டி விட்டான். முறை மாப் பிள்ளேகளான முருகனும், வேலனும் வம்பு தும்பு பேசத் தலேப்பட்டனர். சேந்தங்குடிச் சின்னுன் தன் அன்னேமூலம் 'பெண் கேட்க' சேதி அனுப்பினுன்.

கடைசியில், பொன்னி தீர்ப்பு வழங்கினுள்.

"நானு சேந்தங்குடி மச்சானுக்குத்தான் முந்தானே விரிப்பேன்!"

வாயில் விரல்வைத்து வழங்கிய முடிவைக் கேட்ட 'சேரி' மூக்கில் விரல் வைத்தது!

கிழவன் சாம்பான் அட்டி பேசவில்லை. அவனுக்குத் தன் அருமந்தப் புதல்வியின் சொல்தான் வேதவாக்கு.

"அப்பாரே, நீ ஏதொண்ணுக்கும் கிலேசம் காட்டாதே! சாமி காட்டியிருக்கிற வழி இதாக்கும். சேலை கட்டி, சேட்டை பேசி வெளையாட்டுக் காட்டுற புள்ளேங்க அல்லாரும் சோடைங்க! இந்த சேந்தங்குடி மச்சாந்தான் அசல் புள்ளி. பசையில்லாப் போனு, என்னுவாம்? நாளைக்குக் காசு வாராதா? ஒரு தில்லு முல்லு, குடிகிடி இல்லேயாம். மாசத்திலே அஞ்சு எடத்துக்கு ஊளியம் பார்த்தாக்கூட, நம்ம பஞ்சம் பஞ்சாயிடுமே?...ஆத்தாளை கண்ணுமாரிதி பார்த்துக்கிட்டு வார இந்த மச்சாந்தான் என்னேயும் உசிராட்டம் காத்துக்கிடுவாரு. நம்ம சின்ன எசமானரு இல்ல, அவுககூட இந்த ஆம்புளேயைப் பத்திரெண்டு கடுத்தம் சிலாகிச்சு ஒசத்திப் பேசினுங்களே!..."

சொப்பனப் பாவையாய் உருக்கொண்டு நின்றுள் பொன்னி. 'சம்பந்தம்' பேசி, 'பரிசம்' முடிந்தபின் ஒரு முறை, அவள் புல்கட்டைச் சுமந்து சென்ற போழ்திலே, "புள்ளே!" என்று குரல் கொடுத்து, வலுவில் வந்து முதலில் பேச்சுக் கொடுத்தானே சின்னுன், அந் நிகழ்ச்சியில் சொப்பனம் கண்டு மெய்ம் மறந்தாளா?

"அண்ணியோ!" என்று விளித்தாள் நாத்தனுர்க்காரி.

பொன்னின் எழில் மின்ன, பொன்னி நகை சிந்த, அன்ன நடை ஏற்றி, வண்ணக் கலாப உரு போற்றி நடந்தாள் பொன்னி.

சங்கிலிக் கறுப்பர் வேல் வடிவில் தரிசனம் தந்தார். தூப தீபச் சுழல். கொட்டு முழக்குப் பின்னணி. சின்ஞனின் உடைமை ஆனுள் பொன்னி!

அந்தி சந்தி,

'சில்லு' விழுந்திருந்த கண்ணுடியின் முன்னே நின்ருள் பொன்னி. பொங்கிப் பூரித்து விம்மிக் கிடந்த நெஞ்சிலே தஞ்சம் அடைந்திருந்தது விழிப் பார்வை. மஞ்சள் தாலி தரிசனம் தந்தது, அது அவளுக்கு வாழ்வையல்லவா தந்திருக்கிறது? தன்னில் மறு கிளையாகச் சின்ஞன் தோன்றினுன். "இந்தா புள்ளே!... இஞ்ச பாரு!...மெய்யாலுமே நான்தான் குடுத்து வச்ச வன். ஒம்புட்டு இம்மாம் கொள்ளை அளகையும் கொள்ளை கொண்டு, அது பத்தாம, ஒன்னையும் கொண்டு கிட்ட நான்தான் அதிட்டக்காரன்! இன் னிக்கு ராவு துருசுபண்ணி சோறு உண்ணுப்புடு. ராத் திரிக்கு நம்மளுக்கு...இன்ஞு நீ இம்மாந் தொலெ வெக் கப்படுறே?...ஆமா...கைலாசமாக்கும்! நாளைக்கு நீயும் நானும் கும்மாளம் போட்டுக்கினு பயாஸ்கோப்புக்குப் போவமாம்!..."

மதுக்குடம் தளும்பி நிற்காதா? மதுக்குடம் ஏந்திய மதுமலர்—மதிமலர் பொன்னி!

"பொன்னி!...பொன்னீ!"

கருவத்தின் பெருமிதத்தில் மிதந்த அவள், பாசத் தின் கரையில் தலையுயர்த்தினுள். 'சின்ன எசமானரு!...' —ஓடினுள்; பாசத்தின் சங்கமத் தலத்தைக் குறியாகக் கொண்டு நுங்கும் நுரையுமாய்ப் பாய்ந்தோடும் கிளை நதியாக ஓடினுள். 'அண்ண... ஆண்டே!...கும்புடுறே னுங்க சின்ன ஐயா!...நானும் மச்சானும் ஒங்களைக்

கண்டு தண்டி, நல்ல வாக்குப் பெத்துக்கிட்டுத் திரும்ப வேணும்னு இருந்தோம். சாமியே தேடி வந்திட்டீங்க... ...எங்க நல்லெழுத்துத்தாங்க இது!...'' என்று சொல்லிக்கொண்டே, நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கி எழுந்தாள் பொன்னி. நிலம் பதிய விழுந்தவள், நீர் கசிய மீண்டாள்; மண் தொட்டவள் விண் தொட்டு நின்றாள். அன்பும் நன்றியுணர்வும் பாசமும் அவள் வடிவு கொண்டன.

எட்டி நின்றவளை ஒட்டி வந்தான் சச்சிதானந்தம். சிறு பொட்டலத்தைப் பிரித்தான். திருநீறு இருந்தது. இப்போது அதை அவளின் பிறைநெற்றி தொட்டுப் பூசினான்.

"சாமி!..."

"நீயும் உம் மச்சானும் தீர்க்காயுசோட இருக்க வேணும்!"—உணர்ச்சிச் சுழிப்பில் ஆனந்தக் கண்ணீர் சுழித்தது.

சச்சிதானந்தத்துக்கும் பொன்னிக்கும் பூதலத்தின் நினைவு மறந்தது!

தாழம்பூச் சித்தாடை சிரிக்க, சிந்தூரப் பொட்டு சிவக்க, பறங்கிப்பூ வண்ணம் பெற்று உலவி, பீர்க்கங்காய்போல வளர்ச்சி எய்தி, குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தோடிய பைங்கிளியை அவன் எங்ஙனம் மறக்க முடியும்?...பாதை தடுமாறிச் சென்ற மேய்ச்சல் மாடுகளை விரட்டிக் கொண்டு வாசல் வழியே பயந்து பயந்து—பைய பையச் சென்றவளை வலுக்கட்டாயமாக நிறுத்தி, பலகாரம் நீட்டிப் பாசமொழி உதிர்த்துப் பண்பு காட்டிய சம்பவங்கள் ஒன்றல்லவே, இரண்டல்லவே?...'நீங்க ஒசந்தவுங்க; நானு ஈனச் சாதி!' என்று விம்மியவளை ஆறுதல் படுத்தி, 'ஆறு—ஆவன்ன' பாடம் சொல்லிவைத்த தெம்பும் துணிவும் சாமானி

யமா ?...'இந்தப் பொண்ணு பொன்னிக்கு உருப்படியான மாப்பிள்ளையாக் கிடைக்கவேணும், கடவுளே !' என்று அவள் சார்பில் 'நேர்ந்து கொண்ட' பொறுப்புணர்ச்சி அற்ப சொற்பமாய் விடாதே? 'அவதாரம் எடுத்த அண்ணல் இன்னும் கொஞ்சகாலம் உயிரோடிருந்து, இந்த மாதிரியான உருப்படாத பட்டி தொட்டிங்களையும் சீர்படுத்தியிருந்தா, என்னைப் போலவே பொன்னிக்கும் மதிப்பு உயர்ந்து விட்டிருக்குமே !' என்று நிர்மல்கிப் புழுங்கிய இரவுகள் கொஞ்சமா ?

"பொன்னி !"

"எசமானரே !"

"சாம்பான் எங்கிட்டு இருக்கான் ?"

"அல்லாம் பயாஸ்கோப்புக்கு ஓடியிருக்காக !"

"சின்னான் கூடவா ?"

"அது கண்ணுலப்பறுக்கை கொட்டிக்கினு சேக்காளிங்ககூட ஊருக்குடிக் காட்டாலேபறிஞ்சிருக்கும் !"

"பொன்னி......!"

"ஐயாவுங்களே!..."

"இந்தா பாரு, இதுக உனக்காக்கும் !"

பட்டுச் சேலையும் ஜரிகை ரவிக்கையும் பிரிந்தன.

"ஒங்க பிரியத்துக்கு நாங்க ஏளேளு சென்மத்துக்கும் ஊளியம் செய்யக் குடுத்து வைக்கோணுமுங்க சாமியோ!"

"நான் வந்திட்டுப் போனதா உன் அப்பன் கிட்டவும் உன் மச்சான்கிட்டவும் சொல்லு. நாளைக்கு எங்க வீட்டுப்பக்கம் வா. அப்பாரு உனக்குக் கல்யாணப் பரிசு தரப்போறாராம் !..."

"அல்லாம் ஆண்டை தயவுங்க !"

சச்சிதானந்தம் அவளுடைய பாசத்தைத் தாங்க மாட்டாதவனாகத் திரும்பிக்கொண்டான். சுடுசரத்தை வழியோட்ட வேண்டாமா?

"பொன்னி, மறந்திட்டேன். இந்தாப்பாரு, உம் படம் பத்திரிகையிலே போட்டிருக்குது!...ஒரு தரம் உன்னைப் படம் பிடிச்சேனில்ல, அதுவேதான்!...எனக்குப் பரிசு வேறே கிடைச்சிருக்குது, இந்தப் படத்துக்காக வேண்டி!..."

அவன் நிழற்படத்தை நீட்டினான்.

தன் உருவத்தைக் கண்ட அவள் அக மகிழ்ந்தாள். 'சானா...இச்சன்னா...சீனா...தாவன்னா...' என்று எழுத்துக்கூட்டி, முழுப் பெயரைச் சொல்ல வாயெடுத்தவள். சடக்கென்று நின்றுவிட்டாள்.

" சும்மா படி பொன்னி!"

"ஊக்கூம்!...எசமானரோட பேரை இந்தப் பஞ்சை வாயாலே சொன்னா அடுக்காதுங்க!..."

சச்சிதானந்தம் முறுவலைக் கொட்டியவாறு வழி திரும்ப எத்தனம் செய்த நேரம் பார்த்து, அங்கே சின்னான் வந்து நின்றான். பட்டுச் சொக்காய், மேனியில்; மயில் கண் ஜரிகை வேட்டி, இடுப்பில்; வாழை நார்ப்பட்டு, தலையில்!

"சின்னான், உனக்கு ஆயுசு நூறு!"

சின்னான் மழுப்பலாக உபசரணைக்காகச் சிரித்து விட்டு, பொன்னியை நோக்கினான்; தாலி ஏந்தியவள் புடைவையையும் ரவிக்கையையும் ஏந்தி நிற்கக் கண்டான். பிறகு அவன், சச்சிதானந்தம் ஏந்திய பத்திரிகைப் படத்தை நோக்கினான்!

"இந்தாலே! என்னு இதுக?"

"மொதலாளி தந்தாங்க!"

"மொதல்லே இதுகளை அவுககிட்டவே குடுத்துப் புடு. மூச்சுக்காட்டாம, நாஞ் சொல்ருப்புலே நட புள்ளேங்கிறேன்..."

"மச்சான்!"

"அதெல்லாம் அப்பாலே!"

சச்சிதானம் பொறி கலங்கிப் போனுன். "இந்தப் பாரு, சின்னுன்!..."

சின்னுன் திரும்பினுன். "எசமான்!..." என்று கூப்பிட்டு, தலைமுண்டாசைப் பிரித்து, அதிலிருந்து பொன்னியின் புகைப்படம் வெளியாகியிருந்த காகிதத்தை எடுத்து நீட்டியவாறே, "மொதலாளி, நீங்க பொன்னியை ஏதுக்குப் படம் புடிச்சீங்க?...புடிச்சதுசரி; அதை ஏதுக்கு அச்சிலே வரச் சொன்னீங்க?...ஒங்க தங்க மனசு எனக்கு அத்துபடிதாங்க. ஆனுக்க, நீங்க இதுவோட சகசமாப் பேசிப் புளங்கிறதையும், இந்தப் படத்தையும் வச்சிக்கினு எஞ்சேக்காளிப் பயலுவ கண்டவாக்கிலே பேசருனுங்க!...நீங்க பெரிய மனசு வச்சு, இதுகளை திருப்பி வாங்கிக்கிடுங்க!... தாலிகட்டி, மஞ்சளும் சந்தனமும் இன்னம் காயக்கூட இல்லே! அதுக்குள்ளாற பூசலை உண்டாக்கிப்புடாதீங்க, சாமி!"

சின்னுன் விம்மினுன்!

சச்சிதானந்தம் அதிர்ந்து நின்ருன். நெஞ்சம் விம்மியது; உந்திக்கமலம் அழுதது. அவன் பார்வை, உள்ளங்கைப் படத்தில் நிலைத்தது. 'இந்தப் படம், அபிஷேகம் செய்யப்பட்ட அம்பிகையையே சதா எனக்கு நினைவுறுத்தி வருகிறதென்ற உண்மையை

எப்படி நிரூபிப்பேன்? பொன்னியின் ஆதரிச எழிலை வழிபடுகின்ற என்னுடைய துல்லிய நிலையை இவர்கள் எங்கே மதிக்கப் போகிறார்கள்?...ஈசனே, பொன்னியைப் 'பிடித்துப்போட' உனக்குச் சேரிதானா கிடைத்தது?...' அவன் சிறு பிள்ளையாக மாறினான்; அழுதான். சின்னானிடம் கெஞ்சிக் கதறத் துடியாய்த் துடித்தான் அவன்.

புனலாடித் திரும்பிய கோலத்தில் காட்சி தந்த பொன்னியின் படக்கிழிசலைக் கசக்கி வீசினான் சின்னான்!

"ஏலே, பொன்னி! நீ இப்ப இந்தத் துணிகளை அவுககிட்ட நீட்டப் போரியா, இல்லையா?"

"ஏலாது!..."

"மெய்யாலுமாங்காட்டி?..."

"முன்னடியான் ஆணையாத்தான் செப்புறேன்!"

"தூத்தேரி!" என்று கத்தினான்; காறித்துப்பினான் சின்னான்.

"இந்தாப்பாரு, சும்மா வெத்துப் பயங்காட்டாதே!... ஒன்னை ஒசந்த ஆம்புள்ளேன்னு நெனைச்சேன். பாசத்துக்கும் பிரியத்துக்கும் புள்ளிக் கணக்கு சரியாப் போடப் புரிஞ்ச ஆளுன்னு ரோசிச்சிருந்தேன். நீ சோப்ளாங்கி!...அவுக எங்க சாமி!...சங்கிலிக் கறுப் பண்ணசாமி சத்தியமா கடவுளுதான்! நல்லகாலம், ராவுக்குள்ளாறவே ஒன் புத்தியைப் படிச்சுக் குடுத்துப் புடுச்சே!...எங்க சாமி பிரியத்தோட தந்ததுகளை நானே தான் வச்சுக்கிடுவேன். இந்தப் புண்ணியத்துக்கு நானு பெரிய தவம் செஞ்சிருக்கோணுமாக்கும்!...இப்ப நீ என்னா முடிவு சொல்றே?...எம் பேச்சுக்கு உம்முனு சொல்றியா? இல்லாங்காட்டி, காத்தாலே கட்டின

இந்தத் தாலியை...!'' என்று முடிக்க முடியாமல் அழுதாள் பொன்னி. அவளது பூங்கரம் மங்கல நாண் மீது ஒட்டியிருந்தது.

"பொன்னி! நான் கொடுத்து வைக்காத பாவி அம்மா!'' என்று கதறியழுதான் சச்சிதானம்.

"ம்...சொல்லு...சுருக்கண !..."

பத்திர காளியா அவள் ?

சின்னான் சிலையாக நின்றான்; துடித்தான்.

அன்பின் கொழுந்து வர்ஷித்த திவலைகள் தீக் கொழுந்துகளாக மாறி அவனைப் பொசுக்கிவிட்டனவா?

"எசமான் !"

அலறி விழுந்தான் சின்னான்: "மொதலாளி!... என்னைச் சமிச்சிக்கிடுங்க. ஊரும் ஒலகமும் எங்களே வாழவைக்காட்டி மோசமில்லே! ஒங்க பாசமும் பிரியமும் எங்களைக் காத்தால் போதுமுங்க!...சின்னச்சாதியோட சின்னப் புத்தியை மனசிலே வைச்சுக்கிடாதீங்க சாமி!...ஒங்க கண்ணீரும் எங்க பொன்னியோட நெஞ்சு வல்லமையும் எனக்குப் புத்தி தந்திருச்சுங்க !... சாமி...சாமி !"

விழிநீர் வழிகூட்டச் சென்ற சச்சிதானந்தத்தின் மனக்கண்ணிலே, பத்திரிகை வெளியிட்ட 'அந்தப் புகைப் படம்' தரிசனம் தந்தது; மெய்ம்மறந்த உணர்வில், கைகளைக் குவித்து அஞ்சலி செலுத்தினான் !

விளையாட்டுத் தோழி

ஆமாம்; மெய்தான்! என்னைப்பற்றித் தாங்கள் அறியாததா, என்ன?...

கடவுளால் படைக்கப்பட்டவன் நான் என்னும் தத்துவ நியதியை நெஞ்சிலிருந்து நீக்கிவிடாமல், ஆனால், எங்கணும் நீக்கமற நிறைந்துள்ள அந்தக் கடவுளையே படைத்து விளையாடும் தகுதி, அல்லது பெருமை பெற்று, அப்பெருமையின் தகுதியிலே, புவனத்தையே கூத்துக்களமாக ஆக்கிக்கொண்டு, என்போக்கில்—என் நிலையில்—என் வெறியில் என்னுடைய சிருஷ்டி விளையாட்டைத் தொடங்கித் தொடர்ந்து வரும் பித்தன் நான். எனக்கு வாய்த்த கருவ விளையாட்டுக்குத் துணையென வாய்த்தாள் அமிர்தம்!—அவளைப்போல இன்னொருத்தி மறுபிறவி கொண்டுதான் வரவேண்டும்! பெயர் அமைப்பு என்

வாழ்வில் கூடிவந்தது கூட ஓர் அமைப்பு என்றேதான் சொல்லுவேன் ! 'ஆக்கும் தெய்வ'த்தின் சக்தியை ஊகம் செய்ய நான் யார் ?...

சரி !

என்னுடைய இலக்கியப் பொறுப்புக்களைக் குறித்தும் நீங்கள் தீர்க்கமாக அறிவீர்கள் !

குவலயத்தின் மாதாவை 'உயிர்த்தீ' என்று வழி படுகின்றார் பாரதி. அன்னைக்கு எத்தனையோ நாமங்கள்! எவ்வளவோ அவதாரங்கள்! உமையவளை நினைவூட்டச் சஞ்சிகை ஒன்று கிடைத்தது—'இமிழ்கடல் வேலித் தமிழக'த்துக்கு ! அதன் பயனாக, அலுவல் ஒன்று கிடைத்தது—எனக்கு !

நான் சுமந்த கடமைகள் விந்தையானவை : பிட்டுக்கு மண் சுமந்த ஆலவாய் அப்பனைப்பற்றித் தெரிந்துவைத்துக் கொள்ளவேண்டும்; உலக உருண்டையின் ஒரு முனையை நுனிவிரல் கொண்டே தொட்டுச் சுற்றிவிடப் பழகிக் கொள்ள வேண்டும். யதார்த்த வாழ்வின் சூட்சுமச் சேட்டைகளின் நெளிவு சுளிவுகள்—அச்சகத்தின் யந்திரங்கள், யந்திர மனிதர்கள்—கலையுலகத்தின் தலையில் எழுதியுள்ள சித்திர விசித்திரங்கள் போன்ற சகல விஷயங்களையும் நான் தெரிந்தும், புரிந்தும் வைத்துக் கொள்ள வேண்டும். இத்துடன், கைம்மாறு வேண்டாக் கடப்பாடுகள் வேறு !—இப்படிப்பட்ட 'அஷ்டாவதானச் சித்து' சித்தித்தது கூட முன்னைப் பழவினையின் நிழல்தானே ?

காவடிப்பாரம் சுமப்பவனுக்குத்தான் தெரியும் !—என்னைப் புரிந்துகொள்ள அமிர்தம் கிட்டியது என் புண்ணியந்தான் !

ஆஹா !...அதோ, உதயம் மடவிழத் தொடங்கி விட்டது. அந்தப் பொன்வண்ணம் காணத் தவங் கிடந்த நேரத்தில், என்னைப்பற்றிச் சுயபுராணம் படிக்கத் தவருக கெட்டிக்காரத்தனத்தை என் ரசிகர் களாகிய நீங்களாவது புகழாமலா இருக்கப் போகிறீர் கள் ?

செஞ்சுடர்ச் செல்வனின் முகத்தை என் முகத் திற்கு நேர்வசம் வைத்துப்பார்த்து மகிழ்ந்து புனிதம் பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், அவள் வந்தாள். அவளுடன், புண்ணியச் சிரிப்பும் வந்தது ; காப்பியும் வந்தது. சிரிப்பை மட்டுமல்ல, காப்பியையும் குடித்தேன் ; சுவைத்தேன். தணிகாசலம்—தேவகி ஆகிய இருவரின் பாத்திரப்படையலின் எடையை நிறுவை செய்தபடியே, படி கடந்து, கீழ்க் கூடத்திற்கு வந்தேன்.

நாங்கள் குடியிருந்த பவழக்காரத் தெருவின் தென் பகுதியில் ஒரு சந்து இருந்தது. அங்கே ஒரு காட்சி யைக் கண்டேன். என்மனம் சிலிர்த்தது ; அச்சிலிர்ப்பு மேனியைத் தழுவ, என்னை மறந்து, அந்த மறதியில் காலத்தின் பழங்கதையை நினைவூட்டிக்கொள்ள வேண்டியவன் ஆனேன். என்னுள் இருந்த ' என்னை ' நகர்த்திவிட்டு, என்னுள்ளே வியாபித்து நின்ற ஒரு கனவின் நிழலை—நிழலின் ஒளியை—ஒளியின் உருவ கத்தைக் கண்டேன். ' கண்டேன் ' என்று சொல்வ தைக்காட்டிலும், ' தரிசித்தேன் ' என்பதே பொருத்தம்; சாலப் பொருத்தம் !...

என் உள்ளமாகிய ஆடுகளத்தினிடையே, முதலுக் கும் முடிவுக்குமான தத்துவம் போன்று, அந்த ஒரு முகம் மட்டிலுமே சதா சர்வகாலமும் சிரித்துக்கொண் டிருப்பதைப் போலவும், அவ்வகைப்பட்ட சிரிப்பின்

இமைகள் என் மனத்தையே பின்னிப்பிணைத்து என்னைத் திக்குமுக்காடச் செய்வதுமாதிரியாகவும் உணர்ந்தேன்; உணர்கிறேன் !

அந்த நினைவுமுகத்திற்கென ஒரு பெயர் உண்டு. அது : தமிழரசி ! புற எழிலும் அகத்தூய்மையும் மின்னிப்பளிச்சிட விளங்கி, 'தனக்குள் தான் ஓர் அரசியே' என்ற பெருமிதப் பூரிப்புடன் திகழ்ந்தவளா யிற்றே தமிழரசி ?...

அமிர்தம் கூப்பிட்டாள். யாரோ ரசிகர் ஒருவர் என் பேட்டிக்காக வந்திருக்கின்றாராம்! கனவின் காட்சி யைப் பிரிந்து, நினைவின் காட்சிக்குத் திரும்பினேன்.

அவன் : சிறுவன்.

அவள் : சிறுமி.

குவிக்கப்பட்டிருந்த மணல் மேட்டில் அழகுச் சிற்றில் சமைத்து விளையாடிக்கொண்டிருந்தார்கள் அக்குழந்தைகள்.

நிலம் தெளிந்தது !

என் இதயம் தெளியவில்லை !

கட்டறுத்துக்கொண்ட உணர்ச்சிச் சுழிப்பி லிருந்து புறப்பட்ட கேள்விச் சவுக்கு என்னையே ஆரத் தழுவியது : 'ஐயோ !...நான் சின்னப்பையனு கவே என்றென்றும் இருந்திருக்கலாகாதா ?...'

தொல்லைகள் கண் விளிம்புச் சுடுநீரில் கரை கின்றன.

அப்படியென்றால், இதழோர நகைக் கலவையில் இன்பங்கள் வளர்ந்தோங்கவேண்டுமே !

அழுதேன் !

சிரித்தாள் !

சிரித்தேன் !...

ஊழிச்சக்தி உள்ளடங்கிய பாவனையில் நர்த்தனம் சமைத்திடும் புண்ணிய பூமியிலே உருவாகிக் கொண்டேயிருக்கின்ற பிடிசாம்பலிலிருந்து வாழ்விற் குரிய தத்துவங்கள் உருவாக்கப்படுகின்றன.

ஆழித்தென்றல் உள்ளடக்கம் காட்டி நடனம் அமைத்திடும் என் இல்லத்திலே உருவம் காட்டிக் கொண்டிருக்கின்ற சிகரெட் சாம்பலிலிருந்து வாழ்வின் புதிர்கள் சிக்கறுக்கப்படுகின்றன.

முடிந்தது.

இனிமேல், ஆரம்பம்.

சற்றுமுன், தமிழரசியின் பெயரை அறிமுகப் படுத்தினேன். இப்பொழுது, அவளைப் படம்பிடித்துக் காட்டவேண்டும். ஆகவே, நான் பையனாக மாற வேண்டும்; அவதார மகிமையுடன், அதன் அந்தரங் கத்தையும் நான் அறிந்தவனே ! இந்நிலையில், காய கல்பம் எனக்குத் தேவையில்லையே !...

" தமிழரசி !..."

பிஞ்சு மனம் அழைத்தால், அவள் வராமல் இருப்பாளா ?

ஆஹா, என்ன சுகந்தம் !...முல்லைப் பூவின் துல்லிய மணம் இளங்காற்றிடை ஆடி அசைந்து வரு கிறதல்லவா ? அப்படியென்றால், தமிழரசியும் வந்து விட்டாள் என்னும் உண்மை நிலையை நான் ஊகம் செய்து கொள்வேன்.

" தமிழரசி !...

" ஓ...ஆறுமுகமா ?...

" பொய் !...

" என்ன சொல்றே நீ ?..."

" ஒரு முகத்தை வச்சுக்கிட்டு, ஆறுமுகம்னு 'டுப்' அடிக்கிறியே நீ ?...

நான் சிரித்தேன். அவள் தந்த ஆணிமுத்துச் சிரிப்பு அது !

" தமிழரசி !..."

" என்னவாம் ?...".

அவளுக்கு 'பிகு' கூடுதல். இன்றல்ல ; என்றுமே தான். அவள் சுபாவம் அப்படி. அவரவர் விதிக்கு விதிக்கப்பட்ட போக்கு. போக்கின் விதி அது !

இதோ, அண்டி வந்துவிட்டாள் !

என்னைப்போல, உங்களுக்கும் தங்கைமார்கள் இருப்பார்கள் ; பாருங்கள்.

மல்லிகைப்பூவின் வடிவம் அவள் மேனி.

கோல விழிகளில் கோலக் கலாபமயிலின் கருவம்.

உதட்டுக்கரைதனிலே முல்லையின் நல்ல புனிதம்.

எடுப்பான நாசி. இருபக்கத் துவாரங்களும் அந்த முடன் அமைந்து, நுனியில் கூர்மை தெளிந்து நிற்கும் பாவம் !

'பால்வாய்ப் பசுந்தமிழின்' இனிமை, அவள் பெயரில் !

" தமிழரசி !...

" ஊக்கூம் !...எனக்கு 'டயம்' ஆச்சு; நான் போகப் போறேனுக்கும் !"

பிணக்குத் தெரிந்தவள் !

ஓட்டிவந்த மெட்டியொலி எட்டிச் சென்று விட்டதா ?

நிலவில் கடல் பொங்குகிறது.

துயரில் மனம் பொங்குகிறது.

என்னைப் பீடித்த கண்கட்டுமாயத்தை அறுத்தது காலவினை.

'ஈஸ்வரா ! என்னைப் பச்சிளம் பாலகனாகவே ஆக்கியிருக்கலாகாதா ?...'

" அத்தான் !..." என்று நெஞ்சை மீட்டிய வீணையாகி வந்தாள் என் அமிர்தம்.

வானத்துத் தேனை மாந்தித் திளைத்த நினைவில்... நிலையில் அவளை ஏறிட்டு நோக்கினேன். போதை இருந்தது என்னிடம். போதம் இருந்தது அவளிடம். என்னுடைய பார்வையின் ஒளியில் அவளது நாணம் பிரதிபலித்தது. அவளுக்கு வெட்கம் வந்துவிட்டது, வெட்கம் ! என்னவோ, நேற்றுத்தான் மணவறையில் அமர்ந்து ஹோமத்தீ முன்னிலையில் எனக்கு வாழ்க் கைப்பட்டவள் மாதிரி அவளுக்கு அப்படியொரு நாணச் சேர்க்கை ! அவளது நாணம் எனக்குக் கற்பனையின் வடிவமாய் அமைந்து கதைகள் பல அமைத்துத் தந்த ரகசியத்தை அவளா அறியாள் ?...

" அத்தான் !" விழி தாழ்த்தி, இதழ் விலக்கி, குறுஞ் சிரிப்பைக் கூட்டிக் காட்டினாள்.

" ஊம் !"

என்னுடைய மௌனக் குரல் அவளுக்குத் திருப்தியை எழுதிக் காட்டவில்லைபோலும்! தளிர்க் கரத்தால் என்னைத் தொட்டாள். உளம் தொட்ட பொற்பாவை அவள்.

சிந்தனையில் 'முரல்' விளையாட, அவளைப் பார்த்தேன்.

நெற்றிப்பொட்டு சிரித்தது!

"அத்தான், என்னமோ பிரமாதமாக யோசனை செஞ்சுக்கிட்டு இருக்கிறீங்களே?...பால் ஆறிவிடப் போகிறதே?..."

ஏதோ ஒன்றை நினைவூட்ட, ஏதோ ஒன்றைச் சுட்டினாள். சுட்டிப்பெண். அத்தைமகள் அல்லவா?

கேள்விக்குறி தாங்கியவளுக்கு விடைசொல்ல வேண்டும். எப்படிச் சொல்லுவேன்? தமிழரசியின் இன்ப நினைவு என்னை ஆட்கொண்டிருக்கும் கதையை அவளிடம் எங்ஙனம் தெரிவிப்பேன்?

மனவிளக்கு சுடர் தெறித்தது.

ஒரு நிகழ்ச்சி :

வாலிபப் பருவத்திற்கு உருவமாய் அமைந்த வேனில்விழா இல்வாழ்வின் முதல் இரவு கழிந்தது. இரவுகள் ஓடின.

இன்றுபோல, அன்றும் தமிழரசியைப்பற்றிய லயிப்பில்தான் விநாடிகளை விழுங்கிக்கொண்டிருந்தேன். அமிர்தம் மகரந்தம் ஏந்திய மதுமலரை ஞாபகப்படுத்தியபடி வந்தாள். என் சிந்தனைக்குக் காரணம் கேட்டாள். கதை எழுதுபவனுக்கு எத்தனையோ மனச்சுழிப்புக்கள்!—வாய்விட்டுக் கேட்டவளுக்கு வாய்திறந்து மறுமொழி பகர்ந்தேன்.

என்னைப்பற்றித் தெரிந்ததைப் பார்க்கிலும், என் பிறந்த மண்ணைப்பற்றி உங்களுக்கு நிரம்பத்தெரியும்.

அப்பொழுது நான் சிறுவன். பூவைமாநகரில் இருந்த ஆரம்பப்பள்ளியில் மூன்றும் வகுப்பு வாசித்துக் கொண்டிருந்தேன். வண்ணாத்தி வெளுத்துக் கொணர்ந்த உடுப்புக்களைப் போட்டுவிட்டாள் அம்மா. அந்தக் கருணையுடன், அவள் காதும் காதும் வைத்த பாங்கில் தந்த சீடைக்காய் உருண்டைகளை வாயில் போட்டுச் சுவைத்தவனாக, வாத்தியார் போட்ட மனக் கணக்கைப் போட்டுக்கொண்டிருந்தேன். அது தருணம், சிறுமி ஒருத்தி வகுப்பின் நுழைவாயிலில் நின்றாள். கூட, பெரியவர் ஒருவர் நின்றார். அவளது அப்பாவாம்; நினைத்தது பொய்க்கவில்லை! ஆசிரியரும் வந்த மனிதரும் சரிக்குச் சரி அமர்ந்து பேசினார்கள்.

என் பெயர் திடீரென்று கேட்டது. எனக்குப் பக்கத்தில் அச்சிறுமிக்கு இடம் கொடுக்க வேண்டு மென்றார். கொடுத்தேன். அவள் என்னை நன்றியின் மெய்யுணர்வு துலங்காத கடைக்கண்ணால் ஜாடை யாகப் பார்வையிட்டாள். எனக்கு என்னவோ போலிருந் தது. அசந்துவிட்டால், என்னையே விழுங்கி ஏப்பம் விட்டுவிடுபவளைப்போலவா அப்படிப்பார்ப்பாள்! என் பெற்றோர்களுக்கு அப்புறம் யார் புணை ஆவதாம்...?

சாப்பாட்டுக்கு மணி அடித்தான் கோவிந்தன்.

சிறுமி வந்தாள்.

" இந்தாப்பாரு, ஓம் பேரு என்ன ?...'

எனக்கு எப்போதுமே கொஞ்சம் வாய்த்துடுக்கு மிகுதி ; கேட்டேன்.

“ எம் பேரைச் சொல்லுறேன். முதல்லே ஒம் பேரைச் சொல்லிப்பிடு !”

என் பெருமை, அவள் அளித்த பதிலில் அழிந்து பட்டது.

“ ஊக்கூம், நீ முதலிலே சொல்லேன் !...”

“ முடியாதாக்கும் !...

“ போயேன்...நாளைக்கு ஒம்பேரைத் தெரிஞ்சிக்கிடுறேன் !”

“ நாளைக்கு என்னவாம், நாளைக்கி !...இன்னைக்கே உம் பேரான பேரைத் தெரிஞ்சுக்கிட்டாளாக்கும் இந்தக் குட்டி தமிழரசி!...என்ன பேரு சொல்லிப்பிடவா ?... உம்பேரு ஆறுமுகந்தானே ?...”

தமிழரசி மண்ணில் குதித்தாள்.

நான் விண்ணிடைப் பறந்தேன்.

தமிழரசியின் அப்பா பசையான புள்ளி ; மதுரைக்காரர். இங்கே டாக்டர்.

காலம் ரோஜாப்பூவானது. நாட்கள் ரோஜா இதழ்களாயின.

என் வீட்டுக்கு அவள் செல்லக்குட்டி.

அவள் மனைக்கு நான் செல்லப்பிள்ளை.

முறுக்குகள் கொடுப்பேன்; ரொட்டித் துண்டங்கள் தருவாள். சடுகுடு ஆடுவோம் ; தாயம் போடுவோம் ; பாண்டி விளையாட்டும் அங்கம் வகிக்கும். கோயிலுக்குப் போவோம் ; குளத்துக்குப் போவோம்.

ஒருமுறை அம்மா சொன்னாள்,“ஏதேது, பயல் நம்ம அமிர்தத்தைக்கூட இன்னங் கொஞ்சநாள் போயிட்டா, மறந்துப்பிடுவான் போலே இருக்கே !” என்று.

உடன் நின்ற தமிழரசிக்குக் குதூகலம் பீறிட்டது.

தேதிப்படத் தாள்கள் கிழித்தெறியப்பட்டன.

புரட்டாசி மாதம். நடராஜர் கோவில் திருவிழா ஆரம்பமான நேரம். அந்திப்பொழுது. அவளும் நானும் கண்பொத்தி விளையாடினோம். தோற்றேன்; வென்றேன்.

"இந்தப் பாரு, வேறே ஏதானும் செய்யலாம்!"

"என்ன செய்யிறது?..."

காலமழை பொழிந்து, காய்ந்திருந்தது.

நான் பார்த்தபோது, அழகுணர்ந்த மனத்திறனோடு அற்புதமான மணல் வீடு ஒன்றைக் கட்டி முடித்திருந்தாள் தமிழரசி!

"பார்த்தியா, பார்த்தியா?..." என்று ஏகத்தாளமாய்க் கேட்டுவிட்டு, தாளம் கொட்டிக் குலுங்கினாள்.

அடுத்த சில நிமிஷங்களுக்குள், நானும் ஒருமணல் வீட்டை உண்டாக்கினேன்.

"என்னதுதான் ஒசத்தி!" என்றாள் அவள். ஏனுமல் தங்கச் சங்கிலியைப் பிஞ்சு விரலால் நெருடிக் கொண்டே.

அந்த முகத்தை நோக்கித் திருஷ்டி செலுத்தினேன், அவளது எழிலுக்குத் திருஷ்டி கழிக்கவா?...

"இந்தப் பாரு...!"

"என்ன?..."

"என்ன சொன்னே?"

"என் வீடுதான் அழகின்னு சொன்னேன்!"

"மெய்யாகவா?"

“பொய் இல்லே!...”

“அப்பிடியா?”

“ஊம்!”

“ஊமா?...”

“ஊம்!...”

நையாண்டி ஒலியின் சிற்றலைகள் அழிவதற்குள், அவள் சமைத்த மணல் வீட்டை எட்டி உதைத்து அழித்துவிட்டேன்! அழித்துவிட்டு, அட்டகாசமாகச் சிரிக்கத் தொடங்கினேன்!...

தமிழரசி விம்மிக்கொண்டே ஓடிவந்து, என் வீட்டையும் பதிலுக்குச் சிதைத்தாள். என்னைப் பிடித்துக் கீழே தள்ளினாள். பட்டுச் சட்டை நுனியை எடுத்துத் தன் பட்டுக் கன்னங்களில் பட்டுநின்ற நீர்மணிகளைத் துடைத்துக்கொண்டே, “டே!... இனிமேலுக்கு நீ என்னோடே பேசப்படாது! நான் உன்கூட ‘டு’......! ஆமா!...” என்று ஆத்திரம் சுழிக்கப் பேசிவிட்டு, ஓடிவிட்டாள்.

மஞ்சள் வெயில் மாலை வேளையில் உருவம் மறைத்து ஓடிவிட்ட தமிழரசி, நீள் இரவின் நீண்ட பொழுதுவரை, என் நெஞ்சில் தன் உருவம் நிறுத்தி என்னை விம்மி வெடிக்கச் செய்தாள்!

மறுநாள் அண்டைக் கிராமத்தில் ஒரு காதுகுத்து விழா. போனேன்; திரும்பினேன். மத்தியான்னப் பள்ளிக்குச் சென்ற போழ்தில், என் நேத்திரங்கள், ‘நேத்திரமணிப்பாவை’ தமிழரசியைத் தேடின. அவளைக் காணவில்லை. ராமுப் பயல் ஓடிவந்தான். “டோய், உன் தமிழரசி வேறே ஊருக்குப் போயிட்டாடா!... அவங்க அப்பாரை மாத்திப்புட்டாங்களாம்டா! பாவம்

எனக்கு இனி பொழுது போகாது!...” என்று செய்தி தெரிவித்தான்.

அவ்வளவுதான்; என் கைகால்கள் ஆடின. நான் ஆடின ஆட்டத்திற்குத் தண்டனையா?

நான் கதறியழுதேன். சிரித்த சிரிப்புக்கு நேர்ந்த சோதனையா?

என் மனக் கடலில் பாசமெனும் பலம் கொண்டு முக்குளித்துக் கண்டெடுத்த குண்டுமுத்து, என்னை விட்டு நீங்கி எங்கோ சிதறி விழுந்து விட்டதே! முத்தின் காந்தக் கவர்ச்சியின் வெளிச்சம் தெரிகிறது. முத்தையல்லவா நான் தேடினேன்?

நான் வளர்ந்தேன். ஆண்டவனே, என்னை என்றென்றும் சின்னஞ்சிறு பையனாகவே நிலைத்திருக்கக் கருணை பாலித்திருக்கக் கூடாதா?

‘தேவமனோஹரி’ பண் அமைத்தது.

விழித்தேன்; விழித்துப் பார்த்தேன்.

அமிர்தம் கெட்டிக்காரி. ரேடியோவைத் திருகி, என் சுயநினைவைத் திருகினாள். ஆனால் என் மன அமைதியை விதி திருகி வேடிக்கை காட்டிய வித்தையை அவள் எப்படி உணர்வாள், பாவம்!

அவள் வினா விடுத்தாளே?

சொன்னேன்: “...அமிர்தம்!...உன்கிட்டே சொல்லாமல் வேறே யாரிடம் நான் சொல்லுவேன்?...என் உயிர் உடம்பிலே தரிச்சிருக்கிறதுக்குள்ளே, ஒரு ‘வாட்டி தமிழரசியைக் கண்டு, ‘டு’ போட்ட அவளோடே ‘ராசி’ ஆகிவிட்டேன்னு, போதும்: அப்பத்தான் என் மனசு நிம்மதிப்படும்!...”

என்னைப் பிணைத்த இதயதாபம் அவளுக்கு இதய தாகமாக அமைந்ததோ, என்னவோ?

"அத்தான், உங்க ஆசை பலிக்கும்!" என்றாள். ஆசியாகவே மதித்தேன்.

கார்முகத்திற்கும் கார்மலிக்கும் ஊடே நிலவும் இடைவெளியால், அவ்விரண்டுக்கும் இடையேயுள்ள புனிதம் நிறை பாசத்தைத் துண்டித்துவிட முடியுமா?

செய்தித் தாளில் கண்பார்வை பதிந்தது. சீனுக் காரன் வம்புக்காரன், போங்கள்! தாகூர் கவிதைத் திரட்டு வந்தது.

"நீ பிரிந்து சென்றபொழுது
நடுப்பகல் வேளை;
காய்ந்த மேட்டு வெளியூடே
சென்றிடும் வறண்ட பாதை.
வெயில் சுட்டெரித்தது!
நெருங்கிப் பின்னிய ஆலமர நிழலில்
ஓயாது கூவிடும் இரட்டைப்புறுக்கள்.
சாளர வாயிலில் தனியே இருந்தேன்.....
நீ பிரிந்து சென்றபொழுது
நல்ல நடுப்பகல்!......"

மன நெகிழ்ச்சியின் விரிந்த பிரிவின் வேதனைக்குப் பாப்புனையத் தெரிகின்றது.

எனக்குத்தான் ஒன்றும் தெரியவில்லை!...

x x x

நல்ல சேதி ஒன்று; உங்களுக்குத் தெரியுமோ? உண்மைதான்; நான் சொன்னால்தானே உங்களுக்குத் தெரியும்? எதிர்பாராத வாய்ப்புக்களுக்கு உள்ள மகிமை

தனித் தன்மை வாய்ந்தது. அவ்வாறுதான், இந்தச் சம்பவம்கூட ஏற்பட்டிருக்கிறது!...

இதோ, நான் ஊருக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அதோ, அமிர்தமும் புறப்பட்டுவிட்டாள்.

ஏன் தெரியுமா?

தமிழரசிக்குத் திருமணம்!

அழைப்பு அனுப்பியிருக்கிறாள். அவள் கைப்படக் கடிதமும் எழுதியிருக்கிறாள்! இப்போதுதான் என் இருப்பிடம் தெரிந்ததாம்!...

நினைக்க நினைக்க, நெஞ்சு குதிக்கிறது. எண்ண எண்ண, மனம் ஆனந்தக் கூத்தாடுகிறது. ஆண்டவன் நல்லவன்!

அப்பப்பா! எத்தனை ஆண்டுகளின் கனவு இது? கதிர் முத்தச் சிரிப்பில் நகைவிரியும் கமலத்தின் ஒயிலிலே, முதிர் சேர் பலாச்சுளையின் இனிப்பிலே, ஓடும் பூம்புனலின் புது வெள்ளப் பூரிப்பிலே, அன்றாடம் வரும் கடிதங்களின் முகவரியிலே, ஒலிக்கும் தொலைபேசியின் வடிவிலே எல்லாம் அன்புமண்டிய தமிழரசிப் பாவையின் முகத்தைத் தரிசித்து மகிழ்ந்த—தரிசிக்க ஏங்கிய நாட்கள் ஒன்றா, இரண்டா?

ஈஸ்வரா!

எழும்பூர் வந்தது; பின் தங்கியது.

'தமிழரசிக்குக் கலியாணம்!'-உள்ளத்தின்உள்ளே, கட்டிச்சூடனின் இதயத்தில் உறையும் பொற்புக்கு ஏற்ப, ஓர் ஆவல் கிளர்ந்தெழுந்தது. எண்ணினேன் எண்ணத் தவம் இயற்றினேன்; எண்ணிட நோன்பு இருந்தேன்.

தமிழரசி தோன்றினாள் !

கம்பன் சொன்ன 'பெண்கனி' அவள் :

சீதாதேவி...தமிழரசி !..

மாப்பிள்ளைக்கு ராமமூர்த்தி என்று பெயர்.

கொடுத்து வைத்தவன் !

எடுத்துக் கொள்ளப் போகிறான் !

x x x

மணப் பந்தலில் முதல் அடியெடுத்து வைத்ததும், நான் கண்ட முதல் முகம் தமிழரசியினுடையதுதான். கனவு கண்டு, கனவு ஏந்தி, கனவு காட்டி, கனவாகிச் சுழன்ற அந்த நீலக் கருவிழிகளை நான் அறியேனா? சிரித்து, சிரிக்கச் செய்து, சிரிப்பாகி, சிரித்துக் கொண்டேயிருந்த அந்தச் சிவப்பு உதடுகளை நான் அடையாளம் காணமாட்டேனா?

"தமிழரசி!..." என்றேன். உந்திக் கமலம் அழைத்தது. நெஞ்சு உணர்ச்சிக் கொந்தளிப்பின் விளைவாக எம்பி எம்பி விழுந்தது. என் கனவு பலித்துவிட்டதல்லவா ?...மனம் மறுகித் திளைக்காதா, பின்னே ?

"சௌக்கியமா, அண்ணா ?"

"ஆமாம்மா !..."

அமிர்தத்தைக் கூப்பிட்டு, தமிழரசியைப் பழக்கப் படுத்தி வைத்தேன். பூங்கரங்கள் நான்கு குவிந்தன.

பிரஹதீஸ்வரர் ஆலய மணி ஓசை, காலை சந்திப் பூசைக்கு அடையாளம்.

நாதஸ்வரமும் மேளமும் முழங்கின.

முகூர்த்த வேளை நெருங்கவே, அவளை அழைத்துச் செல்ல தோழிகள் வந்தார்கள்.

திருப்பூட்டுதல் சுபமாக முடிந்தது.

மணமகனிடம் நானே வலியச் சென்றேன். என்னை நானே அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

"அடடே, நீங்கள்தானா? என் நல்லதிர்ஷ்டம்தான் உங்களைப் போன்ற பெரிய கதாசிரியர்களையெல்லாம் சந்திக்க நேர்ந்தது. ம், வாருங்கள். பந்தி ஆரம்பமாகப் போகிறது!..."

"சந்தோஷம், ஒரு சிறு உதவி செய்யவேணும். உங்கள் மனைவியிடம் இரண்டு நிமிஷம் தனியே பேச வேணும்!...அதற்கு உங்கள் அனுமதி வேணும். தமிழரசியை எனக்குச் சின்ன வயசிலேயே தெரியும்!..."

"ரொம்ப மகிழ்ச்சி. அதோ, தமிழரசி. போய்ப் பாருங்களேன்! உங்களுக்கு இல்லாத உரிமையா, பூவை ஸார்?..."

"தேடி வந்த தெய்வம் தமிழரசி.

"தமிழரசி!..." என்றேன் நான்.

"ஊம்!..." என்று மௌன ஒலி எழுப்பி, அழகின் பொருள் உணர்த்திக் குறுநகை சிந்தினாள். பிறகு, 'உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்ல ஆசைப்படுகிறேன் உங்களைவிட்டு நான் பிரிந்த சமயத்திலே,உங்களோடே நான் 'டு' போட்டுப்பிட்டுத்தான் பிரிஞ்சேன். இப்ப வருஷம் எத்தனையோ ஓடியிருச்சு. திரும்ப ஒருதரம் உங்களைக் கடவுள் புண்ணியத்தாலே கண்டு, நான் வச்ச 'டு'வை நானே கலைச்சு, நாம் ரெண்டு பேரும் 'ராசி' ஆகிப்பிடவேணும்னு தவம் கிடந்தேனுங்க, அண்ணா!...இன்னிக்குத்தான் என் கனா நிறைவேறப்

போகுது!...'' என்று தொடர்ந்து பேசமுடியாமல், திணறியவாறு, விழிநீர் வழிபாய, நின்றாள்.

மெய் விதிர்த்து நின்றேன்; கண் பொங்கி நின்றேன்!

''இந்தாப் பாருங்க!...நான் போட்ட 'டு'வை... இந்தா... கலேச்சுப்பிட்டேன்!... இனிமே நீங்களும் நானும் 'ராசி' யாக்கும்!...'' என்று சொன்னாள். ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டிருந்த அவளது வலதுகைத் தங்கத் தளிர் விரல்கள் இரண்டையும் இடது கை நுனி விரலால் விலக்கி, 'டு'வை அழித்து விட்டாள்!

தமிழரசியின் தெய்வமணிக் கரங்களைப் பற்றிப் பிடித்துக் கண்களிலே ஒற்றிக்கொண்டு மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கினேன் நான்!

ஆஹா!...ஜரிகைப் பாவாடையும், பட்டுச் சட்டையும் திகழ, என் விளையாட்டுத் தோழி தமிழரசி எவ்வளவு அழகாக விளங்குகிறாள்!...

என் நினைவு தடம் கண்டது.

என் அமிர்தம் கனவில் தெரிபவளென, மெய் உருகிய நிலையில், நீர் சோர நின்றுகொண்டிருந்தாள்!

முற்றும்.

Jacket Printed at
Commercial Printing & Publishing House, Madras.